தமிழ்நாடு அரசு

# மேல்நிலை முதலாம் ஆண்டு

# வேதியியல்

## தொகுதி - I

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

Introduction Pages_Sridhar.indd 1 07-01-2021 15:55:03

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - 2018

திருத்திய பதிப்பு - 2019, 2020, 2021

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

## பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்

© SCERT 2018

## நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in



Introduction Pages_Sridhar.indd 2 07-01-2021 15:55:03

# முக்கிய அம்சங்கள்

| | |
|---|---|
| **வேதியியலின் இலக்கு** | வேதியியல் புலத்தில் உயர் கல்விக்கான வாய்ப்புகள் பற்றிய விவரங்கள் |
| **கற்றல் நோக்கங்கள்** | மாணவர்கள் பெறவேண்டிய செயலாக்கத் திறனை / குறிப்பிட்ட திறன்களை விவரித்தல் |
| **உங்களுக்குத் தெரியுமா** | அன்றாட வாழ்க்கை / துறைசார்ந்த வளர்ச்சியோடு பாடப்பொருளைத் தொடர்புபடுத்தும் கூடுதல் விவரங்கள் |
| **எடுத்துக்காட்டுக் கணக்குகள்** | மாணவர்களின் தெளிவான புரிதலுக்காகத் தீர்க்கப்பட்ட மாதிரிக் கணக்குகள் |
| **சுய மதிப்பீடு** | மாணவர் தம்முடைய கற்றறிந்த திறனைத் தாமே மதிப்பீடு செய்துகொள்ள உதவுதல். |
| **விரைவுத் துலக்கக் குறியீடு (QR Code)** | கருத்துகள்,காணொலிக்காட்சிகள்,அசைவூட்டங்கள் மற்றும் தனிப்பயிற்சிகள் ஆகியவற்றை விரைவாக அணுகும் வசதி |
| **தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்** | கற்றலுக்கான வளங்களுக்கு வழிகாட்டல், மாணவர்கள் அவற்றை அணுக வாய்ப்பளித்தல், கருத்துகள்/தகவல்களை பரிமாற வாய்ப்பளித்தல். |
| **பாடச் சுருக்கம்** | பாடப்பகுதியின் கருத்தினைச் சுருக்கிய வடிவில் தருதல் |
| **கருத்து வரைபடம்** | பாடப்பகுதியின் கருத்துகளை ஒன்றோடொன்று தொடர்புபடுத்துவதன் வாயிலாகப் பாடப்பொருளை உணரச் செய்தல் |
| **மதிப்பீடு** | பன்முகத் தெரிவு வினா, எண்ணியல் கணக்கீடுகள் போன்றவற்றின் வாயிலாக மாணவரின் புரிதல் நிலையினை மதிப்பிடுதல் |
| **மேற்கோள் நூல்கள்** | தொடர் வாசித்தலுக்கு ஏற்ற குறிப்புதவி நூல்களின் பட்டியல் |
| **விடைக் குறிப்புகள்** | மாணவர் கண்டறிந்த விடைகளின் சரியான தன்மையினை உறுதிசெய்யவும் கற்றல் இடைவெளிகளைச் சரிசெய்துகொள்ளவும் உதவுதல் |
| **சொற்களஞ்சியம்** | முக்கிய கலைச்சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள் |
| **பிற்சேர்க்கை** | அடிப்படை மாறிலிகள் மற்றும் முக்கிய தரவுகளின் அட்டவணைகள் |



Introduction Pages_Sridhar.indd 3 07-01-2021 15:55:04

## 12ஆம் வகுப்பில் வேதியியல் பாடம் படித்த பின்னர் உயர்கல்வி பெறுவதற்கு ஏற்ற பாடப்பிரிவுகள், முன்னணி கல்லூரிகள் மற்றும் நடத்தப்பெறும் போட்டித் தேர்வுகள் ஆகியவை தொகுத்துத் தரப்பட்டுள்ளன

| பாடப்பிரிவுகள் | கல்வி நிறுவனம் | தேர்வு செய்யும் முறை | வேதியியலில் வேலை வாய்ப்புகள் |
|---|---|---|---|
| **இளங்கலைப் பட்டம்** | | | |
| • பி.எஸ்ஸி. (வேதியியல்)<br>• பி.எஸ்ஸி. (வேதியியலில் பகுப்பாய்வு முறைகள்)<br>• பி.எஸ்ஸி. (பயன்முறை வேதியியல்)<br>• பி.எஸ்ஸி. (தொழில்சார் வேதியியல்)<br>• பி.எஸ்ஸி. (பாலிமர் வேதியியல்)<br>• பி.எஸ்ஸி. (உயிரி–வேதியியல்) | • இந்தியாவிலுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | • அறிவியல் பாட மதிப்பெண்களின் அடிப்படையில் நடத்தப்பெறும் கலந்தாய்வு வாயிலாக. | • பெட்ரோலியவேதியியல் தொழிற்சாலைகள்<br>• ஆய்வக வேதியியலாளர்<br>• உணவு பதனிடும் நிறுவனங்கள்<br>• வண்ணப்பூச்சு தயாரிக்கும் நிறுவனங்கள்<br>• நெகிழித் தொழிற்சாலைகள் மற்றும் நெசவுத் தொழிற்சாலைகள்<br>• வேளாண்வேதியியல் தொழிற்சாலைகள்<br>• உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்<br>• தண்ணீர்த் தரம் மற்றும் அழகுசாதன வேதியியலாளர்<br>• தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம், வங்கிகள், பொதுப்பணி, ரெயில்வே பணியாளர் தேர்வாணையம் போன்றவற்றில் பணியமர்த்தலுக்காக நடத்தப்பெறும் அனைத்து வகையான தேர்வுகளையும் எழுதலாம். |
| • பி.இ. (வேதியியல் பொறியியல்) | • இந்திய தொழில் நுட்பக் கழகம்<br>• பிர்லா தொழில்நுட்ப மற்றும் அறிவியல் கழகம்<br>• தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகள் | • ஜே.இ.இ. JEE (முதன்மை & உயர்நிலை)<br>• பிட்சாட் (BITSAT) | • கட்டடவியல் பொறியியல் பணிகள்<br>• பிசின் மற்றும் செயற்கைச் சேர்ம நாரிழைகள் தயாரித்தல்<br>• பெட்ரோலியம் மற்றும் நிலக்கரிப் பொருள்கள் தயாரித்தல்<br>• விண்வெளி எரிபொருள் செயலி<br>• உயிரித் தொழில்நுட்பம் மற்றும் மருந்தாக்கத் தொழிற்சாலைகள்<br>• காலநிலை மாற்ற மீட்புப் பொறியாளர்<br>• உணவு தயாரிக்கும் பிரிவுகள், மின்னணுவியல் மற்றும் ஆற்றல் உற்பத்தியாளர்கள் |
| • பி.டெக். (ரப்பர் நெகிழி தொழில்நுட்பம்) | • சென்னை தொழில்நுட்பக் கழகம் (MIT) | • 12ஆம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் நடத்தப்படும் தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி மாணவர் சேர்க்கைக் கலந்தாய்வு | |
| • பி.டெக். (பெட்ரோல் சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோலிய வேதியியல், பீங்கான் தொழில்நுட்பம் (S.S.), நெசவுத் தொழில்நுட்பம், தோல் தொழில்நுட்பம்) | • அண்ணா பல்கலைக்கழகம், அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, CSIR–மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பிற இணைப்புக் கல்லூரிகள் | | |
| • பி.இ. / பி.டெக். (நெகிழிப் பொறியியல் / தொழில் நுட்பம்) | • மத்திய நெகிழிப் பொறியியல் & தொழில்நுட்ப நிறுவனம் | | |
| **பட்டயம்** | | | |
| • தொழில்நுட்ப மற்றும் பகுப்பாய்வு வேதியியல் உயர் பட்டயம் (ADTAC) | • மஹாராஷ்ட்ர மாநிலத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (MSBTE) - மஹாராஷ்ட்ர அரசு | • பட்டப்படிப்பில் பெற்ற மதிப்பெண் விழுக்காடு அடிப்படையில் (தகுதி: ஏதாவது பட்டம்) | • வேதியியல், மருந்துதயாரித்தல், உணவு மற்றும் வண்ணப்பூச்சுத் தொழிற் சாலைகளில் பகுப்பாய்வாளர், வேதியியலாளர் மற்றும் தரக் கட்டுப்பாட்டு வேதியியலாளர் |
| • நெகிழி தயாரித்தல் & சோதனை செய்தல் | • மத்திய நெகிழிப் பொறியியல் & தொழில்நுட்ப நிறுவனம் | • ஜே.இ.இ. JEE | • நெகிழித் தொழிற்சாலைகள் |



Introduction Pages_Sridhar.indd 4
07-01-2021 15:55:04

| பாடப்பிரிவுகள் இளங்கலைப் பட்டம் | கல்வி நிறுவனம் | தேர்வு செய்யும் முறை | வேதியியலில் வேலை வாய்ப்புகள் |
|---|---|---|---|
| **முதுகலைப் பட்டம்** | | | |
| • எம்.எஸ்ஸி. (ஒருங்கிணைந்த வேதியியல்) | • பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் | • பாண்டிச்சேரி பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு | • பகுப்பாய்வு வேதியியலாளர்<br>• மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்<br>• உற்பத்தி வேதியியலாளர்<br>• ஆராய்ச்சி & மேம்பாட்டு மேலாளர்<br>• உயிரி மருத்துவ வேதியியலாளர்<br>• தொழிற்சாலை ஆய்வு அறிவியலாளர்<br>• பொருள்சார் தொழில் நுட்பவியலாளர்<br>• தரக் கட்டுப்பாட்டாளர்<br>• பாதுகாப்பு உடல்நலம் மற்றும் சுற்றுசூழல் வல்லுநர்<br>• மருந்து தயாரிப்பு நிறுவனங்கள்<br>• சுற்றுச் சூழல் சட்டம்<br>• விண்வெளி ஆராய்ச்சி முகமைகள்<br>• தடய அறிவியல் துறை<br>• பீங்கான் தொழிற்சாலை மற்றும் காகிதத் தொழிற்சாலை<br>• ராணுவ அமைப்புகள் துறை<br>• காப்புரிமைச் சட்டவல்லுநர்<br>• அணுக்கருவியல் பொறியாளர் |
| | • இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT Roorkee)<br>• இந்தியத் தொழில்நுட்பக் கழகம்(IIT Kharagarpur)<br>• இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT Bombay) | • எம்.எஸ்ஸி.க்கான கூட்டு மாணவர் சேர்க்கைத் தேர்வு (JAM) | |
| | • தமிழ்நாடு மத்திய பல்கலைக் கழகம்: அடிப்படை மற்றும் பயன்பாட்டு அறிவியல் பிரிவு, திருவாரூர். | • CUCET நுழைவுத் தேர்வு | |
| | • NISER வேதியியல் அறிவியல் கல்விநிலையம், கட்டாக் | • NISER வேதியியல் அறிவியல் கல்விநிலையம், கட்டாக் | |
| | • பிர்லா தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் கழகம் | • BITSAT நுழைவுத் தேர்வு | |
| | • அண்ணாமலை பல்கலைகழகம் | • அண்ணாமலை பல்கலைக் கழக நுழைவுத் தேர்வு | |
| | • இந்தியாவிலுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | • பட்டப் படிப்பில் பெற்ற மதிப்பெண் விழுக்காட்டின் அடிப்படையில் மற்றும் அந்தந்த நிறுவனங்கள் நடத்தும் தனித்தனி நுழைவுத் தேர்வுகளின் அடிப்படையில் | |
| • எம்.எஸ்ஸி. பொது வேதியியல், பகுப்பாய்வு வேதியியல், கனிம வேதியியல், கரிம வேதியியல், இயற்பியல் வேதியியல், பாலிமர் வேதியியல், சுற்றுச்சூழல் அறிவியல், நானோ அறிவியல் மற்றும் நானோ தொழில்நுட்பம் | • சென்னை பல்கலைக் கழகம், அழகப்பா பல்கலைக் கழகம், அண்ணாமலை பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், இந்திய அறிவியல் கழகம், பெங்களூரு, தில்லி பல்கலைக் கழகம் முதலிய அரசு பல்கலைக் கழகங்கள்<br>• இந்தியாவிலுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | • சார்ந்த நிறுவனங்கள் தனித்தனியே நடத்தும் நுழைவுத் தேர்வுகள் | |
| • எம்.எஸ்.ஸி. பயன்பாட்டு வேதியியல், வேதியியல் (ஹானர்ஸ்), பயன்பாட்டு வேதியியல் (ஹானர்ஸ்), தொழிற்சாலை வேதியியல், மருத்துவ வேதியியல், மருந்து தயாரிப்பு வேதியியல், மருந்து வேதியியல் | • அண்ணா பல்கலைக் கழகம், ஆந்திரா பல்கலைக் கழகம், பிர்லா தொழில்நுட்ப நிறுவனம், கொச்சி அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம், பி.எஸ்.ஜி. கல்லூரி, கோயம்புத்தூர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம், திருப்பதி. | • சார்ந்த நிறுவனங்கள் தனித்தனியே நடத்தும் நுழைவுத் தேர்வுகள் | • தொழிற்சாலை தொடர்பான பணிகள்<br>• தரக் கட்டுப்பாடு வேதியியலாளர்<br>• பெட்ரோலிய வேதியியல் தொழிற்சாலை<br>• உணவு பதப்படுத்துதல்<br>• வண்ணப்பூச்சுத் தொழிற்சாலை |

| பாடப்பிரிவுகள் இளங்கலைப் பட்டம் | கல்வி நிறுவனம் | தேர்வு செய்யும் முறை | வேதியியலில் வேலை வாய்ப்புகள் |
|---|---|---|---|
| • எம்.டெக். பாலிமர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்<br>• தொழிற்சாலைப் பாதுகாப்பு மற்றும் இடர் மேலாண்மை | • அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி | • தமிழ்நாடு பொது நுழைவுத் தேர்வு (TANCET) | • பல்வேறு தொழிற்சாலைகளில் பாதுகாப்பு மற்றும் இடர் மேலாண்மை சார்ந்த பணிகள் |
| **எம்.ஃபில்** | | | |
| • எம்.ஃபில். – வேதியியல், பகுப்பாய்வு வேதியியல், பயன்பாட்டு வேதியியல், தொழிற்சாலை வேதியியல், படிக அறிவியல் | • இந்தியப் பல்கலைக் கழகங்கள்<br>• இந்திய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | • கல்லூரிகள்/பல்கலைக் கழகங்களைப் பொறுத்து நடத்தப்பெறும் நுழைவுத் தேர்வு / நேர்காணல் | • ஆசிரியர் பணிகள்<br>• தொழிற்சாலை தொடர்பான பணிகள்<br>• கதிர்வரைபட ஆய்வகங்களில் தொழில்நுட்பவியலாளர்<br>• காப்புரிமைச் சட்டம் |
| **ஆய்வு** | | | |
| • பிஎச்.டி. (வேதியியல்)<br>• களம்: கரிமத் தொகுப்பு, கனிமச் அணைவுச் சேர்மங்கள், கணக்கீட்டு வேதியியல், நானோ தொழில்நுட்பம், மின்னியல் வேதியியல், பொருள் அறிவியல் & பாலிமர் கலவைகள், உயிரி–உணர்விகள், மூலக்கூறு மாதிரியாக்கம், வேதித் தகவலியல், பசுமை வேதியியல், பசுமை ஆக்சிஜனேற்ற வேதியியல் வினையூக்கிகள் முதலியன | • இந்திய அறிவியல் கழகம்<br>• இந்தியத் தொழில் நுட்ப கழகம், கரக்பூர்<br>• தில்லி பல்கலைக் கழகம், தில்லி.<br>• இந்தியத் தொழில்நுட்பக் கழகம், மும்பை<br>• டாடா அடிப்படை அறிவியல் ஆய்வு நிறுவனம், மும்பை<br>• அண்ணா பல்கலைக் கழகம், சென்னை<br>• இந்தியத் தொழில்நுட்பக் கழகம், சென்னை<br>• ஜவஹர்லால் நேரு உயர் அறிவியல் ஆய்வு மையம்<br>• சென்னை பல்கலைக் கழகம்<br>• பாரதியார் பல்கலைக் கழகம்<br>• ஜவர்ஹர்லால் நேரு பல்கலைக் கழகம்<br>• தேசியத் தொழில்நுட்பக் கழகம்<br>• அண்ணாமலை பல்கலைக் கழகம், முதலியன | • சார்ந்த நிறுவனங்களால் தனித்தனியே நுழைவுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன | • அரசுக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் பேராசிரியர் பணி<br>• வேதியியல் அறிவியலாளர்கள்<br>• பல மத்திய அரசு தொழிற்சாலைகளில் அறிவியலாளர் பணிகள்<br>• முது முனைவர் ஆய்வுப்பணிகள்<br>• நச்சியலில் தரக் கட்டுப்பாடு<br>• புனைவு வேதியியல்<br>• வேதியியல் தகவல் மேலாண்மை வல்லுநர் |



Introduction Pages_Sridhar.indd 6
07-01-2021 15:55:04

# நுழைவுத் தேர்வுகள் மற்றும் வடிவமைப்புகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜே.இ.இ. முதன்மைத் தேர்வு<br>தாள் 1 (3 மணி நேரம்)<br>தாள் 2 (3 மணி நேரம்)<br>www.jeemain.nic.in | • இந்தியத் தகவல் தொழில்நுட்பக் கழகங்கள் (IITs)<br>• இந்தியப் பொறியியல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகம் (IIEST)<br>• தேசியத் தொழில்நுட்பக் கழகங்கள் (NITs)<br>• இந்தியத் தொழில்நுட்பக் கழகங்கள் (IITs)<br>• அரசு நிதியுதவிபெறும் தொழில்நுட்பக் கழகங்கள் (GFTIs) | OMR அடிப்படையில் மற்றும் இணையவழி அடிப்படையில் (தேர்வர்களின் விருப்பத்திற்கிணங்க) | விண்ணப்பம் வெளியாதல்: டிசம்பர் முதல் வாரம்<br>தேர்வு நாள்: ஏப்ரல்<br>எதிர்மறை மதிப்பெண்: 4/ –1<br>மொத்த மதிப்பெண்கள்: 360 | இயற்பியல்<br>வேதியியல்<br>கணிதம்<br>மொத்த வினாக்கள் | 30<br>30<br>30<br>90 |
| ஜே.இ.இ. உயர்நிலைத் தேர்வு<br>தாள் 1 (3 மணி நேரம்)<br>தாள் 2 (3 மணி நேரம்)<br>ஜே.இ.இ. முதன்மைத் தேர்வில் (தாள்–1) தகுதி பெற்றிருக்கவேண்டும்<br>www.jeeadv.ac.in | • இந்தியத் தகவல் தொழில்நுட்பக் கழகங்கள் (IITs)<br>• இந்தியப் பொறியியல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகம் (IIEST)<br>• தேசியத் தொழில்நுட்பக் கழகங்கள் (NITs)<br>• இந்தியத் தொழில்நுட்பக் கழகங்கள் (IITs)<br>• அரசு நிதியுதவிபெறும் தொழில்நுட்பக் கழகங்கள் (GFTIs) | இணையவழியில் | விண்ணப்பம் வெளியாதல்: ஏப்ரல் இறுதி வாரம்<br>தேர்வு நாள்: மே இரண்டாம் வாரம்<br>எதிர்மறை மதிப்பெண்: 4/ –1<br>மொத்த மதிப்பெண்கள்: 306 (ஒவ்வொரு ஆண்டும் மாறும்) | இயற்பியல்<br>வேதியியல்<br>கணிதம்<br>மொத்த வினாக்கள் | 18<br>18<br>18<br>54 |
| பிட்சாட்<br>http://www.bitsadmission.com<br>நேரம்: 3 மணி | • பிர்லா தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் கழகம் | இணையவழியில் | விண்ணப்பம் வெளியாதல்: டிசம்பர் இரண்டாவது வாரம்<br>தேர்வு நாள்: மே இரண்டாம் வாரம்<br>எதிர்மறை மதிப்பெண்: 3/ –1<br>மொத்த மதிப்பெண்கள்: 450 | இயற்பியல்<br>வேதியியல்<br>கணிதம்<br>ஆங்கில மொழித்திறன்<br>உய்த்து உட்பொருளறிதல்<br>மொத்த வினாக்கள் | 40<br>40<br>45<br>15<br>10<br>150 |
| சியூசிஇடி (CUCET)<br>https://cucetexam.in<br>நேரம்: 2 மணி | • அனைத்து மத்திய பல்கலைக் கழகங்கள் | இணையவழியில் | விண்ணப்பம் வெளியாதல்: பிப்ரவரி இரண்டாவது வாரம்<br>தேர்வு நாள்: ஏப்ரல்<br>எதிர்மறை மதிப்பெண்: 1/0.25<br>மொத்த மதிப்பெண்கள்: 175 | ஆங்கிலம்<br>பொது அறிவு<br>கணிதத் திறன்<br>பகுப்பாய்வுத் திறன்<br>அறிவியல்<br>மொத்த வினாக்கள் | 25<br>25<br>25<br>25<br>75<br>175 |
| ஜாம் (JAM)<br>http://jam.iitb.ac.in<br>நேரம்: 3 மணி | • அனைத்து இந்தியத் தொழில்நுட்பக் கழகங்கள் | இணையவழியில் | விண்ணப்பம் வெளியாதல்: செப்டம்பர்<br>தேர்வு நாள்: பிப்ரவரி<br>எதிர்மறை மதிப்பெண்: 1/0.33<br>2/0.66<br>மொத்த மதிப்பெண்கள்: 100 | வேதியியல்<br>மொத்த வினாக்கள் | 60<br>60 |



Introduction Pages_Sridhar.indd 7 07-01-2021 15:55:04

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிஎஸ்ஐஆர்.யூஜிசி நெட் (CSIR.UGC.Net)<br>http://csirhrdg.res.in<br>நேரம்: 3 மணி | • அனைத்து பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பிஎச்.டி. மாணவர் சேர்க்கை | OMR | காலம்: ஜூன்<br>விண்ணப்பம் வெளியாதல்: மார்ச்<br>தேர்வு நாள்: ஜூன்<br>காலம்: டிசம்பர்<br>விண்ணப்பம் வெளியாதல்: செப்டம்பர்<br>தேர்வு நாள்: டிசம்பர் | பொது அறிவியல், அளவியல் சார்ந்த உட்பொருளறிதல் & பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சித் திறன்<br>வேதியியல்<br>மொத்த வினாக்கள் | 60<br>15<br>75 |
| கேட் (GATE)<br>http://gate.iitg.ac.in<br>நேரம்: 3 மணி | • அனைத்து இந்தியத் தொழில்நுட்பக் கழகங்களில் பிஎச்.டி. மாணவர் சேர்க்கை | OMR | விண்ணப்பம் வெளியாதல்: செப்டம்பர்<br>தேர்வு நாள்: பிப்ரவரி<br>எதிர்மறை மதிப்பெண்: 1/0.33<br>2/0.66<br>மொத்த மதிப்பெண்கள்: 100 | பொதுத் திறன்<br>வேதியியல்<br>மொத்த வினாக்கள் | 10<br>55<br>65 |
| டான்செட் (TANCET)<br>https://www.annauniv.edu<br>நேரம்: 2 மணி | • அண்ணா பல்கலைக் கழகத்தில் தொழில்நுட்பப் பாடப்பிரிவுகளில் மாணவர் சேர்க்கைக்கான நுழைவுத் தேர்வு | எழுத்துத் தேர்வு | விண்ணப்பம் வெளியாதல்: சனவரி<br>தேர்வு நாள்: மார்ச்<br>எதிர்மறை மதிப்பெண்: 1/0.33<br>மொத்த மதிப்பெண்கள்: 100 | பொறியியல் கணிதம்<br>அடிப்படைப் பொறியியல் மற்றும் அறிவியல்<br>வேதியியல்<br>மொத்த வினாக்கள் | 20<br>20<br>60<br>100 |
| சென்னை பல்கலைக் கழகம்<br>http://www.unom.ac.in<br>நேரம்: 3 மணி | • எம்.எஸ்ஸி நுழைவுத் தேர்வு | எழுத்துத் தேர்வு | விண்ணப்பம் வெளியாதல்: பிப்ரவரி இரண்டாவது வாரம்<br>தேர்வு நாள்: ஏப்ரல்<br>எதிர்மறை மதிப்பெண்: இல்லை<br>மொத்த மதிப்பெண்கள்: 100 | பகுப்பாய்வு வேதியியல்<br>கனிம வேதியியல்<br>கரிம வேதியியல்<br>இயற்பியல் வேதியியல்<br>மொத்த வினாக்கள் | 25<br>25<br>25<br>25<br>100 |
| அண்ணா பல்கலைக் கழகம்<br>https://www.annauniv.edu<br>நேரம்: 1 மணி | • எம்.எஸ்ஸி நுழைவுத் தேர்வு | இணையவழியில் | விண்ணப்பம் வெளியாதல்: ஏப்ரல்<br>தேர்வு நாள்: மே<br>எதிர்மறை மதிப்பெண்: 1/0.25<br>மொத்த மதிப்பெண்கள்: 100 | வேதியியல்<br>மொத்த வினாக்கள் | 100<br>100 |
| அண்ணாமலை பல்கலைக் கழகம்<br>http://www.annamalaiuniversity.ac.in | • எம்.எஸ்ஸி மாணவர் சேர்க்கை | பட்டப்படிப்பு மற்றும் நேர்காணலில் பெற்ற மதிப்பெண் விழுக்காட்டின் அடிப்படையில் | | | |
| | • பி.எஸ்ஸி மாணவர் சேர்க்கை | +2 அறிவியல் பாடங்களில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் கலந்தாய்வு | | | |
| பாரதியார் பல்கலைக் கழகம்<br>www.b-u.ac.in<br>நேரம்: 1.30 மணி | • எம்.எஸ்ஸி நுழைவுத் தேர்வு | எழுத்துத் தேர்வு | விண்ணப்பம் வெளியாதல்: மே<br>தேர்வு நாள்: உத்தேசமாக ஜூலை<br>மொத்த மதிப்பெண்கள்: 60 | வேதியியல்<br>மொத்த வினாக்கள் | 60<br>60 |
| பாரதிதாசன் பல்கலைக் கழகம்<br>http: www.bdu.ac.in | • எம்.எஸ்ஸி நுழைவுத் தேர்வு | எழுத்துத் தேர்வு | விண்ணப்பம் வெளியாதல்: மே கடைசி வாரம்<br>தேர்வு நாள்: ஜூன் இரண்டாவது வாரம் | | |
| மதுரை காமராசர் பல்கலைக் கழகம்<br>mkuniversity.ac.in | • எம்.எஸ்ஸி நுழைவுத் தேர்வு | இணையவழியில் | விண்ணப்பம் வெளியாதல்: மார்ச்<br>தேர்வு நாள்: மே/ஜூன் | | |

*(குறிப்பு: அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நாள்களும் தாற்காலிகமானவை. ஆண்டுக்கு ஆண்டு மாறக்கூடும்)*



Introduction Pages_Sridhar.indd 8 07-01-2021 15:55:04

# பொருளடக்கம்

## வேதியியல்


| அலகு எண். | பாடத் தலைப்பு | ப. எண். | மாதம் |
|---|---|---|---|
| 1 | வேதியியலின் அடிப்படைக் கருத்துக்கள் மற்றும் வேதிக் கணக்கீடுகள் | 01 | ஜூன் |
| 2 | அணுவின் குவாண்டம் இயக்கவியல் மாதிரி | 40 | ஜூலை |
| 3 | தனிமங்களின் ஆவர்த்தன வகைப்பாடு | 73 | ஆகஸ்ட் |
| 4 | ஹைட்ரஜன் | 110 | செப்டம்பர் |
| 5 | கார மற்றும் காரமண் உலோகங்கள் | 138 | அக்டோபர் |
| 6 | வாயு நிலைமை | 174 | ஜூன் |
| 7 | வெப்ப இயக்கவியல் | 206 | ஜூலை |
| | பிற்சேர்க்கை | 254 | |


BXTYTT
மின்னூல்

BY3UVG
மதிப்பீடு

B127_11_CHE_TM
இணைய வளங்கள்

TN_QR_TAM

**பாடநூலில் உள்ள விரைவு குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?**

- உங்கள் திறன்பேசியில், கூகுள் playstore /ஆப்பிள் app store கொண்டு QR Code ஸ்கேனர் செயலியை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தித் திரையில் தோன்றும் கேமராவை QR Code–இன் அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம் திரையில் தோன்றும் உரலியைச் (URL) சொடுக்க, அதன் விளக்கப் பக்கத்திற்குச் செல்லும்.



Introduction Pages_Sridhar.indd 9 07-01-2021 15:55:05

Introduction Pages_Sridhar.indd 10 07-01-2021 15:55:05

# அலகு 1

## வேதியியலின் அடிப்படைக் கருத்துக்கள் மற்றும் வேதிக் கணக்கீடுகள்

> We think there is color, we think there is sweet, we think there is bitter, but in reality there are atoms and a void.
>
> – Democritus





இயற்கை இழை (பருத்தி)



செயற்கை இழை (நைலான்)



பூச்சிக்கொல்லி (மாலத்தியான்)



மருந்துகள் (மாத்திரைகள்)



எண்ணெய் சுத்திகரிப்பு

### கற்றலின் நோக்கங்கள்

3CRKRG

இந்த பாடப்பகுதியைக் கற்றறிந்த பின்னர்

- வாழ்வின் பல்வேறு சூழல்களில் வேதியியலின் முக்கியத்துவத்தினை விளக்குதல்
- பல்வேறு பொருட்களை, தனிமங்கள், சேர்மங்கள் மற்றும் கலவைகள் என வகைப்படுத்துதல்.
- அணுநிறை மற்றும் மூலக்கூறு நிறையினை வரையறுத்தல்.
- பொருளின் அளவினை, 'மோல்' அலகினைப் பயன்படுத்தி வரையறுத்தல்.
- அவகாட்ரோ எண்ணை விவரித்தல்
- நிறை, மோல் மற்றும் அணுக்கள் அல்லது மூலக்கூறுகளின் எண்ணிக்கை ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பினை விளக்குதல் மற்றும் அவை சார்ந்த கணக்கீடுகளைச் செய்தல்
- சமான நிறையினை வரையறுத்தல். அமிலம், காரம் மற்றும் ஆக்சிஜனேற்றி/ ஒடுக்கிகளின் சமான நிறையினைக் கணக்கிடுதல்.
- பரிசோதனைகளின் மூலம் பெறப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி எளிய விகித வாய்பாடு மற்றும் மூலக்கூறு வாய்பாடுகளைத் தருவித்தல்.
- வேதிவினைக் கூறு விகித கணக்கீடுகள் அடிப்படையிலான எண்ணியல் கணக்குகளைத் தீர்த்தல்.
- வினைக் கட்டுப்பாட்டுக் காரணியினைக் கண்டறிதல் மற்றும் ஒரு வேதிவினையில் வினைபடுபொருட்கள் மற்றும் வினை விளைபொருட்களின் அளவினைக் கணக்கிடுதல்.
- ஆக்சிஜனேற்றம், ஒடுக்கம், ஆக்சிஜனேற்றி ஆக்சிஜன் ஒடுக்கி ஆகிய சொற்கூறுகளை வரையறுத்தல்.
- பல்வேறு சேர்மங்களில் அடங்கியுள்ள தனிமங்களின் ஆக்சிஜனேற்ற எண்ணைத் தீர்மானித்தல்.



Unit 1 - Sridhar.indd 1 07-01-2021 13:24:41

- ஆக்சிஜனேற்ற – ஒடுக்க வினைகளில் நிகழும் செயல்முறைகளை விளக்குதல் மற்றும் எலக்ட்ரான் பரிமாற்ற செயல்முறையினை விவரித்தல்.
- ஆக்சிஜனேற்ற – ஒடுக்க வினைகளை வகைப்படுத்துதல்.
- இரு அரைவினைகளிலிருந்து ஆக்சிஜனேற்ற – ஒடுக்க வினைக்கான சமன்படுத்தப்பட்ட சமன்பாட்டை உருவாக்குதல்,

ஆகிய திறன்களை மாணவர்கள் பெற இயலும்.

## 1.1 வேதியியல் – வாழ்க்கையின் மையம்

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் – இவை மூன்றும் மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளாகும். இம் மூன்று அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதில் வேதியியல் முக்கிய பங்காற்றுவதுடன், வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதிலும் உதவுகிறது. வேளாண்மை உற்பத்தியினை அதிகரிக்க உதவும் உரங்கள், பூச்சிக்கொல்லிகள் போன்ற பல்வேறு சேர்மங்களை வேதியியல் உருவாக்கியுள்ளது. பல்வேறு கால சூழ்நிலைகளைத் தாங்கும் வகையில், நவீன சிமெண்டுகள், கான்கிரீட் கலவைகள், தரமான எஃகு ஆகியவற்றினைக் கொண்டு நல்ல தரமான கட்டிடங்களை நாம் உருவாக்க முடியும். மேலும், நல்ல தரம் வாய்ந்த ஆடை உருவாக்கத்திற்கு தேவையான இழைகளை நாம் பெற்றுள்ளோம்.

உலகில் நாம் வாழும் சூழல் அனைத்திலும் வேதியியல் உள்ளது. நமது உடல் கூட வேதிப்பொருட்களால் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். நம் உடலில் நிகழும் தொடர்ச்சியான உயிர் – வேதி வினைகளே, நமது உடல் செயல்பாடுகளுக்கு, காரணமாக அமைகின்றன. நமது சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சாரம், என நம் வாழ்வின் ஒவ்வொரு அங்கமும் வேதியியலோடு தொடர்பு கொண்டுள்ளது. நாம் வாழும் உலகம் தொடர்ச்சியாக பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு வருகிறது. நவீன உலகம் எதிர்நோக்கும் சவால்களுக்கு ஏற்ற வகையில் வேதியியல் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வருகிறது. நம் அன்றாட வாழ்வில் பயன்படும் புதிய வேதிப்பொருட்களை வேதி தொழிற்சாலைகள் தயாரித்து வருகின்றன. எடுத்துக்காட்டாக பலபடிகள், சாயங்கள், உலோகக் கலவைகள், உயிர் காக்கும் மருந்துகள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

1980 – களின் தொடக்கத்தில் HIV / எய்ட்ஸ் நோய்த்தொற்று உணரத்தொடங்கிய காலத்தில், இந்நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் சிலகாலம் மட்டுமே உயிர்வாழும் நிலை இருந்தது. ஆனால், தற்போது இந்நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள், அதனை எதிர்கொண்டு வாழும் வகையில் பயன்தரத்தக்க மருந்துப்பொருட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

வேதியியலின் கோட்பாடுகளை புரிந்து கொண்டதன் மூலம், சுற்றுச்சூழலுக்கு ஊறு விளைவிக்கும், குளிர்சாதனப் பெட்டிகளில் பயன்படுத்தப்படும் குளோரோ புளூரோ கார்பன்களுக்கு மாற்றாக சூழலுக்கு ஏற்ற, மாற்று வேதிப்பொருட்கள் மற்றும் சுற்றுச்சூழலோடு இணைந்த பசுமை செயல்முறைகளை நம்மால் உருவாக்க முடிந்துள்ளது. புதிய மருந்துகள் உருவாக்கம், தொகுப்பு பலபடிகள், சூழலுக்கு ஏற்ற பொருட்களை உருவாக்குதல் போன்றவற்றில் நமது சமூக முன்னேற்றத்திற்காக வேதியியலின் பல்வேறு பிரிவுகளில், பல ஆராய்ச்சியாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நமது அன்றாட நடைமுறை வாழ்வில் வேதியியல் முக்கிய பங்காற்றிவரும் நிலையில், வளர்ந்து வரும் நம் நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களுக்கு, தீர்வுகாண




Unit 1 - Sridhar.indd 2 07-01-2021 13:24:41

வேதியியலின் அடிப்படைக் கோட்பாடுகளை புரிந்து கொள்ளுதல் என்பது அவசியமான ஒன்றாகும்.

## 1.2 பருப்பொருட்களை வகைப்படுத்துதல்

உனது வகுப்பறை சூழலை உற்றுநோக்கு. நீ எதைக் காண்கிறாய்? உனது இருக்கை, மேசை, கரும்பலகை ஜன்னல் போன்றவற்றை நீ கண்டிருப்பாய். இவை அனைத்தும் எதனால் ஆக்கப்பட்டவை? இவை அனைத்தும் பருப்பொருள்களால் ஆக்கப்பட்டவை.




படம் 1.1 பருப்பொருள்களின் வகைப்பாடு

நிறையுள்ள, இடத்தை அடைத்துக்கொள்ளும் தன்மையுடைய அனைத்தும், பருப்பொருட்கள் என வரையறுக்கப்படுகின்றன. அனைத்து பருப்பொருட்களும் அணுக்களால் ஆக்கப்பட்டவை. பருப்பொருள் பற்றிய இந்த அறிவானது, நமது சூழலில் இருந்து நாம் பெறும் அனுபவங்களை விளக்குவதற்கு பயனுள்ளதாக அமையும். பருப்பொருட்களின் பண்புகளை புரிந்து கொள்ளும் பொருட்டு, நாம் அதனை வகைப்படுத்த வேண்டும். பருப்பொருட்களை வகைப்படுத்துதலில் பல்வேறு முறைகள் உள்ளன. பொதுவாக, பருப்பொருள்களை அதன் இயற்நிலைமை மற்றும் வேதிஇயைபு ஆகியவற்றின் அடிப்படையில், விளக்கப் படத்தில் காட்டியுள்ளவாறு வகைப்படுத்தலாம்.

### 1.2.1 இயற்நிலைமையின் அடிப்படையில் பருப்பொருட்களின் வகைப்பாடு

பருப்பொருட்களை அவற்றின் இயற் நிலைமையின் அடிப்படையில் திண்மம், திரவம் மற்றும் வாயு என வகைப்படுத்தலாம். அழுத்தம் மற்றும் வெப்பநிலையினை தகுந்தவாறு மாற்றியமைப்பதன் மூலம் பருப்பொருள்களை அதன் ஒரு இயற் நிலைமையிலிருந்து மற்றொரு நிலைமைக்கு மாற்ற இயலும்.

### 1.2.2 வேதித்தன்மையின் அடிப்படையில் வகைப்பாடு

பருப்பொருட்களை அவற்றின் வேதித்தன்மையின் அடிப்படையில், தூய பொருட்கள் மற்றும் கலவைகள் என வகைப்படுத்தலாம். கலவையில் ஒன்றிற்கும் மேற்பட்ட வேதி உட்பொருட்கள், அவற்றிற்கிடையே எத்தகைய இடைவினைகளுமின்றி காணப்படுகின்றன. இவற்றின் தோற்றத்தின் அடிப்படையில் ஒரு படித்தான அல்லது பல படித்தான கலவை என மேலும் வகைப்படுத்தப்படுகின்றன.



Unit 1 - Sridhar.indd 3 07-01-2021 13:24:44

தூய பொருட்கள் என்பவை எளிய அணுக்கள் அல்லது மூலக்கூறுகளால் ஆக்கப்பட்டவை. இவை தனிமங்கள் மற்றும் சேர்மங்கள் என மேலும் வகைப்படுத்தப்படுகின்றன.

### தனிமம் :

ஒரே ஒரு வகை அணுக்களை மட்டுமே உள்ளடக்கியவை தனிமம் எனப்படும். அணுக்கள் என்பவை, புரோட்டான்கள், எலக்ட்ரான்கள், நியூட்ரான்கள் போன்ற அடிப்படைத் துகள்களைக் கொண்ட மின் நடு நிலைத்தன்மை உடையது என்பதனை நாம் அறிவோம்.

தனிமம் ஆனது ஓரணு அல்லது பல்லணு அலகுகளை உள்ளடக்கியதாக காணப்படுகிறது.

எடுத்துக்காட்டு : ஓரணு அலகு – தங்கம் (Au), தாமிரம் (Cu), பல்லணு அலகு – ஹைட்ரஜன் வாயு ($H_2$), பாஸ்பரஸ் ($P_4$) மற்றும் சல்பர் ($S_8$).

### சேர்மம் :

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வெவ்வேறு தனிம அணுக்களைக் கொண்ட மூலக்கூறுகளை உள்ளடக்கியது சேர்மங்களாகும்.

**எடுத்துக்காட்டு :** கார்பன் டை ஆக்ஸைடு ($CO_2$), குளுக்கோஸ் ($C_6H_{12}O_6$), ஹைட்ரஜன் சல்பைடு ($H_2S$), சோடியம் குளோரைடு (NaCl)

சேர்மங்களின் பண்புகள், அவற்றில் அடங்கியுள்ள தனிமங்களின் பண்புகளிலிருந்து மாறுபட்டிருக்கும். எடுத்துக்காட்டாக சோடியம் ஒரு பளபளப்பான உலோகம், குளோரின் ஓர் எரிச்சலூட்டும் வாயு, ஆனால் இந்த இரண்டு தனிமங்களில் இருந்து உருவாகும் சேர்மமான சோடியம் குளோரைடு, படிகத்தன்மையுடைய திண்மமாகும்.மேலும், இச்சேர்மம் உயிரியல் செயல்பாடுகளுக்கு முக்கியமானதாகும்.

### தன்மதிப்பீடு

1. வேதித்தன்மை அடிப்படையிலான வகைப்பாட்டு அறிவினை பயன்படுத்தி, பின்வரும் ஒவ்வொன்றையும், தனிமம், சேர்மம் அல்லது கலவை என வகைப்படுத்துக.

(i) சர்க்கரை
(ii) கடல்நீர்
(iii) வாலைவடிநீர்
(iv) கார்பன் டை ஆக்ஸைடு
(v) தாமிர கம்பி (Copper wire)
(vi) சாதாரண உப்பு
(vii) வெள்ளித் தட்டு (Silver plate)
(viii) நாப்தலீன் உருண்டைகள்.

## 1.3 அணு மற்றும் மூலக்கூறு நிறைகள்.

### 1.3.1 அணு நிறை

ஒரு தனித்த அணு எவ்வளவு நிறையுடையது? அணுவானது $10^{-10}$ m விட்டமும், தோராயமாக $10^{-27}$ kg நிறையும் கொண்ட மிகச்சிறிய துகள் என்பதால், அதன் நிறையினை நேரடியாகக் கண்டறிய இயலாது. எனவே, ஒரு நியம அணுவினை அடிப்படையாகக் கொண்ட ஒப்பு அளவீட்டுமுறை முன்மொழியப்பட்டது.

IUPAC (International Union of Pure and Applied Chemistry) அமைப்பானது C-12 அணுவினை நியம அணுவாக கருத்திற்கொண்டது. அதன் அணுநிறை 12 amu அல்லது 12 u என எடுத்துக்கொள்ளப்படுகிறது.

அடி ஆற்றல் (ground State) நிலையில் உள்ள C-12 அணுவின் நிறையில்,



Unit 1 - Sridhar.indd 4 07-01-2021 13:24:44

பன்னிரெண்டில் ஒரு பங்குநிறை, அணுநிறை அலகு (amu) அல்லது ஒருமைபடுத்தப்பட்ட அணு நிறை (Unified atomic mass) என வரையறுக்கப்படுகிறது.

1 amu (அல்லது) 1u ≈ $1.6605 \times 10^{-27}$ kg.

இந்த அளவீட்டு முறையில், ஒப்பு அணு நிறை என்பது, ஒரு அணுவின் சராசரி அணுநிறைக்கும், ஒருமைப்படுத்தப்பட்ட அணு நிறைக்கும் இடையேயான விகிதம் என வரையறுக்கப்படுகிறது.

ஒப்பு அணு நிறை $(A_r)$

$$= \frac{\text{அணுவின் சராசரி நிறை}}{\text{ஒருமை படுத்தப்பட்ட அணு நிறை}}$$

எடுத்துக்காட்டாக,

ஹைட்ரஜனின் ஒப்பு அணு நிறை $(A_r)_H$

$$= \frac{\text{ஹைட்ரஜனின் ஒரு அணுவின் சராசரி நிறை (kg ல்)}}{1.6605 \times 10^{-27}\ \text{kg}}$$

$$= \frac{1.6736 \times 10^{-27}\ \text{kg}}{1.6605 \times 10^{-27}\ \text{kg}}$$

$$= 1.0078 \approx 1.008\ \text{u.}$$

பெரும்பாலான தனிமங்கள் ஒன்றிற்கும் மேற்பட்ட ஐசோடோப்புகளைக் கொண்டிருப்பதால், நாம் சராசரி அணு நிறையினை பயன்படுத்துகிறோம். ஒரு அணுவின் சராசரி அணு நிறை என்பது, அந்த அணுவின் இயற்கையில் காணப்படும் அனைத்து ஐசோடோப்புகளின் அணுநிறைகளின் சராசரி மதிப்பு என வரையறுக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக குளோரின் அணுவினைக் கருதுவோம். இந்த அணு இயற்கையில் $_{17}Cl^{35}$ மற்றும் $_{17}Cl^{37}$ ஆகிய இரு ஐசோடோப்புகளை 77 : 23 என்ற விகிதத்தில் கொண்டுள்ளது. எனவே, குளோரினின் சராசரி ஒப்பு அணு நிறை

$$= \frac{(35 \times 77) + (37 \times 23)}{100}$$

$$= 35.45\ \text{u}$$

### 1.3.2 மூலக்கூறு நிறை

ஒப்பு அணு நிறையினைப் போன்று ஒப்பு மூலக்கூறு நிறையானது, ஒரு மூலக்கூறின் நிறைக்கும், ஒருமைபடுத்தப்பட்ட அணு நிறைக்கும் இடையேயான விகிதம் என வரையறுக்கப்படுகிறது. ஒரு சேர்மத்தின் ஒப்பு மூலக்கூறு நிறையினை, அதில் அடங்கியுள்ள அணுக்களின் ஒப்பு அணு நிறைகளின் கூடுதல் மூலம் கணக்கிட இயலும்.

எடுத்துக்காட்டாக,

i) ஹைட்ரஜன் மூலக்கூறின் ஒப்பு மூலக்கூறு நிறை $(H_2)$

$= 2 \times$ (ஹைட்ரஜன் அணுவின் ஒப்பு அணு நிறை)

$= 2 \times 1.008$ u

$= 2.016$ u.

ii) குளுக்கோஸ் சேர்மத்தின் ஒப்பு மூலக்கூறு நிறை $(C_6H_{12}O_6)$

$= (6 \times 12) + (12 \times 1.008) + (6 \times 16)$

$= 72 + 12.096 + 96$

$= 180.096$ u

அட்டவணை 1.1 சில தனிமங்களின் ஒப்பு அணு நிறைகள்.

| தனிமம் | ஒப்பு அணு நிறை | தனிமம் | ஒப்பு அணு நிறை |
|---|---|---|---|
| H | 1.008 | Cl | 35.45 |
| C | 12 | K | 39.10 |
| N | 14 | Ca | 40.08 |
| O | 16 | Cr | 51.9 |
| Na | 23 | Mn | 54.94 |
| Mg | 24.3 | Fe | 55.85 |
| S | 32.07 | Cu | 63.55 |

**தன்மதிப்பீடு**

2) பின்வருவனவற்றின் ஒப்பு மூலக்கூறு நிறையினைக் கணக்கிடுக.

- எத்தனால் ($C_2H_5OH$)
- பொட்டாசியம் பெர்மாங்கனேட் ($KMnO_4$)
- பொட்டாசியம் டைகுரோமேட் ($K_2Cr_2O_7$)
- சுக்ரோஸ் ($C_{12}H_{22}O_{11}$)

## 1.4 மோல் பற்றிய கோட்பாடு

பொருட்களின் அளவினைக் குறிப்பிட, நம் வசதிக்கேற்ப டஜன், குயர் போன்ற சிறப்புப் பெயர்களை வழக்கத்தில் பயன்படுத்தி வருகிறோம். எடுத்துக்காட்டாக, ஒரு டஜன் ரோஜாக்கள் என்பது 12 ரோஜா பூக்களையும், ஒரு குயர் பேப்பர் என்பது 24 எண்ணிக்கை கொண்ட தாள்களையும் குறிப்பிடுகிறது.

இந்த ஒப்புமையினை பயன்படுத்தி வேதியியலில் அணு மற்றும் மூலக்கூறுகளின் அளவினை வரையறுக்கப் பயன்படும் மோல் பற்றிய கோட்பாட்டினை நாம் புரிந்து கொள்ளலாம். பொருளின் அளவினை குறிக்க SI அலகு முறையில் பயன்படுத்தப்படும் அடிப்படை அலகு 'மோல்' ஆகும்.

மோல் பற்றிய கோட்பாட்டினைப் புரிந்து கொள்வதற்கு, 12g கார்பன்–12 ஐசோடோப்பில் காணப்படும் அணுக்களின் எண்ணிக்கை, 158.03g பொட்டாசியம் பெர்மாங்கனேட் மற்றும் 294.18g பொட்டாசியம் டைகுரோமேட்டில் காணப்படும் மூலக்கூறுகளின் எண்ணிக்கையினை நாம் கணக்கிடுவோம்.

12 எண்ணிக்கை = 1 டஜன்



12 ரோஜாக்கள் 12 பந்துகள் 12 ஆப்பிள்கள்

1 மோல் ≡ $6.023 \times 10^{23}$ உட்பொருட்கள்



158.03g $KMnO_4$ 294.18g $K_2Cr_2O_7$

படம் 1.2 மோல் பற்றிய கோட்பாடு

அட்டவணை 1.2. ஒரு மோல் பொருளில் காணப்படும் உட்பொருட்களின் எண்ணிக்கையினைக் கணக்கிடுதல்.

| வ. எண் | பொருளின் பெயர் | எடுத்துக் கொள்ளப்பட்ட பொருளின் நிறை (gram ) ல் | ஒரு தனித்த அணு (அல்லது) மூலக்கூறின் நிறை (gram) = அணுநிறை (அ) மோலார் நிறை / அவகாட்ரோ எண் | அணு அல்லது மூலக்கூறுகளின் எண்ணிக்கை = பொருளின் நிறை ÷ ஒரு தனித்த அணு அல்லது மூலக்கூறின் நிறை |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (2)÷(3) |
| 1. | கார்பன் அணு (C-12) | 12 | $1.9926 \times 10^{-23}$ | $\frac{12}{1.9926 \times 10^{-23}} = 6.022 \times 10^{23}$ |
| 2. | குளுக்கோஸ் ($C_6H_{12}O_6$) | 180 | $29.89 \times 10^{-23}$ | $\frac{180}{29.89 \times 10^{-23}} = 6.022 \times 10^{23}$ |
| 3. | பொட்டாசியம் டைகுரோமேட் ($K_2Cr_2O_7$) | 294.18 | $48.851 \times 10^{-23}$ | $\frac{294.18}{48.851 \times 10^{-23}} = 6.022 \times 10^{23}$ |
| 4. | பொட்டாசியம் பெர்மாங்கனேட் ($KMnO_4$) | 158.03 | $26.242 \times 10^{-23}$ | $\frac{158.03}{26.242 \times 10^{-23}} = 6.022 \times 10^{23}$ |



Unit 1 - Sridhar.indd 6 07-01-2021 13:24:46

மேற்கண்டுள்ள கணக்கீடுகளிலிருந்து, 12g C-12 ஆனது $6.022 x 10^{23}$ கார்பன் அணுக்களைக் கொண்டுள்ளது என்பதனை நாம் அறிந்து கொள்கிறோம். மேலும் 158.03g பொட்டாசியம் பெர்மாங்கனேட் மற்றும் 294.18g பொட்டாசியம் டை குரோமேட் ஆகியவையும் இதே எண்ணிக்கையிலான மூலக்கூறுகளைக் கொண்டுள்ளன. ஒரு டஜன் என்பது 12 உட்பொருட்களை கொண்டது என குறிப்பிட்டவாறு, $6.022 \times 10^{23}$ உட்பொருட்களை (அணுக்கள் (அ) மூலக்கூறுகள் (அ) அயனிகள்) கொண்ட பொருளின் அளவைக் குறிப்பிட நாம் மோல் எனும் அலகைப் பயன்படுத்தலாம்.

12g கார்பன்–12 ஐசோடோப்பில் காணப்படும் கார்பன் அணுக்களின் எண்ணிக்கைக்குச் சமமான அடிப்படைத் துகள்களைப் பெற்றுள்ள ஒரு அமைப்பில் உள்ள பொருளின் அளவு ஒரு மோல் எனப்படும். அடிப்படை துகள் என்பது மூலக்கூறுகள், அணுக்கள், அயனிகள், எலக்ட்ரான்கள் அல்லது ஏதேனும் ஒரு வரையறுக்கப்பட்ட துகளைக் குறிப்பிடுகிறது.

உங்களுக்குத் தெரியுமா ?

### இரைப்பை அமிலம் மற்றும் அமில நீக்கிகள்

அமிலத்தன்மை மற்றும் நெஞ்செரிச்சலை குணப்படுத்த பொதுவாக அமிலநீக்கிகள் மருந்தாக பயன்படுத்தப்படுகிறது. இதன் வேதியியல் உங்களுக்குத் தெரியுமா ?

இரைப்பை அமிலம் என்பது வயிற்றில் சுரக்கும் சீரணத்திரவம் ஆகும். இதில், ஹைட்ரோகுளோரிக் அமிலம் உள்ளது. இரைப்பை அமிலத்தில் உள்ள ஹைட்ரோகுளோரிக் அமிலத்தின் செறிவு பொதுவாக 0.082 M என்ற அளவில் இருக்கும். இந்த அமிலத்தின் செறிவு 0.1 M என்ற அளவை விட அதிகமாகும் போது அமிலத்தன்மை மற்றும் நெஞ்செரிச்சல் ஏற்படுகிறது.

அமிலத்தன்மையினைக் குணப்படுத்த பயன்படுத்தப்படும் அமிலநீக்கிகள் பெரும்பாலானவற்றில் மெக்னீசியம் ஹைட்ராக்ஸைடு மற்றும் அலுமினியம் ஹைட்ராக்ஸைடு அடங்கியுள்ளது. இவை அதிகப்படியான அமிலத்தை நடுநிலையாக்குகிறது. வேதிவினைகள் பின்வருமாறு

$$3\ HCl + Al(OH)_3 \rightarrow AlCl_3 + 3\ H_2O$$

$$2\ HCl + Mg(OH)_2 \rightarrow MgCl_2 + 2\ H_2O$$

மேற்கண்டுள்ள வினைகளிலிருந்து, 1 மோல் அலுமினியம் ஹைட்ராக்ஸைடு 3 மோல் HCl ஐயும், 1 மோல் மெக்னீசியம் ஹைட்ராக்ஸைடு 2 மோல் HCl ஐயும் நடுநிலையாக்குகிறது என நாம் அறிகிறோம்.

250mg அலுமினியம் ஹைட்ராக்ஸைடு மற்றும் 250mg மெக்னீசியம் ஹைட்ராக்ஸைடை கொண்டுள்ள ஒரு அமில நீக்கியால் நடுநிலையாக்கப்படும், அமிலத்தின் அளவினை நாம் கணக்கிடுவோம்.

| செயல்படும் சேர்மம் | நிறை (mg) ல் | மூலக்கூறு நிறை (g mol⁻¹) | செயல்படும் சேர்மத்தின் மோல்களின் எண்ணிக்கை | $OH^-$ அயனியின் மோல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| $Al(OH)_3$ | 250 | 78 | 0.0032 | 0.0096 |
| $Mg(OH)_2$ | 250 | 58 | 0.0043 | 0.0086 |
| ஒரு மாத்திரையில் உள்ள மொத்த $OH^-$ அயனியின் மோல்கள் | | | | 0.0182 |

ஒருவருடைய வயிற்றில் 0.1 மோல் அமிலக்கூறைக் கொண்டுள்ள இரைப்பை திரவம் இருப்பின், மேற்கண்டுள்ள இயைபினைப் பெற்றுள்ள ஒரு மாத்திரை ஆனது 0.0182 மோல் HCl ஐ நடுநிலையாக்கும். அதாவது, ஒரு மாத்திரையானது, அதிகப்படியாக உள்ள அமிலத்தினை நடுநிலையாக்கி ( 0.1 – 0.018 M = 0.082 M) வழக்கமான அமில நிலைக்கு மீள கொண்டு வரும்.





லாரன்ஸோ ரோமானோ அமிடியோ கார்லோ அவகாட்ரோ (1776–1856)

அவகாட்ரோ கருதுகோளை வழங்கியவர். இவருடைய பங்களிப்பினை நினைவுகூறும் வகையில், ஒரு மோல் பொருளில் அடங்கியுள்ள அடிப்படை துகள்களின் எண்ணிக்கையை குறிப்பிடும் எண் அவகாட்ரோ எண் என அழைக்கப்படுகிறது. சம கன அளவுள்ள வாயுக்களில் காணப்படும் துகள்களின் எண்ணிக்கையினை இவர் தெரிவிக்கவில்லை. எனினும், இவரது கருதுகோள் $6.022 \times 10^{23}$ என்ற எண்ணைக் கண்டறிய அடிப்படையாக அமைந்தது. ருடால்ப் கிளாசியஸ் தனது வாயுக்களின் இயக்கவியற் கொள்கையின் மூலம் அவகாட்ரோ விதிக்கான ஆதாரத்தினை வழங்கினார்.

### 1.4.1 அவகாட்ரோ எண்

ஒரு மோல் அளவுடைய எந்தவொரு சேர்மத்திலும் காணப்படும் உட்பொருட்களின் எண்ணிக்கை $6.022 \times 10^{23}$ க்கு சமமாகும். இந்த எண் அவகாட்ரோ எண் என அழைக்கப்படுகிறது. இத்தாலிய இயற்பியல் அறிஞர் அமிடோ அவகாட்ரோ என்பவரது பெயரால் இந்த எண் அழைக்கப்படுகிறது. ஒத்த வெப்பநிலை மற்றும் அழுத்த நிலையில், சம கன அளவுள்ள எல்லா வாயுக்களும், சம எண்ணிக்கையிலான மூலக்கூறுகளை பெற்றிருக்கும் என அவகாட்ரோ முன் மொழிந்தார். அவகாட்ரோ எண்ணிற்கு அலகு இல்லை.

ஒரு வேதிவினையில் அணுக்கள் அல்லது மூலக்கூறுகள் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் வினைபுரிகின்றன. பின்வரும் எடுத்துக்காட்டுகளை நாம் கருதுவோம்.

வினை 1 : $C + O_2 \rightarrow CO_2$

வினை 2 : $CH_4 + 2\,O_2 \rightarrow CO_2 + 2\,H_2O$

முதல் வினையில், ஒரு கார்பன் அணு, ஒரு ஆக்சிஜன் மூலக்கூறுடன் வினைபுரிந்து ஒரு கார்பன் டை ஆக்ஸைடு மூலக்கூறினைத் தருகிறது. இரண்டாம் வினையில் ஒரு மூலக்கூறு மீத்தேன், இரு மூலக்கூறு ஆக்சிஜனில் எரிந்து ஒரு மூலக்கூறு கார்பன் டை ஆக்ஸைடையும் இரு மூலக்கூறு நீரையும் தருகிறது.

இதிலிருந்து வினையில் ஈடுபடும் வினைபொருட்களுக்கு இடையேயான விகிதம் மூலக்கூறுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அமைகிறது என்பது தெளிவாகிறது. இருந்தபோதிலும், ஒரு வேதிவினையில் ஈடுபடும் தனித்த மூலக்கூறுகளின் எண்ணிக்கையினைக் கணக்கிடுவது என்பது நடைமுறையில் கடினமான ஒன்றாகும். எனவே, வேதிவினையில் ஈடுபடும் வினைப்பொருட்களின் அளவினை மூலக்கூறுகளின் எண்ணிக்கையில் குறிப்பிடுவதைக்காட்டிலும் மோல் அடிப்படையில் குறிப்பிடுவது பயனுள்ளதாக அமையும். முதல் வினையினை, ஒரு மோல் கார்பன், ஒரு மோல் ஆக்சிஜனுடன் வினைபுரிந்து ஒரு மோல் கார்பன் டை ஆக்ஸைடை தருகிறது எனவும், இரண்டாவது வினையினை, ஒரு மோல் மீத்தேன், இரண்டு மோல் ஆக்சிஜனில் எரிந்து, இரண்டு மோல் நீர் மற்றும் ஒரு மோல் கார்பன் டை ஆக்ஸைடை தருகிறது எனவும் நாம் விளக்கலாம். அணுக்கள் மட்டுமே இடம்பெறும் நிலையில், அறிவியல் அறிஞர்கள் ஒரு மோல் என்ற வார்த்தைக்கு பதிலாக ஒரு கிராம் அணு என்ற வார்த்தையினையும் பயன்படுத்துவார்கள்.

### 1.4.2 மோலார் நிறை

1மோல் அளவுள்ள ஒரு பொருளின் நிறையானது அதன் மோலார் நிறை என வரையறுக்கப்படுகிறது. ஒரு சேர்மத்தின் மோலார் நிறை என்பது அதில் அடங்கியுள்ள தனிமங்களின் ஒப்பு அணு நிறைகளின் கூடுதல் மதிப்பை $g\ mol^{-1}$ என்ற அலகில் குறிப்பிடுவதாகும்.



Unit 1 - Sridhar.indd 8
07-01-2021 13:24:48

எடுத்துக்காட்டு

ஒரு ஹைட்ரஜன் அணுவின் ஒப்பு அணு நிறை = 1. 008 u

ஒரு ஹைட்ரஜன் அணுவின் மோலார் நிறை = 1.008 $gmol^{-1}$

குளுக்கோசின் ஒப்பு மூலக்கூறு நிறை = 180u

குளுக்கோசின் மோலார் நிறை = 180 $gmol^{-1}$

### 1.4.3 மோலார் கனஅளவு:

ஒரு குறிப்பிட்ட வெப்பநிலை மற்றும் அழுத்த நிலையில், ஒரு மோல் சேர்மம் அதன் வாயு நிலையில் அடைத்துக்கொள்ளும் கனஅளவு, மோலார் கனஅளவு எனப்படும்.

| நிலை | ஒரு மோல் அளவுள்ள எந்த ஒரு சேர்மமும் அதன் வாயு நிலையில் அடைத்துக் கொள்ளும் கனஅளவு (லிட்டரில்) |
|---|---|
| 273 K மற்றும் 1 bar அழுத்தம் (STP) | 22.71 |
| 273 K மற்றும்1 atm அழுத்தம் | 22.4 |
| 298 K மற்றும்1 atm அழுத்தம் (அறை வெப்ப நிலை மற்றும் அழுத்தம்) (SATP) | 24.47 |

#### தன்மதிப்பீடு

3 அ) 9 கிராம் ஈத்தேனில் காணப்படும் மோல்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுக.

3 ஆ) 273K மற்றும் 3atm அழுத்த நிலையில், 224mL கன அளவினை அடைத்துக்கொள்ளும் ஆக்சிஜன் வாயுவில் காணப்படும் ஆக்சிஜன் மூலக்கூறுகளின் எண்ணிக்கையினைக் கணக்கிடுக.

## 1.5 கிராம் சமான நிறை கோட்பாடு

வேதியியலில் குறிப்பாக பகுப்பாய்வு வேதியியலில், மோல் கோட்பாட்டினைப் போன்றே கிராம் சமானநிறை கோட்பாடும் பரவலாக பயன்படுத்தப்படுகிறது. முந்தைய பாடப்பகுதியில் மோல் கோட்பாடு, மூலக்கூறு நிறையின் அடிப்படையில் அமைந்துள்ளது என நாம் அறிந்து கொண்டோம். அதைப்போலவே கிராம் சமான நிறை கோட்பாடும் சமான நிறையினை அடிப்படையாகக் கொண்டது.

### வரையறை

1.008g ஹைட்ரஜன் அல்லது 8g ஆக்சிஜன் அல்லது 35.45g குளோரின் இவற்றோடு சேரக்கூடிய அல்லது இவற்றை இடப்பெயர்ச்சி செய்யக்கூடிய ஒரு தனிமம் அல்லது சேர்மம் அல்லது அயனியின் நிறையே, அதன் கிராம் சமான நிறை என வரையறுக்கப்படுகிறது.

பின்வரும் வினையினைக் கருதுக.

$$Zn + H_2SO_4 \rightarrow ZnSO_4 + H_2\uparrow$$

இவ்வினையில் 1மோல் துத்தநாகம் [zinc] (65.38 g), 1 மோல் ஹைட்ரஜன் மூலக்கூறினை (2.016 g)இடப்பெயர்ச்சி செய்கிறது.

∴ 1.008g ஹைட்ரஜனை இடப்பெயர்ச்சி செய்யத் தேவையான துத்தநாகத்தின் நிறை =

$$= \frac{65.38}{2.016} \times 1.008$$

$$= \frac{65.38}{2}$$

துத்தநாகத்தின் சமான நிறை = 32.69

துத்தநாகத்தின் கிராம் சமான நிறை = 32.69 g $eq^{-1}$

சமான நிறைக்கு அலகு இல்லை. ஆனால், கிராம் சமான நிறை g $eq^{-1}$ என்ற அலகால் குறிப்பிடப்படுகிறது.



Unit 1 - Sridhar.indd 9 07-01-2021 13:24:48

ஹைட்ரஜன், ஆக்சிஜன், குளோரின் ஆகிய மூன்றின் அடிப்படையில் அமைந்துள்ள மேலே குறிப்பிடப்பட்டுள்ள வரையறையினை எப்போதும் பயன்படுத்த இயலாது. ஏனெனில், இந்த மூன்றுடன் வினைகள் நடைபெற வாய்ப்பில்லாத நேர்வுகளை நாம் அறிவோம். எனவே, கிராம் சமான நிறையினை கணக்கிட பின்வரும் வாய்பாடு பயனுள்ளதாக அமையும்.

$$\text{கிராம் சமான நிறை (E)} = \frac{\text{மோலார் நிறை } (g\ mol^{-1})}{\text{சமான காரணி } (eq\ mol^{-1})}$$

மேற்கண்டுள்ள கூற்றினைப் பயன்படுத்தி, வேதி உட்பொருட்களை நாம் வகைப்படுத்துவதுடன், பின்வரும் அட்டவணையில் அவற்றின் சமான நிறையினைக் கண்டறிய உதவும் வாய்ப்பாட்டினைக் கண்டறிவோம்.

### 1.5.1 அமிலம், காரம், ஆக்சிஜனேற்றி மற்றும் ஆக்சிஜன் ஒடுக்கியின் சமான நிறையினை கணக்கிடுதல்.

| வேதி உட்பொருள் | சமான காரணி(n) | சமான நிறையினை கண்டறிய உதவும் வாய்பாடு | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|
| அமிலங்கள் | காரத்துவம் (1 மோல் அமிலத்தில் உள்ள அயனியுறும் $H^+$ அயனியின் மோல்களின் எண்ணிக்கை) | $E = \frac{\text{அமிலத்தின் மோலார் நிறை}}{\text{அமிலத்தின் காரத்துவம்}}$ | $H_2SO_4$ ன் காரத்துவம் $= 2\ eq\ mol^{-1}$<br>$H_2SO_4$ ன் மோலார் நிறை $= (2 \times 1) + (1 \times 32) + (4 \times 16)$<br>$= 98\ g\ mol^{-1}$<br>$H_2SO_4$ன் சமான நிறை $= \frac{98}{2}$<br>$= 49\ g\ eq^{-1}$ |
| காரங்கள் | அமிலத்துவம் (1 மோல் காரத்தில் காணப்படும் அயனியுறும் $OH^-$ அயனியின் மோல்களின் எண்ணிக்கை ) | $E = \frac{\text{காரத்தின் மோலார் நிறை}}{\text{காரத்தின் அமிலத்துவம்}}$ | KOH ன் அமிலத்துவம் $= 1\ eq\ mol^{-1}$<br>KOH ன் மோலார் நிறை $= (1 \times 39)+(1 \times 16)+(1 \times 1)$<br>$= 56\ g\ mol^{-1}$<br>KOH ன் கிராம் சமான நிறை $= \frac{56}{1} = 56\ g\ eq^{-1}$ |
| ஆக்சிஜேனற்றி (அல்லது) ஆக்சிஜன் ஒடுக்கி | ஆக்சிஜனேற்ற ஒடுக்க வினையில் ஒரு மோல் வினைபொருள் ஏற்கும் அல்லது இழக்கும் எலக்ட்ரான்களின் மோல்களின் எண்ணிக்கை. | $E = \frac{\text{ஆக்சிஜனேற்றி அல்லது ஆக்சிஜனொடுக்கியின் மோலார் நிறை}}{\text{ஒரு மோல் ஆக்சிஜனேற்றி அல்லது ஆக்சிஜனொடுக்கி ஏற்றுக் கொள்ளும் அல்லது இழக்கும் எலக்ட்ரான்களின் மோல்களின் எண்ணிக்கை.}}$ | $KMnO_4$ ஒரு ஆக்சிஜனேற்றி<br>$KMnO_4$ ன் மோலார் நிறை<br>$= (1{\times}39)+(1{\times}55)+(4{\times}16)$<br>$= 158\ g\ mol^{-1}$<br>அமில ஊடகத்தில், ஆக்சிஜனேற்றத்தின் போது பெர்மாங்கனேட் பின்வரும் வினையில் கண்டுள்ளவாறு ஒடுக்கமடைகிறது<br>$.MnO_4^- + 8H^+ + 5e^- \rightarrow Mn^{2+} + 4H_2O$<br>$\therefore n = 5\ eq\ mol^{-1}$.<br>$KMnO_4$ ன் சமான நிறை $= \frac{158}{5} = 31.6\ g\ eq^{-1}$. |



Unit 1 - Sridhar.indd 10 07-01-2021 13:24:48

மோல் கோட்பாட்டினை பயன்படுத்தி ஒரு வேதிவினையில் ஈடுபடும் வினைப்பொருட்களின் அளவினைக் கண்டறிய அவ்வினையின் சமன்படுத்தப்பட்ட சமன்பாடு தேவைப்படுகிறது. ஆனால், கிராம் சமான நிறை கோட்பாட்டிற்கு இது தேவையில்லை. ஆக்சிஜனேற்ற – ஒடுக்க வினைகளுக்கு, கிராம் சமான நிறை கோட்பாட்டினையும் அதனை தவிர்த்த பிற வினைகளுக்கு மோல் கோட்பாட்டினையும் நாம் பயன்படுத்துகிறோம்.

எடுத்துக்காட்டாக,

$KMnO_4$ மற்றும் நீரற்ற பெர்ரஸ் சல்பேட்டின் சமானநிறை நமக்குத் தெரிந்திருப்பின்,அவ்விரண்டும் வினைபுரியும் வேதிவினைக்கான சமன்படுத்தப்பட்ட சமன்பாட்டினை எழுதாமலேயே, நேரடியாக 31.6 g $KMnO_4$ ஆனது 152 g $FeSO_4$ உடன் வினைபுரியும் என கிராம் சமான நிறை கோட்பாட்டினை பயன்படுத்தி கூற இயலும்.

இதே வினையினை நாம் மோல் கோட்பாட்டினை பயன்படுத்தியும் விளக்கலாம். மேலே குறிப்பிடப்பட்டுள்ள வினைக்கான சமன்படுத்தப்பட்ட சமன்பாடு

$$10\, FeSO_4 + 2\, KMnO_4 + 8\, H_2SO_4 \downarrow K_2SO_4 + 2\, MnSO_4 + 5\, Fe_2(SO_4)_3 + 8H_2O$$

அதாவது, 2 மோல்கள் $(2 \times 158 = 316\ g)$ பொட்டாசியம் பெர்மாங்கனேட், 10 மோல்கள் $(10 \times 152 = 1520\ g)$ மோல்கள் நீரற்ற பெர்ரஸ்சல்பேட்டுடன் வினைபுரிகிறது.

$\therefore$ 31.6 g $KMnO_4$ ஆனது $\dfrac{1520}{316} \times 31.6$

$= 152$ g of $FeSO_4$ உடன் வினைபுரிகிறது.

**தன்மதிப்பீடு**

4 அ) 0.456g உலோகமானது 0.606g அதன் உலோகக் குளோரைடினைத் தருகிறது. உலோகத்தின் சமான நிறையைக் கணக்கிடுக.

4ஆ) பொட்டாசியம் டை குரோமேட்டின் சமான நிறையினைக் கணக்கிடுக. அமில ஊடகத்தில் ஒடுக்க அரைவினை

$$Cr_2O_7^{2-} + 14H^+ + 6e^- \rightarrow 2Cr^{3+} + 7H_2O$$

## 1.6 எளிய விகித வாய்பாடு மற்றும் மூலக்கூறு வாய்பாடு

தனிமங்களைக் கண்டறியும் ஆய்வின் மூலம் ஒரு சேர்மத்தில் அடங்கியுள்ள தனிமங்களின் நிறை சதவீதத்தினைக் கண்டறியலாம். இந்த நிறை சதவீதத்தினைப் பயன்படுத்தி, நாம் எளிய விகித வாய்ப்பாட்டினைத் தீர்மானிக்க இயலும். சேர்மத்தின் மோலார் நிறையினை பயன்படுத்தி, எளிய விகித வாய்ப்பாட்டிலிருந்து, மூலக்கூறு வாய்ப்பாட்டினைக் கண்டறியலாம்.

சேர்மத்தின், ஒரு மூலக்கூறில் அடங்கியுள்ள வெவ்வேறு தனிமங்களின் எண்ணிக்கையின் எளிய விகிதத்தினை அத்தனிமத்தின் குறியீட்டிற்கு கீழ் ஒட்டாக எழுதுவதால் பெறப்படும் வாய்பாடு எளிய விகித வாய்பாடு எனப்படும். சேர்மத்தின் ஒரு மூலக்கூறில் உள்ள அனைத்து தனிமங்களின் சரியான எண்ணிக்கையினை, அத்தனிமத்தின் குறியீட்டிற்கு கீழ்ஒட்டாக குறிப்பிட்டு எழுதுவதால் பெறப்படும் வாய்பாடு மூலக்கூறு வாய்ப்பாடாகும்.

அசிட்டிக் அமிலத்தினை எடுத்துக்காட்டாகக் கொண்டு எளிய விகித வாய்ப்பாட்டினை நாம் புரிந்து கொள்வோம்.

அசிட்டிக் அமிலத்தின் மூலக்கூறு வாய்பாடு $C_2H_4O_2$ ஆகும்.

C : H : O இவற்றிற்கிடையேயான விகிதம் 1 : 2 : 1 எனவே அசிட்டிக் அமிலத்தின் எளிய விகித வாய்பாடு $CH_2O$.

### 1.6.1 தனிமங்களைக் கண்டறியும் பகுப்பாய்வு தரவுகளிலிருந்து எளிய விகித வாய்ப்பாட்டினைத் தீர்மானித்தல்.

நிலை 1 : தனிமங்களின் இயைபானது சதவீதத்தில் குறிப்பிடப் படுவதால், சேர்மத்தின் மொத்த நிறையினை நாம் 100g என எடுத்துக்கொள்வதுடன், தனிமங்களின் நிறை சதவீதத்தினை அவற்றின் நிறையினை (கிராமில்) குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

நிலை 2 : ஒவ்வொரு தனிமத்தின் நிறையினையும், அதன் அணு நிறையால் வகுக்க. இது சேர்மத்தில் உள்ள தனிமங்களின் ஒப்பு மோல்களின் எண்ணிக்கையினைத் தருகிறது.

நிலை 3 : நிலை 2ல் பெறப்பட்ட ஒப்பு மோல்களின் எண்ணிக்கையினை, அவற்றினுள் உள்ள சிறிய எண்ணால் வகுத்து, எளிய விகிதத்தினைப் பெறவேண்டும்.

நிலை4: (தேவையெனில்) நிலை 3ல் பெறப்பட்ட எண்கள் முழு எண்ணாக இல்லாமல் பின்ன எண்ணாக இருப்பின், தகுந்த எண்ணைக்கொண்டு பெருக்குவதன் மூலம் முழு எண்ணாக மாற்றுக.

எடுத்துக்காட்டு:

1. புளியில் காணப்படும் ஒரு அமிலம் பகுப்பாய்வில் பின்வரும் சதவீத இயைபினைக் கொண்டுள்ளது: 32% கார்பன், 4% ஹைட்ரஜன், 64% ஆக்சிஜன். அச்சேர்மத்தின் எளிய விகித வாய்ப்பாபாட்டினைக் கண்டறிக..

| தனிமம் | சதவீதம் | மோலார் நிறை | ஒப்பு மோல்களின் எண்ணிக்கை | எளிய விகிதம் | எளிய விகிதம் (முழு எண்ணில்) |
|---|---|---|---|---|---|
| C | 32 | 12 | $\frac{32}{12} = 2.66$ | $\frac{2.66}{2.66} = 1$ | 2 |
| H | 4 | 1 | $\frac{4}{1} = 4$ | $\frac{4}{2.66} = 1.5$ | 3 |
| O | 64 | 16 | $\frac{64}{16} = 4$ | $\frac{4}{2.66} = 1.5$ | 3 |

எளிய விகித வாய்பாடு $C_2H_3O_3$

2. வினிகரில் காணப்படும் ஒரு கரிமச் சேர்மம் 40% கார்பன், 6.6% ஹைட்ரஜன் மற்றும் 53.4% ஆக்சிஜனைக் கொண்டுள்ளது. அச் சேர்மத்தின் எளிய விகித வாய்ப்பாட்டினைக் கண்டறிக.

| தனிமம் | சதவீதம் | மோலார் நிறை | ஒப்பு மோல்களின் எண்ணிக்கை | எளிய விகிதம் | எளிய விகிதம் (முழு எண்ணில்) |
|---|---|---|---|---|---|
| C | 40 | 12 | $\frac{40}{12} = 3.3$ | $\frac{3.3}{3.3} = 1$ | 1 |
| H | 6.6 | 1 | $\frac{6.6}{1} = 6.6$ | $\frac{6.6}{3.3} = 2$ | 2 |
| O | 53.4 | 16 | $\frac{53.4}{16} = 3.3$ | $\frac{3.3}{3.3} = 1$ | 1 |

எளிய விகித வாய்பாடு $CH_2O$

#### தன்மதிப்பீடு

5. ஒரு சேர்மம் பகுப்பாய்வில் பின்வரும் சதவீத இயைபைக் கொண்டுள்ளது. C=54.55%, H=9.09%, O=36.36% அச்சேர்மத்தின் எளிய விகித வாய்ப்பாட்டினைக் கண்டறிக.



Unit 1 - Sridhar.indd 12 07-01-2021 13:24:49

எளிய விகித வாய்ப்பாட்டின் ஒரு குறிப்பிட்ட முழு எண் மடங்கு மூலக்கூறு வாய்ப்பாட்டினைத் தருகிறது. அந்த முழு எண்ணை, அச் சேர்மத்தின் மோலார் நிறையினைக் கொண்டு பின்வரும் வாய்ப்பாட்டின் மூலம் பெற இயலும்.

$$\text{முழு எண் } (n) = \frac{\text{சேர்மத்தின் மோலார் நிறை}}{\text{எளிய விகித வாய்பாட்டினைக் கொண்டு கணக்கிடப்படும் நிறை}}$$

### 1.6.2 எளிய விகித வாய்ப்பாட்டிலிருந்து மூலக்கூறு வாய்பாட்டினைக் கணக்கிடுதல்:

| சேர்மம் | எளிய விகித வாய்பாடு | மோலார் நிறை | எளிய விகித வாய்ப்பாட்டு நிறை (n) | முழுஎண் (n) | மூலக்கூறு வாய்பாடு |
|---|---|---|---|---|---|
| அசிட்டிக் அமிலம் | $CH_2O$ | 60 | 30 | $\frac{60}{30} = 2$ | $(CH_2O) \times 2$ $C_2H_4O_2$ |
| ஹைட்ரஜன் பெராக்சைடு | HO | 34 | 17 | $\frac{34}{17} = 2$ | $(HO) \times 2$ $H_2O_2$ |
| லாக்டிக் அமிலம் | $CH_2O$ | 90 | 30 | $\frac{90}{30} = 3$ | $(CH_2O) \times 3$ $C_3H_6O_3$ |
| டார்டாரிக் அமிலம் | $C_2H_3O_3$ | 150 | 75 | $\frac{150}{75} = 2$ | $(C_2H_3O_3) \times 2$ $C_4H_6O_6$ |
| பென்சீன் | CH | 78 | 13 | $\frac{78}{13} = 6$ | $(CH) \times 6$ $C_6H_6$ |

மூலக்கூறு வாய்ப்பாட்டினை கண்டறிவதை பின்வரும் எடுத்துக்காட்டின் மூலம் நாம் புரிந்து கொள்வோம்.

C-40%, H-6.6% ; O-53.4% நிறை சதவீத இயைபுடைய இரு கரிமச்சேர்மங்களில் ஒன்று வினிகரில் காணப்படுகிறது (மோலார்நிறை 60g $mol^{-1}$), மற்றொன்று புளித்த பாலில் காணப்படுகிறது (மோலார்நிறை 90g $mol^{-1}$) அவைகளின் மூலக்கூறு வாய்பாடுகளைக் கண்டறிக.

இரண்டு சேர்மங்களும் ஒரே சதவீத இயைபைக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டு (2)ல் தீர்வு காணப்பட்ட எளிய விகித வாய்பாடும், இவ்விரண்டு சேர்மங்களின் எளிய விகித வாய்பாடுகளும் ஒன்றே. அதாவது எளிய விகித வாய்பாடு $CH_2O$ ஆகும். எளிய விகித வாய்ப்பாட்டினைக் கொண்டு கணக்கிடப்படும் நிறை

$$(CH_2O) = 12 + (2\times1) + 16 = 30 \text{ g mol}^{-1}.$$

வினிகரில் காணப்படும் சேர்மத்தின் வாய்பாடு

$$n = \frac{\text{மோலார் நிறை}}{\text{கணக்கிடப்பட்ட எளிய விகித வாய்ப்பாட்டு நிறை}} = \frac{60}{30} = 2$$

∴ மூலக்கூறு வாய்பாடு $= (CH_2O)_2$

$= C_2H_4O_2$

(அசிட்டிக் அமிலம்)

**தன்மதிப்பீடு**

6) x,y,z ஆகிய தனிமங்களைக் கொண்டுள்ள ஒருசேர்மத்தின்பகுப்பாய்வுமுடிவுகளிலிருந்து பின்வரும் தரவுகள் பெறப்பட்டுள்ளது. x=32%, y=24%, z=44% x, y மற்றும் z ன் ஒப்பு அணுக்களின் எண்ணிக்கை முறையே 2, 1மற்றும்0.5 ஆகும். (சேர்மத்தின் மூலக்கூறு நிறை 400g)

i) தனிமங்கள் x, y மற்றும் z ன் அணு நிறைகளைக் காண்க.

ii) சேர்மத்தின் எளிய விகித வாய்பாடு மற்றும்

iii) சேர்மத்தின் மூலக்கூறு வாய்ப்பாட்டினைக் கண்டறிக.



Unit 1 - Sridhar.indd 13 07-01-2021 13:24:49

புளித்த பாலில் காணப்படும் சேர்மத்தின் மூலக்கூறு வாய்பாடு

$$n = \frac{\text{மோலார் நிறை}}{30} = \frac{90}{30} = 3$$

மூலக்கூறு வாய்பாடு $= (CH_2O)_3$

$= C_3H_6O_3$

(லாக்டிக் அமிலம்)

## 1.7 வேதி வினைக் கூறுகளின் விகிதம் (stoichiometry)

உனது வீட்டில் கேசரி தயார் செய்வதை நீ எப்போதாவது பார்த்திருக்கிறாயா? கேசரி தயாரிப்பதில் உள்ள முறைகளில், ஒரு முறையினைப் பயன்படுத்தி ஆறு கப் கேசரி தயாரிக்கத் தேவையான பொருட்களின் விவரம் பின்வருமாறு:

1) ரவை – 1 கப்

2) சர்க்கரை – 2 கப்

3) நெய் – 1/2 கப்

4) உலர் பழங்கள் மற்றும் பருப்புகள் – 1/4 கப்

அதாவது,

1 கப் ரவை + 2 கப் சர்க்கரை + 1/2 கப் நெய் + 1/4 கப் உலர் பழங்கள் மற்றும் பருப்புகள் = 6 கப் கேசரி


மேற்கண்டுள்ள விவரங்களிலிருந்து, 3 கப் கேசரி தயாரிப்பதற்கு தேவையான பொருட்களை நம்மால் பின்வருமாறு கணக்கிட இயலும்.

$$\frac{1 \text{ கப் ரவை}}{\cancel{6}_{\,2} \text{ கப் கேசரி}} \times \cancel{3 \text{ கப் கேசரி}} = \frac{1}{2} \text{ கப் ரவை}$$

மாற்றாக, 3 கப் ரவையைக் கொண்டு தயார் செய்ய இயலும் கேசரியின் அளவினை பின்வருமாறு கணக்கிடலாம்.

$$\frac{6 \text{ கப் கேசரி}}{\cancel{1 \text{ கப் ரவை}}} \times \overset{3}{\cancel{3 \text{ கப் ரவை}}} = 18 \text{ கப் கேசரி}$$

இதைப் போலவே தேவையான மற்ற பொருட்களின் அளவினையும் நம்மால் கண்டறிய இயலும்.




இந்தக் கணக்கீட்டு முறையினை, ஒரு வேதிவினையின், வேதிவினைக் கூறுகளின் விகிதங்களைக் கண்டறிய நாம் பயன்படுத்தலாம். கிரேக்க மொழியில், *stoicheion* என்பதற்கு தனிமம் எனவும் *metron* என்பதற்கு அளவீடு என்றும் பொருள் அதாவது வேதிவினைக் கூறுகளின் விகிதமானது, ஒரு சமன்படுத்தப்பட்ட வேதிச் சமன்பாட்டில், வேதி வினைப் பொருட்களுக்கு இடையேயான எண்ணியல் தொடர்பினைத் தருகிறது.

வேதி வினைக்கூறு விகித கோட்பாட்டினைப் பயன்படுத்தி,

ஒரு குறிப்பிட்ட அளவு வினைவிளை பொருளை பெறத் தேவையான வினைபடுபொருளின் அளவையோ அல்லது வினைபடு பொருளின் அளவினைக் கொண்டு வினையில் உருவாகும் விளைபொருளின் அளவையோ அவ்வினைக்கான சமன்படுத்தப்பட்ட சமன்பாட்டின் மூலம் நம்மால்



Unit 1 - Sridhar.indd 14 07-01-2021 13:24:55

கணக்கிட முடியும். பின்வரும் வேதிவினையினை நாம் கருதுவோம்

$$C(s) + O_2(g) \rightarrow CO_2(g)$$


இந்தச் சமன்பாட்டிலிருந்து, 1 மோல் கார்பன், 1 மோல் ஆக்சிஜன் மூலக்கூறுடன் வினைபுரிந்து 1 மோல் கார்பன் டை ஆக்ஸைடைத் தருகிறது என்பதை நாம் அறிந்து கொள்கிறோம்.

1 மோல் $C \equiv$ 1 மோல் $O_2 \equiv$ 1 மோல் $CO_2$

'$\equiv$' என்ற குறியீடு, 'வேதிவினைக்கூறு விகித அடிப்படையில் சமம்' என்பதனைக் குறிப்பிடுகிறது.

### 1.7.1 வேதிவினைக் கூறுவிகிதக் கணக்கீடுகள்

ஒரு சமன்படுத்தப்பட்ட வேதிச் சமன்பாட்டில், வினைபடு பொருட்கள் மற்றும் வினைவிளை பொருட்கள் ஆகியவற்றிற்கு இடையேயான 'மோல்' எண்ணிக்கை தொடர்பினை வேதி வினைக்கூறு விகிதம் என்கிறோம். வினைபடு பொருட்கள் மற்றும் வினைவிளை பொருட்களின் அளவினை மோல் அல்லது நிறை அல்லது கன அளவின் அடிப்படையில் குறிப்பிடலாம். இம்மூன்று அலகுகளையும் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு மாற்ற முடியும்.




மீத்தேனின் எரிதல் வினையினை கருத்திற் கொண்டு, இந்த மாற்றங்களை நாம் விளக்க முடியும், $CH_4(g) + 2\,O_2(g) \rightarrow CO_2(g) + 2\,H_2O(g)$

| | | | | |
|---|---|---|---|---|
| | வினைபடு பொருட்கள் | | வினைவிளை பொருட்கள் | |
| | $CH_4(g)$ | $O_2(g)$ | $CO_2(g)$ | $H_2O(g)$ |
| வேதிவினைக் கூறு விகித குணகங்கள் | 1 | 2 | 1 | 2 |
| மோல் – மோல் தொடர்பு | 1 மோல் | 2 மோல்கள் | 1 மோல் | 2 மோல்கள் |
| நிறை – நிறை தொடர்பு = மோல்களின் எண்ணிக்கை × மோலார் நிறை | $1\ mol \times 16\ g\ mol^{-1}$ 16 g | $2\ mol \times 32\ g\ mol^{-1}$ 64 g | $1\ mol \times 44\ g\ mol^{-1}$ 44 g | $2\ mol \times 18\ g\ mol^{-1}$ 36 g |
| நிறை – கனஅளவு தொடர்பு வினைபடு பொருட்களின் நிறை = மோல் x மோலார் நிறை & விளைபொருளின் கனஅளவு (273 K மற்றும் 1 atm அழுத்தத்தில் 1 மோல் அளவுடைய எந்த ஒரு வாயும் அடைத்துக் கொள்ளும் கனஅளவு 22.4 லிட்டர் ஆகும்). | 16 g | 64 g | 22. 4 L | 44.8 L |
| கனஅளவு – கனஅளவு தொடர்பு | $1 \times 22.4$ L 22.4 L | $2 \times 22.4$ L 44.8 L | $1 \times 22.4$ L 22. 4 L | $2 \times 22.4$ L 44. 8 L |



Unit 1 - Sridhar.indd 15 07-01-2021 13:24:55

## வேதிவினைக் கூறு விகித அடிப்படையிலான கணக்கீடுகள்

1. 10 மோல் அம்மோனியாவை உருவாக்க எத்தனை மோல் ஹைட்ரஜன் தேவை?

அம்மோனியா உருவாதலுக்கான சமன்படுத்தப்பட்ட சமன்பாடு

$$N_2(g) + 3\,H_2\,(g) \rightarrow 2\,NH_3\,(g)$$

மேற்கண்டுள்ள சமன்படுத்தப்பட்ட சமன்பாட்டின் அடிப்படையில்,

2 மோல் அம்மோனியாவை உருவாக்க 3 மோல் ஹைட்ரஜன் தேவைப்படுகிறது.

∴ 10 மோல் அம்மோனியாவை உருவாக்க.

$$\frac{3\text{ மோல் } H_2}{\cancel{2\text{ மோல் } NH_3}} \times \overset{5}{\cancel{10\text{ மோல் } NH_3}}$$

= 15 மோல் ஹைட்ரஜன் தேவை.

2. 32 g மீத்தேன் எரிக்கப்படும் போது உருவாகும் நீரின் அளவினைக் கணக்கிடுக.

$$CH_4(g) + 2O_2(g) \rightarrow CO_2(g) + 2H_2O(g)$$

சமன்படுத்தப்பட்ட சமன்பாட்டின் அடிப்படையில், 1 மோல் (16 g) $CH_4$ எரிதலின் போது 2 மோல் (2 x 18 = 36 g) நீரினைத் தருகிறது.

$CH_4$

(12) + (4 ×1) = 16 g மோல்$^{-1}$

$H_2O$

(2×1) + (1 ×16) = 18 g மோல்$^{-1}$

∴ 32 g மீத்தேன் எரிதலின் போது

$$\frac{36\text{ g } H_2O}{\cancel{16\text{ g } CH_4}} \times \overset{2}{\cancel{32\text{ g } CH_4}}$$

= 72 g நீரைத் தருகிறது

3. திட்ட வெப்ப அழுத்த நிலைகளில் 50 g கால்சியம் கார்பனேட்டை முற்றிலுமாக எரிப்பதால் உருவாகும் கார்பன் டைஆக்ஸைடின் கனஅளவு எவ்வளவு?

49. துகள் ஒன்றின் நிலையில் ஏற்படும் நிச்சயமற்றத் தன்மையின் அளவீடானது அதன் டீபிராக்ளி அலைநீளத்திற்குச் சமம் எனில், அதன் திசைவேகத்தில் ஏற்படும் குறைந்த பட்ச நிச்சயமற்றத் தன்மை அதன் திசைவேகத்தின் $1/4\pi$ மடங்குக்குச் சமம் எனக் காட்டுக.



Unit 2 - Sridhar.indd 70 07-01-2021 13:35:33

50. அமைதி நிலையில் உள்ள ஒரு எலக்ட்ரான் 100V மின்னழுத்த வேறுபாட்டைக் கொண்டு முடுக்குவிக்கப்படும் போது, அந்த எலக்ட்ரானின் டிபிராக்ளி அலைநீளத்தைக் கண்டறிக.

51. விடுபட்ட குவாண்டம் எண்கள் / துணை ஆற்றல் மட்டங்களைக் கண்டறிக.

| n | $l$ | m | துணை ஆற்றல் கூடு |
|---|---|---|---|
| ? | ? | 0 | 4d |
| 3 | 1 | 0 | ? |
| ? | ? | ? | 5p |
| ? | ? | -2 | 3d |



Unit 2 - Sridhar.indd 71 07-01-2021 13:35:33

## கருத்து வரைபடம்

3DJ8HE

- அணு
  - துணை அணுத் துகள்கள் (எலக்ட்ரான், புரோட்டான், நியூட்ரான் ....)
    - பருப்பொருளின் ஈரியல்புத் தன்மை டிபிராக்ளி கோட்பாடு, ஹெய்சன்பர்கின் நிச்சயமற்ற கோட்பாடு தன்மை
  - அணு மாதிரிகள்
    - J.J தாம்சன், ரூதர்ஃபோர்டு, நீல்ஸ் போர் மற்றும் குவாண்டம் இயக்கவியல் மாதிரி
      - ஷ்ரோடிங்கர் சமன்பாடு $\hat{H}\Psi = E\Psi$
        - தீர்வு மற்றும் ஆற்றல் (ஐகன் மதிப்பு) $(\psi)$
          - $\psi^2$ எலக்ட்ரானைக் காண்பதற்கான நிகழ்தகவு
            - ஆர பங்கீடு
            - கோண பங்கீடு
              - அணு ஆர்பிட்டாலின் வடிவங்கள்
                - s – ஆர்பிடால் – கோளம்
                - p – ஆர்பிடால் – டம்பெல் வடிவம்
                - d – ஆர்பிடால் – குளோவர் இலை வடிவம்
          - அணு ஆர்பிட்டால்கள்
            - குவாண்டம் எண்கள்
              1. முதன்மைக் குவாண்டம் எண் (n)
              2. கோண உந்தக் குவாண்டம் எண் (l)
              3. காந்த குவாண்டம் எண் (m)
              4. தற்சுழற்சி குவாண்டம் எண் (s)a
            - அணு ஆர்பிட்டால்களில் எலக்ட்ரான் நிரம்புதல்
              1. ஆஃபா தத்துவம்
              2. பௌலி தவிர்க்கை தத்துவம்
              3. ஹூண்ட் விதி
              - சரிபாதியளவு மற்றும் முழுவதும் நிரப்பட்ட ஆர்பிட்டால்களின் நிலைப்புத் தன்மை




Unit 2 - Sridhar.indd 72 07-01-2021 13:35:34

# அலகு 3

## தனிமங்களின் ஆவர்த்தன வகைப்பாடு

"An awareness of the periodic table is essential to anyone who wishes to disentangle the world and see how it is built up from the fundamental building blocks of the chemistry the chemical elements "

**- Glenn T. Seaborg**



கிளன் T. சீபார்க்

1951 ம் ஆண்டு வேதியியலுக்காக வழங்கப்பட்ட நோபல் பரிசினை யுரேனியம்–வழி தனிமங்களின் கண்டுபிடிப்பிற்க்காக கிளன் தியோடர் சீபார்க் பெற்றுள்ளார். புளூடோனியம் மற்றும் மற்ற யுரேனியம்–வழி தனிமங்களை கண்டறிந்ததில் இவரும் ஒரு இணை ஆய்வாளர் ஆவார். இவர் தனது சக ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து நூற்றிற்கும் மேற்பட்ட பிற தனிமங்களின் ஐசோடோப்புகளைக் கண்டறிந்துள்ளார். ஆக்டினைடு தனிமங்கள் லாந்தனைடு தனிமங்களின் பண்புகளுடன் ஒத்துபோகின்றன என்பதை சோதனை மூலம் நிரூபித்துக் காட்டினார்.

### கற்றலின் நோக்கங்கள்

3DT4Y2

இந்த பாடப்பகுதியினைக் கற்றறிந்த பின்னர்,

- தனிமவரிசை அட்டவணை உருவாக்கப்பட்டதன் வளர்ச்சியினை மீட்டறிதல்
- மோஸ்லேயின் ஆய்வு மற்றும் நவீன ஆவர்த்தன விதியினை விளக்குதல்
- தனிமங்களை, தொகுதிகளாகப் பிரிக்கும் கோட்பாட்டினை கூறுதல்
- 100 விட அதிக அணு எண்ணைக் கொண்டுள்ள தனிமங்களுக்கு IUPAC முறையின் அடிப்படையில் பெயரிடுதல்
- தனிமங்களை s, p, d மற்றும் f தொகுதி தனிமங்கள் என வகைப்படுத்துதல்
- ஆவர்த்தனத் தொடர்பினை அறிந்துணர்தல் மேலும் அணு ஆரம், அயனியாக்கும் ஆற்றல் முதலிய ஆவர்த்தனப் பண்புகளில் ஏற்படும் மாறுபாடுகளை விவரித்தல்
- ஆவர்த்தனப் பண்புகளில் எதிர்நோக்கப்படும் தொடர்பில் உள்ள முரண்பாடுகளை விளக்குதல்
- ஸ்லேட்டர் விதியினைப் பயன்படுத்தி செயலுறு அணுக்கரு மின்சுமையினைக் கணக்கிடுதல்.
- பௌலிங் முறையினைப் பயன்படுத்தி அயனி ஆரத்தினைக் கணக்கிடுதல்
- தனிம வரிசை அட்டவணையில், ஒரு தனிமம் பெற்றிருக்கவேண்டிய இடத்தினை தீர்மானித்தல்
- இரண்டாம் வரிசை தனிமங்களின் முரண்பட்ட பண்புகள் மற்றும் மூலைவிட்டத் தொடர்பினை விளக்குதல்.

ஆகிய திறன்களை மாணவர்கள் பெற இயலும்.

## பாட அறிமுகம்

இயற்கையில் கிடைக்கும் நூற்றுக்கும் குறைவான தனிமங்களிலிருந்தே உருவான பல்வேறு இயைபுகள் மற்றும் பண்புகளைக் கொண்ட பல மில்லியன் வேதிச் சேர்மங்கள் இப்புவியில் காணப்படுகின்றன.

தனிமங்கள் கண்டறியப்பட்ட நிகழ்வு, மனித நாகரீக வளர்ச்சியுடன் தொடர்புபடுத்தக் கூடியது. கற்காலத்தில் மனிதர்கள் தங்கள் தேவைகளுக்காக சில உலோகங்களை அவைகள் தனிமங்கள் என்று அறிந்திருக்காமலேயே பயன்படுத்தினார்கள். பின்னர், விரைவிலேயே தாதுக்களிலிருந்து தனிமங்களைப் பிரித்தெடுத்தல் மற்றும் அதனை தங்கள் தினசரி வாழ்வில் பயன்படுத்துதலை அறிந்து கொண்டார்கள். காலப்போக்கில், அதிக எண்ணிக்கையிலான தனிமங்கள் கண்டறியப்பட்டன. பல்வேறு சோதனை ஆய்வுகளின் அடிப்படையில், பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த லவாய்சியர் 23 தனிமங்கள் கொண்ட முதல் வேதி தனிமங்களின் பட்டியலினை 1789–ல் வெளியிட்டார். இவர் பொருட்களை தனிமங்களின் நான்கு வகை தொகுப்புகளாக வகைப்படுத்தினார். அவையாவன; அமிலத்தை உருவாக்கும் தனிமங்கள், வாயுக்களை ஒத்த தனிமங்கள், உலோகதனிமங்கள் மற்றும் புவியின் புறபரப்புத் தனிமங்கள்.

### அட்டவணை – 3.1 – லவாய்சியர் அட்டவணை

| அமிலத்தை உருவாக்கும் தனிமங்கள் | வாயுக்களை ஒத்த தனிமங்கள் |
|---|---|
| கந்தகம் (sulphur) | ஒளி (light) |
| பாஸ்பரஸ் (phosphorus) | வெப்பம் caloric (heat) |
| மரக்கரி charcoal (carbon) | ஆக்சிஜன் oxygen |
| | நைட்ரஜன் azote (nitrogen) |
| | **ஹைட்ரஜன்** (hydrogen) |

| உலோக தனிமங்கள் | புவிப்பரப்புத்தனிமங்கள் |
|---|---|
| கோபால்ட், பாதரசம், வெள்ளீயம், (cobalt, mercury, tin) | சுட்ட சுண்ணாம்பு lime (calcium oxide) |
| தாமிரம், நிக்கல், இரும்பு (copper, nickel, iron) | மெக்னீசியம் ஆக்ஸைடு magnesia (magnesium oxide) |
| தங்கம், காரீயம், வெள்ளி, துத்தநாகம், (gold, lead, silver, zinc) | பேரீயம் சல்பேட் barytes (barium sulphate) |
| மாங்கனீசு டங்ஸ்டன் (manganese, tungsten) | அலுமினியம் ஆக்ஸைடு argilla (aluminium oxide) |
| பிளாட்டினம் platina (platinum) | சிலிக்கன் டை ஆக்ஸைடு silex (silicon dioxide) |

## 3.1 தனிமங்களை வகைப்படுத்துதல்

19 ஆம் நூற்றாண்டில், அறிவியல் அறிஞர்கள் பல்வேறு தனிமங்களைப்



Unit 3 - Sridhar.indd 74 07-01-2021 13:44:08

பிரித்தெடுத்தனர். இதன்மூலம் கண்டறியப்பட்ட தனிமங்களின் எண்ணிக்கை அதிகரித்தது. தற்போது நாம் 118 தனிமங்களைக் கண்டறியப் பெற்றிருக்கின்றோம். இந்த 118 தனிமங்களில் அணு எண் 1 முதல் 92 வரையுள்ள தொண்ணூற்று இரண்டு தனிமங்களும் இயற்கையில் கிடைக்கின்றன. இவற்றில் சில தனிமங்களுக்கிடைய சில பண்புகளில் ஒற்றுமைத் தன்மை உள்ளதை அறிவியல் அறிஞர்கள் கண்டறிந்தனர். இக்கண்டுபிடிப்பானது, தனிமங்களை அவற்றின் பண்புகளின் அடிப்படையில் வகைப்படுத்தலாம் என்ற கருத்து உருவாக காரணமாக அமைந்தது. தனிமங்களை அதிகம் பயன்படுத்துவதற்கு, அதனை வகைப்படுத்துதல், நன்மை தரத்தக்கதாக அமையும். தனிமங்களை வகைப்படுத்துவதற்கு பல்வேறு முயற்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அணுநிறையின் அடிப்படையிலான வகைப்பாடு, தனிம வரிசை அட்டவணையினை சரியான வடிவில் உருவாக்குவதற்கு வழிவகை செய்தது.

1817 –ல், J.W. டாபரீனர், வேதிப்பண்புகளில் ஒத்துள்ள குளோரின், புரோமின், அயோடின் போன்ற தனிமங்களை மூன்று தனிமங்கள் கொண்ட ஒரு குழுவாக வகைப்படுத்தினார். இதனை அவர் மும்மைத் தொகுதி (triads) என அழைத்தார். மும்மைத் தொகுதியில் நடுவில் உள்ள தனிமத்தின் அணு நிறையானது, மற்ற இரு தனிமங்களின் அணு நிறைகளின் கூட்டுச் சாராசரிக்கு ஏறத்தாழ சமமாக இருந்தது. எனினும் குறிப்பிட்ட சில தனிமங்களை மட்டுமே மும்மைத் தொகுதிகளாக வகைப்படுத்த முடிந்தது. ஏறத்தாழ ஒத்த அணு நிறைகளைப் பெற்றுள்ள [Fe, Co, Ni], [Ru, Rh, Pd], [Os, Ir, Pt] போன்ற மும்மைத் தொகுதிகளுக்கு இவ்வகைப்பாட்டுக் கொள்கையினைப் பயன்படுத்த இயலவில்லை.

### அட்டவணை 3.2 டாபரீனரின் மும்மைத் தொகுதி

| வ. எண் | மும்மைத் தொகுதியில் உள்ள தனிமங்கள் | நடுவில் உள்ள தனிமத்தின் அணு நிறை | மற்ற இரு தனிமங்களின் அணு நிறைகளின் கூட்டுச் சராசரி |
|---|---|---|---|
| 1 | Li, Na, K | 23 | $\frac{7+39}{2} = 23$ |
| 2 | Cl, Br, I | 80 | $\frac{35.5+127}{2} = 81.25$ |
| 3 | Ca, Sr, Ba | 88 | $\frac{40+137}{2} = 88.5$ |

1862 –ல், A.E.B. டி சான்கோர்டாய்ஸ், தனிமங்களின் பண்புகள், அவற்றின் அணுநிறையோடு கொண்டுள்ள ஒரு தொடர்பினை எடுத்துக் கூறினார். அவரது கூற்றுப்படி, பொருட்களின் பண்புகள் அவற்றின் எண்களின் பண்புகளோடு தொடர்புடையது. இவர் அணு நிறையினை குறிப்பிட 'எண்கள்' என்ற வார்த்தையினைப் பயன்படுத்தினார். அடிப்பக்க சுற்றளவில் 16 அலகுகள்

உடைய ஒரு உருளையின் செங்குத்து மைய அச்சிற்கு 45° கோணத்தில் ஒரு சுருளை (helix) அவர் உருவாக்கினார். உருளையின் மேற்பரப்பில் அச்சுருளின் வழியே தனிமங்களை, அவற்றின் அணு நிறைகளின் ஏறுவரிசையில் குறித்தார். சுருளின் ஒரு முழுச்சுற்று, அணுநிறை 16 அதிகரிப்பதற்குச் சமம். உருளையின் மேற்பரப்பில் சம இடைவெளிகளுடன் வரையப்பட்ட பதினாறு செங்குத்துக் கோடுகளில், ஒரே செங்குத்துக் கோட்டில் அமைந்துள்ள தனிமங்கள் ஒத்தப் பண்புகளைக் கொண்டிருந்தன. தனிம வரிசை அட்டவணையை உருவாக்குவது தொடர்பான முயற்சிகளில் முதல் குறிப்பிடத்தக்க முயற்சி இதுவாகும். எனினும் இது அதிகளவில் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்திருக்கவில்லை.

1864 –ல் J. நியூலண்ட் என்பவர் தனிமங்களை வகைப்படுத்தும் பொருட்டு, எண்ம விதியினை முன் மொழிந்தார். தனிமங்களை அவற்றின் அணு நிறைகளின் ஏறுவரிசையில் அமைக்கும் போது, ஒவ்வொரு எட்டாவது தனிமத்தினுடைய பண்பும், முதலாவது தனிமத்தின் பண்புடன் ஒத்திருந்தது. இவ்விதி கால்சியம் வரையிலான இலேசான தனிமங்களுக்கு மட்டுமே சரியாக பொருந்தியது.

**அட்டவணை 3.3 நியூலண்டின் எண்மங்கள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| $^{7}Li$ | $^{9}Be$ | $^{11}B$ | $^{12}C$ | $^{14}N$ | $^{16}O$ | $^{19}F$ |
| $^{23}Na$ | $^{24}Mg$ | $^{27}Al$ | $^{29}Si$ | $^{31}P$ | $^{32}S$ | $^{35.5}Cl$ |
| $^{39}K$ | $^{40}Ca$ | | | | | |

### 3.1.1 மெண்டலீஃபின் வகைப்பாடு

1868 –ல் லோதர் மேயர், தற்போதுள்ள நவீன ஆவர்த்தன அட்டவணையினை ஒத்த ஒரு தனிம வரிசை அட்டவணையை உருவாக்கினார். இயற்பண்புகளான அணு பருமன், உருகுநிலை மற்றும் கொதிநிலை போன்றவற்றை, அணுக்களின் அணுநிறைக்கு எதிராக வரைபடத்தில் குறித்தபோது, அப்பண்புகளில் ஆவர்த்தன தன்மை காணப்படுவதை இவர் கண்டறிந்தார்.

இதே காலகட்டத்தில், டிமிரிட்டி மெண்டலீஃப் தனியே ஒரு கருத்தினை முன்மொழிந்தார். அது "தனிமங்களின் பண்புகள் அவற்றின் அணுநிறைகளின் ஆவர்த்தன சார்பாக அமைகின்றன," என்பதாகும். இக்கூற்று ஆவர்த்தன விதி என அழைக்கப்படுகிறது. அக்காலத்தில் அறியப்பட்டிருந்த 70 தனிமங்களை அவற்றின் அணு நிறைகளின் ஏறுவரிசையில் பல செங்குத்து தொகுதிகளாக வகைப்படுத்தினார். இவ்வாறாக, ஆவர்த்தன விதியின் அடிப்படையில் மெண்டலீஃப், முதன் முதலாக ஆவர்த்தன அட்டவணையினைக் கட்டமைத்தார்.

## அட்டவணை 3.4 மெண்டலீஃபின் ஆவர்த்தன அட்டவணை

| Series | Group of Elements | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 0 | 1 | II | III | IV | V | VI | VII | VIII | | |
| 1 | - | Hydrogen<br>**H**<br>1.0008 | - | - | - | | | | | | |
| 2 | Helium<br>**He**<br>4.0 | Lithium<br>**Li**<br>7.03 | Beryllium<br>**Be**<br>9.1 | Boron<br>**B**<br>11.0 | Carbon<br>**C**<br>12.0 | Nitrogen<br>**N**<br>14.04 | Oxygen<br>**O**<br>16.00 | Fluorine<br>**F**<br>19.0 | | | |
| 3 | Neon<br>**Ne**<br>19.9 | Sodium<br>**Na**<br>23.5 | Magnesium<br>**Mg**<br>24.3 | Aluminium<br>**Al**<br>27.0 | Silicon<br>**Si**<br>28.04 | Phosphorus<br>**P**<br>31.0 | Sulphur<br>**S**<br>32.06 | Chlorine<br>**Cl**<br>35.45 | | | |
| 4 | Argon<br>**Ar**<br>38 | Potassium<br>**K**<br>39.1 | Calcium<br>**Ca**<br>40.1 | Scandium<br>**Sc**<br>44.1 | Titanium<br>**Ti**<br>48.1 | Vanadium<br>**V**<br>51.4 | Chromium<br>**Cr**<br>c | Manganese<br>**Mn**<br>55.0 | Iron<br>**Fe**<br>55.9 | Cobalt<br>**Co**<br>59 | Nickel<br>**(Ni** **(Cu**<br>59 |
| 5 | | Copper<br>**Cu**<br>63.6 | Zinc<br>**Zn**<br>65.4 | Gallium<br>**Ga**<br>70.0 | Germanium<br>**Ge**<br>72.3 | Arsenic<br>**As**<br>75 | Selenium<br>**Se**<br>79 | Bromine<br>**Br**<br>79.95 | | | |
| 6 | Krypton<br>**Kr**<br>81.8 | Rubidium<br>**Rb**<br>85.4 | Strontium<br>**Sr**<br>87.6 | Yttrium<br>**Y**<br>89.0 | Zirconium<br>**Zr**<br>90.6 | Niobium<br>**Nb**<br>94.0 | Molybdenum<br>**Mo**<br>96.0 | - | Ruthenium<br>**Ru**<br>101.7 | Rhodium<br>**Rh**<br>**103** | Palladium<br>**(Pd** **(Ag**<br>106.5 |
| 7 | | Silver<br>**Ag**<br>107.9 | Cadmium<br>**Cd**<br>112.4 | Indium<br>**In**<br>114.0 | Tin<br>**Sn**<br>119.0 | Antimony<br>**Sb**<br>120.0 | Tellurium<br>**Te**<br>127.6 | Iodine<br>**I**<br>126.9 | | | |
| 8 | Xenon<br>**Xe**<br>128 | Caesium<br>**Cs**<br>132.9 | Barium<br>**Ba**<br>137.4 | Lanthanum<br>**La**<br>139 | Cerium<br>**Ce**<br>140 | - | - | - | - | | |
| 9 | - | - | - | - | - | - | - | - | - | | |
| 10 | - | - | - | Ytterbium<br>**Yb**<br>173 | - | Tantalum<br>**Ta**<br>183 | Tungsten<br>**W**<br>184 | - | Osmium<br>**Os**<br>191 | Iridium<br>**Ir**<br>193 | Platinum<br>**(Pt** **(Au**<br>194.9 |
| 11 | | Gold<br>**Au**<br>197.2 | Mercury<br>**Hg**<br>200.0 | Thallium<br>**Tl**<br>204.1 | Lead<br>**Pb**<br>206.9 | Bismuth<br>**Bi**<br>208 | | - | - | | |
| 12 | - | - | Radium<br>**Ra**<br>224 | - | Thorium<br>**Th**<br>232 | - | Uranium<br>**U**<br>239 | | | | |



Unit 3 - Sridhar.indd 77
07-01-2021 13:44:08

மெண்டலீஃபின் ஆவர்த்தன அட்டவணையில் உள்ளவாறு, தகுந்த பண்புகளைக் கொண்ட தனிமங்கள் அந்நேரத்தில் கண்டறியப்படாத நிலையில் அவற்றிற்கென வெற்றிடங்களை விட்டிருந்தார். அவரும் மற்ற அறிஞர்களும் இடம் விடப்பட்ட தனிமங்கள் பெற்றிருக்க வேண்டிய இயற்பியல் மற்றும் வேதிப்பண்புகளை நிர்ணயித்தனர். பின்னாளில் கண்டறியப்பட்ட தனிமங்களின் பண்புகள் ஏற்கனவே இடம் விடப்பட்ட தனிமங்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட பண்புகளோடு ஒத்துக் காணப்பட்டன.

எடுத்துக்காட்டாக, தொகுதி III ஐச் சார்ந்த காலியம் (Ga) மற்றும் தொகுதி IV ஐச் சார்ந்த ஜெர்மானியம் (Ge) ஆகியவை அக்காலத்தில் கண்டறியப்பட்டிருக்கவில்லை. ஆனால், மெண்டலீஃப் அவைகள் இருப்பதற்கான சாத்தியக் கூறினையும், அவற்றின் பண்புகளையும் நிர்ணயித்திருந்தார். அவர் நிர்ணயித்திருந்த பண்புகளை பெற்ற தனிமங்களுக்கு (eka – aluminium) மற்றும் (eka – silicon) என பெயரிட்டார்.

சரியான தனிமங்கள் கண்டறியப்பட்ட பின்னர், அவைகளின் பண்புகள், மெண்டலீஃப்பினால் முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட பண்புகளுடன் ஏறத்தாழ ஒத்திருந்தன. (அட்டவணை 3.5)

**அட்டவணை 3.5 – eka – aluminium மற்றும் eka – silicon ஆகியவைகளுக்கு முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட பண்புகள்**

| வ. எண் | பண்பு | eka – aluminium முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டது | காலியம் (கண்டறியப்பட்டது) | eka – silicon முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டது | ஜெர்மானியம் (கண்டறியப்பட்டது) |
|---|---|---|---|---|---|
| 1. | அணு நிறை | 68 | 70 | 72 | 72.59 |
| 2. | அடர்த்தி $gcm^{-3}$ | 5.9 | 5.94 | 5.5 | 5.36 |
| 3. | உருகு நிலை | குறைவு | 29.78°C | அதிகம் | 947°C |
| 4. | ஆக்ஸைடின் வாய்ப்பாடு | $E_2O_3$ | $Ga_2O_3$ | $EO_2$ | $GeO_2$ |
| 5. | குளோரைடின் வாய்ப்பாடு | $ECl_3$ | $GaCl_3$ | $ECl_4$ | $GeCl_4$ |

### 3.1.2 மெண்டலீஃபின்ஆவர்த்தன அட்டவணையில் உள்ள முரண்பாடுகள்

ஒத்த பண்புகளை உடைய தனிமங்கள் வெவ்வேறு தொகுதிகளிலும், வெவ்வேறு பண்புகளுடைய தனிமங்கள் ஒரே தொகுதியிலும் வைக்கப்பட்டிருந்தன. இதைப் போலவே ஆவர்த்தன விதிக்கு முரணாக, அதிக அணு நிறையுள்ள தனிமமானது குறைவான அணு நிறையுள்ள தனிமத்திற்கு முன்னதாகவே வைக்கப்பட்டிருந்தது.

எடுத்துக்காட்டாக டெலூரியம் (127.6) ஆறாவது (VI) தொகுதியிலும், அயோடின் (127) ஏழாவது (VII) தொகுதியிலும் வைக்கப்பட்டிருந்தன. $^{58.7}Ni_{28}$ –க்கு முன்னதாக $^{59}Co_{27}$ வைக்கப்பட்டிருந்தது.



Unit 3 - Sridhar.indd 78 07-01-2021 13:44:08

## 3.2 மோஸ்லே ஆய்வும், நவீன ஆவர்த்தன விதியும்

1913–ல், ஹென்றி மோஸ்லே, பல்வேறு தனிமங்களை அதிக ஆற்றலுடைய எலக்ட்ரான்களைக் கொண்டு மோதச் செய்து அதன் மூலம் உருவான சிறப்பு X கதிர் நிறமாலையினை ஆய்வு செய்தார். இதில் தனிமங்களின் அணுஎண்ணிற்கும் உமிழப்பட்ட சிறப்பு X – கதிர்களின் அதிர்வெண்ணிற்கும் நேர்கோட்டுத் தொடர்பு இருப்பதை அவர் கண்டறிந்தார். இத்தொடர்பினை பின்வருமாறு குறிப்பிட்டார்.

$$\sqrt{\upsilon} = a(Z-b)$$

இங்கு v என்பது 'Z' என்ற அணு எண் கொண்ட தனிமத்தினால் உமிழப்பட்ட 'X' கதிரின் அதிர்வெண். 'a' மற்றும் 'b' ஆகியன மாறிலிகள். மேலும் அனைத்துத் தனிமங்களுக்கும் 'a' மற்றும் 'b' ஆகியன ஒரே மதிப்புகளைப் பெற்றிருக்கும்.

$\sqrt{\upsilon}$ மற்றும் Z க்கு இடையேயான வரைபடம் ஒரு நேர்கோட்டினைத் தரும். இத்தொடர்பினைப் பயன்படுத்தி புதிய தனிமம் ஒன்று வெளியிடும் சிறப்பு X–கதிரின் அதிர்வெண்ணைக் கொண்டு, அத்தனிமத்தின் அணு எண்ணைக் கண்டறிய இயலும்.

மோஸ்லேயின் இந்த ஆய்வின் படி, நவீன ஆவர்த்தன விதி உருவாக்கப்பட்டது. இவ்விதியின்படி "தனிமங்களின் இயற் மற்றும் வேதிப்பண்புகள் அவற்றின் அணுஎண்களின் ஆவர்த்தன சார்பாக அமைகின்றன." இக்கூற்று நவீன ஆவர்த்தன விதி என்றழைக்கப்படுகிறது. இவ்விதியின் அடிப்படையில், தனிமங்கள் அவற்றின் அணுஎண்களின் ஏறுவரிசையில் வரிசைபடுத்தப்பட்டன. இம்முறையில் வரிசைப்படுத்தப்படும்பொழுது ஒரு குறிப்பிட்ட இடைவெளிக்கு பின்னர் ஒத்த பண்புகளை கொண்ட தனிமங்கள் இடம்பெறுகின்றன என்று அறிய முடிந்தது. இவ்வாறு சீரான இடைவெளிகளில் தனிமங்கள் அவற்றின் இயற் மற்றும் வேதிப்பண்புகளில் ஒத்திருப்பது ஆவர்த்தன தன்மை என்றழைக்கப்படுகிறது.

### 3.2.1 நவீன ஆவர்த்தன அட்டவணை

தனிமங்களின் இயற் மற்றும் வேதிப்பண்புகள், அத்தனிமங்களின் வெளிக்கூட்டில் காணப்படும் எலக்ட்ரான் அமைப்போடு தொடர்புடையது. வெவ்வேறு தனிமங்கள் தங்களது வெளிக்கூட்டில் ஒத்த எலக்ட்ரான் அமைப்பினை பெற்றிருப்பின், அவற்றின் பண்புகளும் ஒத்திருக்கும். எடுத்துக்காட்டாக தங்களின் இணைதிறக்கூட்டில் உள்ள s ஆர்பிட்டாலில் ஒரு எலக்ட்ரானைப் பெற்றுள்ள தனிமங்கள் அவைகளின் இயற் மற்றும் வேதிப் பண்புகளில் ஒத்துக் காணப்படுகின்றன. நவீன ஆவர்த்தன அட்டவணையில் இத்தனிமங்கள் அனைத்தும் ஒன்றாக ஒரே தொகுதியில் ஒருங்கிணைக்கப்பட்டு முதல் தொகுதி தனிமங்கள் என அழைக்கப்படுகின்றன.



Unit 3 - Sridhar.indd 79 07-01-2021 13:44:09

**அட்டவணை 3.6 கார உலோகங்களின் எலக்ட்ரான் அமைப்பு ($ns^1$)**

| தொகுதி–1ல் உள்ள தனிமங்கள் | அணு எண் | K,L,M,N,O,P வரிசையில் இணைதிற கூட்டில் உள்ள எலக்ட்ரான்களின் எண்ணிக்கை | இணைத்திற கூட்டின் எலக்ட்ரான் அமைப்பு |
|---|---|---|---|
| Li | 3 | 2, 1 | $2s^1$ |
| Na | 11 | 2, 8, 1 | $3s^1$ |
| K | 19 | 2, 8, 8, 1 | $4s^1$ |
| Rb | 37 | 2,8,18,8,1 | $5s^1$ |
| Cs | 55 | 2, 8, 18, 18, 8, 1 | $6s^1$ |
| Fr | 87 | 2, 8, 18, 32, 18, 8, 1 | $7s^1$ |

இவ்வாறாக, நவீன ஆவர்த்தன அட்டவணையில் அனைத்து தனிமங்களும் 18 செங்குத்து நிரல்களிலும் 7 கிடைமட்ட நிரைகளிலும் வைக்கப்பட்டுள்ளன. செங்குத்து நிரல்கள் தொகுதிகள் (group) எனவும், கிடைமட்ட நிரைகள் வரிசைகள் (periods) எனவும், அழைக்கப்படுகின்றன. IUPAC விதிமுறையின் படி தொகுதிகள் குறிக்கப்படும் முந்தைய முறையான 1A முதல் VIIA வரை மற்றும் 1Bமுதல் VIIIவரை ஆகியவை மாற்றியமைக்கப்பட்டு 1 முதல் 18 வரையிலான இயல் எண்கள் மூலம் தொகுதிகள் குறிப்பிடப்படுகின்றன.

ஒவ்வொரு வரிசையும், '$ns^1$' என்ற பொதுவான வெளிக்கூட்டு எலக்ட்ரான் அமைப்பினைக் கொண்டுள்ள தனிமத்தில் துவங்கி $ns^2np^6$ என்ற வெளிக்கூட்டு எலக்ட்ரான் அமைப்பினைப் பெற்றுள்ள தனிமத்தில் முடிவடைகிறது. இங்கு 'n' என்பது வரிசையின் எண்ணைக் (முதன்மைக் குவாண்டம் எண்) குறிப்பிடுகின்றது. ஆஃபா தத்துவம் மற்றும் அதன் அடிப்படையிலான அணுக்களின் எலக்ட்ரான் அமைப்பானது நவீன தனிமவரிசை அட்டவணைக்கு கருத்து வடிவிலான அடிப்படையைத் தருகின்றது.

**தன்மதிப்பீடு**

1) மெண்டலீஃபின் தனிம வரிசை அட்டவணைக்கும் நவீன தனிம வரிசை அட்டவணைக்கும் அணுகுமுறையில் உள்ள அடிப்படை வேறுபாடு யாது?



Unit 3 - Sridhar.indd 80 07-01-2021 13:44:09

## அட்டவணை – 3.7 நவீன ஆவர்த்தன அட்டவணை

பிரதி நிதித்துவ தனிமங்கள் (தொகுதி எண் 1, 2) | d – இடைநிலைத் தனிமங்கள் (தொகுதி எண் 3–12) | பிரதிநிதித்துவ தனிமங்கள் (தொகுதி எண் 13–17) | உயரிய வாயுக்கள் (18)

| வரிசை எண் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 H $1s^1$ | | | | | | | | | | | | | | | | | 2 He $1s^2$ |
| 2 | 3 Li $2s^1$ | 4 Be $2s^2$ | | | | | | | | | | | 5 B $2s^22p^1$ | 6 C $2s^22p^2$ | 7 N $2s^22p^3$ | 8 O $2s^22p^4$ | 9 F $2s^22p^5$ | 10 Ne $2s^22p^6$ |
| 3 | 11 Na $3s^1$ | 12 Mg $3s^2$ | | | | | | | | | | | 13 Al $3s^23p^1$ | 14 Si $3s^23p^2$ | 15 P $3s^23p^3$ | 16 S $3s^23p^4$ | 17 Cl $3s^23p^5$ | 18 Ar $3s^23p^6$ |
| 4 | 19 K $4s^1$ | 20 Ca $4s^2$ | 21 Sc $3d^14s^2$ | 22 Ti $3d^24s^2$ | 23 V $3d^34s^2$ | 24 Cr $3d^54s^1$ | 25 Mn $3d^54s^2$ | 26 Fe $3d^64s^2$ | 27 Co $3d^74s^2$ | 28 Ni $3d^84s^2$ | 29 Cu $3d^{10}4s^1$ | 30 Zn $3d^{10}4s^2$ | 31 Ga $4s^24p^1$ | 32 Ge $4s^24p^2$ | 33 As $4s^24p^3$ | 34 Se $4s^24p^4$ | 35 Br $4s^24p^5$ | 36 Kr $4s^24p^6$ |
| 5 | 37 Rb $5s^1$ | 38 Sr $5s^2$ | 39 Y $4d^15s^2$ | 40 Zr $4d^25s^2$ | 41 Nb $4d^45s^1$ | 42 Mo $4d^55s^1$ | 43 Tc $4d^55s^2$ | 44 Ru $4d^75s^1$ | 45 Rh $4d^85s^1$ | 46 Pd $4d^{10}$ | 47 Ag $4d^{10}5s^1$ | 48 Cd $4d^{10}5s^2$ | 49 In $5s^25p^1$ | 50 Sn $5s^25p^2$ | 51 Sb $5s^25p^3$ | 52 Te $5s^25p^4$ | 53 I $5s^25p^5$ | 54 Xe $5s^25p^6$ |
| 6 | 55 Cs $6s^1$ | 56 Ba $6s^2$ | 57 La* $5d^16s^2$ | 72 Hf $4f^{14}5d^26s^2$ | 73 Ta $5d^36s^2$ | 74 W $5d^46s^2$ | 75 Re $5d^56s^2$ | 76 Os $5d^66s^2$ | 77 Ir $5d^76s^2$ | 78 Pt $5d^96s^1$ | 79 Au $5d^{10}6s^1$ | 80 Hg $5d^{10}6s^2$ | 81 Tl $6s^26p^1$ | 82 Pb $6s^26p^2$ | 83 Bi $6s^26p^3$ | 84 Po $6s^26p^4$ | 85 At $6s^26p^5$ | 86 Rn $6s^26p^6$ |
| 7 | 87 Fr $7s^1$ | 88 Ra $7s^2$ | 89 Ac** $6d^17s^2$ | 104 Rf | 105 Db | 106 Sg | 107 Bh | 108 Hs | 109 Mt | 110 Ds | 111 Rg | 112 Cn | 113 Nh | 114 Fl | 115 Mc | 116 Lv | 117 Ts | 118 Og |

*f* – உள் இடைநிலைத் தனிமங்கள்

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| * லாந்தனைடுகள் $4f^n5d^{0-1}6s^2$ | 58 Ce $4f^15d^16s^2$ | 59 Pr $4f^35d^06s^2$ | 60 Nd $4f^45d^06s^2$ | 61 Pm $4f^55d^06s^2$ | 62 Sm $4f^65d^06s^2$ | 63 Eu $4f^75d^06s^2$ | 64 Gd $4f^75d^16s^2$ | 65 Tb $4f^95d^06s^2$ | 66 Dy $4f^{10}5d^06s^2$ | 67 Ho $4f^{11}5d^06s^2$ | 68 Er $4f^{12}5d^06s^2$ | 69 Tm $4f^{13}5d^06s^2$ | 70 Yb $4f^{14}5d^06s^2$ | 71 Lu $4f^{14}5d^16s^2$ |
| ** ஆக்டினைடுகள் $5f^n6d^{0-2}7s^2$ | 90 Th $5f^06d^27s^2$ | 91 Pa $5f^26d^17s^2$ | 92 U $5f^36d^17s^2$ | 93 Np $5f^46d^17s^2$ | 94 Pu $5f^66d^07s^2$ | 95 Am $5f^76d^07s^2$ | 96 Cm $5f^76d^17s^2$ | 97 Bk $5f^96d^07s^2$ | 98 Cf $5f^{10}6d^07s^2$ | 99 Es $5f^{11}6d^07s^2$ | 100 Fm $5f^{12}6d^07s^2$ | 101 Md $5f^{13}6d^07s^2$ | 102 No $5f^{14}6d^07s^2$ | 103 Lr $5f^{14}6d^17s^2$ |



Unit 3 - Sridhar.indd 81 07-01-2021 13:44:09

## 3.3 அணு எண் 100 ஐ விட அதிகம் பெற்றுள்ள தனிமங்களுக்கு IUPAC முறையில் பெயரிடுதல்

புதிய தனிமங்கள் கண்டறிப்படும் போது, அத்தனிமத்தினை கண்டறிந்தவர், IUPAC வழி முறைகளைப் பின்பற்றி ஒரு பெயரினைப் பரிந்துரைப்பார். அப்பரிந்துரையானது பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறிந்த பின்னர் IUPAC யால் அங்கீகரிக்கப்படும். இந்த இடைப்பட்டக்காலத்தில் புதிதாக கண்டறியப்பட்ட தனிமானது IUPAC விதிகளின் அடிப்படையில், தற்காலிக பெயரால் அழைக்கப்படும்.தற்காலிக பெயரிடுதலுக்கான வழிமுறைகள் பின்வருமாறு

1. புதியதாகக் கண்டறியப்பட்ட தனிமத்தின் அணு எண்ணிலிருந்து நேரடியாக பெயருக்கான எண்சார் மூலம் ( Numerical root) வருவிக்கப்படுகிறது.

**அட்டவணை– 3.8: அணு எண் 100 ஐ விட அதிகம் பெற்றுள்ள தனிமங்களுக்கு IUPAC முறையில் பெயரிடுதலுக்கான குறியீடு**

| இலக்கம் | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மூலம் | nil | un | bi | tri | quad | pent | hex | sept | oct | enn |
| சுருக்கப்பெயர் (Abbreviation) | n | u | b | t | q | p | h | s | o | e |

2. அணு எண்ணிற்கு இணையான எண் மூலங்கள் ஒன்றாக்கப்பட்டு, 'ium' பிற்சேர்க்கையாக எழுதப்படுகிறது.

3. 'enn' ஆனது 'nil' முன்னர் எழுதப்படும் போது, 'enn' ன் இறுதியில் உள்ள 'n' எழுதாமல் விடப்படுகிறது (enn+nil= enil). இதைபோலவே 'ium' க்கு முன்னர் 'bi' மற்றும் 'tri' ஆகியவை எழுதப்படும் போது அவற்றின் இறுதியில் உள்ள 'i' எழுதாமல் விடப்படுகிறது (bi+ium=bium; tri+ ium= trium)

4. எண் சார் மூலங்களின் முதல் எழுத்துக்களிலிருந்து புதிய தனிமத்தின் குறியீடு உருவாக்கப்படுகிறது. இதனை கீழக்கண்டுள்ள அட்டவணை எடுத்துக்காட்டுடன் விளக்குகிறது.

**அட்டவணை 3.9 அணு எண் 100 ஐ விட அதிகமுடைய தனிமங்களுக்கான பெயர்கள்**

| அணு எண் | தற்காலிகப் பெயர் | தற்காலிகக் குறியீடு | தனிமத்தின் பெயர் | தனிமத்தின் குறியீடு |
|---|---|---|---|---|
| 101 | Unnilunium | Unu | Mendelevium | Md |
| 102 | Unnilbium | Unb | Nobelium | No |
| 103 | Unniltrium | Unt | Lawrencium | Lr |
| 104 | Unnilquadium | Unq | Rutherfordium | Rf |
| 105 | Unnilpentium | Unp | Dubnium | Db |
| 106 | Unnilhexium | Unh | Seaborgium | Sg |
| 107 | Unnilseptium | Uns | Bohrium | Bh |
| 108 | Unniloctium | Uno | Hassium | Hs |



Unit 3 - Sridhar.indd 82 07-01-2021 13:44:09

| அணு எண் | தற்காலிகப் பெயர் | தற்காலிகக் குறியீடு | தனிமத்தின் பெயர் | தனிமத்தின் குறியீடு |
|---|---|---|---|---|
| 109 | Unnilennium | Une | Meitnerium | Mt |
| 110 | Ununnilium | Uun | Darmstadtium | Ds |
| 111 | Unununium | Uuu | Roentgenium | Rg |
| 112 | Ununbium | Uub | Copernicium | Cn |
| 113 | Ununtrium | Uut | Nihonium | Nh |
| 114 | Ununquadium | Uuq | Flerovium | Fl |
| 115 | Ununpentium | Uup | Moscovium | Mc |
| 116 | Ununhexium | Uuh | Livermorium | Lv |
| 117 | Ununseptium | Uus | Tennessine | Ts |
| 118 | Ununoctium | Uuo | Oganesson | Og |

**தன்மதிப்பீடு**

2) அணு எண் 120 உடைய தனிமம் இந்நாள் வரை கண்டறியப்படவில்லை. இத்தனிமத்திற்கு IUPAC வழிமுறையின் அடிப்படையில் வழங்கப்படும் பெயர் மற்றும் குறியீடு என்னவாக இருக்கும்? இத்தனிமம் பெற்றிருக்க வாய்ப்புள்ள எலக்ட்ரான் அமைப்பினையும் நிர்ணயிக்கவும்.

## 3.4 எலக்ட்ரான் அமைப்பின் அடிப்படையில் தனிமங்களை தொகுதிபடுத்துதல்

நவீன ஆவர்த்தன விதியின் அடிப்படையில் நவீன தனிமவரிசை அட்டவணையில் தனிமங்கள் 7–வரிசைகளிலும், 18–தொகுதிகளிலும் வைக்கப்பட்டுள்ளன. தனிமங்களை குறிப்பிட்ட இடத்தில் அமைத்தல் என்பது அதன் வெளிக்கூட்டு எலக்ட்ரான் அமைப்போடு நெருங்கிய தொடர்பு கொண்டது. தனிம வரிசை அட்டவணையின் தொடரிலும், தொகுதியிலும் எலக்ட்ரான் அமைப்பு எவ்வாறு மாறுபடுகின்றது என்பதை நாம் ஆய்ந்து அறிவோம்.

### 3.4.1 வரிசைகளில் எலக்ட்ரான் அமைப்பில் ஏற்படும் மாறுபாடு

ஒவ்வொரு வரிசையும் '$ns^1$' என்ற வெளிக்கூட்டு எலக்ட்ரான் அமைப்புடைய தனிமத்தில் துவங்கி '$ns^2$, $np^6$' என்ற வெளிக்கூட்டு எலக்ட்ரான் அமைப்புடைய தனிமத்துடன் நிறைவு பெறுகிறது என நாம் முன்னரே அறிவோம். இங்கு 'n' என்பது முதன்மைக் குவாண்டம் எண் ஆகும். முதல் வரிசையில், இணைதிற எலக்ட்ரான்கள் நிரப்பப்படுவது 1s ஆர்பிட்டாலில் துவங்குகிறது. இந்த ஆர்பிட்டாலில் அதிகபட்சமாக இரு எலக்ட்ரான்கள் மட்டுமே இடம் பெறமுடியும். எனவே முதல் வரிசையில் இரு தனிமங்கள், அதாவது ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் ஆகிய இரண்டு தனிமங்கள் மட்டுமே இடம் பெறுகின்றன. இரண்டாவது வரிசையில் இணைதிற எலக்ட்ரான்கள் நிரப்பப்படுவது 2s ஆர்பிட்டாலில் துவங்கி பின்னர் மூன்று 2p ஆர்பிட்டால்களிலும் தொடர்கின்றன. இதில் லித்தியம் முதல் நியான் வரையிலான எட்டு தனிமங்கள் இடம் பெறுகின்றன.

மூன்றாவது வரிசையில் இணைதிற எலக்ட்ரான்கள் நிரப்பப்படுவது 3s ஆர்பிட்டாலில் துவங்கி பின்னர் 3p ஆர்பிட்டால்களிலும் தொடர்கின்றன. நான்காவது வரிசையில் இணைதிற எலக்ட்ரான்கள் முதலில் 4s ஆர்பிட்டாலிலும், பின்னர் 3d மற்றும் 4p ஆர்பிட்டால்களிலும் ஆஃபா தத்துவத்தின் அடிப்படையில் நிரப்பப்படுகின்றன. இதைப் போன்றே பிற வரிசைகளின் எலக்ட்ரான் அமைப்பினை நாம் விளக்க இயலும் ( அட்டவணை 3.10)

### அட்டவணை–3.10 வரிசைகளில் உள்ள தனிமங்களின் எலக்ட்ரான் அமைப்பு

| வரிசைகளின் எண் (n) | ஆர்பிட்டால்களில் எலக்ட்ரான்கள் நிரப்பப்படுதல் | | வரிசையில் இடம் பெற்றுள்ள தனிமங்களின் எண்ணிக்கை | வெளிக்கூட்டு எலக்ட்ரான் அமைப்பு | |
|---|---|---|---|---|---|
| | துவங்குதல் | நிறைவடைதல் | | முதல் தனிமம் | இறுதி தனிமம் |
| 1 | 1s | 1s | 2 | H – $1s^1$ | He – $1s^2$ |
| 2 | 2s | 2p | 8 | Li – $2s^1$ | Ne– $2s^2 2p^6$ |
| 3 | 3s | 3p | 8 | Na – $3s^1$ | Ar – $3s^2 3p^6$ |
| 4 | 4s → 3d | 4p | 18 | K – $4s^1$ | Kr– $4s^2 4p^6$ |
| 5 | 5s → 4d | 5p | 18 | Rb – $5s^1$ | Xe – $5s^2 5p^6$ |
| 6 | 6s → 4f → 5d | 6p | 32 | Cs – $6s^1$ | Rn – $6s^2 6p^6$ |
| 7 | 7s → 5f → 6d | 7p | 32 | Fr – $7s^1$ | Og – $7s^2 7p^6$ |

நான்காவது வரிசையில் 3d ஆர்பிட்டால்களில் இணைதிற எலக்ட்ரான்கள் நிரம்புதல் ஸ்கேண்டியத்திலிருந்து துவங்கி துத்தநாகத்தில் (zinc–ல்) நிறைவடைகிறது. இந்த 10 தனிமங்களையும் உள்ளடக்கிய வரிசை முதல் இடைநிலைத்தனிம வரிசை என அழைக்கப்படுகிறது. இதைப் போலவே அடுத்தடுத்த வரிசைகளில், 4d, 5d மற்றும் 6d ஆர்பிட்டால்களில் இணைதிற எலக்ட்ரான்கள் நிரப்பப்படுகின்றன. இவ்வரிசைகள் முறையே இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் இடைநிலை வரிசைகள் என்றழைக்கப்படுகின்றன.

ஆறாவது வரிசையில், இணைதிற எலக்ட்ரான்கள் நிரப்பப்படுவது 6s ஆர்பிட்டாலில் துவங்கி பின்னர் 4f, 5d மற்றும் 6p ஆர்பிட்டால்களில் நிரப்பப்படுகின்றன. 4f ஆர்பிட்டால்கள் நிரப்பப்படுவது சீரியத்தில் (z=58) துவங்கி லுட்டீசியத்தில் (z=71) நிறைவடைகின்றது. இந்த 14 தனிமங்களையும் உள்ளடக்கிய வரிசை முதல் உள் இடைநிலைத்தனிம வரிசையாகும். இத்தனிமங்கள் லாந்தனைடுகள் என்றழைக்கப்படுகின்றன. இதைப்போலவே ஏழாவது வரிசையில் 5f ஆர்பிட்டால்கள் நிரப்பப்படுகின்றன. இந்த 14 தனிமங்களை உள்ளடக்கிய வரிசை ஆக்டினைடுகள் என்றழைக்கப்படுகின்றன. இந்த இரு வரிசைகளும் நவீன தனிமவரிசை அட்டவணையில் தனியே, அடிப்பாகத்தில் வைக்கப்பட்டுள்ளன.



Unit 3 - Sridhar.indd 84 07-01-2021 13:44:09

## 3.4.2 தொகுதிகளில் எலக்ட்ரான் அமைப்பில் ஏற்படும் மாறுபாடு

ஒரு தொகுதியில் உள்ள தனிமங்கள் அனைத்தும் அவற்றின் வெளிக்கூட்டில், ஒத்த எலக்ட்ரான் அமைப்பினைப் பெற்றுள்ளன. அட்டவணை (3.11)ல் பதினெட்டு தொகுதிகளுக்கான பொதுவான வெளிக்கூட்டு எலக்ட்ரான் அமைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தனிமங்களின் கடைசி இணைதிற எலக்ட்ரான் சென்று சேரக்கூடிய ஆர்பிட்டாலின் அடிப்படையில் தனிமங்களை s,p,d மற்றும் f தொகுதி தனிமங்கள் என வகைப்படுத்தலாம்.

தொகுதி –1 மற்றும் தொகுதி –2 ல் உள்ள தனிமங்கள், s– தொகுதி தனிமங்கள் என்றழைக்கப்படுகின்றன. இவற்றின் கடைசி இணைதிற எலக்ட்ரான்கள் ns ஆர்பிட்டாலில் சென்று சேர்கிறது. தொகுதி –1 ஐச் சேர்ந்த தனிமங்கள் காரஉலோகங்கள் என்றும் தொகுதி –2ஐச் சேர்ந்த தனிமங்கள் காரமண் உலோகங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவைகள் குறைந்த கொதிநிலை, மற்றும் உருகு நிலையினைப் பெற்றிருப்பதுடன், குறைவான அயனியாக்கும் ஆற்றலையும் பெற்றுள்ள மென்மையான உலோகங்கள் ஆகும். இவைகள் அதிக வினைத்திறனைப் பெற்றிருக்கின்றன மேலும் அயனிச்சேர்மங்களை உருவாக்குகின்றன. இத்தனிமங்கள் அதிக எலக்ட்ரான் நேர்மின்தன்மையையும் மற்றும் தீச்சுடரில் நிறத்தினை ஏற்படுத்தும் தன்மையினையும் பெற்றிருக்கின்றன. இத்தனிமங்களின் பண்புகளைப் பற்றி அடுத்தடுத்த பாடப்பகுதிகளில் விரிவாக படிப்போம்.

தொகுதி–13 முதல் 18 வரையிலான தனிமங்கள் p–தொகுதி தனிமங்கள் அல்லது பிரதிநிதித்துவ தனிமங்கள் என்றழைக்கப்படுகின்றன. இத்தனிமங்களின் பொதுவான வெளிக்கூட்டுஎலக்ட்ரான் அமைப்பு $ns^2$, $np^{1-6}$ ஆகும். 16 மற்றும் 17ம்–தொகுதி தனிமங்கள்முறையேசால்கோஜன்கள்மற்றும் ஹாலஜன்கள் என்றழைக்கப்படுகின்றன. 18ம் தொகுதித் தனிமங்கள் முழுமையாக நிரப்பப்பட்ட இணைதிற கூட்டு எலக்ட்ரான் அமைப்பினை ($ns^2$ $np^6$) பெற்றுள்ளன. இவைகள் மந்த வாயுக்கள் ( inert gases) அல்லது உயரிய வாயுக்கள் (noble gases) என அழைக்கப்படுகின்றன. p–தொகுதி தனிமங்கள் அதிகமான எதிர்க்குறி எலக்ட்ரான்கவர்தன்மை மதிப்புகளைப் பெற்றுள்ளன. s–தொகுதி தனிமங்களைக் காட்டிலும் இவற்றின் அயனியாக்கும் ஆற்றல் மதிப்பு அதிகம். இவைகள் பெரும்பாலும் சகப்பிணைப்புச் சேர்மங்களை உருவாக்குகின்றன. மேலும் இவைகள் உருவாக்கும் பல்வேறு சேர்மங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆக்சிஜனேற்ற நிலைகளைப் பெற்றுள்ளன.

தொகுதி–3 முதல் 12 வரையில் உள்ள தனிமங்கள் d தொகுதித் தனிமங்கள் அல்லது இடைநிலைத் தனிமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இத் தனிமங்களின் பொதுவான இணைதிற கூட்டு எலக்ட்ரான் அமைப்பு $ns^{1-2}$, $(n-1)$ $d^{1-10}$ ஆகும். இத்தனிமங்களும் ஒன்றிற்கும் மேற்பட்ட மாறுபடும் ஆக்சிஜனேற்ற நிலைகளைப் பெற்றுள்ளன. இவைகள் அயனிச் சேர்மங்கள், சகப்பிணைப்புச் சேர்மங்கள் மற்றும் ஈதல்சகப்பிணைப்புச் சேர்மங்களை உருவாக்கும் தன்மையினைப் பெற்றுள்ளன. மேலும் இவைகள் அணிக்கோவை இடைச்செருகல் சேர்மங்கள் (interstitial compounds) மற்றும் உலோகக் கலவைகளை உருவாக்குகின்றன. இவற்றின் உலோகக் கலவைகள் வினையூக்கிகளாகவும் செயல்படும் தன்மையினைப் பெற்றுள்ளன. இந்த தனிமங்கள் அதிக உருகுநிலையை பெற்றிருப்பதுடன் வெப்பம் மற்றும் மின்சாரத்தை நன்கு கடத்தும் கடத்திகளாகவும் செயல்படுகின்றன.

லாந்தனைடுகள் ($4f^{1-14}, 5d^{0-1}, 6s^2$) மற்றும் ஆக்டினைடுகள் ($5f^{0-14}$, $6d^{0-2}$, $7s^2$) ஆகியன f– தொகுதி தனிமங்கள் என்றழைக்கப்படுகின்றன. இத்தகைய தனிமங்கள் உலோகத் தன்மையினையும், அதிக உருகு நிலையினையும் கொண்டுள்ளன. இவற்றின் சேர்மங்கள் பெரும்பாலும் நிறமுடையவை. இத்தனிமங்களும் மாறுபட்ட ஆக்சிஜனேற்ற நிலைகளைப் பெற்றுள்ளன.

### அட்டவணை 3.11 தொகுதிகளில் உள்ள தனிமங்களின் பொதுவான வெளிக்கூட்டு எலக்ட்ரான் அமைப்பு

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| $ns^1$ | $ns^2$ | $ns^2 (n-1)d^1$ | $ns^2 (n-1)d^2$ | $ns^2 (n-1)d^3$ | $ns^1 (n-1)d^5$ | $ns^2 (n-1)d^5$ | $ns^2 (n-1)d^6$ | $ns^2 (n-1)d^7$ | $ns^2 (n-1)d^8$ | $ns^1 (n-1)d^{10}$ | $ns^2 (n-1)d^{10}$ | $ns^2 np^1$ | $ns^2 np^2$ | $ns^2 np^3$ | $ns^2 np^4$ | $ns^2 np^5$ | $ns^2 np^6$ |
| s– தொகுதி தனிமங்கள் | | d–தொகுதி தனிமங்கள் | | | | | | | | | | p– தொகுதி தனிமங்கள் | | | | | |
| f–தொகுதி தனிமங்கள் | | **லாந்தனைடுகள்** $4f^{1-14}\ 5d^{0-1}\ 6s^2$ | | | | | | | | | | | | | | | |
| | | **ஆக்டினைடுகள்** $5f^{0-14}\ 6d^{0-2}\ 7s^2$ | | | | | | | | | | | | | | | |

#### தன்மதிப்பீடு

3) $(n-1)\ d^2$, $ns^2$ ( இங்கு n=5) என்ற எலக்ட்ரான் அமைப்பினை நிறைவு செய்யும் தனிமமானது தனிமவரிசை அட்டவணையில் பெற்றுள்ள இடத்தினைக் கண்டறிக.

## 3.5. ஆவர்த்தன பண்புகளில் காணப்படும் ஆவர்த்தனத் தொடர்பு

முன்னரே விவரித்துள்ளவாறு, தனிமங்களின் அணு எண் அதிகரிக்கும் போது, அவற்றின் எலக்ட்ரான் அமைப்பில் காணப்படும் ஆவர்த்தனத் தன்மையினைப் போல, தனிமங்களின் இயற் மற்றும் வேதிப் பண்புகளிலும் ஆவர்த்தனத் தன்மை காணப்படுகிறது. இப்பாடப்பகுதியில் பின்வரும் பண்புகளில் காணப்படும் ஆவர்த்தனத் தன்மையினை நாம் கற்போம்.

1. அணு ஆரம்
2. அயனி ஆரம்
3. அயனியாக்கும் என்தால்பி (ஆற்றல்)
4. எலக்ட்ரான் நாட்டம் (எலக்ட்ரான் ஏற்கும் என்தால்பி)
5. எலக்ட்ரான் கவர் தன்மை




Unit 3 - Sridhar.indd 86 07-01-2021 13:44:10

### 3.5.1 அணு ஆரம்

ஒரு அணுவின் அணு ஆரம் என்பது அதன் அணுக்கருவின் மையத்திற்கும், இணைதிற எலக்ட்ரான் உள்ள வெளிக்கூட்டிற்கும் இடையேயான தூரம் என வரையறுக்கப்படுகிறது.


ஒரு தனித்த அணுவின் ஆரத்தினை நேரடியாக அளவிட இயலாது. மந்த வாயுக்களைத் தவிர்த்து,வழக்கமாகஅணுஆரம் என்பது தொடர்புடைய அணுக்களுக்கிடையே காணப்படும் பிணைப்பின் தன்மையினைப் பொறுத்து, சகப்பிணைப்பு ஆரம் அல்லது உலோக ஆரத்தினைக் குறிப்பிடுகின்றது.




படம் 3.1 (அ) அணு ஆரம்

### சகப்பிணைப்பு ஆரம்

ஒற்றை சகப்பிணைப்பால் பிணைக்கப்பட்டுள்ள இரண்டு ஒத்த அணுக்களின் அணுக்கருக்களுக்கு இடையேயான தொலைவின் பாதியளவு சகப்பிணைப்பு ஆரம் என்றழைக்கப்படுகிறது. அணுக்கருக்களுக்கு இடைப்பட்ட தொலைவு X –கதிர் விளிம்பு விளைவு ஆய்வின் மூலம் கண்டறியப்படுகிறது.




d = அணுக்கருயிடை தூரம்

$$r = \frac{d}{2}$$

படம் 3.1 (ஆ) அணு மற்றும் சகப்பிணைப்பு ஆரம்.

### எடுத்துக்காட்டு


சோதனை மூலம் கண்டறியப்பட்ட $Cl_2$ மூலக்கூறின் அணுக்கருயிடை தூரம், 1.98 Å.

$$d_{Cl\text{-}Cl} = r_{Cl} + r_{Cl}$$

$$\Rightarrow d_{Cl\text{-}Cl} = 2r_{Cl}$$

$$\Rightarrow r_{Cl} = \frac{d_{Cl\text{-}Cl}}{2}$$

$$= \frac{1.98}{2} = 0.99 Å$$




படம் 3.1 (இ) குளோரினின் சகப்பிணைப்பு ஆரம்.

சகப்பிணைப்பு உருவாதலானது, அணு ஆர்பிட்டால்கள் மேற்பொருந்துதலை உள்ளடக்கியது. மேலும் இது அணுக்கருக்களுக்கு இடையேயானத் தொலைவினைக் குறைக்கிறது. எனவே சகப்பிணைப்பு ஆரம் என்பது, உண்மையான அணு ஆரத்தினை விட எப்போதும் குறைவான மதிப்பினைப் பெற்றிருக்கும்.

தனித்த ஒரு அணுவின் சகப்பிணைப்பு ஆரத்தினை, இரு வேறுபட்ட A மற்றும் B ஆகிய அணுக்களுக்கிடையே உள்ள அணுக்கருயிடை தூரத்திலிருந்தும் கணக்கிடலாம். இதற்கு ஷோமேக்கர் மற்றும் ஸ்டீவன்சன் முன்மொழிந்த எளிமையான முறை பின்வருமாறு.

$$d_{A\text{-}B} = r_A + r_B - 0.09\,(\chi_A - \chi_B)$$



Unit 3 - Sridhar.indd 87 07-01-2021 13:44:11

இங்கு $\chi_A$ மற்றும் $\chi_B$ என்பன முறையே ஃபாலிங் அளவீட்டில் A மற்றும் B ஆகியவற்றின் எலக்ட்ரான் கவர்தன்மை மதிப்புகளாகும். இங்கு $\chi_A > \chi_B$ மற்றும் ஆரத்தின் அளவீடு Å.

சோதனை மூலம் கண்டறியப்பட்ட $d_{H-Cl}$ மதிப்பான 1.28 Å –ல் இருந்து ஹைட்ரஜனின் சகப்பிணைப்பு ஆரத்தினை நாம் கணக்கிடுவோம். குளோரினின் சகப்பிணைப்பு ஆரம் 0.99 Å ஃபாலிங் அளவீட்டில், குளோரின் மற்றும் ஹைட்ரஜன் ஆகியவற்றின் எலக்ட்ரான் கவர்தன்மை மதிப்புகள் முறையே 3 மற்றும் 2.1 ஆகும்.

$$d_{H-Cl} = r_H + r_{Cl} - 0.09\ (\chi_{Cl} - \chi_H)$$

$$1.28 = r_H + 0.99 - 0.09\ (3 - 2.1)$$

$$1.28 = r_H + 0.99 - 0.09\ (0.9)$$

$$1.28 = r_H + 0.99 - 0.081$$

$$1.28 = r_H + 0.909$$

$$\therefore r_H = 1.28 - 0.909 = 0.371\ \text{Å}$$

### உலோக ஆரம்

நெருங்கி பொதிந்து அமைந்துள்ள உலோகப் படிகத்தில், அருகருகே அமைந்துள்ள இரு உலோக அணுக்களுக்கு இடைப்பட்டத் தொலைவின் சரிபாதியளவு உலோக ஆரம் என வரையறுக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, தாமிர (Copper) உலோகத்தில், அடுத்தடுத்து அருகே அமைந்துள்ள தாமிர (Copper) அணுக்களுக்கு இடைப்பட்டத் தொலைவு 2.56 Å. எனவே தாமிரத்தின் (Copper) உலோக ஆரம்

$$\frac{2.56}{2} = 1.28\ \text{Å}$$

உலோகப் படிகத்தின், அலகு கூட்டின் நீளத்தினைப் பயன்படுத்தி உலோக ஆரத்தினை கணக்கிட இயலும். XII –ம் வகுப்பின் திட நிலைமை பாடத்தில் இது பற்றிய விரிவான கணக்கீட்டினை நீங்கள் கற்பீர்கள்.

### அணு ஆரத்தில் காணப்படும் ஆவர்த்தனத் தொடர்பு

### வரிசையில் ஏற்படும் மாறுபாடு (Variation in Periods)

ஒரு வரிசையில் செல்லும் போது அணு ஆரம் குறைகிறது. ஒரு வரிசையில் இடமிருந்து வலமாகச் செல்லும் போது, இணைதிற எலக்ட்ரான்கள் ஒரே கூட்டில் சேர்க்கப்படுகின்றன. அதே நேரத்தில் அணுக்கருவில் சேர்க்கப்படும் புரோட்டான், அணுக்கருவின் மின்தன்மையினை அதிகரிப்பதுடன் இணைதிற எலக்ட்ரான்களுக்கும், அணுக்கருவிற்கும் இடையேயான கவர்ச்சி விசையினையும் அதிகரிக்கின்றது. எனவே, ஒரு வரிசையில் செல்லும்போது அணு ஆரம் குறைகிறது.

### செயலுறு அணுக்கரு மின்சுமை (effective nuclear charge)

எலக்ட்ரான்களுக்கும், அணுக்கருவிற்கும் இடையே நிலை மின்னியல் கவர்ச்சி விசைக் காணப்படுகிறது. இக்கவர்ச்சி விசை மட்டும் அல்லாமல், எலக்ட்ரான்களுக்கிடையே விலக்கு விசையும் காணப்படுகிறது. உள்கூட்டில் காணப்படும் எலக்ட்ரான்களுக்கும், இணைதிற கூட்டில் உள்ள எலக்ட்ரான்களுக்கும் இடையேயான இந்த விலக்கு விசையின் விளைவாக, வெளிக்கூட்டில் உள்ள இணைதிற எலக்ட்ரான்கள் மீது, அணுக்கருவினால் செலுத்தப்படும் கவர்ச்சி விசை குறைக்கப் படுகின்றது. எனவே, உட்கூட்டில் உள்ள எலக்ட்ரான்கள், அணுக்கருவிற்கும், இணைதிற எலக்ட்ரான்களுக்கும் இடையே ஒரு திரை போல செயல்படுகிறது. இவ்விளைவு திரைமறைப்பு விளைவு (Screening effect) என்றழைக்கப்படுகிறது. வெளிக்கூட்டில் உள்ள இணைதிற எலக்ட்ரான்களால் உணரப்படும் நிகர அணுக்கரு மின்சுமை செயலுறு அணுக்கரு மின்சுமை (effective nuclear charge) என்றழைக்கப்படுகின்றது. செயலுறு அணுக்கரு மின்சுமையானது



Unit 3 - Sridhar.indd 88 07-01-2021 13:44:11

பின்வரும் சமன்பாட்டால் தோராயமாக கணக்கிடப்படுகிறது.

$$Z_{\text{செயலுறு}} = Z - S$$

இங்கு, Z என்பது அணு எண் மற்றும் S என்பது திரைமறைப்பு மாறிலி. இம்மாறிலியைக் கீழே விவரிக்கப்பட்டுள்ள, ஸ்லேட்டர் விதிகளைப் பயன்படுத்தி கணக்கிடலாம்.

### படி 1

முதலில் கொடுக்கப்பட்ட அணுவின் எலக்ட்ரான் அமைப்பினை எழுதவும். பிறகு ns மற்றும் np ஆர்பிட்டால்களை ஒரே தொகுதியாகவும், பிற ஆர்பிட்டால்களை தனி தொகுதிகளாகவும் பின்வரும் அமைப்பில் எழுதவும்.

(1s) (2s, 2p) (3s, 3p) (3d) (4s, 4p) (4d) (4f) (5s, 5p)...

### படி 2

செயலுறு அணுக்கரு மின்சுமை கண்டறிய வேண்டிய எலக்ட்ரான் அமைந்துள்ள தொகுதியினை இனம் கண்டறியவும். இதற்கு வலப்புறம் அமைந்துள்ள தொகுதிகளில் காணப்படும் எலக்ட்ரான்கள் திரைமறைப்பு விளைவிற்கு காரணமாக அமைவதில்லை.

இனம் கண்டறியப்பட்ட தொகுதியில் (n என்ற எழுத்தால் குறிக்கப்படுகிறது) உள்ள எலக்ட்ரான்கள் ஒவ்வொன்றும் 0.35 அலகு அணுக்கரு மின்சுமையை மறைக்கின்றன. எனினும் 1s எலக்ட்ரான்களுக்கு இதன் மதிப்பு 0.30 அலகு ஆகும்.

### படி 3

### உட்கூட்டிலுள்ள எலக்ட்ரான்களின் மறைத்தல்

செயலுறு அணுக்கரு மின்சுமை கண்டறியப்பட வேண்டிய எலக்ட்ரான் s அல்லது p ஆர்பிட்டாலில் இருந்தால்,

i. (n–1) தொகுதியில் உள்ள ஒவ்வொரு எலக்ட்ரான்களும் 0.85 அலகு அணுக்கரு மின்சுமையினை மறைக்கின்றன.

ii. (n–2) தொகுதி அல்லது அதனை விடக்குறைவான (n–3), (n–4) போன்ற தொகுதிகளில் உள்ள ஒவ்வொரு எலக்ட்ரானும் முழுமையாக மறைக்கின்றன. அதாவது 1 அலகு அணுக்கரு மின் சுமையினை மறைக்கின்றன.

செயலுறு அணுக்கரு மின்சுமை கண்டறியப்பட வேண்டிய எலக்ட்ரான் d அல்லது f ஆர்பிட்டாலில் இருந்தால், அந்த எலக்ட்ரான் அமைந்துள்ள தொகுதிக்கு இடப்புறம் உள்ள தொகுதிகளில் காணப்படும் எலக்ட்ரான்கள் 1 அலகு அணுக்கரு மின்சுமையினை மறைக்கின்றன.

### படி 4

அனைத்து எலக்ட்ரான்களின் திரைமறைப்பு விளைவு மதிப்புகளின் கூடுதல் திரைமறைப்பு மாறிலி 'S' ஐத் தருகின்றது.

**அட்டவணை – 3.12 உட்கூட்டிலுள்ள எலக்ட்ரான்களின் திரை மறைப்பு விளைவு ஸ்லேட்டா விதிகள்**

| எலக்ட்ரான் தொகுதி | செயலுறு அணுக்கரு மின்சுமை கண்டறியப்பட வேண்டிய எலக்ட்ரான்( s அல்லது p ஆர்பிட்டாலில் இருந்தால்) | செயலுறு அணுக்கரு மின்சுமை கண்டறியப்பட வேண்டிய எலக்ட்ரான்( d ஆர்பிட்டாலில் இருந்தால்) |
|---|---|---|
| n | 0.35 (0.30 – 1s எலக்ட்ரானுக்கு) | 0.35 |
| (n-1) | 0.85 | 1.00 |
| (n-2) மற்றும் மற்றவை | 1.00 | 1.00 |



Unit 3 - Sridhar.indd 89 07-01-2021 13:44:11

எடுத்துக்காட்டு

ஸ்கேன்டியத்தில் உள்ள 3d எலக்ட்ரான் மற்றும் 4s எலக்ட்ரானின் மீதான செயலுறு அணுக்கரு மின்சுமையின் மதிப்பினைக் கணக்கிடுதலை நாம் விளக்குவோம். ஸ்கேன்டியத்தின் எலக்ட்ரான் அமைப்பு $1s^2, 2s^2, 2p^6, 3s^2, 3p^6, 4s^2, 3d^1$, இதனை பின்வருமாறு மாற்றியமைக்கலாம்.

$$\underbrace{(1s)^2}_{(n-3)}\ \underbrace{(2s,2p)^8}_{(n-2)}\ \underbrace{(3s,3p)^8\,(3d)^1}_{(n-1)}\ \underbrace{(4s)^2}_{n}$$

| தொகுதி | அத்தொகுதியில் காணப்படும் எலக்ட்ரான்களின் எண்ணிக்கை | 'S' மதிப்பிற்கு ஒவ்வொரு எலக்ட்ரானின் பங்களிப்பு | 'S' மதிப்பிற்கு குறிப்பிட்ட தொகுதியில் உள்ள எலக்ட்ரான்களின் பங்களிப்பு |
|---|---|---|---|
| (n) | 1 | 0.35 | 0.35 |
| (n-1) | 9 | 0.85 | 7.65 |
| (n-2) & மற்றவை | 10 | 1 | 10.00 |
| S ன் மதிப்பு | | | 18.00 |

$Z_{செயலுறு} = Z - S$

$Z_{செயலுறு} = 21 - 18$

$Z_{செயலுறு} = 3$

### $3d^1$ எலக்ட்ரான் மீதான செயலுறு அணுக்கரு மின்சுமையினைக் கணக்கிடுதல்

$$\underbrace{(1s)^2}_{(n-3)}\ \underbrace{(2s,2p)^8}_{(n-2)}\ \underbrace{(3s,3p)^8}_{(n-1)}\ \underbrace{(3d)^1}_{n}\ \underbrace{(4s)^2}_{}$$

| தொகுதி | அத்தொகுதியில் காணப்படும் எலக்ட்ரான்களின் எண்ணிக்கை | 'S' மதிப்பிற்கு ஒவ்வொரு எலக்ட்ரானின் பங்களிப்பு | 'S' மதிப்பிற்கு குறிப்பிட்ட தொகுதியில் உள்ள எலக்ட்ரான்களின் பங்களிப்பு |
|---|---|---|---|
| n | 0 | 0.35 | 0 |
| (n-1) & மற்றவை | 18 | 1 | 18 |
| S ன் மதிப்பு | | | 18 |

$\therefore Z_{செயலுறு} = Z - S$ i.e. $=21 - 18$ $\therefore Z_{செயலுறு} = 3$

### அட்டவணை 3.13 இரண்டாம் வரிசை தனிமங்களின் அணு ஆரம் (சகப்பிணைப்பு ஆரம்)

| தனிமம் | செயலுறு அணுக்கரு மின்சுமை | சகப்பிணைப்பு ஆரம் |
|---|---|---|
| $_3Li$ | 1.30 | 152 |
| $_4Be$ | 1.95 | 111 |
| $_5B$ | 2.60 | 89 |
| $_6C$ | 3.25 | 77 |
| $_7N$ | 3.90 | 74 |
| $_8O$ | 4.55 | 66 |
| $_9F$ | 5.20 | 64 |
| $_{10}Ne$ | 5.85 | |

* வாண்டர்வால்ஸ் ஆரம்



Unit 3 - Sridhar.indd 90 07-01-2021 13:44:12

### தன்மதிப்பீடு


4) அலுமினியம் மற்றும் குளோரினின் 3p எலக்ட்ரான் மீதான செயலுறு அணுக்கரு மின்சுமையின் மதிப்பினை ஸ்லேட்டர் விதிகளைப் பயன்படுத்தி கண்டறிக. இதன் முடிவுகள் இவ்விரு அணுக்களின் அயனி ஆரங்களோடு எவ்விதத்தில் தொடர்பு கொண்டுள்ளன என்பதை விவரி.

### தொகுதியில் ஏற்படும் மாறுபாடுகள் (variation in group)

தனிம வரிசை அட்டவணையில், ஒரு தொகுதியில் மேலிருந்து கீழாக அணு ஆரம் அதிகரிக்கின்றது. ஒரு தொகுதியில் மேலிருந்து கீழாகச் செல்லும் போது, புதிதாகச் சேர்க்கப்படும் இணைதிற எலக்ட்ரான்கள் இடம்பெறும் பொருட்டு , புதிய கூடுகள் உருவாக்கப்படுகின்றன. இதன் காரணமாக, அணுக்கருவின் மையத்திற்கும், இணைதிற எலக்ட்ரான்கள் காணப்படும் வெளிக்கூட்டிற்கும் இடையேயான தொலைவு அதிகரிக்கின்றது. எனவே அணு ஆரம் அதிகரிக்கின்றது. ஒரு தொகுதியில் கார உலோகங்களின் அணு ஆரங்களின் மாறுபாடு பின்வருமாறு

**அட்டவணை 3.14 தொகுதி–1தனிமங்களின் சகப்பிணப்பு ஆரங்களின் மாறுபாடுகள்**

| தனிமம் | இணைதிற எலக்ட்ரான் காணப்படும் வெளிக்கூடு | சகப்பிணைப்பு ஆரம்(Å) |
|---|---|---|
| Li | L (n=2) | 1.34 |
| Na | M (n=3) | 1.54 |
| K | N (n=4) | 1.96 |
| Rb | O (n=5) | 2.11 |
| Cs | P (n=6) | 2.25 |




### செயல்பாடு 3.1

பல்வேறு தொகுதிகள் மற்றும் வரிசைகளைச் சார்ந்த சில தனிமங்களின் சகப்பிணைப்பு ஆரம் (Å–ல்) பின்வருமாறு அட்டவணையிடப்பட்டுள்ளது. இம் மதிப்புகளை அவற்றின் அணு எண்ணிற்கு எதிராக வரைபடத்தில் குறிக்க . இவ்வரைபடத்தில் இருந்து ஒரு தொகுதி மற்றும் தொடரில் ஏற்படும் மாறுபாடுகளை விளக்குக.

2ஆம் தொகுதி தனிமங்கள் Be (0.89), Mg (1.36), Ca (1.74), Sr (1.91) Ba(1.98)

17ஆம் தொகுதி தனிமங்கள் F (0.72), Cl (0.99), Br (1.14), I (1.33)

3ஆம் வரிசை தனிமங்கள் Na(1.57), Mg(1.36), Al (1.25), Si(1.17), P(1.10), S(1.04), Cl(0.99)

நான்காம் வரிசை தனிமங்கள் : K(2.03), Ca(1.74), Sc(1.44), Ti(1.32), V(1.22), Cr(1.17), Mn(1.17), Fe(1.17), Co(1.16), Ni(1.15), Cu(1.17), Zn(1.25), Ga(1.25), Ge(1.22), As(1.21), Se(1.14), Br(1.14)



Unit 3 - Sridhar.indd 91 07-01-2021 13:44:12

### 3.5.2 அயனி ஆரம்

ஒரு அயனியின் அணுக்கருவின் மையத்திற்கும், அவ்வயனியின் எலக்ட்ரான் திரள்முகில் (electron cloud) மீது அதன் அணுக்கருவால் கவர்ச்சி விசையினை செலுத்த இயலும் தூரத்திற்கும் இடையிலான தொலைவு அயனிஆரம் என வரையறுக்கப்படுகிறது. நேரயனி மற்றும் எதிரயனி ஆகியவற்றிற்கு இடையேயான அயனி இடைத் தொலைவினைக் கொண்டு பாலிங் முறைப்படி, ஒற்றை மின்சுமையுடைய படிகங்களின் அயனி ஆரங்களை கணக்கிடலாம்.

படிக அலகுக்கூட்டில் காணப்படும் அயனிகள் கோள வடிவமுடையவை என பாலிங் கருதினர். மேலும் அவைகள் ஒன்றையொன்று தொட்டுக் கொண்டிருப்பதாகவும் கருதினார். எனவே,

$$d = r_{C^+} + r_{A^-} \quad \text{------------------} \quad (1)$$

இங்கு d என்பது நேர் அயனி $C^+$ ன் அணுக்கருவிற்கும், எதிர் அயனி $A^-$ ன் அணுக்கருவிற்கும் இடையேயானத் தொலைவு ஆகும். $r_{C^+}$, மற்றும் $r_{A^-}$ ஆகியன முறையே நேர் மற்றும் எதிர் அயனிகளின் ஆரங்களாகும்.

மேலும், மந்த வாயுக்களின் எலக்ட்ரான் அமைப்பினைப் (எடுத்துக்காட்டாக $Na^+$ மற்றும் $F^-$ அயனிகள் $1s^2\ 2s^2\ 2p^6$ எலக்ட்ரான் அமைப்பினைப் பெற்றுள்ளன) பெற்றுள்ள அயனிகளின் ஆரமானது, அவ்வயனிகள் மீது அணுக்கருவால் செலுத்தப்படும் செயலுறு அணுக்கருமின்சுமைக்கு எதிர்விகிதத்தில் அமையும். அதாவது,

$$\text{i.e. } r_{C^+} \propto \frac{1}{(Z_{\text{செயலுறு}})_{C^+}} \quad \text{————} \quad (2)$$

மற்றும்

$$r_{A^-} \propto \frac{1}{(Z_{\text{செயலுறு}})_{A^-}} \quad \text{————} \quad (3)$$

இங்கு $Z_{\text{செயலுறு}}$ என்பது செயலுறு அணுக்கரு மின்சுமைக்குச் சமம். $Z_{\text{செயலுறு}} = Z - S$

சமன்பாடு (2) ஐ (3) ஆல் வகுக்க,

$$\frac{r_{C^+}}{r_{A^-}} = \frac{(Z_{\text{செயலுறு}})_{A^-}}{(Z_{\text{செயலுறு}})_{C^+}} \quad \text{--------} \quad (4)$$

சமன்பாடு (1) மற்றும் (4) ஐத் தீர்ப்பதன் மூலம் $r_{C^+}$ மற்றும் $r_{A^-}$ மதிப்புகளைப் பெற இயலும்.

NaF படிகத்திலுள்ள $Na^+$ மற்றும் $F^-$ அயனிகளின் ஆரங்களைக் கணக்கிடுவதன் மூலம் இம்முறையினை நாம் விளக்கலாம். NaF படிகத்தின் அயனி இடைத் தொலைவு 231 pm ஆகும்.,

$$d = r_{Na^+} + r_{F^-}$$

$$\text{i.e. } r_{Na^+} + r_{F^-} = 231 \text{ pm} \quad \text{-----------} (5)$$

$$\frac{r_{Na^+}}{r_{F^-}} = \frac{(Z_{\text{செயலுறு}})_{F^-}}{(Z_{\text{செயலுறு}})_{Na^+}}$$

$$(Z_{\text{செயலுறு}})_{F^-} = Z - S$$
$$= 9 - 4.15$$
$$= 4.85$$

$$(Z_{\text{செயலுறு}})_{Na^+} = 11 - 4.15$$
$$= 6.85$$

$$\therefore \frac{r_{Na^+}}{r_{F^-}} = \frac{4.85}{6.85}$$
$$= 0.71$$

$$\Rightarrow r_{Na^+} = 0.71\ r_{F^-} \quad \text{--------} (6)$$

(6) ஐ (5) ல் பிரதியிட

$$(1) \Rightarrow \quad 0.71\ r_{F^-} + r_{F^-} = 231 \text{ pm}$$
$$1.71\ r_{F^-} = 231 \text{ pm}$$
$$r_{F^-} = \frac{231}{1.71} = 135.1 \text{ pm}$$

($r_{F^-}$) ன் மதிப்புகளை சமன்பாடு (5) ல் பிரதியிட

$$r_{Na^+} + 135.1 = 231$$
$$r_{Na^+} = 95.9 \text{ pm}$$

**தன்மதிப்பீடு**

5) $X^{3+}$, $Y^{2+}$ மற்றும் $Z^{-}$ ஆகிய சம எலக்ட்ரான்களைக் கொண்ட அயனிகளின் ஆரங்கள் முறையே 136 pm, 64pm, 49 pm என ஒரு மாணவர் அறிக்கை அளித்தார். இந்த வரிசை சரியானதா? குறிப்புரை தருக.

### 3.5.3 அயனியாக்கும் ஆற்றல்

இயல்பு ஆற்றல் நிலையில் (சிறும ஆற்றல் நிலையில் – ground state) உள்ள நடுநிலைத்தன்மை உடைய தனித்த வாயு நிலை அணு ஒன்றின் இணைதிற கூட்டிலிருந்து இலகுவாக பிணைக்கப்பட்டுள்ள ஒரு எலக்ட்ரானை நீக்குவதற்கு தேவைப்படும் குறைந்தபட்ச ஆற்றல் அயனியாக்கும் ஆற்றல் எனப்படும். இது $KJmol^{-1}$ அல்லது eV என்ற அலகால் குறிப்பிடப்படுகின்றது.

$$M_{(g)} + IE_1 \rightarrow M^+_{(g)} + 1\ e^-$$

இங்கு, $IE_1$ என்பது முதலாவது அயனியாக்கும் ஆற்றலைக் குறிப்பிடுகிறது.

#### அடுத்தடுத்த அயனியாக்கும் ஆற்றல்கள் (Successive ionization energies)

ஒரு ஒற்றை நேர்மின்சுமையுடைய அயனியிலிருந்து, ஒரு எலக்ட்ரானை நீக்குவதற்கு தேவைப்படும் குறைந்தபட்ச ஆற்றல் இரண்டாம் அயனியாக்கும் ஆற்றல் எனப்படும். இது பின்வரும் சமன்பாட்டால் குறிப்பிடப்படுகிறது.

$$M^+_{(g)} + IE_2 \rightarrow M^{2+}_{(g)} + 1\ e^-$$

இதைப் போலவே, நாம் மூன்றாம், நான்காம் அயனியாக்கும் ஆற்றல்களை வரையறுக்கலாம்.

ஒரு நேர்மின் சுமையுடைய அயனியில் காணப்படும் எலக்ட்ரான்களின் எண்ணிக்கையானது, அதன் நடுநிலை அணுவில் காணப்படும் எலக்ட்ரான்களின் எண்ணிக்கையைவிட குறைவாக இருந்தபோதிலும் அவைகளின் அணுக்கரு மின்சுமை சமமாக இருக்கும். எனவே, நேர்மின்சுமையுடைய அயனியின் செயலுறு அணுக்கருகவர்ச்சி விசையானது, தொடர்புடைய நடுநிலை அணுவின் செயலுறு கவர்ச்சி விசையினை விட அதிகம். எனவே தொடர்ச்சியான அயனியாக்கும் ஆற்றலின் மதிப்புகள், எப்போதும் பின்வரும் ஏறுவரிசையில் அமைகின்றன.

$$IE_1 < IE_2 < IE_3 < .....$$

#### அயனியாக்கும் ஆற்றலில் காணப்படும் ஆவர்த்தனத் தன்மை.

ஒரு சில விதிவிலக்குகளைத் தவிர்த்து, பொதுவாக அயனியாக்கும் ஆற்றல், ஒரு வரிசையில் அதிகரிக்கின்றது. முன்னரே விவரித்தவாறு, ஒரு வரிசையில் இடமிருந்து வலமாகச் செல்லும் போது, இணைதிற எலக்ட்ரான்கள் ஒரே கூட்டில் சேர்க்கப்படும் நிலையில், அணுக்கருவில் புரோட்டான்கள் சேர்க்கப்படுகின்றன. இவ்வாறு தொடர்ச்சியாக அணுக்கருவின் மின்சுமை அதிகரிப்பதால், இணைதிற எலக்ட்ரான்கள் மீதான கவர்ச்சி விசையும் அதிகரிக்கின்றது. மேலும் இணைதிற எலக்ட்ரானை நீக்க தேவைப்படும் ஆற்றல் அதிகரிப்பதால் அயனியாக்கும் ஆற்றலும் அதிகரிக்கிறது.

இரண்டாம் வரிசை தனிமங்களின் அயனியாக்கும் ஆற்றலில் ஏற்படும் மாறுபாடுகளை நாம் கருதுவோம். அணு எண்ணிற்கு எதிரான அயனியாக்கும் ஆற்றல் மதிப்பின் வரைபடம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பின்வரும் வரைபடத்தில், அயனியாக்கும் ஆற்றலின் வழக்கமான போக்கில், இரு மாறுபாடுகள் காணப்படுகின்றன. பெரிலியத்தினைக் காட்டிலும் போரான் அதிகமான அணுக்கரு மின் சுமையினைப் பெற்றிருப்பதால்,




Unit 3 - Sridhar.indd 93 07-01-2021 13:44:12

போரானின் அயனியாக்கும் ஆற்றல் மதிப்பு அதிகம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் எதிர்பார்த்தலுக்கு முரணாக பெரிலியம் மற்றும் போரான் அணுக்களின் அயனியாக்கும் ஆற்றல்கள் முறையே 899 மற்றும் 800 $kJmol^{-1}$ ஆகும்.

சிறும ஆற்றல் நிலையில், பெரிலியம் (Z=4) $1s^2$, $2s^2$ எலக்ட்ரான் அமைப்பினையும், போரான் (Z=5) $1s^2\ 2s^2\ 2p^1$ என்ற எலக்ட்ரான் அமைப்பினையும் பெற்றுள்ளன.

பெரிலியம் முழுவதும் நிரப்பட்ட 2s ஆர்பிட்டாலைப் பெற்றுள்ளதால், பகுதியளவு நிரப்பப்பட்ட இணைதிற கூடு எலக்ட்ரான் அமைப்பை பெற்றுள்ள ($2s^2 2p^1$) போரானைக் காட்டிலும் அதிக அளவு நிலைப்புத்தன்மை உடையது.இதன் காரணமாக பெரிலியத்தின் அயனியாக்கும் ஆற்றல் அதிகம்

### படம் 3.2 வரிசை 2–ல் உள்ள தனிமங்களின் அயனியாக்கும் ஆற்றலில் ஏற்படும் மாறுபாடு




இதைப் போலவே, $1s^2\ 2s^2\ 2p^3$ எலக்ட்ரான் அமைப்பினைப் பெற்றுள்ள நைட்ரஜனின் அயனியாக்கும் ஆற்றல், (1402 $kJmol^{-1}$), $1s^2\ 2s^2\ 2p^4$ என்ற எலக்ட்ரான் அமைப்பினைப் பெற்றுள்ள ஆக்சிஜனின் அயனியாக்கும் ஆற்றல் (1314 kJmol–1) மதிப்பைக் காட்டிலும் அதிகம். ஏனெனில் சரிபாதியளவு நிரப்பப்பட்ட எலக்ட்ரான் அமைப்பு அதிக நிலைப்புத் தன்மையுடையது. ஆதலால், நைட்ரஜனின் 2p ஆர்பிட்டாலிலிருந்து, ஒரு எலக்ட்ரானை நீக்குவதற்கு அதிக ஆற்றல் தேவைப்படுகிறது. ஆனால், ஆக்சிஜனின் 2p ஆர்பிட்டாலில் உள்ள ஒரு எலக்ட்ரானை நீக்குவதால், அது சரிபாதியளவு நிரப்பப்பட்ட நிலையான எலக்ட்ரான் அமைப்பினைப் பெறுகிறது. இதன் விளைவாக நைட்ரஜனோடு ஒப்பிடும் போது ஆக்சிஜனில் 2p எலக்ட்ரானை நீக்குவது எளிதாகிறது.

### தொகுதியில் ஏற்படும் ஆவர்த்தன மாறுபாடுகள்

ஒரு தொகுதியில் மேலிருந்து கீழாகச் செல்லும் போது அயனியாக்கும் ஆற்றல் குறைகிறது. தொகுதியில் மேலிருந்து வரும் போது, இணைதிற எலக்ட்ரான்கள் புதிய கூட்டில் சேர்கின்றன. அணுக்கருவிற்கும் இணைதிற எலக்ட்ரான்களுக்கும் இடையேயானத் தொலைவு அதிகரிக்கின்றது. எனவே இணைதிற எலக்ட்ரான்கள் மீதான அணுக்கருவின் கவர்ச்சி விசை குறைகின்றது. இதன் காரணமாக ஒரு தொகுதியில் மேலிருந்து கீழே செல்லும் போது அயனியாக்கும் ஆற்றல் குறைகிறது.

### அயனியாக்கும் ஆற்றல் மற்றும் மறைத்தல் விளைவு


ஒரு தொகுதியில் மேலிருந்து கீழாக செல்லும் போது, உட்கூட்டில் உள்ள எலக்ட்ரான்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. இதன் காரணமாக உட்கூட்டில் உள்ள எலக்ட்ரான்களுக்கும் இணைதிற எலக்ட்ரான்களுக்கும் இடையேயான விலக்கு விசையும் அதிகரிக்கின்றது. அதாவது உள்கூட்டில் உள்ள எலக்ட்ரான்களின் மறைத்தல் விளைவு அதிகரிப்பதனால், அணுக்கருவினால், இணைதிற எலக்ட்ரான்கள் மீது செலுத்தப்படும் கவர்ச்சி விசை குறைகிறது. எனவே, அயனியாக்கும் ஆற்றலும் குறைகிறது. அயனியாக்கும் ஆற்றலின் இத்தகைய



Unit 3 - Sridhar.indd 94 07-01-2021 13:44:12

போக்கினை கார உலோகங்களை எடுத்துக்காட்டாகக் கொண்டு நாம் புரிந்து கொள்வோம்.

### படம் 3.3 முதல் தொகுதியில் மேலிருந்து கீழாக அயனியாக்கும் ஆற்றலில் ஏற்படும் மாறுபாடுகள்




#### தன்மதிப்பீடு

6. X, Y மற்றும் Z ஆகிய தனிமங்களின் முதல் அயனியாக்கும் ஆற்றல் ($IE_1$) மற்றும் இரண்டாம் அயனியாக்கும் ஆற்றல் ($IE_2$) ஆகியன முறையே கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| தனிமம் | $IE_1$ ($kJ\ mol^{-1}$) | $IE_2$ ($kJ\ mol^{-1}$) |
|---|---|---|
| X | 2370 | 5250 |
| Y | 522 | 7298 |
| Z | 1680 | 3381 |

மேற்கண்ட தனிமங்களுள் அதிக வினைபுரியும் உலோகம் எது? மந்த வாயு எது? குறைவாக வினைபுரியும் உலோகம் எது?

## 3.5.4 எலக்ட்ரான் நாட்டம்


இயல்பு ஆற்றல் நிலையில் உள்ள ஒரு தனித்த நடுநிலைத்தன்மை உடைய, வாயுநிலை அணு ஒன்றின் இணைதிற கூட்டில் ஒரு எலக்ட்ரானை சேர்த்து அதன் எதிர் அயனியை உருவாக்கும் போது வெளிப்படும் ஆற்றல் (மந்த வாயுக்களைப் பொருத்த வரையில் தேவைப்படும் ஆற்றல்) எலக்ட்ரான் நாட்டம் எனப்படும். இது $kJ\ mol^{-1}$ என்ற அலகால் குறிப்பிடப்படுகின்றது.

$$A + 1\,e^- \rightarrow A^- + E_A$$

### ஒரு வரிசையில் ஏற்படும் எலக்ட்ரான் நாட்டத்தின் மாறுபாடுகள்

அயனியாக்கும் ஆற்றலில் காணப்படுவதைப் போன்று எலக்ட்ரான் நாட்டத்தில் சீரான மாற்றம் காணப்படுவதில்லை. ஒரு வரிசையில், கார உலோகத்திலிருந்து ஹாலஜன்களை நோக்கிச் செல்லும் போது, பொதுவாக எலக்ட்ரான் நாட்டம் அதிகரிக்கின்றது அதாவது வெளிப்படும் ஆற்றலின் மதிப்பு அதிகமாக இருக்கும். அணுவின் உருவளவு சிறிதாவதும், அணுக்கரு மின்சுமை அதிகரிப்பதுமே இதற்கு காரணமாகும். எனினும் பெரிலியம் ($1s^2\ 2s^2$) நைட்ரஜன் ($1s^2 2s^2 2p^3$) போன்ற தனிமங்களில் ஒரு எலக்ட்ரான் சேர்க்கப்படும் நிலையில், அவற்றின் அதிக நிலைப்புத்தன்மையுடைய எலக்ட்ரான் அமைப்பு இழக்கப்படும் நிலை ஏற்படும். எனவே இத்தகைய தனிமங்கள் ஏறத்தாழ பூஜ்ஜிய எலக்ட்ரான் நாட்ட மதிப்பினைப் பெற்றுள்ளன.

### படம் 3.4. இரண்டாம் வரிசை தனிமங்களின் எலக்ட்ரான் நாட்டத்தில் ஏற்படும் மாறுபாடுகள்.







Unit 3 - Sridhar.indd 95 07-01-2021 13:44:12

மந்த வாயுக்கள் $ns^2$, $np^6$ என்ற முழுவதும் நிரப்பப்பட்ட நிலையான எலக்ட்ரான் அமைப்பினைப் பெற்றுள்ளன. எனவே கூடுதலாக ஓர் எலக்ட்ரானை சேர்த்தல் சாதகமானதல்ல. மேலும் அந்நிகழ்விற்கு அதிக ஆற்றல் தேவைப்படும். $ns^2$, $np^5$ என்ற எலக்ட்ரான் அமைப்பினைப் பெற்றுள்ள ஹாலஜன்கள் எளிதில் ஒரு எலக்ட்ரானை ஏற்றுக்கொண்டு நிலையான $ns^2$, $np^6$ எலக்ட்ரான் அமைப்பினை பெறுவதால், ஒவ்வொரு வரிசையிலும், ஹாலஜன்கள் அதிக எலக்ட்ரான் நாட்ட மதிப்பினைப் (அதிக எதிர்குறி மதிப்புகள்) பெற்றுள்ளன.

### ஒரு தொகுதியில் ஏற்படும் எலக்ட்ரான் நாட்டத்தின் மாறுபாடுகள்

ஒரு தொகுதியில் மேலிருந்து கீழாக வரும்போது பொதுவாக எலக்ட்ரான் நாட்டத்தின் மதிப்பு குறைகிறது. அணுபருமன் மற்றும் உள்கூட்டில் உள்ள எலக்ட்ரான்களின் திரைமறைப்பு விளைவு ஆகியவை அதிகரிப்பதே இதற்குக் காரணமாகும். எனினும், ஆக்சிஜன் மற்றும் புளூரின் ஆகியன முறையே சல்பர் மற்றும் குளோரினைக் காட்டிலும் குறைவான எலக்ட்ரான் நாட்ட மதிப்பினைப் பெற்றுள்ளன. ஆக்சிஜன் மற்றும் புளூரினின் உருவளவு ஒப்பீட்டளவில் சிறியது. எனவே அவைகள் அதிக எலக்ட்ரான் அடர்த்தியைக் கொண்டுள்ளன. மேலும், சேர்க்கப்படும் கூடுதல் எலக்ட்ரான் ஆக்சிஜன் மற்றும் புளூரினில் 2p ஆர்பிட்டாலில் சென்று சேரவேண்டும். இந்த 2p ஆர்பிட்டாலானது சல்பர் மற்றும் குளோரினின் 3p ஆர்பிட்டாலுடன் ஒப்பிடும் போது நெருக்கமான அமைப்பினைப் பெற்றுள்ளது. எனவே, ஆக்சிஜன் மற்றும் புளூரினானது முறையே அவைகள் இடம்பெற்றுள்ள தொகுதியில் அடுத்து உள்ள தனிமங்களான சல்பர் மற்றும் குளோரினைக் காட்டிலும் குறைவான எலக்ட்ரான் நாட்ட மதிப்புகளைப் பெற்றுள்ளன.

**படம் 3.5 17வது தொகுதியில் ஏற்படும் எலக்ட்ரான் நாட்டத்தின் மாறுபாடு**




**தன்மதிப்பீடு**

7. குளோரினின் எலக்ட்ரான் ஏற்கும் என்தால்பி மதிப்பு 348 $kJ\ mol^{-1}$ வாயுநிலையில் உள்ள 17.5g குளோரின் அணுக்கள் முழுவதும் $Cl^-$ அயனியாக மாற்றப்படும் போது வெளியிடப்படும் ஆற்றலின் மதிப்பினை kJ ல் கணக்கிடுக.

### 3.5.5 எலக்ட்ரான் கவர்தன்மை

சகப்பிணைப்பால் பிணைக்கப்பட்டுள்ள மூலக்கூறில் உள்ள ஒரு அணுவானது, சகப்பிணைப்பில் பங்கிடப்பட்டுள்ள எலக்ட்ரான் இணையினைத் தன்னை நோக்கி ஒப்பீட்டு அளவில் கவரும் பண்பு எலக்ட்ரான் கவர்தன்மை எனப்படும்.

எலக்ட்ரான் கவர்தன்மை ஒரு அளவிடத்தக்க பண்பு அல்ல எனினும் இம்மதிப்பினைக் கணக்கிட பல்வேறு அளவீட்டு முறைகள் உள்ளன. அதில் ஒரு முறை ஃபாலிங் என்பவரால் உருவாக்கப்பட்டது. அவர் ஹைட்ரஜன் மற்றும் புளூரினுக்கு முறையே 2.1 மற்றும் 4.0 என்ற மதிப்புகளை அவைகளினுடைய எலக்ட்ரான் கவர்திறன் மதிப்புகள் என எடுத்துக்கொண்டார். இதனடிப்படையில் பிற தனிமங்களுக்கு பின்வரும் வாய்ப்பாட்டினைப் பயன்படுத்தி எலக்ட்ரான் கவர்திறன் மதிப்புகளை கண்டறியலாம்.



Unit 3 - Sridhar.indd 96 07-01-2021 13:44:13

$$(\chi_A - \chi_B) = 0.182\sqrt{E_{AB} - (E_{AA} \times E_{BB})^{1/2}}$$


இங்கு, $E_{AB}$, $E_{AA}$ மற்றும் $E_{BB}$ ஆகியன முறையே AB, $A_2$ (A–A) மற்றும் $B_2$ (B–B) ஆகிய மூலக்கூறுகளின் பிணைப்பு பிளவு ஆற்றல்கள் (K cal)ஆகும்.

கொடுக்கப்பட்ட எந்த ஒரு தனிமத்தின் எலக்ட்ரான் கவர்திறன் மதிப்பும் மாறிலியல்ல. இதன் மதிப்பு அத்தனிமம் எத்தனிமத்துடன் சகப்பிணைப்பால் பிணைக்கப்பட்டுள்ளது என்பதனைப் பொறுத்து அமையும். பிணைப்பின் தன்மையினைத் தீர்மானிப்பதில் எலக்ட்ரான் கவர் தன்மை மதிப்புகள் முக்கிய பங்காற்றுகின்றன.

### ஒரு வரிசையில் எலக்ட்ரான் கவர்தன்மையில் ஏற்படும் மாறுபாடு

இடமிருந்து வலமாகச் செல்லும் போது பொதுவாக எலக்ட்ரான் கவர் தன்மை மதிப்பு அதிகரிக்கின்றது. முன்னரே விவரித்துள்ளவாறு, ஒரு வரிசையில், அணுக்கருவிற்கும், இணைதிற எலக்ட்ரான்களுக்கும் இடையேயான கவர்ச்சி விசை அதிகரிப்பதால் அணு ஆரம் குறைகிறது. எனவே, பங்கிடப்பட்டுள்ள எலக்ட்ரான்களை கவரும் தன்மை அதிகரிக்கிறது. இதன் காரணமாக ஒரு வரிசையில் எலக்ட்ரான் கவர்தன்மை அதிகரிக்கின்றது.

**படம் 3.6 இரண்டாம் வரிசையில் எலக்ட்ரான் கவர்தன்மையில் ஏற்படும் மாறுபாடுகள்.**




**அட்டவணை– 3.15 : பாலிங் அளவீட்டு முறையில் தனிமங்களின் எலக்ட்ரான் கவர்தன்மை மதிப்புகள்.**

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| H 2.1 | | | | | | | | | | | | | | | | |
| Li 1.0 | Be 1.6 | | | | | | | | | | | B 2.0 | C 2.5 | N 3.0 | O 3.5 | F 4.0 |
| Na 0.9 | Mg 1.2 | | | | | | | | | | | Al 1.5 | Si 1.8 | P 2.1 | S 2.5 | Cl 3.0 |
| K 0.8 | Ca 1.0 | Sc 1.3 | Ti 1.5 | V 1.6 | Cr 1.6 | Mn 1.5 | Fe 1.8 | Co 1.9 | Ni 1.9 | Cu 1.9 | Zn 1.6 | Ga 1.6 | Ge 1.8 | As 2.0 | Se 2.4 | Br 2.8 |
| Rb 0.8 | Sr 1.0 | Y 1.2 | Zr 1.4 | Nb 1.6 | Mo 1.8 | Tc 1.9 | Ru 2.2 | Rh 2.2 | Pd 2.2 | Ag 1.9 | Cd 1.7 | In 1.7 | Sn 1.8 | Sb 1.9 | Te 2.1 | I 2.5 |
| Cs 0.7 | Ba 0.9 | La 1.0 | Hf 1.3 | Ta 1.5 | W 1.7 | Re 1.9 | Os 2.2 | Ir 2.2 | Pt 2.2 | Au 2.4 | Hg 1.9 | Tl 1.8 | Pb 1.9 | Bi 1.9 | Po 2.0 | At 2.1 |

குறைவு நடுத்தரம் அதிகம்




Unit 3 - Sridhar.indd 97 07-01-2021 13:44:13

### ஒரு தொகுதியில் எலக்ட்ரான் கவர்தன்மையில் ஏற்படும் மாறுபாடுகள்

ஒரு தொகுதியில் மேலிருந்து கீழாக வரும் போது எலக்ட்ரான் கவர்தன்மை மதிப்பு பொதுவாகக் குறைகிறது. தொகுதியில் மேலிருந்து கீழே வரும்போது அணு ஆரம் அதிகரிக்கிறது. இணைதிற எலக்ட்ரான்கள் மீது அணுக்கரு செலுத்தும் கவர்ச்சி விசை குறைகிறது. எனவே, எலக்ட்ரான் கவர்தன்மையும் குறைகிறது.

மந்த வாயுக்களின் எலக்ட்ரான் கவர்தன்மை மதிப்பு பூஜ்யம் என எடுத்துக் கொள்ளப்படுகிறது. s–தொகுதி தனிமங்களின் எலக்ட்ரான்கவர் தன்மை மதிப்பு எதிர்பார்க்கப்படுவது போல தொகுதியில் குறைகிறது. 13 மற்றும் 14 ஆம் தொகுதி தனிமங்களைத் தவிர்த்து பிற p –தொகுதித் தனிமங்கள் எதிர்பார்க்கப்படுவது போன்று தொகுதியில், எலக்ட்ரான் கவர் தன்மை குறையும் போக்கினைக் கொண்டுள்ளன. (படம் 3.15 ஐப் பார்க்கவும்)

**படம் 3.7 முதல் தொகுதி தனிமங்களின் எலக்ட்ரான் கவர்தன்மையில் ஏற்படும் மாறுபாடுகள்.**




## 3.6 வேதிப்பண்புகளின் ஆவர்த்தனத் தொடர்பு (Periodic trends in chemical properties)

அணு ஆரம், அயனியாக்கும் ஆற்றல், எலக்ட்ரான் நாட்டம் மற்றும் எலக்ட்ரான் கவர் தன்மை போன்ற இயற்பண்புகளின் ஆவர்த்தனத் தன்மையினை இதுவரை நாம் கற்றறிந்தோம். இத்துடன் வேதிப்பண்புகளான, வினைத்திறன், இணைதிறன் மற்றும் ஆக்சிஜனேற்ற நிலை முதலியனவும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு ஆவர்த்தனத் தொடர்பினைக் கொண்டுள்ளன.

இப்பாடப்பகுதியில், நாம் இணைதிறனில் (ஆக்சிஜனேற்ற நிலை) காணப்படும் ஆவர்த்தனத் தொடர்பினையும், இரண்டாம் வரிசை தனிமங்களின் முரண்பட்ட பண்புகளையும் (மூலைவிட்டத் தொடர்பு) சுருக்கமாக விவாதிப்போம்.

### இணைதிறன் அல்லது ஆக்சிஜனேற்ற நிலை

ஒரு அணுவின் இணைதிறன் என்பது ஹைட்ரஜனுடன் ஒப்பிடும் போது அவ்வணுவின் இணையக்கூடிய திறன் எனப்படும். பொதுவாக இது இணைதிற கூட்டில் உள்ள எலக்ட்ரான்களின் எண்ணிக்கை அல்லது எட்டிலிருந்து அந்த எலட்ரான்களின் எண்ணிக்கையினைக் கழித்து விட்டு வரும் எண்ணிக்கையாகும். இணைதிறனுக்கு பதிலாக ஆக்சிஜனேற்ற நிலையினைக் குறிப்பிடுவது எளிமையானதாக இருக்கும்.

### இணைதிறன் அல்லது ஆக்சிஜனேற்ற நிலையில் காணப்படும் ஆவர்த்தனத் தன்மை

ஒரு அணுவின் இணைதிறன் என்பது அதன் இணைதிற கூட்டில் காணப்படும் எலக்ட்ரான்களின் எண்ணிக்கையினைப் பொருத்து அமைகிறது. ஒரு தொகுதியில் உள்ள தனிமங்களில் இணைதிற எலக்ட்ரான்களின் எண்ணிக்கை சமம் என்பதால், அதிகபட்சமான இணைதிறன் என்பது மாறாமல் அதே மதிப்பினைப் பெற்றிருக்கும். எனினும் ஒருவரிசையில், இணைதிற எலக்ட்ரான்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால், இணைதிறனும் அதிகரிக்கின்றது.



Unit 3 - Sridhar.indd 98 07-01-2021 13:44:13

### அட்டவணை 3.16 தொகுதியில் இணைதிறனில் ஏற்படும் மாறுபாடு

| கார உலோகங்கள் (தொகுதி 1) | | | தொகுதி 15 | | |
|---|---|---|---|---|---|
| தனிமம் | இணைதிற கூட்டிலுள்ள எலக்ட்ரான்களின் எண்ணிக்கை | இணைதிறன் | தனிமம் | இணைதிற கூட்டிலுள்ள எலக்ட்ரான்களின் எண்ணிக்கை | இணைதிறன் |
| Li | 1 | 1 | N | 5 | 3, 5 |
| Na | 1 | 1 | P | 5 | 3, 5 |
| K | 1 | 1 | As | 5 | 3, 5 |
| Rb | 1 | 1 | Sb | 5 | 3, 5 |
| Cs | 1 | 1 | Bi | 5 | 3, 5 |
| Fr | 1 | 1 | | | |

### அட்டவணை 3.17 வரிசையில் இணைதிறனில் ஏற்படும் மாறுபாடு (முதல் வரிசை)

| தனிமம் | Li | Be | B | C | N | O | F | Ne |
|---|---|---|---|---|---|---|---|---|
| இணைதிற கூட்டிலுள்ள எலக்ட்ரான்களின் எண்ணக்கை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| இணைதிறன் (இணையக்கூடிய திறன்) | 1 | 2 | 3 | 4 | 5, 3 | 6, 2 | 7, 1 | 8, 0 |

மேலும் சில தனிமங்கள் மாறுபடும் ஆக்சிஜனேற்ற நிலைகளைக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, தொகுதி 15ல் உள்ள தனிமங்கள் 5 இணைதிற எலக்ட்ரான்களை பெற்றிருந்தாலும், அவற்றில் பெரும்பாலான தனிமங்கள் 3 மற்றும் 5 ஆகிய இரு இணைதிறன்களைப் பெற்றுள்ளன. இதைப்போலவே, இடைநிலை தனிமங்களும், உள் இடைநிலைத் தனிமங்களும் மாறுபடும் ஆக்சிஜனேற்ற நிலைகளைப் பெற்றிருக்கின்றன.

### 3.6.1 இரண்டாம் வரிசை தனிமங்களின் முரண்பட்ட பண்புகள்

ஒரே தொகுதியில் உள்ள தனிமங்கள், ஒரே மாதிரியான இயற் மற்றும் வேதிப் பண்புகளைப் பெற்றுள்ளன. எனினும் ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள முதல் தனிமமானது அத்தனிமம் இடம்பெற்றுள்ள தொகுதியில் உள்ள பிற தனிமங்களின் பண்புகளிலிருந்து சில முரண்பட்ட பண்புகளைப் பெற்றிருக்கின்றன. உதாரணமாக, கார மற்றும் காரமண் உலோகங்கள் பொதுவாக அயனிச் சேர்மங்களை உருவாக்கும் தன்மையினைப் பெற்றுள்ளன. மாறாக, லித்தியம் மற்றும் பெரிலியம் ஆகியன அதிகஅளவில் சகப்பிணைப்புச் சேர்மங்களை உருவாக்குகின்றன. இரண்டாம் வரிசையில் உள்ள தனிமங்கள் அவற்றின் இணைதிற கூட்டில் மொத்தம் நான்கு ஆர்பிட்டால்களை (2s மற்றும் 2p) மட்டும் பெற்றிருக்கின்றன. எனவே அவற்றின் அதிகபட்ச சகப்பிணைப்பு இணைதிறன் 4. ஆனால் அடுத்தடுத்த வரிசைகளில் உள்ள தனிமங்கள் தங்களது இணைதிற கூட்டில் அதிக ஆர்பிட்டால்களைப் பெற்றுள்ளன. எனவே உயர் இணைதிறன் மதிப்புகளைப் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக, போரான் $BF_4^-$ ஐயும் மற்றும் அலுமினியம் $AlF_6^{3-}$ஐயும் உருவாக்குகின்றன.


### மூலைவிட்டத் தொடர்பு

தனிம வரிசை அட்டவணையில் மூலைவிட்டமாகச் செல்லும் போது, இரண்டாம் மற்றும் மூன்றாம் வரிசையில் உள்ள தனிமங்கள் சில பண்புகளில் ஒத்துக் காணப்படுகின்றன. ஒரு தொகுதியில்



Unit 3 - Sridhar.indd 99 07-01-2021 13:44:13

காணப்படும் தனிமங்களுக்கிடையே நாம் காணும் பண்புகளைப் போன்று அதிக அளவில் ஒற்றுமைத் தன்மை காணப்படாவிட்டாலும் கூட, பின்வரும் தனிம இணைகளில் இப்பண்பு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது.




மூலைவிட்டத்தில் அமைந்துள்ள தனிமங்களின் பண்புகளுக்கிடையே காணப்படும் ஒற்றுமைத் தன்மை மூலை விட்டத் தொடர்பு என்றழைக்கப்படுகிறது.

### 3.6.2 ஆவர்த்தன தொடர்பும், வேதிவினைத் திறனும்

முன்னரே கற்றறிந்தவாறு, தனிமங்களின் இயற் மற்றும் வேதிப்பண்புகள் அவைகளின் இணைதிற கூடு எலக்ட்ரான் அமைப்பினைப் பொருத்து அமைகிறது. தனிம வரிசை அட்டவணையில் இடதுபுறம் உள்ள தனிமங்கள் குறைவான அயனியாக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றன. மேலும் எளிதில் இணைதிற எலக்ட்ரான்களை இழக்கும் தன்மையினையும் பெற்றுள்ளன. தனிம வரிசை அட்டவணையின், வலது புறத்தில் காணப்படும் தனிமங்கள் அதிக எலக்ட்ரான் கவர் தன்மையினைப் பெற்றிருப்பதால் அவைகள் எளிதில் எலக்ட்ரான்களை ஏற்கும் இயல்பினைப் பெற்றுள்ளன. இதன் விளைவாக, தனிம வரிசை அட்டவணையில் இரு பக்கங்களிலும் அமைந்துள்ள தனிமங்கள், நடுவில் உள்ள தனிமங்களோடு ஒப்பிடும் போது அதிக வினைத்திறனைப் பெற்றுள்ளன. மாறாக, மந்த வாயுக்கள் முழுவதும் நிரப்பப்பட்ட எலக்ட்ரான் அமைப்பினைப் பெற்றிருப்பதால் அவைகள் எலக்ட்ரான்களை ஏற்பதோ, இழப்பதோ இல்லை. எனவே அவைகள் எத்தகைய வேதிவினைகளிலும் இயல்பாக ஈடுபடுவதில்லை.

அயனியாக்கும் ஆற்றலானது, உலோகத் தன்மையுடன் நேரடியாக தொடர்புபடுத்தக் கூடியதாகும். மேலும் தனிம வரிசை அட்டவணையின் இடதுபுறத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள தனிமங்கள் குறைவான அயனியாக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளதால் அவைகள் உலோகத் தன்மையினைப் பெற்றுள்ளன. மாறாக, வலது புறத்தின் மேற்பகுதியில் உள்ள தனிமங்கள் அதிக அயனியாக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளதால், அவைகள் அலோகத் தன்மையினைப் பெற்றுள்ளன.

தனிம வரிசை அட்டவணையின் இரு புறங்களிலும் உள்ள தனிமங்களால் உருவாக்கப்படும் சேர்மங்களின் இயல்பினை நாம் ஆய்ந்து அறிவோம். கார உலோகங்கள் மற்றும் ஹாலஜன்கள் ஆக்சிஜனுடன் வினைபுரிந்து அவைகளின் ஆக்சைடுகளைத் தருகின்றன.

$$4\,Na + O_2 \rightarrow 2\,Na_2O$$

$$2\,Cl_2 + 7\,O_2 \rightarrow 2\,Cl_2O_7$$

சோடியம் ஆக்சைடு நீருடன் வினைபட்டு, வலிமைமிக்க காரமான சோடியம் ஹைட்ராக்ஸைடைத் தருகிறது. இது ஒரு காரஆக்ஸைடு ஆகும். மாறாக $Cl_2O_7$ நீருடன் வினைபட்டு வலிமைமிக்க அமிலமான பெர்குளோரிக் அமிலத்தினை தருகிறது. எனவே, இது ஒரு அமில ஆக்ஸைடாகும்.

$$Na_2O + H_2O \rightarrow 2NaOH \text{ (காரம்)}$$

$$Cl_2O_7 + H_2O \rightarrow 2\,HClO_4 \text{ (அமிலம்)}$$

எனவே, தனிம வரிசை அட்டவணையின் இரு புறங்களிலும் உள்ள தனிமங்கள் எதிர்பார்த்தபடியே வெவ்வேறு பண்புகளைப் பெற்றுள்ளன.

ஒரு தொகுதியில் மேலிருந்து கீழாகச் செல்லும் போது, அயனியாக்கும் ஆற்றல் குறைந்து கொண்டே வருகிறது. மேலும் தனிமங்களின் நேர்மின் தன்மையானது அதிகரிக்கின்றது. எனவே இத்தனிமங்களின்



Unit 3 - Sridhar.indd 100 07-01-2021 13:44:13

ஹைட்ராக்ஸைடுகள் அதிக காரத் தன்மையினைக் கொண்டிருக்கின்றன. இரண்டாம் தொகுதி ஹைட்ராக்சைடுகளின் இயல்பினை நாம் கருதுவோம்.

$Be(OH)_2$ ஈரியல்புத்தன்மை உடையது, $Mg(OH)_2$ வலிமை குறைந்த காரம், $Ba(OH)_2$ வலிமை மிக்க காரம்.

பெரிலியம் ஹைட்ராக்ஸைடு அமிலம் மற்றும் காரம் ஆகிய இரண்டுடனும் வினைபுரிகின்றது எனவே இது ஈரியல்புத் தன்மை உடையது.

$$Be(OH)_2 + 2HCl \rightarrow BeCl_2 + 2H_2O$$
$$Be(OH)_2 + 2\ NaOH \rightarrow Na_2BeO_2 + 2H_2O$$

### செயல்பாடு 3.2

வெவ்வேறு தொகுதிகள் மற்றும் வரிசைகளில் அமைந்துள்ள தனிமங்களின் எலக்ட்ரான் கவர் தன்மை மதிப்பானது பாலிங் அளவீட்டில் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது. அணு எண்ணிற்கு எதிராக இம்மதிப்புகளை வரைபடத்தில் குறிக்க. இவ்வரைபடத்திலிருந்து, தொகுதி மற்றும் தொடரில் இம்மதிப்பு எவ்வாறு வேறுபடுகிறது என விளக்குக.

2 –ம் தொகுதித் தனிமங்கள், : Be (1.6), Mg (1.2), Ca (1.0), Sr (1.0) Ba(0.9)

17 –ம் தொகுதித்தனிமங்கள், : F (4.0), Cl (3.0), Br (2.8), I (2.5)

3 –ம் வரிசைத் தனிமங்கள் : Na(0.9), Mg(1.2), Al (1.5), Si(1.8), P(2.1), S(2.5), Cl(3.0)

4 –ம் வரிசைத் தனிமங்கள் : K(0.8), Ca(1.0), Sc(1.3), Ti(1.5), V(1.6), Cr(1.6), Mn(1.5), Fe(1.8), Co(1.9), Ni(1.9), Cu(1.9), Zn(1.6), Ga(1.6), Ge(1.8), As(2.0), Se(2.4), Br(2.8)

## பாடச்சுருக்கம்

பல்வேறுபட்ட தனிமங்களை முறையாக வகைப்படுத்தவதற்கு தனிமவரிசை அட்டவணை தோற்றுவிக்கப்பட்டது. தனிமங்களின் பண்புகளை அடிப்படையாகக்கொண்டு அவைகளை வகைப்படுத்தும் முதல் முயற்சியினை லவாய்சியர் மேற்கொண்டார். இவரின் முயற்சியினை ஜோகன் டாபரீனியர், A E B சான்கோர்ட்டியஸ் மற்றும் நியூலாண்ட்ஸ் ஆகியோர் பின்பற்றி ஆராய்ச்சிகளை தொடர்ந்தனர். அர்த்தமுள்ள விளக்கங்களைக் கொண்ட முதல் தனிம வரிசை அட்டவணை, அணுநிறையை அடிப்படையாகக் கொண்டு மெண்டலீஃப் என்பவரால் கட்டமைக்கப்பட்டது. இக்கட்டமைப்பானது, தனிமங்களின் பண்புகள் அனைத்தும் அவைகளின் அணு எண்களின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன, என்கிற நவீன ஆவர்த்தன விதியால் மாற்றியமைக்கப்பட்டது. நவீன தனிமவரிசை அட்டவணையானது, 18 தொகுதிகளையும் 7 வரிசைகளையும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

ஒரே தொகுதியில் உள்ள தனிமங்கள் அனைத்தும் ஒத்த பண்புகளைப் பெற்றுள்ளன. ஏனெனில் அவைகளின் இணைதிற கூட்டில் ஒத்த எலக்ட்ரான் ஒழுங்கமைப்பினை பெற்றுள்ளன. ஒரே வரிசையில் உள்ள தனிமங்கள் அனைத்தும் பண்புகளில் வேறுபடுகின்றன. ஏனெனில் அவைகளின் இணைதிற கூட்டின் எலக்ட்ரான் ஒழுங்கமைப்பில் வேறுபடுகின்றன. தனிமங்களின் எலக்ட்ரான் ஒழுங்கமைப்பினை அடிப்படையாக்கொண்டு s–தொகுதி, p–தொகுதி, d–தொகுதி மற்றும் f–தொகுதி தனிமங்கள் என்றும் வகைப் படுத்தப்படுகின்றன. s, p, d மற்றும் f தொகுதிகளில் இடம்பெற்றுள்ள தனிமங்கள் தனித்துவமான பண்புகளைப் பெற்றுள்ளன. இந்த அட்டவணையில் இடம்பெற்றுள்ள




Unit 3 - Sridhar.indd 101 07-01-2021 13:44:13

தனிமங்களுள் 78%க்கும் அதிகமான தனிமங்கள் உலோகங்களாகும். இத்தனிமங்கள் தனிமவரிசை அட்டவணையின் இடப்புறத்தில் இடமளிக்கப்பட்டுள்ளன. அலோகங்கள் அனைத்தும் தனிமவரிசை அட்டவணையில் வலது மேற்புறத்தில் வைக்கப்பட்டுள்ளன. உலோகங்கள் மற்றும் அலோகங்களின் தனித்துவமான பண்புகளுள் சிலவற்றை ஒருங்கே கொண்டுள்ள தனிமங்கள் உலோகப்போலிகள் என்று அழைக்கப்படுகின்றன.

அணு ஆரம், அயனி ஆரம், அயனியாக்கும் ஆற்றல் எலக்ட்ரான் நாட்டம் மற்றும் எலக்ட்ரான் கவர்தன்மை போன்ற ஆவர்த்தன பண்புகள் ஆவர்த்தன தொடர்பினை பெற்றுள்ளன. ஆவர்த்தன பண்புகளின் போக்கில் ஏற்படும் மாற்றங்கள் பின்வரும் வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

தனிமவரிசை அட்டவணையின் இடப்புறத்தில் இடம் பெற்றுள்ள தனிமங்கள் உச்சபட்ச ஒடுக்கும் தன்மையினையும், வலப்புறத்தில் இடம் பெற்றுள்ள தனிமங்கள் உச்சபட்ச ஆக்ஸிஜனேற்றும் தன்மையினையும் காட்டுகின்றன. தனிமவரிசை அட்டவணையின் மையத்தில் இடம்பெற்றுள்ள தனிமங்களின் வினைத்திறனானது, வலப்புறம் மற்றும் இடப்புறத்தில் இடம்பெற்றுள்ள தனிமங்களின் வினைத்திறனை விட குறைவாக இருக்கும். இரண்டாம் மற்றும் மூன்றாம் வரிசைகளுக்கிடையே மூலைவிட்ட தொடர்பினை பெற்றுள்ள தனிமங்கள் வேதியியல் பண்புகளில் ஒத்துள்ளன.




**வரைபடம் – 3.8: ஆவர்த்தன தொடர்பு**

## மதிப்பீடு

### I சரியான விடையினை தெரிவுசெய்க

1. அணு எண் 222ஐ கொண்ட தனிமத்தின் IUPAC பெயர் என்னவாக இருக்கும்?

   அ) bibibiium   ஆ) bididium   இ) didibium   ஈ)bibibium

2. A மற்றும் B ஆகிய தனிமங்களின் எலக்ட்ரான் அமைப்பு முறையே $1s^2, 2s^2, 2p^6, 3s^2$ மற்றும் $1s^2, 2s^2, 2p^6, 3s^2, 3p^5$ ஆகும். இவ்விரு தனிமங்களுக்கிடையே தோன்றும் அயனி சேர்மத்தின் மூலக்கூறு வாய்பாடு.

   அ) AB   ஆ) $AB_2$   இ) $A_2B$   ஈ) எதுவும் இல்லை

3. வேறுபடுத்திக் காட்டும் எலக்ட்ரான், (differentiating electron) தனிமத்தின் வெளிக்கூட்டிற்கு முந்தைய ஒன்றுவிட்ட உள்கூட்டில் (anti penultimate shell) சென்று சேரும் தனிமங்களைக் கொண்டுள்ள தொகுதி.

   அ) p-தொகுதி தனிமங்கள்   ஆ) d-தொகுதி தனிமங்கள்

   இ) s-தொகுதி தனிமங்கள்   ஈ) f-தொகுதி தனிமங்கள்

4) பின்வரும் வாய்ப்புகளில், கொடுக்கப்பட்ட வரிசைகளுக்கு அவற்றிற்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள பண்பினைப் பொருத்து சரியாக அமைந்திருக்காத வரிசை இடம்பெற்றுள்ள வாய்ப்பு எது? (NEET 2016 Phase I)

   அ) $I < Br < Cl < F$ (எலக்ட்ரான் நாட்டம் அதிகரிக்கும்)

   ஆ) $Li < Na < K < Rb$ (உலோக ஆரம் அதிகரிக்கும்)

   இ) $Al^{3+} < Mg^{2+} < Na^+ < F^-$ (அயனி ஆரம் அதிகரிக்கும்)

   ஈ) $B < C < O < N$ (முதல் அயனியாக்கும் ஆற்றல் அதிகரிக்கும்)

5) பின்வரும் தனிமங்களுள் அதிக எலக்ட்ரான் கவர்தன்மை கொண்ட தனிமம் எது?

   அ) குளோரின்   ஆ) நைட்ரஜன்   இ) சீசியம்   ஈ) புளூரின்

6.) ஒரு தனிமத்தினுடைய அடுத்தடுத்த அயனியாக்கும் ஆற்றல் மதிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன ($kJ\ mol^{-1}$).

| $IE_1$ | $IE_2$ | $IE_3$ | $IE_4$ | $IE_5$ |
|---|---|---|---|---|
| 577.5 | 1,810 | 2,750 | 11,580 | 14,820 |

   இத்தனிமானது

   அ) பாஸ்பரஸ்  ஆ) சோடியம்  இ) அலுமினியம்  ஈ) சிலிகான்



Unit 3 - Sridhar.indd 103    07-01-2021 13:44:14

7) மூன்றாம் வரிசையினுடைய முதல் அயனியாக்கும் ஆற்றலின் வரிசை

அ) Na > Al > Mg > Si > P ஆ) Na < Al < Mg < Si < P

இ) Mg > Na > Si > P > Al ஈ) Na < Al < Mg < P < Si

8) தவறான கூற்றை கண்டறிக

அ) ஐசோ எலக்ட்ரானிக் உறுப்புகளுள், குறைவான நேர்மின்சுமையைப் பெற்றுள்ள நேர்மின் அயனி, குறைவான அயனி ஆரத்தினை பெறும்.

ஆ) ஐசோ எலக்ட்ரானிக் உறுப்புகளுள், அதிகமான எதிர்மின்சுமையைப் பெற்றுள்ள எதிர்மின் அயனி, அதிகமான அயனி ஆரத்தினை பெறும்.

இ) தனிமவரிசை அட்டவணையில் முதல் தொகுதியில் மேலிருந்து கீழாக வரும்போது தனிமங்களின் அணு ஆரம் அதிகரிக்கின்றது.

ஈ) தனிமவரிசை அட்டவணையின் இரண்டாம் வரிசையில் இடமிருந்து வலமாக செல்லும்போது அணு ஆரம் குறைகிறது.

9) பின்வரும் வகைப்பாடுகளில் குறைவான எலக்ட்ரான் நாட்டத்திலிருந்து அதிகமான எலக்ட்ரான் நாட்டத்தினை குறிப்பிடும் வரிசை எது?

அ) Al < O < C < Ca < F ஆ) Al < Ca < O < C < F

இ) C < F < O < Al < Ca ஈ) Ca < Al < C < O < F

10) 9, 17, 35 மற்றும் 53 ஆகியவற்றை முறையே அணு எண்களாக பெற்றுள்ள தனிமங்களான F, Cl, Br மற்றும் I ஆகியவற்றின் எதிர் குறியுடன் கூடிய எலக்ட்ரான் நாட்ட மதிப்புகளின் வரிசை

அ) I > Br > Cl > F ஆ) F > Cl > Br > I

இ) Cl > F > Br > I ஈ) Br > I > Cl > F

11) பின்வரும் தனிமங்களுள் குறைவான எலக்ரான் கவர்தன்மை கொண்ட தனிமம் எது?

அ) புரோமின் ஆ) குளோரின் இ) அயோடின் ஈ) ஹைட்ரஜன்

12) நேர் குறி எலக்ட்ரான் நாட்ட மதிப்பினை பெற்றுள்ளத் தனிமம்.

அ) ஹைட்ரஜன் ஆ) சோடியம் இ) ஆர்கான் ஈ) புளூரின்

13) 4,8,7 மற்றும் 12 ஐ முறையே அணு எண்ணாக பெற்ற தனிமங்கள் X.Y,Z மற்றும் Z ஆகியவைகளின் எலக்ட்ரான்கவர் தன்மை மதிப்புகள் குறையும் சரியான வரிசை

அ) Y > Z > X > A ஆ) Z > A > Y > X

இ) X > Y > Z > A ஈ) X > Y > A > Z



Unit 3 - Sridhar.indd 104 07-01-2021 13:44:14

14) கூற்று: கண்டுபிடிக்கப்பட்டுள்ள அனைத்து தனிமங்களுள் ஹீலியம் அதிக அயனியாக்கும் ஆற்றல் மதிப்பினை பெற்றுள்ளது.

காரணம்: கண்டுபிடிக்கப்பட்டுள்ள அனைத்து தனிமங்களுள் ஹீலியம் அதிக எலக்ட்ரான் நாட்ட மதிப்பினை பெற்றுள்ளது.

அ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரியானது, மேலும் காரணமானது கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரியானது, ஆனால் காரணமானது கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.

இ) கூற்று சரியானது ஆனால் காரணம் தவறானது.

ஈ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் தவறானது.

15. முதல் மற்றும் இரண்டாம் அயனியாக்கும் ஆற்றல் மதிப்புகளுள் அதிக வேறுபாடு கொண்ட அணுவின் எலக்ட்ரான் அமைப்பு

அ) $1s^2, 2s^2, 2p^6, 3s^1$ ஆ) $1s^2, 2s^2, 2p^6, 3s^2$

இ) $1s_2, 2s_2, 2p^6, 3s^2, 3p^6, 4s^1$ ஈ) $1s^2, 2s^2, 2p^6, 3s^2, 3p^1$

16. பின்வரும் தனிமங்களுள் இரண்டாவதாக அதிக எலக்ட்ரான் கவர்தன்மை கொண்ட தனிமம் எது?

அ) குளோரின் ஆ) புளூரின்

இ) ஆக்ஸிஜன் ஈ) சல்பர்

17. Mg-ன் $IE_1$ மற்றும் $IE_2$ முறையே 179 மற்றும் 348 kcal $mol^{-1}$ ஆகும். $Mg \rightarrow Mg^{2+} + 2e^-$ என்ற வினைக்கு தேவைப்படும் ஆற்றல்

அ) +169 kcal $mol^{-1}$ ஆ) - 169 kcal $mol^{-1}$

இ) + 527 kcal $mol^{-1}$ ஈ) - 527 kcal $mol^{-1}$

18. கூடுகளின் திரைமறைத்தல் விளைவின் சரியான வரிசை

அ) s>p>d>f ஆ) s>p>f>d இ) f>d>p>s ஈ) f>p>s>d

19. பின்வரும் வரிசைகளுள் அயனி ஆரங்களின் சரியான வரிசை எது?

அ) $H^- > H^+ > H$ ஆ) $Na^+ > F^- > O^{2-}$ இ) $F > O^{2-} > Na^+$

ஈ) இவைகள் எதுவுமில்லை

20. Na, Mg மற்றும் Si ஆகியவைகளின் முதல் அயனியாக்கும் ஆற்றல் முறையே 496, 737 மற்றும் 786 kJ $mol^{-1}$ ஆகும். Al–ன் அயனியாக்கும் ஆற்றல் பின்வரும் எந்த மதிப்பிற்கு அருகில் இருக்கும்.

அ) 760kj $mol^{-1}$ ஆ) 575kj $mol^{-1}$ இ) 801kj $mol^{-1}$ ஈ) 419kj $mol^{-1}$

21. வரிசையில் இடமிருந்து வலமாகவும், தொகுதியில் மேலிருந்து கீழாகவும் செல்லும்போது உலோகப் பண்புகளை பற்றிய கூற்றில் பின்வருவனவற்றுள் எது சரியானது?

அ) வரிசையில் குறைகிறது, தொகுதியில் அதிகரிக்கிறது.

ஆ) வரிசையில் அதிகரிக்கிறது, தொகுதியில் குறைகிறது.

இ) வரிசை மற்றும் தொகுதி ஆகிய இரண்டிலும் அதிகரிக்கிறது.

ஈ) வரிசை மற்றும் தொகுதி ஆகிய இரண்டிலும் குறைகிறது.

22. தனிம வரிசை அட்டவணையில் இடமிருந்து வலமாக செல்லும்போது எலக்ட்ரான் நாட்ட மதிப்பு எவ்வாறு மாறுபடுகிறது?

அ) பொதுவாக அதிகரிக்கின்றது ஆ) பொதுவாக குறைகின்றது

இ) எவ்வித மாற்றமுமில்லை ஈ) முதலில் அதிகரிக்கிறது பின்பு குறைகிறது

23. பின்வரும் தனிம ஜோடிகளுள் மூலைவிட்ட தொடர்பினை காட்டுவது எது?

அ) Be மற்றும் Mg ஆ) Li மற்றும் Be

இ) Be மற்றும் B ஈ) Be மற்றும் Al

## II) பின்வரும் கேள்விகளுக்கு சுருக்கமாக விடையளி

24. நவீன ஆவர்த்தன விதியை வரையறு.

25. ஐசோ எலக்ட்ரானிக் அயனிகள் என்றால் என்ன? உதாரணங்கள் கொடு.

26. செயலுறு அணுக்கரு மின்சுமை என்றால் என்ன?

27. அயனியாக்கும் ஆற்றலுக்கு கொடுக்கப்பட்டுள்ள பின்வரும் வரையறை சரியானதா? "ஒரு அணுவின் இணைதிற கூட்டில் இலகுவாக பிணைக்கப்பட்டுள்ள எலக்ட்ரானை நீக்க தேவைப்படும் ஆற்றல் அயனியாக்கும் ஆற்றல்."

28. மெக்னீசியம் அடுத்தடுத்து எலக்ட்ரான்களை இழந்து $Mg^{+}$, $Mg^{2+}$ மற்றும் $Mg^{3+}$ அயனிகளை தருகிறது. இதில் அதிக அயனியாக்கும் ஆற்றல் தேவைப்படும் படி எது? ஏன்?

29. எலக்ட்ரான் கவர்தன்மையை வரையறு.

30. முதல் அயனியாக்கும் ஆற்றலை விட இரண்டாம் அயனியாக்கும் ஆற்றல் எப்பொழுதும் அதிகம் எனும் கூற்றிலுள்ள உண்மையை எவ்வாறு விளக்குவாய்?

31. இயல்பு நிலையிலுள்ள ஹைட்ரஜன் அணுவில் உள்ள எலக்ட்ரானின் ஆற்றலானது $-2.18 \times 10^{-18}$J ஆகும். அந்த ஹைட்ரஜன் அணுவின் அயனியாக்கும் ஆற்றலை kJ $mol^{-1}$ அலகில் கணக்கிடுக.

32. அயனியாக்கும் ஆற்றல் மற்றும் எலக்ட்ரான் நாட்டத்தினை பாதிக்கும் காரணிகளுள் முக்கியமான ஒரு காரணி அணுவின் எலக்ட்ரான் அமைப்பு – விளக்குக.

33. Z = 118ஐக் கொண்ட தனிமம், எந்த வரிசை மற்றும் தொகுதியில் இடம் பெற்றுள்ளது?



Unit 3 - Sridhar.indd 106 07-01-2021 13:44:14

34. குவாண்டம் எண்களை அடிப்படையாகக் கொண்டு தனிம வரிசை அட்டவணையின் 5வது வரிசையில் 18 தனிமங்கள் இடம் பெற்றிருக்க வேண்டும் என்பதை நிறுவுக.

35. அ, ஆ, இ மற்றும் ஈ ஆகிய தனிமங்கள் பின்வரும் எலக்ட்ரான் அமைப்பை பெற்றுள்ளன.

அ) $1s^2, 2s^2, 2p^6$ ஆ) $1s^2, 2s^2, 2p^6, 3s^2, 3p^1$

இ) $1s^2, 2s^2, 2p^6, 3s^2, 3p^6$ ஈ) $1s^2, 2s^2, 2p^1$

இவைகளுள் எந்த தனிமங்கள் தனிமவரிசை அட்டவணையில் ஒரே தொகுதியில் இடம் பெற்றுள்ளன.

36. லாந்தனைடுகள் மற்றும் ஆக்டினைடுகளின் பொதுவான எலக்ட்ரான் அமைப்பினை தருக.

37. ஹேலஜன்கள் ஆக்ஸிஜனேற்றியாக செயல்படுவது ஏன்?

38. இரண்டாம் வரிசை தனிமங்களின் முரண்பட்ட பண்புகளில் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

39. அயனி ஆரத்தினை கண்டறியும் பாலிங் முறையினை விவரி.

40. அயனியாக்கும் ஆற்றலின் ஆவர்த்தன தொடர்பினை விவரி.

41. மூலைவிட்ட தொடர்பினை விவரி.

42. சோடியத்தின் முதல் அயனியாக்கும் ஆற்றலானது மெக்னீசியத்தை விட குறைவு; ஆனால் அதன் இரண்டாம் அயனியாக்கும் ஆற்றல் மெக்னீசியத்தை விட அதிகம், ஏன்?

43. பாலிங் முறையினை பயன்படுத்தி பொட்டாசியம் குளோரைடு படிகத்தில் உள்ள $K^+$ மற்றும் $Cl^-$ அயனிகளின் அயனி ஆரங்களை கணக்கிடுக. கொடுக்கப்பட்டுள்ள தரவு $d_{K^+ - Cl^-} = 3.14 \text{Å}$

44. பின்வருவனவற்றை விவரி. மேலும் தக்க காரணம் தருக.

(i) N–ன் அயனியாக்கும் ஆற்றல் O–ஐ விட அதிகம்

(ii) C–அணுவின் முதல் அயனியாக்கும் ஆற்றலின் மதிப்பு B–அணுவை விட அதிகம்; அதே வேளையில் இதன் மறுதலைக் கூற்று இரண்டாம் அயனியாக்கும் ஆற்றலுக்கு உண்மையாகிறது.

(iii) Be, Mg ஆகியவற்றின் எலக்ட்ரான் நாட்ட மதிப்புகள் ஏறத்தாழ பூஜ்ஜியமாகும். மேலும் N (0.02eV) மற்றும் P (0.80eV) ஆகியவைகளுக்கும் இதன் மதிப்பு குறைவு

(iv) F(g) லிருந்து $F^-$(g) உருவாவது வெப்ப உமிழ்வினையாகும். ஆனால் O(g)லிருந்து $O^{2-}$(g) உருவாவது வெப்பக்கொள் வினையாகும்.

45. திரைமறைப்பு விளைவு என்றால் என்ன?

46. எலக்ட்ரான் கவர்தன்மைக்கான பாலிங் முறையின் அடிப்படையை சுருக்கமாக தரவும்.

47. தொகுதிகள் மற்றும் வரிசைகளில் எலக்ட்ரான் கவர்தன்மையில் ஏற்படும் ஆவர்த்தன மாற்றங்களை கூறுக.



Unit 3 - Sridhar.indd 107 07-01-2021 13:44:14

## கருத்து வரைபடம்

# தனிமங்களின் வகைப்பாடு

- **நவீன தனிம வரிசை அட்டவணை**
  - மோஸ்லே – (1912) தனிமங்களின் இயல்புநிலை மற்றும் வேதியியல் பண்புகள் அனைத்தும் அணுஎண்களின் ஆவர்த்தன சார்பாக அமைந்துள்ளன
  - **வரிசைகள் மற்றும் குழுக்கள்**
    - குழுக்கள்:
      செங்குத்தாக உள்ள குழுக்களில் இடம்பெற்றுள்ள தனிமங்கள் ஒத்த வெளி கூடு எலக்ட்ரான் அமைப்பை பெற்றுள்ளன.
      18 – குழுக்கள்
    - வரிசைகள்:
      கிடைமட்ட வரிசைகள். ஒரு வரிசையினுடைய எண் அவ்வரிசையில் உள்ள தனிமங்களின் முதன்மை குவாண்டம் எண்ணுடன் (n) தொடர்புடையது.
      1 முதல் 6 வரிசைகளில் முறையே 2,8,8,18,18,32 எண்ணிக்கையிலான தனிமங்கள் உள்ளன. 6வது வரிசை 14 தனிமங்களை தனியாக பெற்றுள்ளது (லாந்தனைடுகள்). 7வது வரிசையும் 14 தனிமங்களை தனியாக பெற்றுள்ளது. (ஆக்டினைடுகள்)
  - **தொகுதிகள்**
    - s – தொகுதி
      குழு 1: ஹைட்ரஜன் மற்றும் கார உலோகங்கள்
      குழு 2: காரமண் உலோகங்கள்
    - p – தொகுதி
      குழு 13
      குழு 14
      குழு 15: நிக்டோஜென்கள்
      குழு 16: சால்கோஜென்கள்
      குழு 17: ஹேலஜன்கள்
      குழு 18: மந்த வாயுக்கள்
    - d – தொகுதி இடைநிலைத் தனிமங்கள்
      4 வரிசைகளை பெற்றுள்ளது
    - f – தொகுதி உள் இடைநிலைத் தனிமங்கள்
      2 வரிசைகளை பெற்றுள்ளது
      I வரிசை: லாந்தனைடுகள்
      II வரிசை: ஆக்டினைடுகள்
- **தனிமங்களின் பண்புகளின் ஆவர்த்தன தொடர்பு**
  - **இயற்பியல் பண்புகளின் தொடர்பு**
    - அணு ஆரங்கள் & அயனி ஆரங்கள்
      - வரிசைகளில் குறைகிறது
      - தொகுதிகளில் அதிகரிக்கிறது
    - அயனியாக்கும் ஆற்றல், எலக்ட்ரான் நாட்டம், எலக்ட்ரான் கவர்தன்மை
      - வரிசைகளில் அதிகரிக்கிறது
      - தொகுதிகளில் குறைகிறது
  - **வேதியியல் பண்புகளின் தொடர்பு**
    - இணைதிறன் அல்லது ஆக்ஸிஜனேற்ற நிலை
    - அலோகங்களின் ஆக்ஸி அமிலங்களின் திறன்
    - ஹைட்ரைடுகளின் அமிலத்தன்மை
    - ஆக்சைடுகளின் அமிலத்தன்மை
    - 2ம் வரிசை தனிமங்களின் முரண்பட்ட பண்புகள்; மூலைவிட்ட தொடர்பு: 2ம் வரிசையில் உள்ள சில தனிமங்கள் 3ம் வரிசையிலுள்ள சில தனிமங்களுடன் பண்புகளில் ஒத்து போகின்றன. எ.கா: Li & Mg, Be & Al

3E2ZZP



Unit 3 - Sridhar.indd 108 07-01-2021 13:44:14

# இணையச்செயல்பாடு

## தனிமங்களின் பண்புகள்

இந்நவீனத் தனிம அட்டவணையைப் பயன்படுத்தி, ஒரு குறிப்பிட்ட குழுமம், ஆவர்த்தனம், தொகுதி மற்றும் தனிமங்களின் பிற பண்புகளைக் காணலாம்.


http://www.rsc.org/periodic–table/ உரலிக்குச் செல்க (அல்லது) வலது பக்கமுள்ள விரைவுத் துலக்கக் குறியீட்டினை (QR Code) ஸ்கேன் செய்க.

B127_11_CHE_TM

இணையப்பக்கத்தைத் திறந்து கொடுக்கப்பட்ட உரலியைத் (URL) தட்டச்சு செய்க அல்லது விரைவுத் துலக்கக் குறியீட்டினை ஸ்கேன் செய்க. இதில் 1 முதல் 118 வரை அணு எண் கொண்ட தனிமங்களின் ஊடாட்ட வகையிலான (interactive) நவீன ஆவர்த்தன அட்டவணையைக் காணலாம்.

**தெரிவுகள்:**

1. ஆவர்த்தன அட்டவணையில் ஊர்ந்து எந்தத் தனிமத்திற்கெனினும் எலக்ட்ரான் வடிவமைப்பு, அயனியாக்க ஆற்றல், அடர்த்தி போன்ற அடிப்படைத் தகவல்களைக் காட்சிப் பலகையில் (3) பெறலாம்.
2. ஏதாவது ஒரு தனிமத்தின் மீது சொடுக்கினால் அத்தனிமத்தின் அனைத்துப் பண்புகளின் பட்டியலையும் காணலாம்.
3. ஒவ்வொரு தனிமத்தின் உருவினையும் காண Visual Elements image (1)–யைச் சொடுக்குக. எந்த ஒரு தனிமத்தின் மீது உலவினாலும் அத்தனிமத்தைப் பற்றிய கூடுதல் தகவல்கள் காட்சிப் பலகையில் (3) தோன்றும்.
4. ஆவர்த்தன அட்டவணையில் உரிய தெரிவினை (8) செய்வதன் மூலம், உலோக மற்றும் அலோகங்களைக் காணலாம்.
5. நழுவியைப் (7) பயன்படுத்தித் கொடுக்கப்பட்ட வெப்பநிலையில் தனிமங்களின் இயற் நிலைமையினைக் காணலாம்.
6. ஒரு குறிப்பிட்ட தொகுதியைத் (Blocks) (6) தேர்வுசெய்வதன் வாயிலாக s, p, d அல்லது f தொகுதித் தனிமங்களைக் காணலாம்.
7. குறிப்பிட்ட குழு (2) அல்லது வரிசையினை (5) தெரிவு செய்வதன் வாயிலாகத் தொடர்புடைய தனிமங்களைக் காணலாம்.
8. நீக்க வடிப்பான்களை (Clear Filters) (4) சொடுக்குவதன் வாயிலாக தங்களால் மேற்கொள்ளப்பட்ட தெரிவுகளை நீக்கலாம்.



அலகு 4

# ஹைட்ரஜன்

Hydrogen, third most abundant on the surface of the Universe, is being visualised as the major feature source of energy



லவாய்சியர்
(1743-1794)

ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் ஆகியவற்றை பெயரிட்டார். 1787ல் வேதிப் பெயரிடுதலுக்கான புதிய முறையை அறிமுகப்படுத்தினார்,

3EBH2C

## கற்றலின் நோக்கங்கள்

இப்பாடப் பகுதியைக் கற்றறிந்த பின்னர்

- தனிம வரிசை அட்டவணையில் ஹைட்ரஜனின் இடத்தினை நியாயப்படுத்துதல்
- ஹைட்ரஜனின் வெவ்வேறு ஐசோட்டோப்புகளை மீட்டறிதல்
- ஹைட்ரஜன் தயாரிக்கும் முறைகளை விளக்குதல்
- ஹைட்ரஜனின் பண்புகளை விளக்குதல்
- ஹைட்ரஜனின் பயன்களை உணர்ந்தறிதல்
- பல்வேறு வகை ஹைட்ரைடுகளை வேறுபடுத்தி அறிதல்
- நீரின் வடிவமைப்புப் பற்றிய அறிவின் மூலம் அதன் இயற் மற்றும் வேதிப் பண்புகளை விளக்குதல்
- கடின நீர் மற்றும் மென்நீரை வேறுபடுத்தி அறிதல் மேலும் நீரின் கடினத் தன்மையை நீக்க தகுந்த முறையினைத் தெரிவு செய்தல்.
- கன நீரை மீட்டறிதல் மற்றும் அதன் பண்புகளை விளக்குதல்
- ஹைட்ரஜன் பெராக்சைடு தயாரித்தல் மற்றும் அதன் பண்புகளை விளக்குதல்
- ஹைட்ரஜன் பெராக்சைடின் பயன்களைப் பட்டியலிடுதல்

ஆகிய திறன்களை மாணவர்கள் பெற இயலும்.



Unit 4 - Sridhar.indd 110 07-01-2021 14:44:45

## 4.1 பாட அறிமுகம்

ஹைட்ரஜன் என்பது, ஒரு எலக்ட்ரான் மற்றும் ஒரு புரோட்டானைக் கொண்டுள்ள மிக எளிமையான அணுவாகும். மேலும் மற்ற தனிமங்களைப் போலன்றி (ஹீலியம் தவிர) இதன் ஒற்றை இணைதிறன் எலக்ட்ரான், அணுக் கருவின் நேரடி விசைக்கு உட்படும் பகுதியில் அமைந்துள்ளது. நாம் அன்றாடம் பயன்படுத்தக் கூடிய நீர், கார்போஹைட்ரேட் மற்றும் புரதம் போன்ற பெரும்பாலான சேர்மங்களில் ஹைட்ரஜன் உள்ளது. ஒரு தனித்த எலக்ட்ரானைப் பெற்றிருப்பதினால், இது அதிக வினைதிறன் மிக்கதாகவும், ஈரணு மூலக்கூறாகவும் ($H_2$) காணப்படுகிறது. எனினும், வளிமண்டலத்தில் ஹைட்ரஜன் வாயு மிகக்குறைந்த அளவே உள்ளது.

### 4.1.1 தனிம வரிசை அட்டவணையில் இடம்

ஹைட்ரஜனின் எலக்ட்ரான் அமைப்பு $1s^1$ ஆகும். இது கார உலோகங்களின் பொதுவான இணைதிறன் கூட்டு எலக்ட்ரான் அமைப்பான $ns^1$ஐ ஒத்திருக்கிறது. மேலும் ஹைட்ரஜன் கீழ்க்கண்டவாறு கார உலோகங்களின் பண்புகளையும் ஒத்துள்ளது.

1) கார உலோகங்களைப் போன்றே ($Na^+$, $K^+$, $Cs^+$) ஒற்றை நேர்மின் சுமை உடைய அயனியை ($H^+$) உருவாக்குகிறது.

2) கார உலோகங்களைப் ($NaX$, $Na_2O$, $Na_2O_2$, $Na_2S$) போன்றே ஹைட்ரஜனும் ஹேலைடுகள் ($HX$), ஆக்சைடுகள் ($H_2O$), பெராக்சைடுகள் ($H_2O_2$) மற்றும் சல்ஃபைடுகளை ($H_2S$) உருவாக்குகின்றன.

3) கார உலோகங்களைப் போன்றே, ஹைட்ரஜனும் ஒடுக்கவினைபொருளாகச் செயல்படுகிறது.

காரஉலோகங்களின் அயனியாக்கும் ஆற்றலின் மதிப்பு 377 முதல் 520 $kJmol^{-1}$ வரை உள்ளது. ஆனால், ஹைட்ரஜனின் அயனியாக்கும் ஆற்றல், காரஉலோகங்கள் போலன்றி 1314 $kJ\ mol^{-1}$ என்ற அதிக மதிப்பினைக் கொண்டுள்ளது.

ஹேலஜன்கள், ஹேலைடு அயனிகளை ($X^-$) உருவாக்குவதைப்போல, ஹைட்ரஜனும் ஒரு எலக்ட்ரானை ஏற்றுக் கொண்டு ஹைட்ரைடு அயனியை ($H^-$) உருவாக்குகிறது. இந்த அயனியின் எலக்ட்ரான் அமைப்பு, மந்த வாயுவான ஹீலியத்தின் எலக்ட்ரான் அமைப்பினை ஒத்துள்ளது. இருப்பினும், ஹைட்ரஜனின் எலக்ட்ரான் நாட்ட மதிப்பானது ஹேலஜன்களைவிடக் குறைவாக உள்ளது. ஹைட்ரஜன், ஹைட்ரைடு அயனியை உருவாக்கும் இயல்பானது ஹேலஜன்கள், ஹேலைடு அயனியினை உருவாக்கும் இயல்பினைக் காட்டிலும் குறைவாகவே உள்ளது. இதனை கீழ்க்கண்டுள்ள வினைகளைச் சான்றாகக் கொண்டு அறியலாம்.

$$\tfrac{1}{2} H_2 + e^- \rightarrow H^- \qquad \Delta H = +36\ kcal\ mol^{-1}$$

$$\tfrac{1}{2} Br_2 + e^- \rightarrow Br^- \qquad \Delta H = -55\ kcal\ mol^{-1}$$

ஹைட்ரஜனானது, கார உலோகங்கள் மற்றும் ஹேலஜன்கள் ஆகியவைகளுடன் ஒத்திருப்பதால்,தனிம வரிசைஅட்டவணையில் சரியானதொரு இடத்தை தீர்மானிப்பது கடினமாகும். எனினும் பெரும்பாலான சேர்மங்களில் ஹைட்ரஜன் +1 ஆக்ஸிஜனேற்ற நிலையை கொண்டிருப்பதால், IUPAC– அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள தனிம வரிசை அட்டவணையில் உள்ளவாறு கார உலோகங்களுடன் ஹைட்ரஜனை இடம்பெறச் செய்வது சரியானதாக இருக்கும்.

### 4.1.2 ஹைட்ரஜனின் ஐசோடோப்புகள்


ஹைட்ரஜன் இயற்கையில் கிடைக்கப்பெறும் மூன்று ஐசோடோப்புகளைப் பெற்றுள்ளது. அவையாவன, புரோட்டியம் (${}_1H^1$ அல்லது H) டியூட்டிரியம் (${}_1H^2$ அல்லது D)



Unit 4 - Sridhar.indd 111 07-01-2021 14:44:45

மற்றும் டிரிட்டியம் ($_1H^3$ அல்லது T). இவற்றுள் அதிக அளவில் (99.985%) புரோட்டியம் காணப்படுகிறது. இது நியூட்ரானை பெற்றிருக்காத ஒரே ஐசோடோப்பாகும்.

டியூட்டிரியத்தை கன ஹைட்ரஜன் என்றும் அழைக்கலாம். இது 0.015% அளவே கிடைக்கிறது. ஹைட்ரஜனின் மூன்றாவது ஐசோடோப்பான டிரிட்டியம் மிகச் சிறிதளவே கிடைக்கப்பெறும் கதிரியக்கத் தன்மையுடைய ஐசோடோப்பாகும். இது தோராயமாக $10^{18}$ ஹைட்ரஜன் அணுக்களுக்கு, ஒரு டிரிட்டியம் அணு என்ற விகிதத்தில் உள்ளது. இவ்வாறு ஹைட்ரஜன் ஐசோடோப்புகளை பெற்றிருப்பதினால், இயற்கையில் கிடைக்கக் கூடிய ஹைட்ரஜனானது $H_2$,HD,$D_2$, HT, $T_2$ மற்றும் DT ஆகியனவாகக் காணப்படுகின்றன. இந்த ஐசோடோப்புகளின் பண்புகள் அட்டவணை 4.1ல் கொடுக்கப்பட்டுள்ளன.



படம் 4.1 ஹைட்ரஜனின் ஐசோடோப்புகள்

அட்டவணை 4.1 ஹைட்ரஜன், டியூட்டிரியம் மற்றும் டிரிட்டியம் மூலக்கூறுகளின் பண்புகள்

| பண்பு | புரோட்டியம் | டியூட்டிரியம் | டிரிட்டியம் |
|---|---|---|---|
| அணு நிலை ஹைட்ரஜன் | | | |
| குறியீடு | H | D | T |
| அணு நிறை | 1.008 | 2.014 | 3.016 |
| எலக்ட்ரான் / புரோட்டான் / நியூட்ரான்களின் எண்ணிக்கை | 1 / 1 / 0 | 1 / 1 / 1 | 1 / 1 / 2 |
| அணுக்கருவின் நிலைப்புத்தன்மை | நிலையானது | நிலையானது | கதிரியக்கத் தன்மையுடையது ($t_{1/2}$ = 12.3 ஆண்டுகள்) |
| மூலக்கூறு ஹைட்ரஜன் | $H_2$ | $D_2$ | $T_2$ |
| இயற்கையில் கிடைக்கும் அளவு (%) | 99.985 | 0.015 | $\sim 10^{-16}$ |
| மூலக்கூறு நிறை(amu) | 2.016 | 4.028 | 6.032 |
| உருகுநிலை (K) | 13.96 | 18.73 | 20.62 |
| கொதிநிலை (K) | 20.30 | 23.67 | 25.04 |
| அணுக்கருக்களுக்கிடையேயான தொலைவு (pm) | 74.14 | 74.14 | 74.14 |
| நிலைமாறு வெப்பநிலை (K) | 33.19 | 38.35 | 40.60 |
| சிதைவுறு என்தால்பி (kJ/mol )† | 435.9 | 443.4 | 446.9 |

† பிணைப்பு பிளவுறு ஆற்றல்

### 4.1.3 ஆர்த்தோ மற்றும் பாரா ஹைட்ரஜன்

ஹைட்ரஜன் அணுவின் அணுக்கரு சுழன்று கொண்டு இருக்கிறது. மூலக்கூறு ஹைட்ரஜன் உண்டாகும் போது, இரண்டு ஹைட்ரஜன் அணுக்கருக்களின் சுழற்சி ஒரே திசையிலேயோ



Unit 4 - Sridhar.indd 112 07-01-2021 14:44:47

அல்லது எதிரெதிர் திசைகளிலோ, படத்தில் கண்டுள்ளவாறு அமையலாம். இந்த இரண்டு விதமான ஹைட்ரஜன் மூலக்கூறுகள் முறையே ஆர்த்தோ மற்றும் பாரா ஹைட்ரஜன்கள் என்று அழைக்கப்படுகின்றன.



ஆர்த்தோ – ஹைட்ரஜன் பாரா ஹைட்ரஜன்

அறை வெப்பநிலையில், சாதாரண ஹைட்ரஜனில் 75% ஆர்த்தோ, 25% பாரா வகையும் உள்ளன. ஆர்த்தோ வகையானது, பாரா வகையைவிட அதிக நிலைப்புத் தன்மையுடையது. ஒருவகை ஹைட்ரஜனானது மற்றொரு வகை ஹைட்ரஜனாக மாறும் செயல்முறை மிகவும் மெதுவானதாகும். எனினும் குறைவான வெப்பநிலையில் பாரா ஹைட்ரஜன் உருவாவதற்கு சமநிலை சாதகமாக உள்ளது. பிளாட்டினம், இரும்பு (அயர்ன்) போன்ற வினைவேக மாற்றிகளைச் சேர்ப்பதன் மூலம், பாரா ஹைட்ரஜனை, ஆர்த்தோ ஹைட்ரஜனாக மாற்றலாம். மின் பாய்ச்சல் மூலமாகவும் பாரா ஹைட்ரஜனை, ஆர்த்தோ ஹைட்ரஜனாக மாற்றலாம். $800^{o}C$க்கும் அதிகமான வெப்பநிலைக்கு வெப்பப்படுத்துதல், $O_2$, NO, $NO_2$ போன்ற பாரா காந்தத் தன்மையுள்ள மூலக்கூறுகளைச் சேர்த்தல் அல்லது பிறவி நிலை/அணு நிலை ஹைட்ரஜனைச் சேர்த்தல் ஆகிய முறைகளிலும் பாரா ஹைட்ரஜனை ஆர்த்தோ ஹைட்ரஜனாக மாற்றலாம்.

ஆர்த்தோ மற்றும் பாரா ஹைட்ரஜன்கள், ஒரே விதமான வேதிப்பண்புகளையும் ஒரு சில மாறுபட்ட இயற்பண்புகளையும் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக பாரா ஹைட்ரஜனின் உருகுநிலை 13.83K ஆனால், ஆர்த்தோ ஹைட்ரஜனின் உருகுநிலை 13.95K ஆகும். பாரா ஹைட்ரஜனின் கொதிநிலை 20.26K, ஆனால் ஆர்த்தோ ஹைட்ரஜனின் கொதி நிலை 20.39K ஆகும். பாரா ஹைட்ரஜனில், அணுக்கருக்களின் சுழற்சி எதிரெதிர் திசையில் அமைவதால், அதன் காந்தத் திருப்புத் திறன் பூஜ்ஜியமாகும். ஆர்த்தோ ஹைட்ரஜனின் காந்தத் திருப்புத் திறன், ஒரு புரோட்டானின் காந்தத் திருப்புத் திறனைப் போல் இரண்டு மடங்கு ஆகும்.

### 4.2 ஹைட்ரஜன் தயாரித்தல்

மிகச் சிறிதளவு அமிலம் அல்லது காரம் கலந்த நீரினை மின்னாற் பகுத்தல் மூலம் மிகத் தூய்மையான (>99.9%) ஹைட்ரஜனைப் பெறலாம் அல்லது சோடியம் ஹைட்ராக்சைடு, பொட்டாசியம் ஹைட்ராக்சைடு போன்ற–வற்றின் நீர்க்கரைசலை மின்னாற் பகுத்தும் ஹைட்ரஜனைப் பெறலாம். இம்மின்னாற்பகுப்பில் நிக்கல் நேர்மின் வாயாகவும், இரும்பு (iron) எதிர் மின்வாயாகவும் செயல்படுகிறது. இருப்பினும் இம்முறை மூலம் அதிக அளவு ஹைட்ரஜனைத் தயாரித்தல் பொருளாதார ரீதியாக சிறந்த முறையன்று.

நேர்மின்வாய் : $2OH^{-} \rightarrow H_2O + ½O_2 + 2e^{-}$


எதிர்மின்வாய் : $2\ H_2O + 2\ e^{-} \rightarrow 2OH^{-} + H_2$

ஒட்டு மொத்த வினை: $H_2O \rightarrow H_2 + ½\ O_2$

#### 4.2.1 ஆய்வகத் தயாரிப்பு

ஆய்வகத்தில் துத்தநாகம் (zinc), இரும்பு (iron) வெள்ளீயம் (tin) போன்ற உலோகங்களை, நீர்த்த அமிலங்களுடன் வினைபுரியச் செய்வதன் மூலம் ஹைட்ரஜனை எளிதில் தயாரிக்க இயலும்.

$$Zn + 2\ HCl \rightarrow ZnCl_2 + H_2\uparrow$$




படம் 4.2 ஆய்வகத்தில் ஹைட்ரஜன் தயாரித்தல்



Unit 4 - Sridhar.indd 113 07-01-2021 14:44:47

### 4.2.2 தொழில் முறை தயாரிப்பு

#### நீர்வாயு தயாரித்தல்

ஹைட்ரோ கார்பன்களை, நீராவியைக் கொண்டு மறு உருவாக்கம் செய்யும் முறையில், அதிக அளவில் ஹைட்ரஜனைத் தயாரிக்கலாம். இம்முறையில் மீத்தேனைப் போன்ற ஹைட்ரோ கார்பன்களை நீராவியுடன் கலந்து, 800–900°C வெப்பநிலையில், 35 atm அழுத்தத்தில் நிக்கல் வினை வேக மாற்றியின் மீது செலுத்தி ஹைட்ரஜன் பெறப்படுகிறது.

$$CH_4 + H_2O \xrightarrow{Ni} CO + 3H_2$$

மற்றொரு முறையில், செஞ்சூட்டு வெப்பநிலைக்கு வெப்பப்படுத்தப்பட்ட கல்கரியின் மீது, நீராவியைச் செலுத்தி கார்பன் மோனாக்சைடும், ஹைட்ரஜனும் பெறப்படுகின்றன. இம்முறையில் பெறப்படும் வாயுக்கள் அடங்கிய கலவை நீர் வாயு எனப்படுகிறது. இதனை தொகுப்பு வாயு எனவும் அழைக்கலாம். மெத்தனால் மற்றும் சில எளிய ஹைட்ரோகார்பன்களைப் போன்ற கரிமச்சேர்மங்களைத் தொகுப்பு முறையில் தயாரிக்க இவ்வாயுக்கலவை பயன்படுவதால் இதனை தொகுப்புவாயு என்று அழைக்கின்றோம்.

$$C + H_2O \xrightarrow{1000^{\circ}C} \underbrace{CO + H_2}_{\text{நீர்வாயு / தொகுப்பு வாயு}}$$

**நீர் வாயுவில் உள்ள கார்பன் மோனாக்சைடை கார்பன்–டை–ஆக்சைடாக மாற்றுதல்:**

நீர்வாயுக் கலவையுடன், அதிக அளவு நீராவியினைச் சேர்த்து 400°C வெப்பநிலையில், இரும்பு (iron) / தாமிரம் (copper) வினைவேக மாற்றியைக் கொண்டுள்ள மாற்று உலையின் (shift Converter) வழியாகச் செலுத்துவதன் மூலம் நீர்வாயுக் கலவையில் உள்ள கார்பன் மோனக்சைடை, கார்பன் டை ஆக்சைடாக மாற்றலாம்.

$$CO + H_2O \rightarrow CO_2 + H_2$$

மேற்கண்டுள்ள முறையில் உருவான $CO_2$ வாயுவானது, பொட்டாசியம் கார்பனேட் கரைசலால் உறிஞ்சப்படுகிறது.

$$CO_2 + K_2CO_3 + H_2O \rightarrow 2\,KHCO_3$$

### 4.2.3 டியூட்டிரியம் தயாரித்தல்

#### கன நீரை மின்னாற் பகுத்தல்

சாதாரண நீரில் $1.6 \times 10^{-4}$ சதவீதம் கனநீர் உள்ளது. கன நீரைவிட புரோட்டிய நீர் ($H_2O$) அதிக அளவு பிரிகை அடையக்கூடியது. எனவே நீரை மின்னாற் பகுக்கும் போது $D_2$வை விட $H_2$ விரைவாக வெளியேறுகிறது. எஞ்சியுள்ள கரைசலில் கனநீரின் செறிவு குறிப்பிடத்தக்க அளவு இருக்கும் வரை, மின்னாற்பகுத்தல் தொடர்ந்து நிகழ்த்தப்படுகிறது. இவ்வாறு கனநீரை தொடர்ச்சியாக மின்னாற் பகுத்தல் செய்வதன் மூலம் டியூட்டிரியம் பெறப்படுகிறது.

$$2D_2O \xrightarrow[\text{பகுத்தல்}]{\text{மின்னாற்}} 2\,D_2 + O_2$$

### 4.2.4 டிரிட்டியம் தயாரித்தல்

முன் பாடப்பகுதியில் குறிப்பிட்டுள்ளதைப் போன்று, டிரிட்டியம் மிகக் குறைந்த அளவே காணப்படுகிறது. எனவே, அணுக்கரு பிளவு உலையில், லித்தியத்தின் மீது மெதுவாக இயங்கும் நியூட்ரானை மோதச் செய்து, செயற்கை முறையில் டிரிட்டியம் பெறப்படுகிறது. இச்செயல் முறைக்கான அணுக்கரு மாற்ற வினை பின் வருமாறு:–

$${}^{6}_{3}Li + {}^{1}_{0}n \rightarrow {}^{4}_{2}He + {}^{3}_{1}T$$

## 4.3 ஹைட்ரஜனின் பண்புகள்

### 4.3.1 இயற்பண்புகள்:

ஹைட்ரஜன், நிறமற்ற, மணமற்ற, சுவையற்ற, மிகவும் இலேசான, எளிதில் தீப்பற்றக் கூடிய வாயு. இது ஒரு முனைவற்ற ஈரணு மூலக்கூறாகும். குறைந்த வெப்பநிலையில் அதிக அழுத்தத்திற்கு உட்படுத்தி இதனை நீர்மமாக்கலாம். ஹைட்ரஜன் மிகச் சிறந்த ஒடுக்க வினை பொருளாகும். ஹைட்ரஜன் மூலக்கூறின் பல்வேறு இயற் மாறிலிகளின் மதிப்பு அட்டவணை 4.1ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 4.3.2 வேதிப் பண்புகள்

ஹைட்ரஜன், ஆக்சிஜனுடன் வினைபுரிந்து நீரைத் தருகிறது. இவ்வினை அதிக ஆற்றலை வெளிப்படுத்தும் ஒரு வெடித்தல் நிகழும் வினையாகும். இவ்வினை எரிமின்கலன்களில் மின் உற்பத்தி செய்வதில் பயன்படுகிறது.

$$2\,H_2 + O_2 \rightarrow 2\,H_2O$$

இதைப் போலவே, ஹைட்ரஜன் ஹேலஜன்களுடன் வினைபுரிந்து, அவற்றின் ஹேலைடுகளைத்தருகிறது. ஒளி இல்லாத நிலையில் கூட, புளூரினுடன் வெடிக்கும் தன்மையுடைய வினை நிகழ்கிறது. ஒளி உள்ள நிலையில் குளோரினுடன் அறை வெப்பநிலையில் வினைபுரிகிறது. வெப்பப்படுத்தும் போது புரோமினுடன் இணைகிறது. அயோடினுடன் நிகழ்த்தும் வினையானது ஒரு ஒளி வேதி வினையாகும்.

$$H_2 + X_2 \rightarrow 2\,HX \quad (X = F, Cl, Br \,\&\, I)$$

மேற்கண்ட விளை பொருட்களில் ஹைட்ரஜனின் ஆக்சிஜனேற்ற எண் +1 ஆகும். அதிக வினைத்திறன் உடைய உலோகங்களான லித்தியம், சோடியம் மற்றும் கால்சியம் ஆகியவற்றுடன் வினைபுரிந்து அந்த உலோகங்களின் ஹைட்ரைடுகளைத் தருகின்றது. இந்த ஹைட்ரைடுகளில் ஹைட்ரஜனின் ஆக்ஸிஜனேற்ற நிலை –1 ஆகும்.

$$2\,Li + H_2 \rightarrow 2\,LiH$$

$$2\,Na + H_2 \rightarrow 2\,NaH$$

கரிம வேதியியலில், தொகுப்பு முறையில் சேர்மங்களைத் தயாரிக்கும் போது, ஹைட்ரைடுகள் ஒடுக்க வினைபொருளாகப் பயன்படுகிறது. லித்தியம் அலுமினியம் ஹைட்ரைடு மற்றும் சோடியம் போரோ ஹைட்ரைடு போன்ற மற்ற முக்கியமான ஒடுக்க வினைபொருட்களைத் தயாரிக்கவும் இவை பயன்படுகின்றன.

$$4\,LiH + AlCl_3 \rightarrow Li[AlH_4] + 3\,LiCl$$

$$4\,NaH + B(OCH_3)_3 \rightarrow Na[BH_4] + 3\,CH_3ONa$$

ஹைட்ரஜன் ஒரு சிறந்த ஒடுக்க வினைபொருளாகச் செயல்படும் தன்மை உடையது. நன்கு தூளாக்கப்பட்ட நிக்கலின் முன்னிலையில் ஹைட்ரஜன் நிறைவுறா கரிமச்சேர்மங்களுடன் சேர்க்கை வினைபுரிந்து நிறைவுற்ற சேர்மங்களைத் தருகிறது.

$$HC \equiv CH \xrightarrow{Ni/H_2} H_2C = CH_2 \xrightarrow{Ni/H_2} H_3C - CH_3$$

### 4.3.3 டியூட்டிரியத்தின் வேதிப் பண்புகள்

ஹைட்ரஜனைப் போன்றே டியூட்டிரியமும் ஆக்சிஜனுடன் வினைபுரிந்து டியூட்டிரியம் ஆக்சைடு என்ற கன நீரைத் தருகிறது. ஹேலஜன்களுடன் வினைபுரிந்து, அவற்றின் ஹேலைடுகளைத் தருகிறது.

$$2\,D_2 + O_2 \rightarrow 2\,D_2O$$

$$D_2 + X_2 \rightarrow 2\,DX$$

(X = F, Cl, Br & I)

### டியூட்டிரியத்தின் பதிலீட்டு வினைகள்

வினை நிகழும் சூழலைப் பொறுத்து, டியூட்டிரியமானது ஹைட்ரஜனின் சேர்மங்களிலுள்ள ஹைட்ரஜனை, பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ மீள் முறையில் பதிலீடு செய்கிறது. இவ்வினைகள் டியூட்டிரியம் அல்லது கன நீரைப் பயன்படுத்தி நிகழ்த்தப்படுகின்றன.

$$CH_4 + 2\,D_2 \rightarrow CD_4 + 2\,H_2$$

$$2\,NH_3 + 3\,D_2 \rightarrow 2\,ND_3 + 3\,H_2$$

### 4.3.4 டிரிட்டியத்தின் பண்புகள்

டிரிட்டியம் β – துகளை உமிழும் கதிரியக்க தனிமமாகும். இதன் அரை ஆயுட்காலம் 12.3 ஆண்டுகள்.

$${}^{3}_{1}T \rightarrow {}^{3}_{2}He + {}^{0}_{-1}e$$

## 4.4 ஹைட்ரஜனின் பயன்கள்

1. தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் ஹைட்ரஜனில் 90%க்கு மேல், அத்தொழிற்சாலைகளிலேயே தொகுப்பு முறை பயன்பாட்டிற்கு வினைபொருளாகப் பயன்படுகிறது. அம்மோனியாவை பெருமளவில் தயாரிக்க பயன்படும் ஹேபர்முறை இதற்கு ஒரு உதாரணமாகும். நைட்ரிக் அமிலம், உரங்கள் மற்றும் வெடிபொருட்கள் உள்ளிட்ட வேதிச் சேர்மங்களை பெருமளவில் தயாரிப்பதில் அம்மோனியா பயன்படுகிறது.

$$N_2 + 3H_2 \xrightleftharpoons[\text{200 atm/ இரும்பு (Fe)}]{380\text{-}450^{\circ}C} 2\,NH_3$$

2. தொழிற்சாலைகளில் பெருமளவு கரைப்பானாகப் பயன்படுத்தப்படும் மெத்தனாலை, கார்பன் மோனாக்சைடிலிருந்து தாமிரத்தை(Cu) வினையூக்கியாகக் கொண்டு தயாரிக்கப் பயன்படுகிறது.

$$CO + 2H_2 \xrightarrow{Cu} CH_3OH$$

3. $Pt/H_2$ ஐப் பயன்படுத்தி, நிறைவுறாத கொழுப்பு எண்ணெய்களை வனஸ்பதி என்றழைக்கப்படும் நிறைவுற்ற கொழுப்புகளாக (Margarine) மாற்றலாம்.

4. உலோகவியலில் உலோக ஆக்சைடுகளை அதிக வெப்பநிலையில் உலோகமாக ஒடுக்க ஹைட்ரஜன் பயன்படுகிறது.

$$CuO + H_2 \rightarrow Cu + H_2O$$

$$WO_3 + 3\,H_2 \rightarrow W + 3\,H_2O$$

5. அணுநிலை ஹைட்ரஜன் மற்றும் ஹைட்ரஜன்–ஆக்சிஜன் கலவையானது உலோகங்களை ஒட்டவும், வெட்டவும் பயன்படுகிறது.

6. ராக்கெட்டுகளை உந்தித்தள்ளும் எரிபொருளாக நீர்ம ஹைட்ரஜன் பயன்படுகிறது.



Unit 4 - Sridhar.indd 116 07-01-2021 14:44:48


7. எரிமின்கலங்களில், மின் ஆற்றலை உற்பத்தி செய்ய ஹைட்ரஜன் பயன்படுகிறது. ஹைட்ரஜனை மீள் முறையில் ஏற்றுக்கொள்ளும் உலோகங்களின் தன்மையானது, மறு மின்னூட்டம் செய்யும் வகையிலான உலோக ஹைட்ரைடு மின்கலங்கள் தயாரிப்பதில் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளது.



படம் 4.3 ராக்கெட் எரிபொருளின் பயன்பாடு

## 4.5 ஹைட்ரஜனின் சேர்மங்கள்

### 4.5.1 நீர்





ஹைட்ரஜனின் சேர்மங்களில் மிக அதிக அளவு இயற்கையில் கிடைப்பது நீராகும். பூமியின் மேற்பரப்பில் 70% கடல் நீரால் சூழப்பட்டுள்ளது. இதுவே நீரின் முதன்மையான ஆதாரமாகும். எனினும் கடல் நீரில் பல உப்புகள் கரைந்திருப்பதினால் நேரடியாகப் பயன்படுத்த முடிவதில்லை. அனைத்து உயிரினங்களின் வாழ்விற்கும் நீர் அடிப்படை ஆதாரமாக உள்ளது. நமது உடல் 65% நீரினைக் கொண்டுள்ளது

உங்களுக்குத் தெரியுமா ?

**ஆர்த்தோ மற்றும் பாரா நீர்.**

வால்மீன்களின் புரோட்டோகோள் தட்டுகளின் நட்சத்திரக் கூட்டங்கள் மற்றும் சூரிய குடும்பத்தின் பல செயற்கைக் கோள்களில் நீர் காணப்படுகிறது. சமீபத்தில் விண்வெளியில், ஆர்த்தோ பாரா நீரின் விகிதம் கவனத்தை ஈர்த்துள்ளது. ஹைட்ரஜனைப் போலவே, நீரினையும் ஆர்த்தோ மற்றும் பாரா நீர் என வகைப்படுத்தலாம். ஆர்த்தோ நீரில் உள்ள இரு ஹைட்ரஜன் அணுக்களின் உட்கருக்கள் ஒரே திசையிலும் பாரா நீரில் உள்ள இரு ஹைட்ரஜன் அணுக்களின் உட்கருக்கள் வெவ்வேறு திசையிலும் சுழலுகின்றன. பூமியில் வெப்பநிலை 300K ல் நீரின் ஆர்த்தோ மற்றும் பாரா விகிதம் 3:1. நட்சத்திரக் கூட்டங்களில் அதிக பாரா நீர் காணப்படுகிறது. நீரின் ஆர்த்தோ மற்றும் பாரா விகிதம் 2:5:1.




### 4.5.2 இயற்பண்புகள்

நீரானது நிறமற்ற எளிதில் ஆவியாகக் கூடிய நீர்மமாகும். மூலக்கூறுகளுக்கிடையேயான ஹைட்ரஜன் பிணைப்பினால், குறுக்கப்பட்ட நிலைமையில்



Unit 4 - Sridhar.indd 117 07-01-2021 14:44:48

(Condensed Phase) நீரானது தனித்த பண்புகளைப் பெற்றிருக்கிறது. நீரின் அதிக உறைநிலைக்கும், கொதிநிலைக்கும் நீரில் உள்ள ஹைட்ரஜன் பிணைப்பே காரணமாகும். நீரின் சில இயற்பண்புகள் அட்டவணை 4.2ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.2 – நீர், கனநீர், அதிகனநீர் ஆகியவற்றின் பண்புகள்**

| பண்பு | $H_2O$ | $D_2O$ | $T_2O$ |
|---|---|---|---|
| மூலக்கூறு நிறை | 18.015 | 20.028 | 22.0312 |
| உறைநிலை (K) | 273.0 | 276.8 | 277.5 |
| கொதிநிலை (K) | 373.0 | 374.4 | 374.5 |
| அதிக அடர்த்தி காணப்படும் வெப்ப நிலை (K) | 277.0 | 284.2 | 286.4 |
| அதிக அடர்த்தி ($gcm^{-3}$) | 1.000 | 1.106 | 1.215 |
| அடர்த்தி ($gcm^{-3}$) | 0.997 | 1.104 | 1.214 |
| ஆவி அழுத்தம் ($mm$ Hg) | 23.75 | 20.51 | 19.80 |
| பாகுநிலை ($cP$) | 0.890 | 1.107 | --- |
| மின்காப்பு மாறிலி | 78.39 | 78.06 | --- |
| உருவாதல் என்தால்பி ($kJ/mol$) | – 285.9 | – 294.6 | --- |
| ஆவியாதல் என்தால்பி ($kJ/mol$) | 40.66 | 41.61 | --- |

தனியே குறிப்பிட்டு காட்டப்படாத நிலையில் அனைத்து தரவுகளும் 298 $K$ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 4.5.3 வேதிப்பண்புகள்

உலோகம், அலோகம் மற்றும் சேர்மங்களுடன் நீரானது வெவ்வேறு தன்மையுடன் வினைபுரியக்கூடியது. கார உலோகங்கள் அதிக வினைத்திறன் மிக்கவை. இவை நீர் குளிர்ந்த நிலையில் இருந்தாலும் கூட அதனை சிதைவடையச் செய்து ஹைட்ரஜனை வெளியேற்றுவதுடன், காரக் கரைசலைத் தருகின்றது.

$$2Na + 2\,H_2O \rightarrow 2\,NaOH + H_2\uparrow$$

பெரிலியம் தவிர, ஏனைய இரண்டாம் தொகுதி உலோகங்கள், கார உலோகங்களைப் போன்றே நீருடன் வினைபுரிகின்றன. ஆனால் இவற்றின் வினைதிறன் கார உலோகங்களை விடக் குறைவாகும். இவற்றின் ஹைட்ராக்சைடுகள், கார உலோகங்களின் ஹைட்ராக்சைடுகளைவிட குறைந்த கரைதிறன் உடையவை.

$$Ba + 2H_2O \rightarrow Ba(OH)_2 + H_2\uparrow$$

சில இடைநிலைத் தனிம உலோகங்கள், சூடான நீருடனோ அல்லது நீராவியுடனோ வினைபுரிந்து அவற்றின் ஆக்சைடுகளைத் தருகின்றன. எடுத்துக்காட்டாக, செஞ்சூடான இரும்பு (iron) மீது நீராவியைச் செலுத்த, இரும்பு (iron) ஆக்சைடு உருவாகிறது. இவ்வினையில் ஹைட்ரஜன் வெளியேறுகிறது.

$$3Fe + 4H_2O \rightarrow Fe_3O_4 + 4H_2\uparrow$$

லெட் மற்றும் காப்பர் வெஞ்சூட்டு வெப்ப நிலையில் மட்டுமே, நீரைச் சிதைக்கின்றன. சில்வர், கோல்டு, மெர்க்குரி மற்றும் பிளாட்டினம் போன்ற உலோகங்கள் நீருடன் எவ்வித வினையும் புரிவதில்லை. தனிம நிலையில்



Unit 4 - Sridhar.indd 118 07-01-2021 14:44:49

உள்ள கார்பன், சல்பர் மற்றும் பாஸ்பரஸ் போன்ற அலோகங்கள் நீருடன் சாதாரணமாக வினைபுரிவதில்லை. இருந்தபோதிலும் முன்னரே குறிப்பிட்டுள்ளவாறு கார்பன் செஞ்சூட்டு அல்லது வெஞ்சூட்டு வெப்ப நிலையில் நீராவியுடன் வினைபுரிந்து நீர் வாயுவைத் ($CO+H_2$) தருகிறது.

மாறாக, ஹேலஜன்கள் நீருடன் வினைபுரிந்து அமிலக் கரைசலைத் தருகின்றன. எடுத்துக்காட்டாக, குளோரின் நீருடன் வினைபுரிந்து ஹைட்ரோகுளோரிக் அமிலத்தையும் ஹைப்போகுளோரஸ் அமிலத்தையும் தருகிறது. இவ்வினை குளோரின் நீரின் நுண்ணுயிர் எதிர்த்தன்மைக்கும் (Antibacteria) வெளுக்கும் பொருளாக பயன்படுவதற்கும் காரணமாக அமைகிறது.

$$Cl_2 + H_2O \rightarrow HCl + HOCl$$

ஆனால் புளூரின் நீருடன் வேறு விதமாக வினைபுரிந்து ஆக்சிஜனை வெளிவிடுகிறது.

$$2F_2 + 2\ H_2O \rightarrow 4HF + O_2$$

இதனைப் போலவே அலோகங்களின் சேர்மங்கள் நீருடன் வினைபுரிந்து அமிலக் கரைசல்களையோ அல்லது காரக் கரைசல்களையோ தருகின்றன. எடுத்துக்காட்டாக, கார்பனேட் உப்புகளின் நீர்க்கரைசல் சிறிதளவு காரத் தன்மையுடையது.

$$CO_3^{2-} + H_2O \rightarrow HCO_3^- + OH^-$$

நீர் ஈரியல்புத் தன்மை கொண்டது. இதனால் ஒரு புரோட்டானை வழங்கவும், ஏற்கவும் முடியும். எனவே இது அமிலமாகவும், காரமாகவும் செயல்படுகிறது. எடுத்துக்காட்டாக, HCl உடன் வினைபுரியும் போது நீரானது ஒரு புரோட்டானை ஏற்கிறது. ஆனால் வீரியம் குறைந்த காரமான $NH_3$ உடன் வினைபுரியும் போது நீரானது ஒரு புரோட்டானை வழங்குகிறது..

$$NH_3 + H_2O \rightarrow NH_4^+ + OH^-$$

$$HCl + H_2O \rightarrow H_3O^+ + Cl^-$$

நீரானது அயனிச் சேர்மங்களைக் கரைக்கிறது. மேலும் சில சகபிணைப்புச் சேர்மங்களும் நீராற்பகுப்படைகின்றன.

$$SiCl_4 + 2\ H_2O \rightarrow SiO_2 + 4\ HCl$$

$$P_4O_{10} + 6\ H_2O \rightarrow 4\ H_3PO_4$$

பெரும்பாலான உப்புகளின் நீர்க் கரைசல்களை படிகமாக்குவதன் மூலம் பெறப்படும் படிகங்கள் நீரேறிய நிலையில் காணப்படுகின்றன. நீரேற்றமடைந்துள்ள உப்புகளில் உள்ள நீர் மூலக்கூறுகள், ஈதல் பிணைப்பின் மூலம் பிணைக்கப்பட்டிருக்கலாம் அல்லது படிக அணிக்கோவையின் இடைவெளியில் காணப்படலாம்.

எடுத்துக்காட்டாக,


$[Cr(H_2O)_6]Cl_3$ – இச்சேர்மத்திலிலுள்ள அனைத்து ஆறு நீர் மூலக்கூறுகளும் ஈதல் பிணைப்பின் மூலம் பிணைக்கப்பட்டுள்ளன.

$BaCl_2.2H_2O$ –இச்சேர்மத்தில்இரண்டு நீர் மூலக்கூறுகளும் அணிக்கோவையின் இடைவெளியில் அமைந்துள்ளன.

$CuSO_4.5H_2O$ – இச்சேர்மத்தில் நான்கு நீர் மூலக்கூறுகள் ஈதல் பிணைப்பின் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது நீர் மூலக்கூறு அணைவு கோளத்திற்கு வெளியே அமைந்துள்ளது. வெளியில் உள்ள நீர் மூலக்கூறு மற்றொரு $[Cu(H_2O)_4]SO_4H_2O$ மூலக்கூறுடன், மூலக்கூறுகளுக்கு இடையேயான ஹைட்ரஜன் பிணைப்பை ஏற்படுத்துகிறது.



Unit 4 - Sridhar.indd 119 07-01-2021 14:44:49




படம் 4.4: காப்பர் சல்பேட் பென்ட்டா ஹைட்ரேட்டின் அமைப்பு

### 4.5.4 கடின நீர் மற்றும் மென்னீர்

கடின நீர் அதிக அளவு கனிம அயனிகளைக் கொண்டுள்ளது. நீரில் கரையக்கூடிய கால்சியம் மற்றும் மெக்னீசியம் ஆகிய உலோகங்களின் நேர் அயனிகளே பெரும்பாலும் கடின நீரில் காணப்படுகின்றன. ஒருசில இடங்களில் காணப்படும் கடின நீரில் இரும்பு (iron), அலுமினியம் மற்றும் மாங்கனீஸ் போன்ற உலோகங்களின் அயனிகளும் உள்ளன. இவ்வுலோகங்களின் பைகார்பனேட், குளோரைடு மற்றும் சல்பேட் உப்புகள் நீரில் காணப்படுவதால், நீர் கடினத் தன்மையடைகிறது. கடின நீரை கொதிக்க வைக்கும் போது, அதிலுள்ள மெக்னீசியம் மற்றும் கால்சியம் உலோகங்களின் கார்பனேட்டுகள் வீழ்படிவாகின்றன. கால்சியம் மற்றும் மெக்னீசியத்தின் நீரில் கரையும் உப்புகள் இல்லாத நீர் மென்னீர் என அழைக்கப்படுகிறது. நீரின் கடினத் தன்மை இரண்டு வகைப்படும். அவைகள் தற்காலிக கடினத்தன்மை மற்றும் நிரந்தர கடினத்தன்மை ஆகும்.

#### தற்காலிக கடினத்தன்மை மற்றும் அதனை நீக்குதல்

நீரில் கரையக்கூடிய, கால்சியம் மற்றும் மெக்னீசியம் ஆகியவற்றின் பைகார்பனேட் உப்புகள் காணப்படுதலே தற்காலிக கடினத் தன்மைக்கு முதன்மையான காரணமாகும். இவ்வகை நீரை கொதிக்க வைத்து பின் வடிகட்டுவதன் மூலம் கடினத் தன்மையை நீக்கலாம். கொதிக்க வைக்கும்போது, இந்த பைகார்பனேட் உப்புகள், கரையாத கார்பனேட் உப்புகளாகச் சிதைவடைந்து, வீழ்படிவாகின்றன. இவ்வாறு உருவான மெக்னீசியம் கார்பனேட் மேலும் நீராற்பகுப்பு அடைந்து கரையாத மெக்னீசியம் ஹைட்ராக்சைடைத் தருகிறது.

$$Ca(HCO_3)_2 \rightarrow CaCO_3 + H_2O + CO_2$$

$$Mg(HCO_3)_2 \rightarrow MgCO_3 + H_2O + CO_2$$

$$MgCO_3 + H_2O \rightarrow Mg(OH)_2 + CO_2$$

வடிகட்டுதல் மூலமாக இவ்வீழ்படிவுகளை நீக்கலாம்.

நாம், கிளார்க் முறையினைப் பயன்படுத்தியும், தற்காலிக கடினத் தன்மையை நீக்கலாம். இம்முறையில் கணக்கிடப்பட்ட அளவு சுண்ணாம்பு நீரானது கால்சியம் மற்றும் மெக்னீசியம் அயனிகளைக் கொண்டுள்ள கடின நீருடன் சேர்க்கப்படுகிறது. இதனால் உருவாகும் ஹைட்ராக்சைடுகள் மற்றும் கார்பனேட்டுகள் வடிகட்டி நீக்கப்படுகின்றன.

$$Ca(HCO_3)_2 + Ca(OH)_2 \rightarrow 2CaCO_3 + 2H_2O$$

$$Mg(HCO_3)_2 + 2\,Ca(OH)_2$$

$$\downarrow$$

$$2CaCO_3 + Mg(OH)_2 + 2\,H_2O$$

#### நிரந்தர கடினத்தன்மை

மெக்னீசியம் மற்றும் கால்சியம் ஆகிய உலோகங்களின் நீரில் கரையக்கூடிய, குளோரைடு மற்றும் சல்பேட் உப்புகளினால்



Unit 4 - Sridhar.indd 120 07-01-2021 14:44:49

நிரந்தர கடினத் தன்மை ஏற்படுகிறது. சலவைச் சோடாவைச் சேர்த்து இதனை நீக்கலாம். சலவைச் சோடாவானது கடின நீரில் கரைந்துள்ள கால்சியம் மற்றும் மெக்னீசியத்தின் குளோரைடு மற்றும் சல்பேட்டுடன் வினைபுரிந்து அவற்றின் கரையாத கார்பனேட்டுகளைத் தருகிறது.

$$MCl_2 + Na_2CO_3 \rightarrow MCO_3 + 2\,NaCl$$

$$MSO_4 + Na_2CO_3 \rightarrow MCO_3 + Na_2SO_4$$


(M=Ca , Mg)


கடின நீரை மென்னீராக மாற்றப் பயன்படும் மற்றொரு முறை அயனிப் பரிமாற்ற முறையாகும். இம்முறையில், கடின நீரானது, சியோலைட் போன்ற அயனிப்பரிமாற்றப் பொருள் நிரப்பப்பட்ட குழாய் வழியே செலுத்தப்படுவதன் மூலம் கடினத்தன்மை நீக்கப்படுகிறது. சியோலைட்டுகள் என்பன நீரேற்றம் பெற்ற சோடியம் அலுமினோ சிலிக்கேட்டுகள் ஆகும். இவை $Na_2O.Al_2O_3.XSiO_2.YH_2O$ (X=2 முதல் 10, மற்றும் Y=2 முதல் 6) என்ற பொதுவான வாய்பாட்டினைப் பெற்றுள்ளன. சியோலைட்கள் நுண்துளை வடிவமைப்பினைப் பெற்றுள்ளன. இவற்றிலுள்ள ஒற்றை இணை திறன் பெற்றுள்ள சோடியம் அயனிகள் எளிதாக பிணைக்கப்பட்டுள்ளன. இவ் அயனிகள், நீரின் கடினத் தன்மைக்குக் காரணமான உலோக அயனிகள் ($M=Ca^{2+}$ அல்லது $Mg^{2+}$) உடன் பரிமாற்றம் அடைகிறது. அணைவு வடிவத்தினை $Na_2 - Z$ எனக் குறிப்பிட இயலும். இதில் சோடியம் ஆனது பரிமாற்றமடையும் நேர் அயனியாகும்.

$$Na_2\text{-}Z + M^{2+} \rightarrow M\text{-}Z + 2\,Na^+$$

அயனிப்பரிமாற்றம் முழுமையடைந்த பின்னர், நீர்த்த சோடியம் குளோரைடினைச் செலுத்துவதன் மூலம் மீண்டும் சியோலைட்டினைப் பெறலாம். இந்நிகழ்வில் சியோலைட்டினால் ஈர்த்துக் கொள்ளப்பட்ட $Ca^{2+}$ மற்றும் $Mg^{2+}$ அயனிகள், சோடியம் அயனிகளால் பரிமாற்றம் செய்யப்படுகிறது.

$$M\text{-}Z + 2NaCl \rightarrow Na_2\text{-}Z + MCl_2$$




## 4.6. கனநீர்

கன ஹைட்ரஜனின் ஆக்சைடானது கனநீராகும் ($D_2O$). 5000 பங்குள்ள சாதாரண



Unit 4 - Sridhar.indd 121 07-01-2021 14:44:50

நீரில் ஒரு பங்கு கனநீர் காணப்படுகிறது. $H_2O$வைப் போல $D_2O$ எளிதில் மின்னாற் பகுப்பிற்கு உட்படாது என்பதால் நீரினை மின்னாற்பகுத்தல் மூலம் கனநீரினைத் பெறலாம்.

$D_2O$ என்பது நிறமற்ற மணமற்ற சுவையற்ற ஒரு திரவமாகும். எனினும் நீர் மற்றும் கனநீருக்கு இடையே இயற் பண்புகளில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. இவ்வேறுபாடுகள் அட்டவணை 4.2ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**உங்களுக்குத் தெரியுமா?**

**சோப்புகளுடன், கடினநீர் குறைவான நுரைத்தலைத் தருகிறது ஏன்?**

கடின நீரில், சோப்புகளைப் பயன்படுத்தும் போது, அவற்றின் தூய்மையாக்கும் திறன் குறைகிறது. சோப்புகள் என்பன நீண்ட சங்கிலியுடைய கொழுப்பு அமிலங்களின் (எ.கா. தேங்காய் எண்ணெய்) சோடியம் அல்லது பொட்டாசியம் உப்புகளாகும். சோப்பானது கடின நீரில் சேர்க்கப்படும்போது, கடின நீரில் உள்ள இரு இணைதிறன்கொண்ட மெக்னீசியம் அல்லது கால்சியம் அயனிகள் சோப்புடன் வினைபுரிந்து, சோப்பின், கால்சியம் மற்றும் மெக்னீசியம் உப்புகளாக வீழ்படிவாகிறது.

$$M^{2+} + 2RCOONa \rightarrow (RCOO)_2M + 2Na^+$$

$M = Ca$ or $Mg$

$R = C_{17}H_{35}$

### 4.6.1. கன நீரின் வேதிப்பண்புகள்

ஹைட்ரஜனைக் கொண்டுள்ள சேர்மங்களை, $D_2O$ உடன் வினைப்படுத்தும்போது, ஹைட்ரஜனானது, டியூட்டிரியத்தால் பரிமாற்றம் செய்யப்படுகிறது.

$$2NaOH + D_2O \rightarrow 2NaOD + HOD$$

$$HCl + D_2O \rightarrow DCl + HOD$$

$$NH_4Cl + 4D_2O \rightarrow ND_4Cl + 4HOD$$

ஒரு சேர்மத்தில் காணப்படும் அயனித்தன்மையுடைய ஹைட்ரஜனைக் கண்டறிய இந்த பரிமாற்ற வினைகள் பயன்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, $D_2O$வை ஹைப்போ பாஸ்பரஸ் அமிலத்துடன் வினைப்படுத்தும்போது, டியூட்டிரியத்தால், ஒரே ஒரு ஹைட்ரஜன் மட்டும் பரிமாற்றம் செய்யப்படுகிறது. இவ்வினை, ஹைப்போ பாஸ்பரஸ் அமிலம் ஒரு காரத்துவமுடையது எனக் காட்டுவதாக அமைகிறது.

$$H_3PO_2 + D_2O \rightarrow H_2DPO_2 + HDO$$

சில டியூட்ரியச் சேர்மங்களைத் தயாரிக்கவும் இவ்வினை பயன்படுகிறது.

$$Al_4C_3 + 12D_2O \rightarrow 4Al(OD)_3 + 3CD_4$$

$$CaC_2 + 2D_2O \rightarrow Ca(OD)_2 + C_2D_2$$

$$Mg_3N_2 + 6D_2O \rightarrow 3Mg(OD)_2 + 2ND_3$$

$$Ca_3P_2 + 6D_2O \rightarrow 3Ca(OD)_2 + 2PD_3$$

### 4.6.2. கனநீரின் பயன்கள்:

அணுக்கரு உலைகளில் வேகமாகச் செல்லும் நியூட்ரான்களின் ஆற்றலை, கனநீர் குறைப்பதால் இது மட்டுப்படுத்தியாகப் பயன்படுகிறது.

கரிம வினைகளின் வினைவழி முறைகளை கண்டறிதல் மற்றும் உடல் செயல் வினைகளின் வழிமுறைகளை



Unit 4 - Sridhar.indd 122 07-01-2021 14:44:50

தீர்மானிப்பதில் இது சுவடறிவானாகப் பயன்படுகிறது.

அணுக்கரு உலைகளில் வெளிப்படும் வெப்ப ஆற்றலை உறிஞ்சும் தன்மையினை இது பெற்றிருப்பதால், குளிர்விப்பானாகப் பயன்படுகிறது.


## 4.7. ஹைட்ரஜன் பெராக்சைடு

ஹைட்ரஜன் பெராக்சைடு ($H_2O_2$) ஒரு முக்கியமான பெராக்சைடாகும். உலோக பெராக்சைடுகளை, நீர்த்த அமிலங்களுடன் வினைப்படுத்துவதன் மூலம் இதனை தயாரிக்கலாம்.

$$BaO_2 + H_2SO_4 \rightarrow BaSO_4 + H_2O_2$$

$$Na_2O_2 + H_2SO_4 \rightarrow Na_2SO_4 + H_2O_2$$

தொழிற்முறையில், 2 – ஆல்கைல் ஆந்த்ர குயினாலை சுய ஆக்சிஜனேற்றம் அடையச் செய்வதன் மூலம் தற்போது ஹைட்ரஜன் பெராக்சைடு தயாரிக்கப்படுகிறது.




40% $H_2O_2$ கரைசல்

### 4.7.1. இயற்பண்புகள்

தூய்மையான ஹைட்ரஜன் பெராக்சைடு ஏறத்தாழ நிறமற்ற திரவமாகும். (வெளிர்ந்த நீல நிறம்), நீரைவிட அதிக பாகுநிலைத் தன்மையும், குறைவாக ஆவியாகும் தன்மையினையும் கொண்டுள்ளது.

ஹைட்ரஜன் பெராக்சைடின் 30% கரைசலானது '100–கனஅளவு' ஹைட்ரஜன் பெராக்சைடு எனக் குறிப்பிடப்படுகிறது. திட்டவெப்ப அழுத்த நிலையில் (S.T.P.ல்) 1 mL அளவுள்ள இந்த ஹைட்ரஜன் பெராக்சைடை சூடுபடுத்தும்போது 100 mL ஆக்சிஜன் வெளியேறுகிறது.

### 4.7.2. வேதிப்பண்புகள்

ஹைட்ரஜன் பெராக்சைடு மிகவும் நிலைப்புத்தன்மை அற்றது. இதன் நீர்க்கரைசல் தானாகவே, விகித சிதைவடைந்து ஆக்சிஜன் மற்றும் நீரைத்தருகிறது. இவ்வினை மெதுவாக நிகழ்வதாக இருந்த போதிலும், உலோகம் வினையூக்கியாக பயன்படுத்தப்படும் நிலையில் வெடிக்கும் தன்மையுடையதாகும். இதனைக் கண்ணாடி கலன்களில் சேகரித்து வைக்கும் போது, கண்ணாடியில் உள்ள கார உலோகங்களை இது கரைக்கிறது. இது விகிதச் சிதைவு வினைக்கு வினையூக்கியாகிறது. இக்காரணத்தினால் தான் $H_2O_2$ கரைசலானது நெகிழி கலன்களில் சேமித்து வைக்கப்படுகிறது.

$$H_2O_2 \rightarrow H_2O + ½O_2$$

ஹைட்ரஜன் பெராக்சைடு, ஆக்சிஜனேற்றி மற்றும் ஆக்சிஜன் ஒடுக்கி ஆகிய இரண்டு வினைபொருட்களாகவும் செயல்படும் தன்மையுடையது. வழக்கமாக ஆக்சிஜனேற்ற வினைகள் அமில ஊடகத்திலும், ஆக்சிஜன் ஒடுக்க வினைகள் கார ஊடகத்திலும் நிகழ்த்தப்படுகின்றன.

அமில ஊடகத்தில்

$$H_2O_2 + 2\,H^+ + 2\,e^- \rightarrow 2\,H_2O \quad (E^0 = +\,1.77\ V)$$

எடுத்துக்காட்டாக,



Unit 4 - Sridhar.indd 123 07-01-2021 14:44:50

$$2FeSO_4 + H_2SO_4 + H_2O_2 \rightarrow Fe_2(SO_4)_3 + 2H_2O$$

கார ஊடகத்தில்,

$$HO_2^- + OH^- \rightarrow O_2 + H_2O + 2e^-$$

$$(E^0 = +0.08 \text{ V})$$

எடுத்துக்காட்டாக,

$$2KMnO_4(aq) + 3H_2O_2(aq) \downarrow 2MnO_2 + 2KOH + 2H_2O + 3O_2(g)$$

### 4.7.3. ஹைட்ரஜன் பெராக்சைடின் பயன்கள்


ஹைட்ரஜன் பெராக்சைடின் ஆக்சிஜனேற்றும் திறன் மற்றும் இதனால் உருவாகும் வினைபொருட்களான நீர் மற்றும் ஆக்சிஜனின் தீங்கற்ற தன்மையாலும், இது பல்வேறு பயன்களைக் கொண்டுள்ளது. நீரைச் சுத்திகரிக்கும் செயல்முறைகளில் மாசுக்களை ஆக்சிஜனேற்றம் அடையச் செய்யவும், வீரியம் குறைந்த புரைத்தடுப்பானாகவும், துணி, காகிதம், முடி பாதுகாப்பு தொழிற்சாலைகளில் வெளுக்கும் பொருளாகவும் பயன்படுகிறது.

பழங்கால ஓவியங்களில், வெண்மை நிறத்திற்கு பயன்படுத்தப்படும் நிறமிப் பொருளான $Pb_3(OH)_2(CO_3)_2$ ஆனது காற்றில் உள்ள ஹைட்ரஜன் சல்பைடுடன் வினைபுரிவதால் கருமை நிற லெட்சல்பைடு உருவாவதன் காரணமாக, வெண்மை நிறம் இழக்கப்படுகிறது. ஹைட்ரஜன் பெராக்சைடானது கருமைநிற லெட்சல்பைடினை வெண்மைநிற லெட்சல்பேட்டாக மாற்றுவதால், ஓவியங்களின் நிறம் மீளப் பெறப்படுகிறது.

$$PbS + 4H_2O_2 \rightarrow PbSO_4 + 4H_2O$$

### 4.7.4. ஹைட்ரஜன் பெராக்சைடின் அமைப்பு

வாயு நிலைமை மற்றும் திட நிலைமை ஆகிய இரு நிலைமைகளிலும் இம் மூலக்கூறு, சாய்வு வசஅமைப்பினைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆக்சிஜன் மீதுள்ள தனித்த எலக்ட்ரான்களுடன், OH பிணைப்பின் விலக்கு இடைவினை காரணமாக இவ்வமைப்பு ஏற்படுகிறது. மேலும், இது ஒற்றைப் பிணைப்பின் வழியே ஏற்படும் சுழற்சித் தடையினை பெற்றுள்ள சிறிய மூலக்கூறாகும்.




படம் 4.5 $H_2O_2$ ன் அமைப்பு

$H_2O_2$ ஆனது ஒரே தளத்தில் அமையாத வடிவமைப்பினைப் பெற்றுள்ளது. வாயு நிலைமை மற்றும் திட நிலைமையில் மூலக்கூறு வடிவமைப்பின் பரிமாணங்கள் படம் 4.5ல் கொடுக்கப்பட்டுள்ளது. வடிவமைப்பினைப் பொருத்தவரையில், இரண்டு $OH^-$ தொகுதிகளும் ஒரே தளத்தில் அமையாத இருதள (dihedral) வடிவமைப்பின் மூலம் $H_2O_2$வை குறிப்பிடலாம். பகுதியளவு திறந்து வைக்கப்பட்டுள்ள புத்தகத்தின், அச்சில் ஆக்சிஜன் அணுக்களும், இரு பக்கங்களிலும்

ஹைட்ரஜன் அணுக்கள் இருப்பதாக இதன் வடிவமைப்பினை உருவகப்படுத்தலாம். திட நிலைமையில் உள்ள மூலக்கூறில் ஹைட்ரஜன் பிணைப்பின் காரணமாக இரு தளங்களுக்கும் இடையேயான கோணம் 90.2° ஆக குறைகிறது. மேலும் –O–O–H கோணம் 94.8° லிருந்து 101.9°ஆக அதிகரிக்கிறது.

## 4.8. ஹைட்ரைடுகள்

உலோகங்கள் மற்றும் அலோகங்கள் உள்ளிட்ட நேர்மின் தன்மை உடைய தனிமங்களுடன், ஹைட்ரஜன் இணைந்து இருமை ஹைட்ரைடுகளைத் தருகின்றது. இரு உலோகங்களுடன் இணைந்து மும்மை ஹைட்ரைடுகளையும் தருகிறது. எடுத்துக்காட்டு $LiBH_4$ மற்றும் $LiAlH_4$ இவற்றில் காணப்படும் பிணைப்பின் தன்மையினைப் பொறுத்து, அயனி ஹைட்ரைடுகள், உலோக ஹைட்ரைடுகள் மற்றும் சகப்பிணைப்பு ஹைட்ரைடுகள் என வகைப்படுத்தப் படுகின்றன. ஹைட்ரஜனைக் காட்டிலும் குறைவான எலக்ட்ரான் கவர்தன்மையுடைய தனிமங்களுடன் உருவாகும் ஹைட்ரைடுகள் வழக்கமாக அயனித் தன்மையினைப் பெற்றிருக்கும். ஹைட்ரஜனைவிட அதிகமான எலக்ட்ரான் கவர்தன்மையுடைய தனிமங்களுடன் இணைந்து சகப்பிணைப்பு ஹைட்ரைடுகளை உருவாக்குகிறது.

### அயனி (Saline) ஹைட்ரைடுகள்

நேர்மின் தன்மை உடைய, கார உலோகங்கள் மற்றும் பெரிலியம், மெக்னீசியத்தினை தவிர்த்த பிற கார மண் உலோகங்கள் ஆகியவற்றின் எலக்ட்ரான்கள் ஹைட்ரஜனுக்குப் பரிமாற்றப்படுவதால் இவ்வகை ஹைட்ரைடுகள் உருவாகின்றன. இத்தகைய தனிமங்களை 400°Cக்கு ஹைட்ரஜனுடன் வெப்பப்படுத்துவதால் இவ்வகை ஹைட்ரைடுகளைத் தயாரிக்கலாம். இவைகள் உப்பை போன்றத் தன்மையினையும், அதிக உருகுநிலையையும் கொண்டுள்ளன. இவைகள் ஹைட்ரைடு அயனிகள் ($H^-$) மற்றும் உலோக நேர் அயனிகளை ($M^{n+}$) கொண்டுள்ள வெண்ணிற படிகத்தன்மையுடைய திண்மங்களாகும்.

$$2\,Li + H_2 \rightarrow 2\,LiH$$

$$2\,Ca + 2H_2 \rightarrow 2\,CaH_2$$

### சகப்பிணைப்பு (மூலக்கூறு) ஹைட்ரைடுகள்

இச்சேர்மங்களில், ஹைட்ரஜனானது பிற தனிமங்களுடன், எலக்ட்ரானை பங்கிட்டுக் கொள்கிறது. அலோகங்களின் பொதுவான சகப்பிணைப்பு ஹைட்ரைடுகளுக்கான எடுத்துக்காட்டுகள் மீத்தேன், அம்மோனியா, நீர் மற்றும் ஹைட்ரஜன் குளோரைடு. சகப்பிணைப்பு ஹைட்ரைடுகள் பின்வருமாறு மேலும் மூன்று வகையாக வகைப்படுத்தப்படுகின்றன. எலக்ட்ரான் குறைபாடுடையவை ($B_2H_6$), எலக்ட்ரான் அதிகமாக உள்ள ஹைட்ரைடுகள் ($NH_3$, $H_2O$) , சரியான எலக்ட்ரானைக் கொண்டுள்ள ஹைட்ரைடுகள் ($CH_4$, $C_2H_6$, $SiH_4$, $GeH_4$). இவை பொதுவாக வாயுக்களாகவோ அல்லது ஆவியாகும் நீர்மங்களாவோ காணப்படுகின்றன. ஏனெனில், இத்தகைய ஹைட்ரைடுகள் தனித்த, சிறிய மூலக்கூறுகளாக உள்ளன. அவற்றிற்கிடையே ஒப்பீட்டளவில் குறைவான கவர்ச்சி விசை காணப்படுகிறது.

### உலோக (இடைச்செருகல்) ஹைட்ரைடுகள்

உலோகங்கள் மற்றும் உலோகக் கலவைகளை ஹைட்ரஜனேற்றத்திற்கு உட்படுத்துவதன் மூலம் வழக்கமாக உலோக ஹைட்ரைடுகள் உருவாக்கப்படுகின்றன. உலோகங்கள் / உலோகக்கலவைகளின் அணிக்கோவை இடைவெளிகளில்



Unit 4 - Sridhar.indd 125 07-01-2021 14:44:50

(வெற்றிடங்களில்) ஹைட்ரஜன் காணப்படுகிறது. எனவே இவை இடைச்செருகல் ஹைட்ரைடுகள் என அழைக்கப்படுகின்றன. இத்தகைய உலோக ஹைட்ரைடுகளின் பண்புகள், அதில் உள்ள உலோகங்களின் பண்புகளை ஒத்துள்ளது. எனவே இவைகள் உலோக ஹைட்ரைடுகள் எனவும் அழைக்கப்படுகின்றன. பெரும்பாலும் இத்தகைய ஹைட்ரைடுகள் வேதி வினைக்கூறு விகிதத்தில் அமையாத மாறுபடும் இயைபினை ($TiH_{1.5-1.8}$ மற்றும் $PdH_{0.6-0.8}$) பெற்றுள்ளன. ஒப்பீட்டு அளவில் சில ஹைட்ரைடுகள் இலேசானதாகவும், வெப்ப நிலைப்புத்தன்மை அற்றதாகவும், விலை மலிவானதாகவும் இருப்பதால் ஹைட்ரஜனை சேமிக்கப் பயன்படுகிறது. நேர்மின் தன்மை உடைய உலோகங்கள் மற்றும் சில உலோகங்கள் MH அல்லது $MH_2$ (M = Ti, Zr, Hf, V, Zn) என அமையும் வேதி வினைக்கூறு விகிதத்தில் மூலக்கூறு வாய்பாடுகளுடைய ஹைட்ரைடுகளைத் தருகின்றன.


## 4.9 ஹைட்ரஜன் பிணைப்பு

வேதியியல் மற்றும் உயிரியல் நிகழ்வுகளில் இயற்கையில் நிகழும் ஒரு முக்கியமான நிகழ்வு ஹைட்ரஜன் பிணைப்பாகும். DNA மற்றும் புரதங்களின் வடிவமைப்பில், ஹைட்ரஜன் பிணைப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு ஹைட்ரஜன் அணுவானது (H), அதிக எலக்ட்ரான் கவர்தன்மை உடைய புளூரின் (F) அல்லது ஆக்ஸிஜன் (O) அல்லது நைட்ரஜன் (N) போன்ற அணுக்கள் ஒன்றுடன் பிணைக்கப்பட்டிருக்கும் போது, அப்பிணைப்பு முனைவுறு பிணைப்பாகிறது. இவ்விளைவின் காரணமாக முனைவுற்ற ஹைட்ரஜன் அணுவானது அதன் சூழலில் உள்ள மற்றொரு எலக்ட்ரான் கவர்தன்மை அதிகமுடைய அணுவுடன் ஒரு வலிமை குறைந்த நிலை மின்னியல் கவர்ச்சி விசையை ஏற்படுத்தும் இயல்பினைப் பெற்றுள்ளது. இக்கவர்ச்சி விசையே ஹைட்ரஜன் பிணைப்பு (20–50 kJ $mol^{-1}$) என்று அழைக்கப்படுகிறது. இப்பிணைப்பு விடுபட்ட கோடுகளால் (……) குறிக்கப்படுகிறது.

இப்பிணைப்பு சகப்பிணைப்பை விட வலிமை குறைவானது (<100 KJ $mol^{-1}$) ஆனால் வாண்டர்வால்ஸ் கவர்ச்சி விசையைவிட வலிமையானது (>20 KJ $mol^{-1}$) ஹைட்ரஜன் பிணைப்பானது, ஆவி அழுத்தம் ($H_2O$ மற்றும் $H_2S$) கொதிநிலை, திரவங்கள் ஒன்றோடு ஒன்று கலக்கும் தன்மை ($H_2O$ மற்றும் $C_2H_5OH$), பரப்பு இழுவிசை, அடர்த்தி, பாகுநிலைதன்மை, ஆவியாதல் மற்றும் உருகுதலின் வெப்பம் போன்ற பல்வேறு இயற்பண்புகளில் முக்கிய விளைவுகளை ஏற்படுத்துகிறது.

### மூலக்கூறினுள் நிகழும் ஹைட்ரஜன் பிணைப்பு

மூலக்கூறினுள் நிகழும் ஹைட்ரஜன் பிணைப்பானது ஒரு தனித்த மூலக்கூறுக்கு உள்ளாகவே நிகழ்கிறது.




ஆர்தோ – நைட்ரோ பீனால்

சாலிசிலால்டிஹைடு

படம்: 4.6 மூலக்கூறினுள் நிகழும் ஹைட்ரஜன் பிணைப்புகள்


### மூலக்கூறுகளுக்கிடைப்பட்ட ஹைட்ரஜன் பிணைப்பு

மூலக்கூறுகளுக்கிடைப்பட்ட ஹைட்ரஜன் பிணைப்பானது இரண்டு வேறுபட்ட மூலக்கூறுகளுக்கிடையே நிகழ்கிறது. ஹைட்ரஜன் பிணைப்பு இடைவினையை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக ஹைட்ரஜன் வழங்கி மற்றும் ஹைட்ரஜன் ஏற்பியினை தகுந்த இடத்தில் பெற்றுள்ள ஒரே மாதிரியான மூலக்கூறுகள் அல்லது வெவ்வேறு மூலக்கூறுகளுக்கிடையே இத்தகைய ஹைட்ரஜன் பிணைப்பு


உருவாகிறது. எடுத்துக்காட்டாக: மூலக்கூறுகளுக்கு இடைப்பட்ட ஹைட்ரஜன் பிணைப்பானது, அம்மோனியா மூலக்கூறுகளுக்கிடையே நிகழலாம். அல்லது நீர் மூலக்கூறுகளுக்கிடையேயோ அல்லது அம்மோனியா மற்றும் நீர் மூலக்கூறுகளுக்கிடையேயோ உருவாகலாம்.

நீர் மூலக்கூறுகள் அவைகளுக் கிடையே வலிமையான ஹைட்ரஜன் பிணைப்பை உருவாக்குகிறது. எடுத்துக்காட்டாக ஒவ்வொரு நீர் மூலக்கூறும், மற்ற நான்கு நீர் மூலக்கூறுகளுடன் ஹைட்ரஜன் பிணைப்பால் பிணைக்கப்பட்டுள்ளது. குறைந்த தூரம்(100 pm) சகப்பிணைப்பையும் (திடக் கோடுகள்) மற்றும் அதிக தூரம் (180pm) ஹைட்ரஜன் பிணைப்பையும் (விடுபட்ட கோடுகள்) குறிக்கின்றன.

பனிக்கட்டியில் உள்ள ஒவ்வொரு ஆக்ஸிஜன் அணுவும், நான்முகி வடிவில் நான்கு நீர் மூலக்கூறுகளுடன் ஹைட்ரஜன் பிணைப்பின் மூலம் சூழப்பட்டுள்ளன. ஒவ்வொரு நீர் மூலக்கூறிலும் உள்ள இரண்டு ஹைட்ரஜன் அணுக்கள் மற்றும் ஆக்சிஜன் அணுவின் மீது இரண்டு ஜோடி தனித்த எலக்ட்ரான்கள், மேற்கண்டுள்ள முப்பரிமாண வடிவமைப்பு ஏற்பட வழிவகை செய்கிறது. இவ்வாறான அமைப்பு ஒரு திறந்த வடிவமைப்பினை உருவாக்குகிறது. $0^{o}$ C ல் நீருடன் ஒப்பிடும்போது, பனிக்கட்டியானது குறைவான அடர்த்தியினைக் கொண்டுள்ளதற்கு இவ்வமைப்பே காரணமாக அமைகிறது. பனிக்கட்டியில் ஹைட்ரஜன் பிணைப்பு நீண்ட எல்லைவரை காணப்படுகிறது. ஆனால், திரவ நிலையில் உள்ள நீரில் ஹைட்ரஜன் பிணைப்பு குறைவான எல்லையில் மட்டும் காணப்படுகிறது. எனவே திரவ நிலையில் உள்ள நீரின் அடர்த்தி அதிகம்.



படம்: 4.7 (அ) பனிக்கட்டியின் வடிவம் ஹைட்ரஜன் பிணைப்புகள்





படம்: 4.7 (ஆ) நீரிலுள்ள ஹைட்ரஜன் பிணைப்பு

ஹைட்ரஜன் பிணைப்பானது, எளிய மூலக்கூறுகளில் காணப்படுவது மட்டும் அல்லாமல், புரதம் போன்ற சிக்கலான உயிரி மூலக்கூறுகளிலும் காணப்படுகின்றன. மேலும் அவை உயிரியல் செயல்முறைகளுக்கு மிக முக்கியமானதாகும். எடுத்துக்காட்டாக டி ஆக்ஸி ரிபோ நியூக்ளிக் அமிலத்தின்(DNA) சுருள் வடிவிலான இரு இழைகள் ஒன்றோடொன்று இணைந்திருக்க ஹைட்ரஜன் பிணைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது.



Unit 4 - Sridhar.indd 127 07-01-2021 14:44:51




படம் : 4.8 DNA மூலக்கூறுகளில் ஹைட்ரஜன் பிணைப்பு

உங்களுக்குத் தெரியுமா ?

**ஹைட்ரஜன் சார்ந்த முக்கியமான நிகழ்வுகள்**

| | |
|---|---|
| 1670 | ராபர்ட் பாயில் உலோகங்களை அமிலங்களுடன் வினைபுரியச் செய்து தீப்பற்றும் வாயுவை உருவாக்கினார். |
| 1700 | நிக்கோலஸ் லெமரி சல்பியூரிக் அமிலம் / இரும்பு வினையில் வெளிவரும் வாயு காரத்தில் வெடிக்கும் தன்மையுடையதை நிரூப்பித்தார். |
| 1766 | ஹென்றி கேவென்டிஸ் ஜிங்க் உலோகம் ஹைட்ரோ குளோரிக் அமிலத்துடன் வினைபுரிந்து ஹைட்ரஜன் வாயு வெளிவருதலைக் கண்டறிந்து வாயுவை தனியே பிரித்தார். |
| 1780 | ஃபெலிஸ் ஃபன்டான நீர்வாயு மாற்று நிலையைக் கண்டறிந்தார் |
| 1783 | ஆண்டனி லவாய்சியர் தனிமத்தை ஹைட்ரஜன் எனப் பெயரிட்டார். (கிரேக்க மொழியில் நீர் உருவாக்கி எனப்பொருள்) |
| 1800 | வில்லியம் நிக்கல்சன் மற்றும் ஆண்டனி கார்லிசில் நீரினை மின்னாற் பகுத்து ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் ஆகச் சிதைவுறச் செய்தார். |
| 1801 | ஹம்ஃப்ரி டேவி எரிதல் மின்கலம் என்ற கருத்தைக் (concept) கண்டறிந்தார். |
| 1806 | ஃபிரான்காயிஸ் I. டி ரிவாஸ் ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜனைக் கொண்டு முதன் முதலில் உள் எரி எந்திரத்தை வடிவமைத்தார். |
| 1811 | ஹம்ஃப்ரி டேவி வாயு ஹைட்ரேட்டுகளைக் கண்டறிந்தார். |
| 1818 | J.L. தெனார்டு $BaO_2$ல் இருந்து ஹைட்ரஜன் பெராக்சைடை உருவாவதை கண்டறிந்து தயாரித்தார். |
| 1834 | மைக்கேல் ஃபாரடே மின்னாற்பகுப்பு விதிகளை வெளியிட்டார். |
| 1866 | T. கிரஹாம் ஹைட்ரஜன் பெலேடியத்தால் உறிஞ்சப்படுவதைக் கண்டறிந்தார். |
| 1897 | பால் செபாடியர் ஹைட்ரஜன் ஏற்றத்தை செபாடியர் வினையில் பயன்படுத்தினார். |

உங்களுக்குத் தெரியுமா ?


| | |
|---|---|
| 1898 | ஜேம்ஸ் தீவார் ஹைட்ரஜனை திரவமாக்கினார். |
| 1909 | S.P.L. சாரன்சன் ஹைட்ரஜன் அயனிச் செறிவைக் குறிக்கும் $P_H$ அளவீட்டு முறையை அறிமுகப்படுத்தினார். |
| 1910 | ஃபிரிட்ஸ் ஹேபர், ஹேபர் முறைக்கு காப்புரிமைப் பெற்றார். |
| 1913 | நீல்ஸ் ஃபோர் ரிட்பெர்க் வாய்பாடு கொண்டும் ஹைட்ரஜன் நிறமாலை கொண்டும், குவாண்டம் நிலையில் ஹைட்ரஜனின் ஆர்பிட்டால்களில் உள்ள எலக்ட்ரானின் அமைவிடத்தை தெளிவுற விவரித்தார். |
| 1924 | R. மெக்கே – ஆர்த்தோ மற்றும் பாரா ஹைட்ரஜனைக் கண்டறிந்தார். |
| 1931 | ஹரால்டு C. யுரே டியூட்ரியத்தைக் கண்டறிந்தார். |
| 1932 | ஹரால்டு C. யுரே கனநீரைக் கண்டறிந்தார். |
| 1932 | L. P. ஹேமட் மிக வலிமையுள்ள அமிலங்களின் அமிலச் சார்பினை முன் மொழிந்தார். |
| 1934 | எர்ன்ஸ்ட் ரூதர்போர்டு, மார்க் ஒலிபண்ட் மற்றும் பால் ஹர்டெக் டிரிட்டியத்தைக் கண்டறிந்தார். |
| 1935 | யூஜின் விக்னர் மற்றும் H.B. ஹன்டிங்க்டன் உலோக ஹைட்ரஜனைக் கண்டறிந்தார். |
| 1947 | A.E.பின்ஹோல்ட், A.C.பாண்ட், H.I.ஷேலிங்ஷர் $LiAlH_4$–ஐக் கண்டறிந்தனர். மேலும் அதனை மிகச் சிறந்த ஒடுக்கும் வினைபொருளாக நிரூபித்தனர். |
| 1950 | V. பால்ஃபட்டிங்ஸ் மற்றும் P.ஹர்டெக் முதன் முதலில் காற்றிலுள்ள டிரிட்யத்தைக் கண்டறிந்தனர். |
| 1967 | அஹிரா ஃபியுஜிஸ்மா ஒளியால் தூண்டப்பட்ட நீரின் சிதைவு நிகழ்வினைக் கண்டறிந்தார். |
| 1971 | அலெக்ஸாண்டர் I. கிளாஸ் மற்றும் போரிஸ் I. சென்டர் நிக்கல் ஹைட்ரஜன் மின்கலத்திற்கு காப்புரிமைப் பெற்றார். (patented) |
| 1990 | சோலார் வாஸர்டோப் பேயர்ன் முதன் முதலில் சூரிய ஒளி கொண்டு ஹைட்ரஜன் தயாரிப்பு நிலையத்தைத் துவக்கினார். |
| 2000 | பீட்டர் டோன்னிஸ் ஹைட்ரஜன் 0.15K–ல் மிக அதிபாயும் செயல் திறனைக் (Super fluidity) காட்டினார். |



Unit 4 - Sridhar.indd 129 07-01-2021 14:44:52

### உலோக ஹைட்ரைடு (Hydrogen Sponge)

உங்களுக்குத் தெரியுமா ?




பெலேடியம் – ஹைட்ரஜன் அமைப்பு ஒரு நன்கு ஆய்ந்தறியப்பட்ட இருமை ஹைட்ரைடு ஆகும். ஹைட்ரஜன் ஆனது பெலேடியத்துடன் தனித்த ஒருமைத் தன்மையுடைய வழியில் இடைவினைப் புரிந்து ஒரு கட்டுப்படுத்தப்பட்ட மோனோ ஹைட்ரைடை (PdH) உருவாக்குகிறது. இதனை வெப்பப்படுத்தும்போது ஹைட்ரஜன் அணுக்கள் உலோகத்தின் வழியே விரவி, புறப்பரப்பினை அடைகின்றன மேலும் மீள இணைந்து மூலக்கூறு ஹைட்ரஜனை உருவாக்குகின்றன. வேறெந்த வாயுக்களும், பெலேடியத்துடன் இத்தகைய வழியில் இடைவினைப் புரியும் பண்பினை பெற்றிருப்பதில்லை. எனவே, இச்செயல்முறையானது ஹைட்ரஜன் வாயுவை பிறவாயுக்களிலிருந்து பிரித்தெடுக்கப் பயன்படுகிறது.


$$2\ Pd\ (s) + H_2\ (g) \rightarrow 2\ PdH\ (s).$$

ஹைட்ரஜன் ஆனது பெலேடியத்தின் புறப்பரப்பில் எளிதில் பரப்பு கவரப்படுவதுடன் அங்கே அணுநிலை ஹைட்ரஜனாக பிரிகையுறுகின்றன. பிரிகையுற்ற அணுக்கள் படிக அணிக்கோவையின் இடைவெளிகளில் அல்லது வெற்றிடங்களில் (எண்முகி / நான்முகி) உட்புகுகின்றன.

நுட்பரீதியாக உலோக ஹைட்ரைடு உருவாதல் ஒரு வேதிவினையின் காரணமாக உருவாகிறது. ஆனால் இது இயற் சேமிப்பு முறை போன்று செயல்படுகிறது. அதாவது நீர் பஞ்சை (water sponge) போன்று இது உறிஞ்சுதல் மற்றும் வெளியிடுதலை நிகழ்த்துகிறது. இவ்வாறு உலோகங்கள் மற்றும் உலோகக் கலவைகளினால் ஹைட்ரஜனின் மீள் முறையில் ஏற்கப்படுதல் என்பது ஹைட்ரஜன் சேமிப்பு மற்றும் மீள்மின்னூட்டம் பெறச்செய்ய இயலும் உலோக ஹைட்ரைடு மின்கலன் ஆகியப் பயன்பாடுகளுக்கு ஏற்றதாக உள்ளது.

### ஹைட்ரஜன் – எதிர்கால எரிபொருள் (Future Fuel)

உங்களுக்குத் தெரியுமா ?




புவி வெப்பமடைதலின் விளைவுகள் மற்றும் குறைவான புதை படிம எரிபொருள் கையிருப்பானது புதிய மாற்று எரிபொருள்களுக்கானத் தேடலை நோக்கி உலகின் பார்வையினைத் திருப்பியுள்ளது . இந்த மாற்று எரிபொருளுக்கு ஹைட்ரஜன் ஒரு முக்கியமான பொருளாக உள்ளது ஏனெனில் ஹைட்ரஜனை எரிக்கும் போது முழுவதுமாக எரிகின்றது மேலும் சுற்றுச்சூழல் மாசுபடுத்திகள் ஏதும் உருவாவதில்லை எனவே ஹைட்ரஜனை நேரடியாக எரிபொருளாகப் பயன்படுத்தலாம். மேலும் நடைமுறையில் உள்ள கேசோலின் (பெட்ரோல்) / டீசல் / மண்ணெண்ணெய் மூலம் இயங்கும் இயந்திரங்களை மாற்றியமைக்க முடியும் அல்லது இதனை ஆக்சிஜனுடன் எரிமின்கலன்களில் (fuel cells) மறைமுகமாக பயன்படுத்தி மின்னாற்றலை உற்பத்தி செய்ய முடியும். ஆனால் இப்பயன்பாட்டில் வரக்கூடிய சில சிக்கல்களை நாம் சரிசெய்ய வேண்டும். இதனை உருவாக்கும் செலவு அதிகமாக உள்ளது. மேலும் அதிக புதைவடிவ எரிபொருட்களைப் பயன்படுத்தும் தேவை உள்ளது. இது இயற்கையில் கிடைக்கும்போது எளிதில் ஆவியடையக் கூடியதாகவும் மற்றும் தீப்பற்றி எரியும் தன்மையும் கொண்டுள்ளதால் இதன் சேகரிப்பும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச்செல்வதும் கடினமானதாகும். மிகச் சிறிய மூலக் கூறாகவும் இருப்பதால் எளிதில் கசியும் (கசிவடையும்) பண்பினையும் கொண்டுள்ளது.



Unit 4 - Sridhar.indd 130 07-01-2021 14:44:53

## பாடச்சுருக்கம்

ஹைட்ரஜனானது ஒரு எலக்ட்ரான் மற்றும் ஒரு புரோட்டானைக் கொண்ட ஒரு எளிய அணுவாகும். இது புரோட்டியம், டியூட்டிரியம் மற்றும் டிரிட்டியம் ஆகிய மூன்று ஐசோடோப்புகளைக் கொண்டுள்ளது. ஹைட்ரஜன் வாயு நிலையில் ஈரணு மூலக்கூறாகக் காணப்படுகிறது, இது ஆர்த்தோ ஹைட்ரஜன், பாரா ஹைட்ரஜன்ஆகிய இரு அணுக்கரு சுழற்சி மாற்றியங்களைக் கொண்டுள்ளது, அணு நிலையில் உள்ள ஹைட்ரஜனின் எலக்ட்ரான் அமைப்பு $1s^1$. இதன் பண்புகளானது, கார உலோகங்கள் மற்றும் ஹேலஜன்களின் பண்புகளை ஒத்துள்ளது இதன் எலக்ட்ரான் அமைப்பு மற்றும் பெரும்பாலான சேர்மங்களில் இதனுடைய ஆக்சிஜனேற்ற எண் +1 ஆக இருப்பதால் தனிம வரிசை அட்டவணையில் கார உலோகங்களுடன் முதல் தொகுதியில் வைக்கப்பட்டுள்ளது.

ஆய்வகத்தில், உலோகங்களை, அமிலங்களுடன் வினைபுரியச் செய்து ஹைட்ரஜன் தயாரிக்கப்படுகிறது. தொழில் ரீதியாக ஹைட்ரோ கார்பன்களை நீராவி – மீட்டுருவாக்கம் செய்வதன் மூலம் ஹைட்ரஜன் தயாரிக்கப்படுகிறது. கனநீரை மின்னாற்பகுத்தல் செய்வதன் மூலம் டியூட்டிரியத்தினைப் பெற முடியும், கதிரியக்கத் தன்மை உடைய டிரிட்டியத்தை, லித்தியத்தினை மெதுவான நியூட்ரான்களைக் கொண்டு தாக்கும் அணுக்கரு மாற்ற வினைகள் மூலம் தயாரிக்கலாம்.

ஹைட்ரஜனானது, ஆக்சிஜன் மற்றும் ஹேலஜன்கள் ஆகிய அலோகங்களுடன் வினைபுரிந்து முறையே நீர் மற்றும் ஹேலைடுகளைத் தருகின்றன. இது சிறந்த ஒடுக்கும் காரணியாகும். டியூட்டிரியம் ஹைட்ரஜனுடன் பதிலீட்டு வினைகளில் ஈடுபடுகிறது.

12.3 வருடங்கள் அரைவாழ்காலம் உடைய டிரிட்டியம், $\beta$ துகள்களை தன்னிச்சையாக உமிழ்கிறது, அம்மோனியா, மெத்தனால் போன்றவை தயாரித்தல் மற்றும் எண்ணெயை ஹைட்ரஜனேற்றம் செய்தல், உலோக ஆக்ஸைடுகளை ஒடுக்குதல் ஆகியவற்றிற்கு ஹைட்ரஜன் பெருமளவில் பயன்படுகிறது. இதனை எரிபொருளாகவும் பயன்படுத்தலாம்.

நீரானது, ஹைட்ரஜனின் ஈரியல்புத் தன்மை உடைய ஆக்சைடாகும் இது பொதுவான கரைப்பானாகப் பயன்பட்டு வருகிறது, இது ஆக்சைடுகளை நீராற்பகுப்பு அடையச் செய்கிறது மேலும் சோடியம் மற்றும் பேரியம் போன்ற உலோகங்களுடன் உலோக ஹைட்ராக்சைடுகளைத் தருகிறது.

கால்சியம் மற்றும் மெக்னீசியத்தின் உப்புகள் நீரில் கரைந்துள்ளதால் நீரானது கடினத்தன்மை உடையதாக இருக்கிறது. கிளார்க் முறையினைப் பயன்படுத்தி தற்காலிகக் கடினத்தன்மையை நீக்கலாம். ஹைட்ரஜன் பெராக்சைடு ஆனது நீரைப் போலவே ஹைட்ரஜனின் மற்றும் ஒரு முக்கியமான ஆக்சைடு ஆகும்.

ஹைட்ரஜன் பெராக்சைடு வீரியம் குறைந்த புரைத்தடுப்பானாகவும் மற்றும் காகித துணித் தொழிற்சாலைகளில் வெளுக்கும் வினை பொருளாகவும் பயன்படுகிறது. புளூரின், நைட்ரஜன், ஆக்சிஜன் போன்ற எலக்ட்ரான் கவர்த்தன்மை அதிகம் உடைய அணுக்களுடன் ஹைட்ரஜனானது வலிமை குறைந்த ஹைட்ரஜன் பிணைப்பினை ஏற்படுத்துகிறது. ஹைட்ரஜன் பிணைப்பானது உயிரி மூலக்கூறுகளான புரோட்டீன், DNA போன்றவற்றில் காணப்படுகிறது.

## மதிப்பீடு

**I. சரியான விடையினைத் தெரிவு செய்க**

1. கீழ்க்கண்ட கூற்றுகளில் ஹைட்ரஜன் பற்றிய தவறான கூற்று எது (NEET 2006)

   (அ) ஹைட்ரஜன் அயனி, $H_3O^+$ கரைசலில் தனித்து உள்ளது

   (ஆ) டைஹைட்ரஜன் ஒடுக்க வினைபொருளாக செயல்படுகிறது

   (இ) ஹைட்ரஜன் மூன்று ஐசோடோப்புகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் டிரிட்டியம் அதிக அளவில் காணப்படுகிறது.

   (ஈ) அயனி உப்புகளில், எப்போதும் ஹைட்ரஜன் நேர் அயனியாகக் காணப்படுவதில்லை.

2. நீர் வாயு என்பது

   (அ) $H_2O$ (g) (ஆ) $CO + H_2O$ (இ) $CO + H_2$ (ஈ) $CO + N_2$

3. ஆர்த்தோ, பாரா டைஹைட்ரஜன் குறித்து கீழ்க்கண்டுள்ள கூற்றுகளில் எது தவறானது.

   (அ) அவைகள் உட்கரு சுழற்சி ஐசோடோப்புகள் (மாற்றியங்கள்)

   (ஆ) ஆர்த்தோ மாற்றியம் பூஜ்ஜிய உட்கரு சுழற்சியையும், பாரா மாற்றியம் ஒரு உட்கரு சுழற்சியும் கொண்டுள்ளது.

   (இ) குறைந்த வெப்பநிலை, பாரா மாற்றியத்திற்கு சாதகமாக உள்ளது.

   (ஈ) பாரா மாற்றியத்தின் வெப்ப கடத்துதிறன், அதன் ஆர்த்தோ மாற்றியத்தை விட 50% அதிகம்

4. அயனி ஹைட்ரைடுகளை உருவாக்குபவை.

   (அ) ஹேலஜன்கள் (ஆ) சால்கோஜென்கள் (இ) மந்த வாயுக்கள்

   (ஈ) தொகுதி 1 – தனிமங்கள்

5. டிரிட்டியம் உட்கரு கொண்டுள்ளது __________________________

   (அ) 1p +0 n (ஆ) 2p +1n (இ) 1p +2n (ஈ) இவற்றில் ஏதும் இல்லை

6. வேதிவினைக்கூறு விகிதத்தின் அடிப்படையில் அமையாத (non–stoichiometric) ஹைட்ரைடுகளை உருவாக்குபவை

   (அ) பெலேடியம், வெனேடியம் (ஆ) கார்பன், நிக்கல்

   (இ) மாங்கனீசு, லித்தியம் (ஈ) நைட்ரஜன், குளோரின்



Unit 4 - Sridhar.indd 132 07-01-2021 14:44:53

7. கூற்று: கடின நீரை சலவைச் சோடாவுடன் வினைப்படுத்துவதன் மூலம்,அதன் நிரந்தரக் கடினத் தன்மையினை நீக்கலாம்.

காரணம்: சலவைச்சோடா, கடின நீரில் கரைந்துள்ள கால்சியம் மற்றும் மெக்னீசியம் குளோரைடு மற்றும் சல்பேட்டுகளுடன் வினைபுரிந்து கரையாத கார்பனேட்டுகளை உருவாக்குகிறது.

(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, மற்றும் காரணம், கூற்றிற்கு சரியான விளக்கமாகும்

(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம், கூற்றிற்கு சரியான விளக்கமல்ல.

(இ) கூற்று சரியானது ஆனால் காரணம் தவறானது

(ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறானவை.

8. ஒரு மீனின் உடலில், அதன் மொத்த உடல் நிறையில் 1.2g ஹைட்ரஜன் உள்ளது. அனைத்து ஹைட்ரஜனும், டியூட்டிரியத்தால் பதிலீடு செய்யப்படும் போது மீனின் நிறை அதிகரிப்பு

(அ) 1.2g (ஆ) 2.4g (இ) 3.6g (ஈ) $\sqrt{4.8}$ g

9. நீரின் கடினத்தன்மையை பருமனறி பகுப்பாய்வின் மூலம் தீர்மானிக்கப் பயன்படும் காரணி

(அ) சோடியம் தயோ சல்பேட் (ஆ) பொட்டாசியம் பெர்மாங்கனேட்

(இ) ஹைட்ரஜன் பெராக்சைடு (ஈ) EDTA

10. நீரின் நிரந்தர கடினத்தன்மைக்கு காரணம்

(அ) $Ca(HCO_3)_2$ (ஆ) $Mg(HCO_3)_2$ (இ) $CaCl_2$ (ஈ) $MgCO_3$

11. நீரின் கடினத்தன்மையை மென்மையாக்கப் பயன்படும் சியோலைட்டானது, நீரேற்றம் அடைந்த

(அ) சோடியம் அலுமினியம் சிலிகேட் (ஆ) கால்சியம் அலுமினியம் சிலிகேட்

(இ) ஜிங்க் அலுமினியம் போரேட் (ஈ) லித்தியம் அலுமினியம் ஹைட்ரைடு

12. வணிக ரீதியான ஹைட்ரஜன் பெராக்சைடில் ($H_2O_2$) 100–கனஅளவு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பொருள்

(அ) திட்டவெப்ப அழுத்த நிலையில் (STPல்), 1mL $H_2O_2$ ஆனது 100mL $O_2$ஐத் தரும்.

(ஆ) திட்டவெப்ப அழுத்த நிலையில் (STPல்), 1L $H_2O_2$ ஆனது 100mL $O_2$ஐத் தரும்.

(இ) 1L $H_2O_2$ ஆனது 22.4L $O_2$ஐத் தரும்.

(ஈ) திட்டவெப்ப அழுத்த நிலையில் (STPல்), 1mL $H_2O_2$ ஆனது ஒரு மோல் $O_2$ஐத் தரும்.

13. ஈதரின் முன்னிலையில், பொட்டாசியம் டைகுரோமேட் கரைசலுடன் ஹைட்ரஜன் பெராக்சைடு சேர்த்து குலுக்கப்படும்போது, ஈதர் அடுக்கானது நீலநிறமாக மாறுவதற்குக் காரணமாக, உருவாவது

(அ) $Cr_2O_3$ (ஆ) $CrO_4^{2-}$

(இ) $CrO(O_2)_2$ (ஈ) இவற்றில் ஏதும் இல்லை

14. ஒரு மோல் அமிலம் கலந்த $KMnO_4$யை நிறமிழக்கச் செய்யத் தேவைப்படும் $H_2O_2$ன் மோல்களின் எண்ணிக்கை.

(அ) $\frac{1}{2}$ (ஆ) $\frac{3}{2}$ (இ) $\frac{5}{2}$ (ஈ) $\frac{7}{2}$

15. 1.5 N $H_2O_2$ ன் கனஅளவுச் செறிவு

(அ) 1.5 (ஆ) 4.5 (இ) 16.8 (ஈ) 8.4

16. $H_2O$ மற்றும் $H_2O_2$ மூலக்கூறுகளில் உள்ள ஆக்ஸிஜன் அணுவின் இனக்கலப்பாதல் முறையே

(அ) SP மற்றும் $SP^3$ (ஆ) SP மற்றும் SP (இ) SP மற்றம் $SP^2$ (ஈ) $SP^3$ மற்றும் $SP^3$

17. $H_3PO_2 + D_2O \rightarrow H_2DPO_2 + HDO$ என்ற வினையிலிருந்து ஹைப்போ பாஸ்பரஸ் அமிலம் ஒரு

(அ) முக்காரத்துவ அமிலம் (ஆ) இருகாரத்துவ அமிலம்

(இ) ஒரு காரத்துவ அமிலம் (ஈ) இவற்றுள் ஏதுமில்லை

18. திட பனிக்கட்டியில், ஆக்சிஜன் அணுவானது

(அ) 4 ஹைட்ரஜன் அணுக்களால் நான்முகி வடிவில் சூழப்பட்டுள்ளது

(ஆ) 2 ஹைட்ரஜன் அணுக்கள் மற்றும் நான்கு ஹைட்ரஜன் அணுக்களால் எண்முகி வடிவில் சூழப்பட்டுள்ளது.

(இ) 2 ஹைட்ரஜன் மற்றும் 2 ஆக்ஸிஜன் அணுக்களால் நான்முகி வடிவில் சூழப்பட்டுள்ளது

(ஈ) 6 ஹைட்ரஜன் அணுக்களால் எண்முகி வடிவில் சூழப்பட்டுள்ளது.

19. ஆர்த்தோ நைட்ரோபீனால் மற்றும் பாரா நைட்ரோ பீனாலில் காணப்படும் H– பிணைப்புகள் முறையே,

(அ) மூலக்கூறுகளுக்கிடையேயான H– பிணைப்பு மற்றும் மூலக்கூறினுள் நிகழும் H– பிணைப்பு

(ஆ) மூலக்கூறினுள் நிகழும் H–பிணைப்பு மற்றும் மூலக்கூறுகளுக்கிடையேயான H– பிணைப்பு

(இ) மூலக்கூறினுள் நிகழும் H– பிணைப்பு

(ஈ) மூலக்கூறினுள் நிகழும் H– பிணைப்பு மற்றும் H–பிணைப்பு இல்லை.

20. கனநீர் பயன்படுவது

(அ) அணுக்கரு வினைகளில் மட்டுப்படுத்தி

(ஆ) அணுக்கரு வினைகளின் குளிர்விப்பான்

(இ) (அ) மற்றும் (ஆ)

(ஈ) எதுவும் இல்லை

21. நீரானது

(அ) கார ஆக்சைடு (ஆ) அமில ஆக்சைடு

(இ) ஈரியில்பு ஆக்சைடு (ஈ) இவை எதுவுமில்லை

## II. சுருக்கமாக விடையளிக்கவும்

22. தனிம வரிசை அட்டவணையில் ஹைட்ரஜன் ஏன் ஹேலஜன்களுடன் வைக்கப்படவில்லை?

23. மூன்று வகையான சகப்பிணைப்பு ஹைட்ரைடுகளைக் குறிப்பிடுக.

24. HCl மற்றும் NaH ஆகியனவற்றுள் எந்த ஹைட்ரைடு திடப்பொருள் மீதான வாயு. உனது விடைக்கான காரணத்தினைக் கூறு.

25. 4–வது வரிசையில் உள்ள தனிமங்களின் ஹைட்ரைடுகளின் எதிர்பார்க்கப்படும் வாய்ப்பாட்டினை எழுதுக. வாய்ப்பாட்டின் போக்கு (trend) என்ன? இவ்வரிசையில் முதல் இரண்டு தனிமங்கள் மற்றவற்றிலிருந்து எவ்வாறு மாறுபடுகின்றன?

26. கீழ்க்கண்ட வினைகளுக்கு வேதிச் சமன்பாட்டினை எழுதுக.

(i) டங்க்ஸ்டன் (vi) ஆக்சைடுடன், ஹைட்ரஜனை வெப்பப்படுத்துதல்

(ii) ஹைட்ரஜன் வாயு மற்றும் குளோரின் வாயு

27. கீழ்க்கண்ட வேதி வினைகளை பூர்த்தி செய்து.

(அ) நீராற் பகுத்தல் (ஆ) ஆக்ஸிஜனேற்ற ஒடுக்க வினைகள்

(இ) நீரேற்ற வினைகள்

என வகைப்படுத்துக

(i) $KMnO_4 + H_2O_2 \rightarrow$

(ii) $CrCl_3 + H_2O \rightarrow$

(iii) $CaO + H_2O \rightarrow$

28. ஹைட்ரஜன் பெராக்சைடு ஒரு ஆக்சிஜனேற்றியாகவும், ஆக்சிஜன் ஒடுக்கியாகவும் செயல்படுகிறது. இக்கூற்றினை தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் நிரூபிக்கவும்.

29. கனநீரை குடிப்பதற்கு பயன்படுத்தலாம் என நீ கருதுகிறாயா?

30. நீர்வாயு மாற்ற வினை என்றால் என்ன?

31. தனிம வரிசை அட்டவணையில் ஹைட்ரஜனின் இடத்தை நியாயப்படுத்துக.

32. ஐசோடோப்புகள் (மாற்றியங்கள்) என்றால் என்ன? ஹைட்ரஜனின் ஐசோடோப்புகளின் பெயர்களை எழுதுக.

33. கனநீரின் பயன்களைத் தருக.

34. டியூட்டிரியத்தின் பதிலீட்டு வினைகளை விளக்குக.

35. பாரா ஹைட்ரஜனை, ஆர்த்தோ ஹைட்ரஜனாக எவ்வாறு மாற்றலாம்?

36. டியூட்ரியத்தின் பயன்களைக் கூறுக.

37. மின்னாற் பகுப்பு முறையில் ஹைட்ரஜன் தயாரித்தலை விளக்குக.

38. பொதுவாக பயன்படுத்தப்படும் உப்பில் உள்ள ஒரு முதல் தொகுதி உலோகம் (A) ஆனது (B) உடன் வினைபுரிந்து (C) என்ற சேர்மத்தினைத் தருகிறது. இச்சேர்மத்தில் ஹைட்ரஜன் –1 ஆக்சிஜனேற்ற நிலையில் காணப்படுகிறது. (B) ஆனது (D) என்ற வாயுவுடன் வினைப்பட்டு அனைத்துக் கரைப்பானான (E) ஐத் தருகிறது. சேர்மம் (D) ஆனது (A) உடன் வினைப்பட்டு (F) என்ற ஒரு வலிமையான காரத்தினைத் தருகிறது. A, B, C, D, E மற்றும் F யைக் கண்டறிக. வினைகளை விளக்குக.

39. ஹைட்ரஜனின் (A) என்ற ஐசோடோப்பானது 16ம் தொகுதி, 2வது வரிசையில் உள்ள ஈரணு மூலக்கூறுகளுடன் வினைபுரிந்து அணுக்கரு உலைகளில் மட்டுப்படுத்தியாகச் செயல்படும் (B) என்ற சேர்மத்தினைத் தருகிறது. (A) ஆனது (C) – $C_3H_6$ உடன் சேர்க்கை வினைக்கு உட்பட்டு (D)யைத் தருகிறது. A, B, C மற்றும் Dயைக் கண்டறிக.

40. $NH_3$ ஆனது, 15ம் தொகுதியில் உள்ள பிற தனிமங்களின் ஹைட்ரைடுகளைக் காட்டிலும் அதிக உருகுநிலை மற்றும் கொதிநிலையைக் கொண்டுள்ளது – விளக்குக.

41. இடைச் செருகல் ஹைட்ரைடுகள் அதில் உள்ள உலோகங்களைக் காட்டிலும் குறைவான அடர்த்தியினைப் பெற்றுள்ளது ஏன்?

42. ஹைட்ரஜனை சேமித்து வைக்க உலோக ஹைட்ரைடுகள் எவ்வகையில் பயன்படும் என நீ எதிர்பார்க்கின்றாய்?

43. $NH_3$, $H_2O$ மற்றும் HF ஆகியவற்றை அவற்றின் ஹைட்ரஜன் பிணைப்புத் தன்மையின் ஏறு வரிசையில் வரிசைப்படுத்துக. தங்களது வரிசைப்படுத்தலுக்கான அடிப்படையினை விளக்குக.


44. $H_2O$ மற்றும் $H_2O_2$ன் வடிவமைப்புகளை ஒப்பிடுக.



Unit 4 - Sridhar.indd 136 07-01-2021 14:44:55

3EKS3Z

## கருத்துவரைபடம்



அலகு 5

# கார மற்றும் காரமண் உலோகங்கள்





பாறை உப்பு



சில்வைட்



ஸ்போடுமின்

## கற்றலின் நோக்கங்கள்

இப்பாடப்பகுதியைக் கற்றறிந்த பின்னர்

- கார உலோகங்கள் மற்றும் கார மண் உலோகங்களின் பண்புகளை விளக்குதல்.
- லித்தியம் மற்றும் பெரிலியத்தின் முரண்பட்ட பண்புகளை மீட்டறிதல்.
- கார மற்றும் கார மண் உலோகங்களின் பயன்களைப் பட்டியலிடுதல்
- கார மற்றும் கார மண் உலோகங்களினுடைய சேர்மங்களின் பொதுப் பண்புகளை விரிவாக விளக்குதல்.
- சோடியம் மற்றும் பொட்டாசியம், மெக்னீசியம் மற்றும் கால்சியம் ஆகியவற்றின் உயிரியல் முக்கியத்துவத்தினை அறிந்துணர்தல்.
- கால்சியம் ஆக்சைடு, கால்சியம் ஹைட்ராக்சைடு, ஜிப்சம் மற்றும் பாரீஸ்சாந்து ஆகியவற்றின் தயாரித்தல், பண்புகள் மற்றும் பயன்களை விளக்குதல்.

ஆகிய திறன்களை மாணவர்கள் பெறஇயலும்.

## 5.1 s-தொகுதி தனிமங்கள்

நவீன தனிம வரிசை அட்டவணையில், 1 மற்றும் 2 வது தொகுதியைச் சார்ந்த தனிமங்கள் s-தொகுதி தனிமங்கள் ஆகும். இந்த இரண்டு தொகுதிகளைச் சார்ந்த தனிமங்கள் முறையே கார மற்றும் காரமண் உலோகங்கள் என அறியப்படுகின்றன. இந்த அலகில், நாம் அவற்றின் பண்புகள், பயன்கள், முக்கியமான சேர்மங்கள் மற்றும் உயிரியல் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கற்கலாம்.



Unit 5 - Sridhar.indd 138 07-01-2021 14:53:15

## 5.2 கார உலோகங்கள்

கார உலோக சேர்மங்களைக் கொண்டுள்ள தாவர சாம்பலை குறிக்கும் al-qaliy எனும் வார்த்தையிலிருந்து alkali என்ற வார்த்தை வருவிக்கப்பட்டுள்ளது. எரிக்கப்பட்ட தாவர சாம்பலின் நீர்ச்சாறு பொட்டாஷ் எனப்படுகிறது.இதில்முக்கியமாக பொட்டாசியம் கார்பனேட் காணப்படுகிறது. கார உலோக தொகுதியானது லித்தியம், சோடியம், பொட்டாசியம்.ருபீடியம், சீசியம் மற்றும் ஃப்ரான்ஷியம், ஆகிய தனிமங்களைக் கொண்டுள்ளது.இவை அனைத்தும் உலோகங்கள். பொதுவாக இவை மிருதுவானவை மேலும் அதிக வினைதிறன்கொண்டவை.இத்தனிமங்கள் ஆக்சைடுகள் மற்றும் ஹைட்ராக்சைடுகளை உருவாக்குகின்றன. இவற்றின் சேர்மங்கள் காரத்தன்மை கொண்டவையாக உள்ளன.

### 5.2.1 கார உலோகங்களின் பொதுப் பண்புகள்:

கார உலோகங்கள் அதிக வினைதிறன் கொண்டவை மேலும் இயற்கையில் இவைகள் சேர்மங்களாக மட்டுமே காணப்படுகின்றன.ருபீடியம் மற்றும் சீசியம் ஆகியன மிகக் குறைவான அளவில் கார உலோக தாதுக்களுடன் சேர்ந்து காணப்படுகின்றன. ஃப்ரான்ஷியம் இயற்கையில் குறிப்பிடத்தகுந்த அளவில் காணப்படவில்லை. மேலும் மிக அதிக கதிரியக்கத் தன்மை கொண்டது. அதன் அதிக நிலைப்புத் தன்மை உடைய ஐசோடோப்பின் அரைவாழ் காலம் 21 நிமிடங்கள் மட்டுமே.

அட்டவணை 5.1 கார உலோகங்களின் வளம் மற்றும் அவற்றின் மூலங்கள்

| தனிமங்கள் | புவிப்பரப்பில் வளம் (%) | ஒப்புமை வளம் | கனிம மூலங்கள் |
|---|---|---|---|
| லித்தியம் | 0.0018 | 35 | ஸ்போடுமின்[$LiAl(SiO_3)$] |
| சோடியம் | 2.27 | 7 | பாறை உப்பு[NaCl] |
| பொட்டாசியம் | 1.84 | 8 | சில்வைட் [KCl] |
| ருபீடியம் | 0.0078 | 23 | தகுந்த மூலங்கள் இல்லை (லித்தியம் பிரித்தெடுத்தலில் துணைச் சேர்மங்களாக பெறப்படுகின்றன) |
| சீசியம் | 0.00026 | 46 | |




படம் 5.1 கார உலோகங்கள் Li, Na, மற்றும் K ஆகியன மண்ணெண்ணெயில் சேமிக்கப்பட்டுள்ளன.



Unit 5 - Sridhar.indd 139 07-01-2021 14:53:16

### எலக்ட்ரான் அமைப்பு:

கார உலோகங்களின் பொதுவான இணைதிறன் கூட்டு எலக்ட்ரான் அமைப்பு $ns^1$ , இங்கு n என்பது வரிசை எண்ணைக் குறிப்பிடுகிறது.

அட்டவணை 5.2 கார உலோகங்களின் எலக்ட்ரான் அமைப்பு

| தனிமம் | குறியீடு | அணு எண் | எலக்ட்ரான் அமைப்பு |
|---|---|---|---|
| லித்தியம் | Li | 3 | $[He]2s^1$ |
| சோடியம் | Na | 11 | $[Ne]3s^1$ |
| பொட்டாசியம் | K | 19 | $[Ar]4s^1$ |
| ருபீடியம் | Rb | 37 | $[Kr]5s^1$ |
| சீசியம் | Cs | 55 | $[Xe]6s^1$ |
| ஃப்ரான்ஷியம் | Fr | 87 | $[Rn]7s^1$ |

### பொதுவான ஆக்ஸிஜனேற்ற நிலை:

இந்த தனிமங்கள் அனைத்தும் அதிக நேர்மின்தன்மை கொண்டவையாக உள்ளன. இவைகள் எளிதில் தங்களின் இணைதிறன் கூட்டு எலக்ட்ரானை இழந்து ஒற்றை மின்சுமையுடைய நேர்மின் அயனிகளை ($M^+$) உருவாக்குகின்றன. கார உலோகங்கள் +1 என்ற ஒரே ஒரு ஆக்ஸிஜனேற்ற நிலையை மட்டுமே கொண்டுள்ளன.

### அணு மற்றும் அயனி ஆரங்கள்:

ஒவ்வொரு வரிசையிலும் கார உலோகங்கள், முதல் தனிமமாக இருப்பதால் அந்தந்த வரிசைகளில் அதிகபட்ச அணு மற்றும் அயனி ஆரங்களைக் கொண்டுள்ளன. தொகுதியில் மேலிருந்து கீழாகச் செல்லும்போது, கூடுகளின் எண்ணிக்கைஅதிகரிக்கிறது. எனவேஅணு மற்றும் அயனி ஆரங்கள் அதிகரிக்கின்றன. எதிர்பார்த்ததைப் போலவே, ஒற்றை இணைதிறன் அயனிகள் ($M^+$), அவற்றின் மூல அணுக்களைக்காட்டிலும் உருவளவில் சிறியவையாக உள்ளன.

அட்டவணை 5.3 கார உலோகங்களின் இயற் பண்புகள்

| இயற் பண்பு | Li | Na | K | Rb | Cs |
|---|---|---|---|---|---|
| அணு ஆரம் / உலோக ஆரம் (Å) | 1.52 | 1.86 | 2.27 | 2.48 | 2.65 |
| அயனி ஆரம் (Å) | 0.76 | 1.02 | 1.38 | 1.52 | 1.67 |
| உருகுநிலை ($^0$C) | 181 | 98 | 63 | 39 | 28.5 |
| கொதிநிலை ($^0$C) | 1347 | 881 | 766 | 688 | 705 |
| முதல் அயனியாக்கும் என்தால்பி (KJ $mol^{-1}$) | 520.2 | 495.8 | 418.8 | 403.0 | 375.7 |
| எலக்ட்ரான் கவர் தன்மை ( பாலிங் அளவீட்டில்) | 1.0 | 0.9 | 0.8 | 0.8 | 0.7 |
| அடர்த்தி (g $cm^{-3}$) | 0.54 | 0.97 | 0.86 | 1.53 | 1.90 |
| $M^+/M$க்கான திட்ட மின்னழுத்தம் $E^0$ (V) | -3.04 | -2.71 | -2.92 | -2.93 | -2.93 |
| நீரேற்று என்தால்பி (KJ $mol^{-1}$) | -506 | -406 | -330 | -310 | -276 |

### அயனியாக்கும் என்தால்பி

ஒவ்வொரு வரிசையிலும் உள்ள மற்ற தனிமங்களுடன் ஒப்பிடும்போது கார உலோகங்கள், குறைந்தபட்ச அயனியாக்கும் என்தால்பி மதிப்புகளைக் கொண்டுள்ளன. நாம் ஒரு தொகுதியில் மேலிருந்து கீழாகச் செல்லும்போது, அணுவின் உருவளவு அதிகரிப்பதால் அயனியாக்கும் என்தால்பி குறைகிறது.மேலும் உள்கூடுகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றன, இதன் விளைவாக திரைமறைப்பு விளைவும் அதிகரிக்கின்றது எனவே தொகுதியில் கீழாக செல்லச் செல்ல அயனியாக்கும் என்தால்பி குறைகிறது.

கார உலோகங்களின் இரண்டாம் அயனியாக்கும் என்தால்பி மதிப்புகள்




Unit 5 - Sridhar.indd 140 07-01-2021 14:53:16

மிக அதிகம்.கார உலோகங்களிலிருந்து ஒரு எலக்ட்ரானை நீக்குவதால் ஒற்றைஇணைதிறன் கொண்ட நேர்மின் அயனிகள் கிடைக்கின்றன, இந்த அயனிகள் மந்த வாயுக்களைப் போன்ற நிலையான எலக்ட்ரான் அமைப்பைப் பெற்றுள்ளன. எனவே, ஏற்கெனவே நிலைத்த எலக்ட்ரான் அமைப்பை அடைந்த அயனிகளிடமிருந்து, இரண்டாவதாக மேலும் ஒரு எலக்ட்ரானை நீக்குவது மிகக் கடினமாகிறது.

## நீரேற்று என்தால்பி

லித்தியம் உப்புகள், மற்ற தொகுதி–1 உலோக உப்புகளை விட அதிக அளவில் கரைகின்றன. எடுத்துக்காட்டாக $LiClO_4$ ஆனது $NaClO_4$ விட 12 மடங்கு அதிகமாகக் கரைகிறது., $KClO_4$, $RbClO_4$, மற்றும் $CsClO_4$–யின் கரைதிறனானது $LiClO_4$ இன் கரைதிறனைப்போல $10^{-3}$ மடங்கு குறைவானகரைதிறனை பெற்றுள்ளது. லித்தியம் உப்புகளின் அதிக கரைதிறனுக்கு காரணம் சிறிய உருவளவு கொண்ட $Li^+$ அயனியானது எளிதில் நீரேற்றம் அடைவதே ஆகும்.




படம் 5.2 கார உலோகங்களின் நீரேற்று என்தால்பி

## எலக்ட்ரான் கவர் தன்மை

ஒவ்வொரு வரிசைலும் உள்ள மற்ற தனிமங்களுடன் ஒப்பிடும்போது கார உலோகங்கள், குறைந்த எலக்ட்ரான் கவர் தன்மையைக் கொண்டுள்ளன. மற்ற தனிமங்களுடன் இவை வினைபுரியும் போது வழக்கமாக அயனிச் சேர்மங்களை உருவாக்குகின்றன. எடுத்துக்காட்டாக, கார உலோகங்கள் ஹேலஜன்களுடன் வினைப்பட்டு அயனி ஹேலைடுகளை உருவாக்குகின்றன.


## சுடர் நிறம் மற்றும் நிறமாலை

கார உலோக உப்புகளை அடர் ஹைட்ரோகுளோரிக் அமிலத்தில் சேர்த்து ஈரமாக்கி, அதனை பிளாட்டின கம்பியின் முனையில் வைத்து சுடரில் வெப்பப்படுத்தும்போது, பின் வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளவாறு அதற்குரிய சுடர் நிறங்களைக் காட்டுகின்றன.

அட்டவணை 5.4 சுடரின் நிறம் மற்றும் அலைநீளங்கள்

| தனிமம் | சுடரில் காட்டும் நிறம் | அலைநீளம் (nm) |
|---|---|---|
| லித்தியம் | கிரிம்சன் சிவப்பு | 670.8 |
| சோடியம் | மஞ்சள் | 589.2 |
| பொட்டாசியம் | லைலாக் (ஊதா) | 766.5 |
| ருபீடியம் | சிவப்பு கலந்த ஊதா | 780.0 |
| சீசியம் | நீலம் | 455.5 |

சுடரிலுள்ள வெப்பம், இணைதிறன் எலக்ட்ரானை உயர் ஆற்றல் மட்டத்திற்கு கிளர்வுறச் செய்கின்றது.இது மீளவும் அதன் இயல்பான ஆற்றல் நிலைக்கு திரும்பும்போது, அதிகப்படியான ஆற்றல், ஒளியாக வெளிவிடப்படுகிறது, இந்த ஒளியின் அலைநீளம் அட்டவணையில் காட்டியவாறு கட்புலனாகும் பகுதியில் உள்ளது.




படம் 5.3 சுடரில் கார உலோக உப்புகளின் நிறங்கள்.



Unit 5 - Sridhar.indd 141 07-01-2021 14:53:16

### 5.2.2 லித்தியத்தின் தனித்துவமான பண்பு

$Li^+$ அயனியின் தனித்துவமான பண்பிற்கான காரணங்கள் அதன் மிகச்சிறிய உருவளவு, அதிக முனைவாக்கும் திறன், அதிக நீரேற்றும் ஆற்றல் மற்றும் d-ஆர்பிட்டால்கள் இல்லாத்தன்மை போன்றவையே ஆகும்.

**அட்டவணை 5.5 லித்தியம் மற்றும் அத்தொகுதியில் உள்ள மற்ற தனிமங்களின் பண்புகளின் ஒப்பீடு**

| லித்தியம் | தொகுதியிலுள்ள மற்ற தனிமங்கள் |
|---|---|
| கடினமானது, அதிக உருகுநிலை மற்றும் கொதிநிலை கொண்டது | மிருதுவானவை , குறைந்த உருகுநிலை மற்றும் கொதிநிலை கொண்டவை |
| குறைந்தபட்ச வினைதிறன் உடையது (எடுத்துக்காட்டாக, இது ஆக்சிஜனுடன் வினைப்பட்டு சாதாரண ஆக்சைடை உருவாக்குகிறது, பெராக்சைடுகளை உருவாக்குவது மிகவும் கடினம், மேலும் இவற்றின் உயர் ஆக்சைடுகள் நிலைப்புத்தன்மை அற்றவை). | அதிக வினைதிறன் மிக்கவை |
| நைட்ரஜனுடன் வினைபுரிந்து $Li_3N$ ஐ தருகிறது. $6Li + N_2 \rightarrow 2Li_3N$ | வினை இல்லை |
| புரோமினுடன் மெதுவாக வினைபுரிகிறது. | வீரியத்துடன் வினைபுரிகின்றன |
| கார்பனுடன் நேரடியாக வினைபுரிந்து அயனி கார்பைடுகளை உருவாக்குகின்றன. எடுத்துக்காட்டாக $2Li + 2C \dashrightarrow Li_2C_2$ | கார்பனுடன் நேரடியாக வினைபுரிவதில்லை, ஆனால் கார்பன் சேர்மங்களுடன் வினைபுரிகின்றன $2Na + C_2H_2 \dashrightarrow Na_2C_2 + H_2$ |
| லித்தியம் நைட்ரேட் சிதைவடைந்து அதன் ஆக்சைடைத் தருகிறது | சிதைவடைந்து நைட்ரைட்டுகளைத் தருகின்றன |

**அட்டவணை 5.6 லித்தியம் மற்றும் மெக்னீசியத்திற்கு இடையே உள்ள ஒற்றுமைகள்**

| வ. எண் | பண்புகள் |
|---|---|
| 1 | லித்தியம் மற்றும் மெக்னீசியம் ஆகிய இரண்டும் அந்தந்த தொகுதிகளிலுள்ள மற்ற தனிமங்களை விட அதிக கடினத்தன்மை கொண்டுள்ளன |
| 2 | லித்தியம் மற்றும் மெக்னீசியம் ஆகிய இரண்டும் நீருடன் மெதுவாக வினைபுரிகின்றன. அவற்றின் ஆக்சைடுகள் மற்றும் ஹைட்ராக்சைடுகள் மிகக் குறைவாகக் கரைகின்றன மேலும் அவற்றின் ஹைட்ராக்சைடுகள் வெப்பப்படுத்தும்போது சிதைவடைகின்றன. |
| 3 | இரண்டும், நைட்ரஜனுடன் நேரடியாக இணைந்து , $Li_3N$ மற்றும் $Mg_3N_2$ ஆகிய நைட்ரைடுகளை உருவாக்குகின்றன, |
| 4 | இவை எந்த சூப்பர் ஆக்சைடுகளையும் உருவாக்குவதில்லை ஆனால் $Li_2O$ மற்றும் MgO போன்ற ஆக்சைடுகளை மட்டும் உருவாக்குகின்றன. |



Unit 5 - Sridhar.indd 142 07-01-2021 14:53:16

| வ. எண் | பண்புகள் |
|---|---|
| 5 | லித்தியம் மற்றும் மெக்னீசியத்தின் கார்பனேட்டுகளை வெப்பப்படுத்தும்போது சிதைந்து அவற்றின் ஆக்சைடுகள் மற்றும் $CO_2$ ஐ உருவாக்குகின்றன. |
| 6 | லித்தியம் மற்றும் மெக்னீசியம் ஆகிய இரண்டும் பைகார்பனேட்டுகளை உருவாக்குவதில்லை. |
| 7 | LiCl மற்றும் $MgCl_2$ ஆகிய இரண்டும் ஆல்கஹாலில் கரைகின்றன மேலும் இவை நீர் ஈர்க்கும் தன்மை கொண்டுள்ளன. அவைகள் நீர்க்கரைசல்களிலிருந்து $LiCl.2H_2O$ மற்றும் $MgCl_2.8H_2O$ ஆகிய ஹைட்ரேட்டுகளாக படிகமாகின்றன. |

### மூலைவிட்டத் தொடர்பு:

தொகுதி –1 ல் உள்ள முதல் தனிமம் (Li) மற்றும் அதன் மூலைவிட்டத்தில் தொகுதி –2 ல் இரண்டாவதாக அமைந்துள்ள தனிமம்(Mg) ஆகியவற்றிற்கிடையே உள்ள ஒத்த தன்மைகள் மூலைவிட்டத் தொடர்பு என்றழைக்கப்படுகிறது. இதற்கான காரணம் அவற்றின் ஒத்த உருவளவு ($r_{Li^+}$ = 0.766 Å மற்றும் $r_{Mg^{2+}}$ = 0.72 Å) மற்றும் ஒப்பிடத்தகுந்த எலக்ட்ரான் கவர்திறன் மதிப்புகள்($X_{Li}$ = 1.0; $X_{Mg}$= 1.2) ஆகியவையாகும்.

## 5.2.3 கார உலோகங்களின் வேதிப் பண்புகள்

கார உலோகங்கள் அதிக வினைதிறனைக் கொண்டுள்ளன. கார உலோகங்களின் இந்த வினைதிறன் Li லிருந்து Cs வரை அதிகரிக்கிறது. ஏனெனில் தொகுதியில் மேலிருந்து கீழாக அயனியாக்கும் ஆற்றல் குறைகிறது. அனைத்து கார உலோகங்களும், அதிக எலக்ட்ரான் கவர் தன்மை கொண்ட தனிமங்களான ஆக்சிஜன் மற்றும் ஹேலஜன்களுடன் மிக அதிக வீரியத்துடன் வினைபுரிகின்றன. கார உலோகங்களின் சில குறிப்பிடத்தகுந்த பண்புகள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

### ஆக்ஸிஜனுடன் வினை

அனைத்து கார உலோகங்களும் காற்று அல்லது ஆக்சிஜனில் தீவிரமாக எரிந்து,அவற்றின் புறப்பரப்பில் ஆக்சைடுகளை உருவாக்குகின்றன. லித்தியம் மோனாக்சைடை மட்டுமே உருவாக்குகிறது. சோடியம் மோனாக்சைடு மற்றும் பெராக்சைடை உருவாக்குகிறது. மற்ற தனிமங்கள் மோனாக்சைடு, பெராக்சைடு மற்றும் சூப்பர் ஆக்சைடுகளை உருவாக்குகின்றன. இந்த ஆக்சைடுகள் இயற்கையாகவே காரத்தன்மையைப் பெற்றுள்ளன.

$$4\,Li + O_2 \longrightarrow 2Li_2O \quad \text{(மோனாக்சைடு)}$$

$$2\,Na + O_2 \longrightarrow Na_2O_2 \quad \text{(பெராக்சைடு)}$$

$$M + O_2 \longrightarrow MO_2 \quad \text{(சூப்பர் ஆக்சைடு)}$$

(M= K, Rb,Cs)

### ஹைட்ரஜனுடன் வினை

அனைத்து கார உலோகங்களும் ஹைட்ரஜனுடன் சுமார் 673 K ( லித்தியம் 1073K வெப்பநிலையில்) வெப்பநிலையில் ஹைட்ரஜனுடன் வினைபுரிந்து அவற்றின் அயனி ஹைட்ரைடுகளை உருவாக்குகின்றன. ஹைட்ரஜனுடன் வினைபுரியும் திறன் கார உலோகங்களில் , Li லிருந்து Cs வரை செல்லச் செல்ல குறைகிறது.

$$2M + H_2 \longrightarrow 2\,M^+H^-$$

(M = Li, Na, K, Rb, Cs)

ஹைட்ரைடுகளின் அயனிப்பண்பு Li லிருந்து Cs வரை செல்லச்செல்ல அதிகரிக்கிறது.



Unit 5 - Sridhar.indd 143 07-01-2021 14:53:16

மேலும் அவற்றின் நிலைப்புத்தன்மை குறைகிறது. இந்த ஹைட்ரைடுகள் சிறந்த ஒடுக்கும் வினைபொருட்களாக செயல் புரிகின்றன, மேலும் அவற்றின் ஒடுக்கும் தன்மை தொகுதியில் மேலிருந்து கீழாக அதிகரிக்கிறது.

### ஹேலஜன்களுடன் வினை

கார உலோகங்கள் ஹேலஜன்களுடன் உடனடியாக வினைபுரிந்து MX என்ற அயனி ஹேலைடுகளைத் தருகின்றன. ஹேலஜன்களுடன் வினைபுரியும் திறன் கார உலோக தொகுதியில் மேலிருந்து கீழாக அதிகரிக்கிறது. ஏனெனில் அவற்றின் அயனியாக்கும் ஆற்றல் குறைகிறது.

$$2M + X_2 \longrightarrow 2\,MX$$

(M= Li, Na, K, Rb, Cs) (X= F, Cl, Br, I)

அனைத்து உலோக ஹேலைடுகளும் அயனிப் படிகங்கள் ஆகும். எனினும் லித்தியம் அயோடைடு, சகப்பிணைப்புப் பண்பை காட்டுகிறது. இதற்குக் காரணம் மிகச்சிறிய நேர்மின் அயனியானது எதிர்மின் அயனியை அதிக முனைவுறுத்தும் திறனை பெற்றுள்ளது. கூடுதலாக அயோடைடு அயனி மிகப்பெரியதாக இருப்பதால், $Li^+$ அயனியால் மிக அதிக அளவிற்கு முனைவுறுத்தப்பட முடியும்.

### திரவ அம்மோனியாவுடன் வினை

கார உலோகங்கள் திரவ அம்மோனியாவில் கரைந்து அடர் நீல நிறக் கரைசல்களைத் தருகின்றன. இந்தக் கரைசல்கள் மின்கடத்தும் தன்மை கொண்டவை. இவற்றின் கடத்துத்திறன் தூய உலோகங்களைப் போலவே உள்ளது (Hg ன் நியம கடத்துத்திறன் $10^4\ \Omega^{-1}$ திரவ அம்மோனியாவில் உள்ள சோடியத்தின் கடத்துத்திறன் $0.5 \times 10^4\,\Omega^{-1}$). திரவ அம்மோனியாவில் கார உலோக அணுக்கள் தங்களின் இணைதிறன் எலக்ட்ரான்களை இழப்பதே இதற்குக் காரணம். நேர்மின் அயனி மற்றும் எலக்ட்ரான் இரண்டும் அம்மோனியா ஏற்றம் அடைந்து, அம்மோனியா ஏறிய நேரயனி மற்றும் அம்மோனியா ஏறிய எலக்ட்ரான் ஆகியவற்றைத் தருகின்றன.

$$M + (x + y)NH_3 \rightarrow$$
$$[M(NH_3)_x\,]^+ + [e(NH_3)_y\,]^-$$

கரைசல் நீல நிறமாக இருப்பதற்கான காரணம், அம்மோனியா ஏறிய எலக்ட்ரான் கட்புலனாகும் ஒளி ஆற்றலை உறிஞ்சுகிறது, ஆதலால் கரைசலுக்கு நீல நிறத்தை அளிக்கிறது. இந்த கரைசல்கள் பாரா காந்தத் தன்மை கொண்டவை, மேலும் நீண்ட நேரம் வைக்கப்பட்டால் மெதுவாக ஹைட்ரஜன் வாயுவை வெளியேற்றி அமைடை உருவாக்குகின்றன.

$$M^+ + e^- + NH_3 \rightarrow MNH_2 + \tfrac{1}{2}H_2$$

அடர் கரைசல்களில் நீல நிறமானது வெண்கல நிறத்திற்கு மாறுவதுடன் , கரைசல் டையா காந்தத் தன்மை கொண்டதாக மாறுகிறது.

### நீருடன் வினை

கார உலோகங்கள் நீருடன் வினைப்பட்டு அவற்றின் ஹைட்ராக்சைடுகளைத் தருகின்றன. இதனுடன் ஹைட்ரஜன் வாயு வெளியேற்றப்படுகிறது.

$$2\,Li + 2\,H_2O \rightarrow 2\,LiOH + H_2$$

அவை மேலும் ஆல்கஹால் மற்றும் வினைதிறன் மிக்க ஹைட்ரஜன்களைக் கொண்ட ஆல்கைன்களுடன் வினைபுரிகின்றன.

$$2\,Na + 2\,C_2H_5OH \rightarrow 2\,C_2H_5ONa + H_2$$

$$H\text{-}C \equiv C\text{-}H \xrightarrow{Na} H\text{-}C \equiv C\text{-}Na \xrightarrow{Na} Na\text{-}C \equiv C\text{-}Na$$



Unit 5 - Sridhar.indd 144 07-01-2021 14:53:17

### ஒடுக்கும் செயல்

கார உலோகங்கள், தங்களின் இணைதிறன் எலக்ட்ரான்களை எளிதில் இழக்க முடியும், இதனால் அவை சிறந்த ஒடுக்கும் வினைபொருட்களாகச் செயல்படுகின்றன.

$$M_{(s)} \rightarrow M^{+}{}_{(g)} + e^{-}$$

### கார்பனுடன் வினை

லித்தியம் நேரடியாக கார்பனுடன் வினைப்பட்டு லித்தியம் கார்பைடு என்ற அயனிச்சேர்மத்தை உருவாக்குகிறது.மற்ற உலோகங்கள் கார்பனுடன் நேரடியாக வினைபுரிவதில்லை. எனினும், அவற்றை அசிட்டிலீன் போன்ற கரிம சேர்மங்களுடன் வினைப்படுத்தும்போது, அவை அசிட்டிலைடுகளை உருவாக்குகின்றன.

$$2\ Li + 2C \rightarrow Li_2C_2$$

### 5.2.4 கார உலோகங்களின் பயன்கள்

i. லித்தியம், உலோக கலவைகள் தயாரிக்கப் பயன்படுகிறது. எடுத்துக்காட்டாக லித்தியத்தை லெட் உடன் சேர்த்து, மோட்டார் எஞ்சின்களில் பயன்படும் வெண்மை உலோக (white metal) பேரிங்குகள், அலுமினியத்துடன் சேர்த்து ஆகாய விமான பாகங்கள் மற்றும் மெக்னீசியத்துடன் சேர்த்து கேடயங்கள் ஆகியன தயாரிக்கப்படுகின்றன.இது வெப்ப உட்கரு வினைகளில் பயன்படுகிறது.

ii. லித்தியம், மின்வேதிக்கலன்கள் செய்யவும் பயன்படுகிறது.

iii. $Pb(Et)_4$ மற்றும் $Pb(Me)_4$ ஆகியவற்றை தயாரிக்க தேவைப்படும் Na-Pb உலோக கலவை தயாரிக்க, சோடியம் பயன்படுகிறது. இவை பெட்ரோலுடன் சேர்க்கப்படும் இடிப்பு எதிர்ப்பு (anti-knock) சேர்மங்களாக முன்னர் பயன்பட்டன. தற்காலத்தில் லெட் இல்லாத பெட்ரோல் பயன்பாட்டில் உள்ளது.

iv. திரவ சோடியம் அதிவேக ஈனுலைகளில் குளிர்விப்பானாகப் பயன்படுகிறது.

v. பொட்டாசியம் உயிரியல் அமைப்புகளில் முக்கிய பங்கு வகிக்கிறது.பொட்டாசியம் குளோரைடு உரம் தயாரித்தலில் பயன்படுகிறது.

vi. பொட்டாசியம் ஹைட்ராக்சைடு மென் சோப்புகள் (soft soap) தயாரித்தலில் பயன்படுகிறது.மேலும் இது மிகச்சிறந்த கார்பன் டையாக்சைடு உறிஞ்சு பொருளாகவும் பயன்படுகிறது.

vii. சீசியம் ஒளிமின்கலன்களை வடிவமைத்தலில் பயன்படுகிறது.

### 5.3 கார உலோகச்சேர்மங்களின் பொதுப் பண்புகள்

கார உலோகங்களின் அனைத்து பொதுவான சேர்மங்களும் அயனித்தன்மை கொண்டவை. அவற்றின் சேர்மங்களின் பொதுப்பண்புகள் கீழே விவாதிக்கப்பட்டுள்ளன.

### ஆக்சைடுகள் மற்றும் ஹைட்ராக்சைடுகள்

கார உலோகங்களை அதிகளவு காற்றில் எரிக்கும்போது $M_2O$ என்ற மூலக்கூறு வாய்ப்பாடு கொண்ட சாதாரண ஆக்சைடுகளை உருவாக்குகின்றன. அவை நீருடன் வினைப்பட்டு அவற்றின் காரத்தன்மையுள்ள ஹைட்ராக்சைடுகளை உருவாக்குகின்றன.

$$M_2O + H_2O \rightarrow 2\ MOH$$

லித்தியத்தை தவிர மற்ற கார உலோகங்களை அதிகளவு காற்றில் எரிக்கும்போது சாதாரண ஆக்சைடுகளுடன் சேர்த்து பெராக்சைடுகளையும் உருவாக்குகின்றன. இந்த பெராக்சைடுகள் நீருடன் வினைபுரியும்போது

ஹைட்ராக்சைடுகள் மற்றும் $H_2O_2$ ஐ உருவாக்குகின்றன.

$$M_2O_2+2\ H_2O \rightarrow 2MOH+H_2O_2$$

(M = Na, K, Rb, Cs)

லித்தியம் மற்றும் சோடியம் தவிர மற்ற கார உலோகங்கள் சூப்பர் ஆக்சைடுகளையும் உருவாக்குகின்றன. இந்த சூப்பர் ஆக்சைடுகளும் நீருடன் வினைபுரியும்போது காரத் தன்மை கொண்ட ஹைட்ராக்சைடுகளை உருவாக்குகின்றன.

$$2\ MO_2 + 2\ H_2O \rightarrow 2\ MOH + H_2O_2 + O_2$$

(M = K, Rb, Cs)

உரிய நிபந்தனைகளின் கீழ் $M_2O$, $M_2O_2$ அல்லது $MO_2$ ஆகிய சேர்மங்களை தூய நிலையில் தயாரிக்கலாம்.

### ஆக்சைடுகள் மற்றும் ஹைட்ராக்சைடுகளின் பண்புகள்

தூய நிலையில் ஆக்சைடுகள் மற்றும் பெராக்சைடுகள் நிறமற்றவை, ஆனால் சூப்பர் ஆக்சைடுகள் மஞ்சள் அல்லது ஆரஞ்சு நிறத்தில் இருக்கின்றன. பெராக்சைடுகள் டையா காந்தத்தன்மை கொண்டவை, ஆனால் சூப்பர் ஆக்சைடுகள் பாரா காந்தத்தன்மை கொண்டவை.சோடியம் பெராக்சைடு ஆனது ஆக்ஸிஜனேற்றியாக பரவலாகப் பயன்படுகிறது. ஆக்சைடுகளை நீருடன் வினைப்படுத்தி பெறப்படும் ஹைட்ராக்சைடுகள் அனைத்தும் வெண்ணிற திண்ம படிகங்களாகும். கார உலோக ஹைட்ராக்சைடுகள் வலிமைமிகு காரங்களாகும். அவை தீவிரமாக நீரேற்றம் அடைவதால், வெப்பத்தை வெளியேற்றி நீரில் கரைகின்றன.

### ஹேலைடுகள்:

கார உலோக ஹேலைடுகள் MX (X= F,Cl,Br,I) ஆனவை நிறமற்ற, அதிக உருகுநிலைகளைக் கொண்ட படிக திண்மங்கள் ஆகும். அவைகள் தகுந்த ஆக்சைடு, ஹைட்ராக்சைடு அல்லது கார்பனேட்டை நீர்த்த ஹைட்ரோஹேலிக் அமிலத்துடன் (HX) வினைப்படுத்தி பெறப்படுகின்றன.Li லிருந்து Cs வரை கார உலோகங்களின் நேர்மின்தன்மை அதிகரிப்பதால், உலோகங்களின் ஹேலைடுகள் உருவாக்கும் தன்மை Li லிருந்து Cs வரை அதிகரிக்கிறது. LiBr மற்றும் LiI ஆகியவை தவிர்த்து மற்ற எல்லா ஹேலைடுகளும் அயனித்தன்மை கொண்டவை. LiF தவிர்த்து மற்ற எல்லா ஹேலைடுகளும் நீரில் கரைகின்றன. நீரில் LiF இன் மிகக்குறைந்த கரையும் திறனுக்கு காரணம் அதன் படிக கூடு என் தால்பி அதிகம் (மற்றும் $Li^+$ மற்றும் $F^-$ ஆகியவற்றின் சிறிய உருவளேவயாகும்). LiBr மற்றும் LiI ஆகியவை சகப்பிணைப்புத் தன்மையை கொண்டிருப்பதால் கரிம கரைப்பான்களில் கரைகின்றன.

### ஆக்சோ அமில உப்புகள்

கார உலோகங்கள் அனைத்து ஆக்சோ–அமிலங்களுடனும் உப்புகளை உருவாக்குகின்றன.இந்த உப்புகளில் பெரும்பாலானவை நீரில் கரைகின்றன மேலும் வெப்ப நிலைப்புத் தன்மையைக் கொண்டுள்ளன. தொகுதியில் மேலிருந்து கீழாக செல்லச் செல்ல நேர்மின்தன்மை அதிகரிப்பதால், கார்பனேட்டுகள் மற்றும் பைகார்பனேட்டுகளின் நிலைப்புத்தன்மை அதிகரிக்கின்றன. இதற்குக் காரணம் கார உலோக நேரயனிகளின் முனைவாக்கும் திறன் குறைவதே ஆகும். கார உலோகங்களின் கார்பனேட்டுகள் $(M_2CO_3)$ 1273K வெப்பநிலை வரை குறிப்பிடத்தக்க நிலைப்புத்தன்மை கொண்டுள்ளன, இந்த வெப்பநிலைக்கு மேல் முதலில் உருகி பின்னர் இறுதியாக சிதைவடைந்து ஆக்சைடுகளை உருவாக்குகின்றன. எனினும் $Li_2CO_3$ நிலைப்புத்தன்மை குறைந்து மேலும் உடனடியாக சிதைவடைகிறது.

$$Li_2CO_3 \xrightarrow{\Delta} Li_2O + CO_2$$

இதற்கு முழுமுதற் காரணம் $Li^{+}$ மற்றும் $CO_3^{-2}$ அயனிகளுக்கிடையேயான அதிக உருவளவு வேறுபாடு படிக கூட்டை நிலைப்புத்தன்மையற்றதாக்குவதே ஆகும். மிக அதிக காரத்தன்மை கொண்டிருப்பதால் லித்தியம் தவிர்த்து மற்ற கார உலோகங்கள் திண்ம பைகார்பனேட்டுகளை உருவாக்குகின்றன. வேறு எந்த உலோகமும் திண்ம பைகார்பனேட்டுகளை உருவாக்குவதில்லை.

$$M_2CO_3 + CO_2 + H_2O \rightarrow 2\ MHCO_3$$

(M = Na, K, Rb, Cs)

அனைத்து கார்பனேட்டுகளும், பைகார்பனேட்டுகளும் நீரில் கரைகின்றன. மேலும் தொகுதியில் மேலிருந்து கீழாகச் செல்லும்போது அவற்றின் கரைதிறன்கள் வேகமாக அதிகரிக்கின்றன. தொகுதியில் கீழாக செல்லச் செல்ல படிக கூடு ஆற்றல்கள், நீரேற்று ஆற்றல்களை விட மிக வேகமாகக் குறைவதே இதற்குக் காரணம் ஆகும்.

## 5.3.1 கார உலோகங்களின் முக்கிய சேர்மங்கள்

### சோடியம் கார்பனேட் $Na_2CO_3.10H_2O$ (சலவை சோடா)

தொழிற்சாலைகளில் பயன்படும் கனிம சேர்மங்களில் சோடியம் கார்பனேட்டும் முக்கியமான ஒன்றாகும். இது சால்வே முறையில் தயாரிக்கப்படுகிறது. இந்த முறையில், அம்மோனியாவானது அம்மோனியம் கார்பனேட்டாக மாற்றப்படுகிறது, அது பின்னர் அம்மோனியாவால் தெவிட்டிய நிலையில் உள்ள சோடியம் குளோரைடு கரைசலின் வழியே அதிகளவு கார்பன் டையாக்சைடு செலுத்துவதன் மூலம் அம்மோனியம் பைகார்பனேட்டாக மாற்றப்படுகிறது.இதனால் உருவான அம்மோனியம் பைகார்பனேட் சோடியம் குளோரைடுடன் வினைப்பட்டு சோடியம் பைகார்பனேட் மற்றும் அம்மோனியம் குளோரைடைத் தருகிறது. சோடியம் பை கார்பனேட் மிகக் குறைந்த கரைதிறனைக் கொண்டுள்ளதால் வீழ்படிவாகிறது. சோடியம் பைகார்பனேட் பிரிக்கப்பட்டு, வெப்பப்படுத்தி சோடியம் கார்பனேட் பெறப்படுகிறது. இந்த வினையுடன் தொடர்புடைய வினைகள் பின்வருமாறு

படம் (6.1) ல் காட்டப்பட்டுள்ளவாறு, உபகரணத்தின் இரு முனைகளிலும் உள்ள பாதரச மட்டத்தின் அளவு சமமாகும் வகையில் உபகரணத்தின் திறந்த முனை வழியே பாதரசம் சேர்க்கப்படுகிறது.

மூடிய முனையில் அடைபட்டுள்ள காற்றின் கன அளவு, ஆரம்ப நிலையில் இருந்த அளவில் பாதியாகும் வகையில் கூடுதலாக பாதரசத்தினை சேர்க்கவும். இந்நிலை படம் 6.1 (ஆ) ல் காட்டப்பட்டுள்ளது. கூடுதலாக பாதரசம் சேர்க்கப்பட்டதால், வாயு உணரும் அழுத்தமானது, இரு முனைகளில் உள்ள பாதரச மட்டங்களுக்கு இடையேயான வேறுபாட்டினால் பெறப்படுகிறது. ஆரம்ப நிலையில் இரு முனைகளிலும் உள்ள பாதரச மட்டங்களுக்கு இடையே வேறுபாடு பூஜ்யமாகும். எனவே அடைபட்ட வாயு உணரும் அழுத்தம், வளிமண்டல அழுத்தமான 1 atm க்குச் சமம். அடைபட்ட வாயுவின் கனஅளவு ஆரம்ப அளவைக் காட்டிலும், சரிபாதியளவு குறைக்கப்படும் போது, பாதரச மட்டங்களுக்கு இடையேயான வேறுபாடு 760 mm ஆக அதிகரிக்கிறது. இந்நிலையில் அடைபட்ட வாயு உணரும் அழுத்தம் 2 atm ஆகும். இதனடிப்படையில், ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில், குறிப்பிட்ட நிறையுள்ள வாயு அடைத்துக் கொள்ளும் கனஅளவானது அதன் அழுத்தத்திற்கு எதிர்விகித தொடர்புடையது என பாயில் முடிவு செய்தார்.

கணிதவியல் முறைப்படி, பாயில் விதியினை கீழ்க்கண்டுள்ளவாறு எழுதலாம்

$$V \propto \frac{1}{P} \quad \text{-------} \ (6.1)$$

(T மற்றும் n மாறிலிகள். T – வெப்பநிலை, n – மோல்களின் எண்ணிக்கை)

$$V = k \times \frac{1}{P} \quad \text{-------} \ (6.2)$$

k – விகித மாறிலி



Unit 6 - Sridhar.indd 176 07-01-2021 15:01:00


சமன்பாடு (6.2) ஐ நாம் மாற்றியமைக்கும் போது, மாறாத வெப்பநிலை மற்றும் நிறையில்,

$PV = k$ ------ (6.2a)


வாயுக்களின் வேதித்தன்மை எத்தகையதாக இருப்பினும், அனைத்து வாயுக்களுக்கும் அழுத்தம் குறைவாக உள்ள நிலையில் பாயில் விதி பொருந்தும்.

எனவே மாறாத வெப்பநிலையில், இருவேறு நிலைகளில் உள்ள குறிப்பிட்ட நிறையுள்ள ஒரு வாயுவிற்கு பாயில் விதியினை நாம் பின்வருமாறு எழுதலாம்

$P_1V_1 = P_2V_2 = k$ ------ (6.3)




படம் 6.2 a பாயில் விதியினை குறிப்பிடும் வரைபடம் (சமன்பாடு 6.2)




படம் 6.2 b பாயில் விதியினை குறிப்பிடும் வரைபடம் (சமன்பாடு 6.2 a)

PV தொடர்பினை நாம் பின்வருமாறு புரிந்து கொள்ளலாம். வாயுக்களின் மூலக்கூறுகள் கொள்கலனின் சுவற்றின் மீது மோதுவதால் ஏற்படும் மூலக்கூறுகளின் மீதான விசை வாயுவின் அழுத்தத்திற்கு காரணமாக அமைகிறது. ஒரு குறிப்பிட்ட அளவுள்ள, வாயுவின் கன அளவு பாதியாகக் குறைக்கப்படும் போது, வாயுவின் அடர்த்தி இருமடங்காகிறது, எனவே, கலனின் ஓரலகு பரப்பில் மோதும் மூலக்கூறுகளின் எண்ணிக்கையும் இரு மடங்காகிறது. இதன் காரணமாக, வாயுவின் அழுத்தமும் இரு மடங்காக அதிகரிக்கிறது.

### பாயில் விதியின் விளைவுகள்

பாயில் விதியிலிருந்து அழுத்தம்–அடர்த்தி இவற்றிற்கு இடையான தொடர்பினை பின்வருமாறு தருவிக்கலாம்.

$P_1V_1 = P_2V_2$ (பாயில் விதி)

$$P_1 \frac{m}{d_1} = P_2 \frac{m}{d_2}$$

இங்கு “m” என்பது வாயுவின் நிறை, $d_1$ மற்றும் $d_2$ என்பன முறையே, $P_1$ மற்றும் $P_2$ அழுத்த நிலைகளில் அடர்த்தி மதிப்புகளைக் குறிப்பிடுகின்றன.

$$\frac{P_1}{d_1} = \frac{P_2}{d_2} \text{ ------ } (6.4)$$

அதாவது, வாயுவின் அடர்த்தி, அதன் அழுத்தத்திற்கு நேர்விகித தொடர்புடையது.





பயணிகள் விமானத்தின் உட்புறம் செயற்கையாக அழுத்த அதிகரிப்பு செய்யப் படுகிறது. ஏன் இவ்வாறு செய்யப்படுகிறது. என்பதை நீ அறிவாயா?

பெரும்பாலான ஆகாய விமானங்கள் சுமார் 30,000 அடி உயரத்தில் பறக்கும். உயரம் அதிகரிக்கும் போது ஓரலகு கன அளவில் காணப்படும் வாயு மூலக்கூறுகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் அழுத்தம் குறையும்.



Unit 6 - Sridhar.indd 177 07-01-2021 15:01:01

எனவே விமானம் காற்றில் உயரத்தில் செல்லும் போது அதனை சூழ்ந்துள்ள காற்றின் அழுத்தம் மிக குறைவாக உள்ளதால், விமானத்தினுள் உள்ளவர் ஆக்சிஜன் குறைபாட்டிற்கு உள்ளாக வாய்ப்புள்ளது. இக்காரணத்தினால் தான் ஆகாய விமானங்களில் செயற்கையாக அழுத்த அதிகரிப்பு செய்யப்படுகிறது.




இதைப்போலவே, மலையேறும் ஒருவர், அழுத்தக் குறைவினால் ஏற்படும் விளைவினை, காதுகளில் ஏற்படும் சிறுவலியின் மூலம் உணரமுடியும். வெளிப்புற அழுத்தம் குறையும் போதிலும் காதின் உட்குழியில் உள்ள காற்றின் அழுத்தம் மாறாமல் இருக்கும். இது ஒரு சமநிலையற்ற நிலையினை ஏற்படுத்துகிறது. இந்த அதிகப்படியான உள் அழுத்தம், செவிப்பறையினை வெளிநோக்கி தள்ளுவதால் சிறு வலி ஏற்படுகிறது. சிறிது நேரத்தில் கொட்டாவி விடுவதால், செவி உட்குழியில் உள்ள மிகுதியான காற்று வெளியேறும் நிகழ்வின் காரணமாக உள் அழுத்தமும், வெளி அழுத்தமும் சமமாவதுடன், வலியினையும் குறைக்கிறது.

**நீரில் மூழ்குபவர்கள், மூழ்கும் போது தேவையின்றி மூச்சினை அடக்கக் கூடாது என அறிவுரை வழங்கப்படுவதற்கு என்ன காரணம் என உங்களுக்குத் தெரியுமா?**

படம் (6.3)ல் விடுபட்ட அளவீடுகளை (6.3 (b)ல் கனஅளவு மற்றும் 6.3 (c)ல் அழுத்தம்) கண்டறிவோம்.

படம் 6.3(a) படம் 6.3(b) படம் 6.3(c)




| படம் 6.3(a) | படம் 6.3(b) | படம் 6.3(c) |
|---|---|---|
| $P_1 = 1$ atm. | $P_2 = 2$ atm. | $P_3 = ?$ atm. |
| $V_1 = 1\ dm^3$ | $V_2 = ?\ dm^3$ | $V_3 = 0.25 dm^3$ |
| T = 298 K | T = 298 K | T = 298 K |

படம் 6.3 கனஅளவின் மீதான அழுத்தத்தின் விளைவின் மூலம் பாயில் விதியினை சரிபார்த்தல்.

**தீர்வு:**

பாயில் விதியின்படி, மாறாத வெப்பநிலையில், ஒரு குறிப்பிட்ட நிறையுடைய வாயுவிற்கு,

$$P_1V_1 = P_2V_2 = P_3V_3$$

$$1\ atm \times 1\ dm^3 = 2\ atm \times V_2 = P_3 \times 0.25\ dm^3$$

$$\therefore\ 2\ atm \times V_2 = 1\ atm \times 1\ dm^3$$

$$V_2 = \frac{1\ \cancel{atm} \times 1\ dm^3}{2\ \cancel{atm}}$$

$$\boxed{V_2 = 0.5\ dm^3}$$

and $P_3 \times 0.25\ dm^3 = 1\ atm \times 1\ dm^3$

$$P_3 = \frac{1\ atm \times 1\ \cancel{dm^3}}{0.25\ \cancel{dm^3}}$$

$$\boxed{P_3 = 4\ atm}$$



Unit 6 - Sridhar.indd 178 07-01-2021 15:01:10

> **தங்களை மதிப்பீடு செய்து கொள்ளுங்கள்**
>
> 1. குளிர்சாதனப் பெட்டிகளில் குளிர்விப்பானாக பயன்படுத்தப்படும் ஃபிரியான்–12 சேர்மமானது, ஓசோன் படலம் சிதைவடைய காரணமாக அமைகிறது. தற்போது அதற்கு மாற்றாக சூழலுக்கு ஏற்ற சேர்மங்கள் பயன்படுத்தப்படுகின்றன. 0.3 atm அழுத்தம் மற்றும் 1.5 $dm^3$ கனஅளவு உடைய ஃபிரியான் வாயு மாதிரியினைக் கருதுக. மாறாத வெப்பநிலையில், அழுத்தமானது 1.2 atmக்கு மாற்றப்படும் போது, அதிகரிக்கும் அல்லது குறையும் கனஅளவைக் கணக்கிடுக.
>
> 2. ஒரு மோட்டார் வாகன இயந்திரத்தினுள் உள்ள உருளையில் (Cylinder) நிரம்பியுள்ள காற்றின் அழுத்தம் 1.05 atm ஆக உள்ள போது கனஅளவு 0.375 $dm^3$, அதே வெப்பநிலையில் 0.125 $dm^3$ க்கு அழுத்தப்படும்போது, அழுத்தப்பட்ட காற்றின் அழுத்தம் என்ன?

### 6.2.2. சார்லஸ் விதி (கனஅளவு – வெப்பநிலை தொடர்பு)

J.A.C சார்லஸ் என்பவரால் வாயுவின் கனஅளவிற்கும், அதன் வெப்பநிலைக்கும் இடையேயான தொடர்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒரு குறிப்பிட்ட நிறையுள்ள வாயுவிற்கு, அதன் அழுத்தம் மாறாதிருக்கும் போது, கன அளவானது அதன் வெப்பநிலையுடன் நேர்விகிதத் தொடர்புடையது என அவர் கண்டறிந்தார். இதனை கணித சமன்பாடாக பின்வருமாறு எழுதலாம் (P மற்றும் n மாறாதிருக்கும்போது)

$$V = kT \qquad ------- \quad (6.5)$$

(அல்லது)

$$\frac{V}{T} = \text{மாறிலி}$$

வாயுவில் வெப்பநிலை அதிகரிக்கும் போது $\frac{V}{T}$ மாறிலியாக அமையும் வகையில் அதன் கனஅளவு நேர்விகிதத்தில் அதிகரிக்கிறது. மாறாத அழுத்தத்தில் உள்ள ஒரு அமைப்பிற்கு,

$$\frac{V_1}{T_1} = \frac{V_2}{T_2} = \text{மாறிலி} \quad ----- \; (6.6)$$

உதாரணமாக, பனிக்கட்டி குளிர் நிலையில் உள்ள நீரில் உள்ள ஒரு பலூனை, கொதி நீருள்ள மற்றொரு தொட்டிக்கு மாற்றும்போது, பலூனில் உள்ள வாயுவின் வெப்பநிலை அதிகரிக்கிறது. இதன் விளைவாக, பலூனிலுள்ள வாயு மூலக்கூறுகள் வேகமாக நகர்கின்றன. எனவே வாயு விரிவடைந்து, கனஅளவு அதிகரிக்கின்றது.



பனிக்கட்டி நீர்      கொதி நீர்

படம் 6.4. பனிக்கட்டி நீர் மற்றும் கொதி நீரில் காற்று நிரப்பப்பட்ட பலூன்

**மாறாத அழுத்தத்தில், வெப்பநிலை, மாற்றத்தால், கனஅளவில் ஏற்படும் மாற்றம்.**

ஒரு குறிப்பிட்ட அழுத்தத்தில், ஒரு வாயுவின் கனஅளவிற்கும், அதன் வெப்பநிலைக்கும் இடையேயான வரைபடம் 6.5ல் கொடுக்கப்பட்டுள்ளது. வரைபடத்திலிருந்து, குறிப்பிட்ட அழுத்தத்தில் வெப்பநிலை அதிகரிக்கும் போது வாயுவின் கனஅளவு நேர்விகிதத்தில் நேர்கோட்டில் அதிகரிக்கிறது என்பதை தெளிவாக அறிய முடிகிறது. இத்தகைய நேர்கோடுகள் ஐசோபார்கள் என்றழைக்கப்படுகின்றன. இதனை பின்வரும் நேர்கோட்டுச் சமன்பாட்டால் குறிப்பிடலாம்



Unit 6 - Sridhar.indd 179 07-01-2021 15:01:11

V = mT + C இங்கு T என்பது டிகிரி செல்சியஸில் வெப்பநிலை. m மற்றும் C ஆகியன மாறிலிகள்.

T = $0^0$C ஆக உள்ள போது கனஅளவு $V_o$ ஆகிறது. எனவே, $V_o$ = C மற்றும் நேர்கோட்டின் சாய்வு m = ΔV/ ΔTக்குச்சமம். எனவே மேற்கண்டுள்ள சமன்பாட்டினை பின்வருமாறு எழுதலாம்.

$$V = \left(\frac{\Delta V}{\Delta T}\right)T + V_0 \text{ ------- } (6.7)$$

(n மற்றும் P மாறிலிகள்)

சமன்பாடு (6.7) ஐ $V_0$ ஆல் வகுக்க.

$$\frac{V}{V_0} = \frac{1}{V_0}\left(\frac{\Delta V}{\Delta T}\right)T + 1 \text{ -------- } (6.8)$$


மாறாத அழுத்தத்தில், சார்லஸ் மற்றும் கேலூசாக் ஆகிய அறிஞர்கள், ஒரு டிகிரி செல்சியஸ் வெப்பநிலை உயர்வினால், கனஅளவில் ஏற்படும் ஒப்பீட்டு அதிகரிப்பானது அனைத்து வாயுக்களுக்கும் ஒரேமாதிரியாக உள்ளன என கண்டறிந்தனர். ஒரு டிகிரி செல்சியஸ் வெப்பநிலை உயர்விற்கான கனஅளவில் ஏற்படும் ஒப்பீட்டு அதிகரிப்பு (α) என்பது $\frac{1}{V_0}\left(\frac{\Delta V}{\Delta T}\right)$. க்குச் சமம்.

எனவே,

$$\frac{V}{V_0} = \alpha T + 1$$

$$V = V_0(\alpha T + 1) \text{ ------ } (6.9)$$

விரிவடைதல் குணகமானது தோராயமாக 1/273 என்ற மதிப்பிற்குச் சமம் என சார்லஸ் கண்டறிந்தார். அதாவது, மாறாத அழுத்தத்தில், ஒவ்வொரு டிகிரி வெப்பநிலை உயர்விற்கும், ஒரு குறிப்பிட்ட நிறையுள்ள, அனைத்து வாயுக்களும், $0^o$C ல் பெற்றுள்ள, அவைகளின் கன அளவைப் போல் 1/273 மடங்கு விரிவடைகின்றன.




படம் 6.5 நல்லியல்பு வாயுக்களுக்கான கனஅளவு vs வெப்பநிலை வரைபடம்.




Unit 6 - Sridhar.indd 180 07-01-2021 15:01:13

படம் 6.5ல் காட்டியுள்ளவாறு, சோதனை அளவீடுகளை விட குறைவான வெப்பநிலைகளுக்கு நேர்கோட்டினை நாம் நீட்டித்தால், அந்த நேர்கோடு x–அச்சினை $-273^0C$ ல் வெட்டுகிறது. இதிலிருந்து $-273^0C$ வெப்பநிலையில் (மிகத் துல்லியமாக $-273.15^0C$ ல்) வாயுவின் கனஅளவு பூஜ்ஜிய மதிப்பை பெறும், இவ்வெப்பநிலைக்குக் கீழ் வாயுவின் கனஅளவு எதிர்குறி மதிப்பினைப் பெற்றிருக்கவேண்டும். ஆனால்நடைமுறையில் இது சாத்தியமற்றதாகும். இதன் காரணமாக இந்த வெப்பநிலையை கெல்வின் தனிவெப்ப நிலை என வரையறுத்தார். மேலும் தனி பூஜ்ஜிய வெப்பநிலையை ஆரம்பப்புள்ளியாகக் கொண்டு, கெல்வின் புதிய வெப்பநிலை அளவுகோலினை உருவாக்கினார். தற்போது இந்த அளவுகோல் கெல்வின் அளவுகோல் என அழைக்கப்படுகிறது. கெல்வின் அளவுகோலின் பூஜ்யத்தின் நிலை மாற்றப்பட்டதே செல்சியஸ் வெப்பநிலை அளவுகோலுக்கும், கெல்வின் வெப்பநிலை அளவுகோலுக்கும் இடையே உள்ள ஒரே வேறுபாடாகும்.

| வெப்பநிலை | கெல்வின் அளவுகோல் | செல்சியஸ் அளவுகோல் |
|---|---|---|
| தனி பூஜ்ய வெப்பநிலை | 0 K | -273.15 °C |
| நீரின் உறைநிலை | 273.15 K | 0 °C |
| நீரின் கொதிநிலை | 373.15 K | 100 °C |

எடுத்துக்காட்டு:

படம் (6.6)ல் விடுபட்ட அளவீடுகளை (6.6(b)ல் கனஅளவு 6.6(c)ல் வெப்பநிலை) நாம் கண்டறிவோம்.



படம் 6.6(a) படம் 6.6(b) படம் 6.6(c)

P = 1 atm. $V_1 = 0.3\ dm^3$ $T_1 = 200\ K$

P = 1 atm. $V_2 = ?\ dm^3$ $T_2 = 300\ K$

P = 1 atm. $V_3 = 0.15\ dm^3$ $T_3 = ?\ K$

படம் 6.6: வாயுவின் கனஅளவின் மீது வெப்பநிலையின் விளைவினைக் கொண்டு சார்லஸ் விதியினை சரிபார்த்தல்.

**தீர்வு:**

சார்லஸ் விதிப்படி,

$$\frac{V_1}{T_1} = \frac{V_2}{T_2} = \frac{V_3}{T_3}$$

$$\frac{0.3\ dm^3}{200\ K} = \frac{V_2}{300\ K} = \frac{0.15\ dm^3}{T_3}$$

$$\frac{V_2}{300\ K} = \frac{0.3\ dm^3}{200\ K}$$

$$V_2 = \frac{\overset{1.5}{\cancel{300\ K}} \times 0.3\ dm^3}{\cancel{200\ K}}$$

$V_2 = 0.45\ dm^3$ மற்றும்

$$\frac{0.15dm^3}{T_3} = \frac{0.3\ dm^3}{200\ K}$$

$$T_3 = \frac{\overset{0.5}{\cancel{0.15 dm^3}} \times 200\ K}{\cancel{0.3\ dm^3}}$$

$T_3 = 100\ K$

**தன்மதிப்பீடு**

3. ஒரு வாயு மாதிரியானது, ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் $3.8\ dm^3$ கனஅளவினை பெற்றுள்ளது. இம்மாதிரியானது $0^oC$ல் உள்ள பனிகட்டி நீரில் அழுத்தப்படும்போது, அதன் கனஅளவு $2.27\ dm^3$ ஆக குறைகிறது. அதன் ஆரம்ப வெப்பநிலை எவ்வளவு?

### 6.2.3 கேலூசாக்கின் விதி (அழுத்தம் – வெப்பநிலை தொடர்பு)

மாறாத கனஅளவில், குறிப்பிட்ட நிறையுடைய வாயுவின் அழுத்தமானது அதன் வெப்பநிலையுடன் நேர்விகிதத்



Unit 6 - Sridhar.indd 181 07-01-2021 15:01:21

தொடர்புடையது என ஜோசப் கேலூசாக் கூறினார்.

$P \alpha T$

அல்லது $\frac{P}{T} =$ மாறிலி (K)

$T_1$ மற்றும் $T_2$ ஆகிய வெப்பநிலைகளில் வாயுவின் அழுத்த மதிப்புகள் முறையே $P_1$ மற்றும் $P_2$ எனில், கேலூசாக் விதிப்படி,

$$\frac{P_1}{T_1} = \frac{P_2}{T_2}$$

**செயல்பாடு– 1**

வெவ்வேறு வெப்பநிலைகளில், 1 மோல் நல்லியல்பு வாயுவின் அழுத்த மதிப்புகள்,கீழ்க்கண்டுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. இம் மதிப்புகளை வரைபடத்தில் குறிக்கவும் மற்றும் கேலூசாக் விதியினை சரிபார்க்கவும் (மாறா கனஅளவில்) ஒரு வாயுவின் அழுத்தம் Vs வெப்பநிலை வரைகோடுகள் சமகனஅளவு கோடுகள் (isochores) என அழைக்கப்படுகின்றன.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வெப்பநிலை $^0$C யில் (டிகிரி செல்சியசில்) | 32 | 69 | 94 | 130 | 154 | 191 |
| 50L கலனில் அழுத்தம் (atmல்) | 0.51 | 0.56 | 0.6 | 0.66 | 0.7 | 0.76 |
| 75L கலனில் அழுத்தம் (atmல்) | 0.34 | 0.37 | 0.40 | 0.44 | 0.47 | 0.51 |

### 6.2.4 அவகேட்ரோ கருதுகோள்

சமவெப்பஅழுத்த நிலைகளில், சமகன அளவுள்ள அனைத்து வாயுக்களும், சம எண்ணிக்கையுள்ள மூலக்கூறுகளை பெற்றிருக்கும் என அவகாட்ரோ கருதினார். அவகேட்ரோ கருதுகோளை கணிதவியல் சமன்பாடாக பின்வருமாறு குறிப்பிடலாம்.

$V \alpha n,$

$$\frac{V_1}{n_1} = \frac{V_2}{n_2} = \text{மாறிலி} \text{ -------- } (6.10)$$

இங்கு $V_1$, $n_1$ என்பன வாயுவின் கனஅளவு மற்றும் மோல்களின் எண்ணிக்கையினைக் குறிப்பிடுகின்றன. மற்றும் $V_2$, $n_2$ என்பன அதே வெப்ப அழுத்த நிலைகளில் வாயுவின் பிறிதொரு கனஅளவு மற்றும் மோல்களின் எண்ணிக்கையினைக் குறிப்பிடுகின்றன.

**தன்மதிப்பீடு**

4) ஒரு விளையாட்டு வீரரின் ஆழமான உட்சுவாசித்தலின் போது அவருடைய நுரையீரல் கனஅளவு 7.05 $dm^3$ என மனித உடலியக்க ஆய்வு மூலம் (Kinesiology) கண்டறியப்பட்டுள்ளது. இக்குறிப்பிட்ட கனஅளவில் நுரையீரலானது 0.312 மோல்கள் காற்று மூலக்கூறுகளைக் கொண்டுள்ளது. வெளிச்சுவாசத்தின் போது நுரையீரலின் கனஅளவு 2.35$dm^3$ ஆக குறைகிறது. அவ்விளையாட்டு வீரர் வெளிசுவாசத்தின் போது வெளியேற்றும் காற்று மூலக்கூறுகளின் மோல்களின் எண்ணிக்கையினைக் கணக்கிடுக. (அழுத்தம் மற்றும் வெப்பநிலை மாறிலியாக இருப்பதாகக் கருதவும்)

## 6.3. நல்லியல்பு வாயுச்சமன்பாடு

T, P, V மற்றும் n ஆகிய நான்கு மாறிகளைக் கொண்டு, வாயு நிலைமையினை முழுமையாக விவரிக்க இயலும். இவற்றிற்கு இடையேயானத் தொடர்பினை இதுவரை பயின்ற வாயுவிதிகளைக் கொண்டு அறியலாம்.



Unit 6 - Sridhar.indd 182 07-01-2021 15:01:22

பாயில்விதி $V \alpha \frac{1}{P}$

சார்லஸ்விதி $V \alpha T$

அவகாட்ரோவிதி $V \alpha n$

மேற்கண்டுள்ள சமன்பாடுகளை இணைப்பதன் மூலம், அனைத்து வாயுக்களின் இயற்பண்புகளை விவரிக்க உதவும் பின்வரும் பொதுவான சமன்பாட்டினை நாம் உருவாக்கலாம்.

$$V \alpha \frac{nT}{P}$$

$$V = \frac{nRT}{P}$$

இங்கு R என்பது வாயுமாறிலி என்றழைக்கப்படும், விகிதமாறிலியாகும்.

மேற்கண்டுள்ள சமன்பாட்டினை மாற்றியமைத்தால் நல்லியல்பு வாயுச்சமன்பாடு உருவாகிறது.

$$PV = nRT. \text{ ------ } (6.11)$$

அழுத்தமானது, வெவ்வேறு அலகுகளில்குறிப்பிடப்படுகிறது. (அட்டவணை6.1) என நாம் ஏற்கனவே அறிவோம். எனவே, வாயுமாறிலியின் மதிப்பினை வெவ்வேறு அலகுகளில் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

Rன் மதிப்பினை பின்வரும் சமன்பாட்டினை பயன்படுத்தி நாம் கணக்கிடலாம்.

$$R = \frac{PV}{nT}$$

P ன்மதிப்பு 1 atm, கனஅளவு 22.414 $dm^3$ மற்றும் வெப்பநிலை 273.15K ஆக உள்ள போது 1 மோல் வாயுவிற்கு,

$$R = \frac{1\,\text{atm.} \times 22.414\,\text{dm}^3}{1\,\text{mol.} \times 273.15\,\text{K}}$$

$$= \mathbf{0.0821\ dm^3\ atm.\ mol^{-1}\ K^{-1}}$$

திட்ட வெப்ப அழுத்த நிலைகளில் (STPல்) P = 1 bar ($10^5$ Pascal) வெப்ப நிலை 273.15 K ல் 1 மோல் வாயு அடைத்துக் கொள்ளும் கனஅளவு $V=22.71 \times 10^{-3}\ m^3$

$$R = \frac{10^5\ \text{Pa} \times 22.71 \times 10^{-3}\ \text{m}^3}{1\,\text{mol.} \times 273.15\,\text{K}}$$

$$= 8.314\ \text{Pa m}^3\ \text{K}^{-1}\ \text{mol}^{-1}$$

$$= 8.314 \times 10^{-5}\ \text{bar m}^3\ \text{K}^{-1}\ \text{mol}^{-1}$$

$$= 8.314 \times 10^{-2}\ \text{bar dm}^3\ \text{K}^{-1}\ \text{mol}^{-1}$$

$$= 8.314 \times 10^{-2}\ \text{bar L K}^{-1}\ \text{mol}^{-1}$$

$$= 8.314\ \text{J K}^{-1}\ \text{mol}^{-1}$$

நல்லியல்பு வாயுச்சமன்பாடானது P, V, T மற்றும் n ஆகிய நான்கு மாறிகளுக்கு இடையேயான தொடர்பினைத் தருவதால் இச்சமன்பாடு, வாயுக்களின் நிலைமைச் சமன்பாடு எனவும் அழைக்கப்படுகிறது.

$70^0$ C ல் 6 $dm^3$ கனஅளவுடைய ஒரு எஃகு கலனில் உள்ள 2 மோல் சல்பர் ஹெக்ஸா புளுரைடின் அழுத்தத்தினை, அவ்வாயுவினை நல்லியல்பு வாயுவாகக்கருதி நாம் கணக்கிடுவோம்.

$$P = \frac{nRT}{V} = \frac{2\ \text{mol} \times 0.0821\ \text{L atm. K}^{-1}.\text{mol}^{-1} \times (70 + 273\ \text{K})}{6\ \text{dm}^3}$$

$$= 9.39\ \text{atm.}$$



Unit 6 - Sridhar.indd 183 07-01-2021 15:01:23

**தன்மதிப்பீடு**

5) $8^0C$ மற்றும் 6.4atm வெப்ப அழுத்த நிலை காணப்படும் ஒரு ஏரியின் அடிப்பரப்பிலிருந்து ஒரு சிறிய நீர்க்குமிழி மேலெழும்பி நீரின் மேற்பரப்பிற்கு செல்கிறது, நீரின் மேற்பரப்பில் வெப்பநிலை $25^0C$ மற்றும் அழுத்தம் 1atm. நீர்க்குமிழியின் ஆரம்ப கனஅளவு 2.1 mL எனில் அதன் இறுதி கனஅளவை (mL ல்) கணக்கிடுக,

## 6.4 வாயுக்களின் கலவை – டால்டனின் பகுதி அழுத்த விதி

ஒன்றோடொன்று வினைபுரியாத வாயுக்கலவையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், வாயுக்கலவையில் உள்ள ஒவ்வொரு வாயுவும் தனித்தனியே செயல்படுவதாக அறியமுடிகிறது. வாயுக்கலவையினை பொருத்தவரையில், அதில் அடங்கியுள்ள ஒவ்வொரு தனித்த வாயுவும், வாயுவின் ஒட்டு மொத்த அழுத்தத்திற்கு எந்த அளவிற்கு பங்களிக்கின்றன என்பதை அறிவது அவசியமாகிறது.

ஜான்டால்டனின் கூற்றுப்படி, ஒன்றோடொன்று வினைபுரியாத வாயுக்கலவையின் மொத்த அழுத்தமானது, அதில் அடங்கியுள்ள ஒவ்வொரு வாயுக்களின் பகுதி அழுத்தங்களின் கூடுதலுக்குச் சமம். வாயுக்கலவையில் உள்ள ஒரு வாயுவின் பகுதி அழுத்தம் என்பது, அவ்வாயு அதே வெப்பநிலை மற்றும் கனஅளவில் தனித்து இருக்குமேயானால் அதனால் உணரும் அழுத்தம் எனலாம். இதுவே டால்டனின் பகுதி அழுத்தவிதி எனப்படும்.

V கனஅளவுடைய கொள்கலனில் உள்ள 1,2 மற்றும் 3 ஆகிய வாயுக்கள் அடங்கிய கலவையிலுள்ள வாயுக்களின் பகுதி அழுத்தங்கள் முறையே $p_1$, $p_2$ மற்றும் $p_3$ எனில் அதன் மொத்த அழுத்தம் $P_{\text{மொத்தம்}}$ என்பது

$$P_{\text{மொத்தம்}} = p_1 + p_2 + p_3 \qquad (6.12)$$

வாயுக்கள் நல்லியல்பு தன்மையினைப் பெற்றிருப்பதாகக் கருதினால்,

$$p_1 = n_1\frac{RT}{V};\ p_2 = n_2\frac{RT}{V};\ p_3 = n_3\frac{RT}{V}$$

$$P_{\text{மொத்தம்}} = n_1\frac{RT}{V} + n_2\frac{RT}{V} + n_3\frac{RT}{V}$$

$$= (n_1 + n_2 + n_3)\frac{RT}{V}$$

$$P_{\text{மொத்தம்}} = n_{\text{மொத்தம்}}\left(\frac{RT}{V}\right) \text{-----} \quad (6.13)$$

பகுதி அழுத்தத்தினை பின்வருமாறும் குறிப்பிடலாம்

$\frac{RT}{V}$ ஐ $\frac{p_1}{n_1}$ அல்லது $\frac{p_2}{n_2}$ அல்லது $\frac{p_3}{n_3}$

எனவும் குறிப்பிடலாம் அல்லது பொதுவாக $\frac{p_i}{n_i}$ எனவே

$$P_{\text{மொத்தம்}} = n_{\text{மொத்தம்}}\frac{p_i}{n_i} = \frac{n_{\text{மொத்தம்}}}{n_i}\, p_i$$

$$\Rightarrow p_i = \frac{n_i}{n_{\text{மொத்தம்}}} P_{\text{மொத்தம்}} = x_i P_{i\ \text{மொத்தம்}} \text{-------} \ (6.14)$$

இங்கு $X_i$ என்பது i என்ற கூறின் மோல் பின்னமாகும்

### டால்டன் விதியின் பயன்பாடுகள்

நீரினை கீழ்முக இடப்பெயர்ச்சி செய்வதன் மூலம் வாயுக்களை சேகரிக்கும் ஒரு வினையில், சேகரிக்கப்படும் உலர்வாயுவின் அழுத்தத்தினை டால்டனின் பகுதி அழுத்த விதியினைப் பயன்படுத்தி பின்வருமாறு கணக்கிடலாம்.

$$P_{\text{சேகரிக்கப்பட்ட உலர்வாயு}} = P_{\text{மொத்தம்}} - P_{\text{நீராவி}}$$

$P_{நீராவி}$ என்பது பொதுவாக நீர் இழுவிசை என அழைக்கப்படுகிறது. காற்றிற்கு பல்வேறு வெப்பநிலைகளில் இதன் மதிப்புகள் கண்டறிந்து தரப்பட்டுள்ளன.

பின்வரும் கணக்கினைத் தீர்ப்பதன் மூலம் டால்டனின் பகுதி அழுத்த விதியினை நாம் புரிந்து கொள்ளலாம். ஒரு வாயுக் கலவையானது, 4.76 மோல் Ne, 0.74 மோல் Ar மற்றும் 2.5 மோல் Xe வாயுக்களைக் கொண்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில், அதன் மொத்த அழுத்தம் 2 atm எனில் வாயுக்களின் பகுதி அழுத்தங்களைக் கணக்கிடுக.

**தீர்வு:**

$$p_{Ne} = x_{Ne} P_{மொத்தம்}$$

$$x_{Ne} = \frac{n_{Ne}}{n_{Ne} + n_{Ar} + n_{Xe}}$$

$$= \frac{4.76}{4.76 + 0.74 + 2.5} = 0.595$$

$$x_{Ar} = \frac{n_{Ar}}{n_{Ne} + n_{Ar} + n_{Xe}}$$

$$= \frac{0.74}{4.76 + 0.74 + 2.5} = 0.093$$

$$x_{Xe} = \frac{n_{Xe}}{n_{Ne} + n_{Ar} + n_{Xe}}$$

$$= \frac{2.5}{4.76 + 0.74 + 2.5} = 0.312$$

$$P_{Ne} = x_{Ne} P_{மொத்தம்} = 0.595 \times 2$$
$$= 1.19 \text{ atm.}$$

$$P_{Ar} = x_{Ar} P_{மொத்தம்} = 0.093 \times 2$$
$$= 0.186 \text{ atm.}$$

$$P_{Xe} = x_{Xe} P_{மொத்தம்} = 0.312 \times 2$$
$$= 0.624 \text{ atm.}$$

**தன்மதிப்பீடு**

6(அ) நீர் மூழ்குபவர்கள், நீரில் மூழ்குவதற்கு பயன்படுத்தும் வாயுகலன்களில் He மற்றும் $O_2$ வாயுக்கள் அடங்கிய கலவை பயன்படுத்தப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட நீர் மூழ்கும் நிகழ்வில், 1atm அழுத்த நிலையில் 12 $dm^3$ $O_2$ மற்றும் 1 atm அழுத்த நிலையில் 46 $dm^3$ கனஅளவுள்ள He அடங்கிய வாயுக்கலவை 5$dm^3$ கலனினுள் உள்ளே அழுத்தப்படுகிறது. 298K வெப்பநிலையில், ஒவ்வொரு வாயுவின் பகுதி அழுத்தத்தினைக் கணக்கிடுக.

(ஆ) ஒரு குறிப்பிட்ட அளவு $KClO_3$ (பொட்டாசியம் குளோரேட்) ஆய்வுக் குழாயில் வெப்பப்படுத்தப்பட்டு பின்வரும் வினையின் மூலம் $O_2$ பெறப்படுகிறது.

$$2KClO_3 \rightarrow 2KCl + 3O_2$$


295 K வெப்ப நிலையில் நீரினை கீழ்முக இடப்பெயர்ச்சி செய்வதன் மூலம் வாயுவானது சேகரிக்கப்படுகிறது. வாயுக் கலவையின் மொத்த அழுத்தம் 772 mm Hg 300K ல் நீரின் ஆவி அழுத்தம் 26.7 mm Hg. ஆக்சிஜனின் பகுதி அழுத்தம் என்ன?

### 6.4.1 கிரஹாமின் வாயு விரவுதல் விதி

வாயுக்கள், தங்களுக்கு கிடைக்கும் அனைத்து வெளியினையும் அடைத்துக் கொள்ளும் தன்மையினை பெற்றுள்ளன. இரு வினை புரியாத வாயுக்களை ஒன்றோடொன்று கலந்திட அனுமதிக்கும் போது, வாயு மூலக்கூறுகள் அதிக செறிவுள்ள பகுதியிலிருந்து, குறைவான செறிவுள்ள பகுதிக்கு நகர்கின்றன. ஒருவாயுவின் மூலக்கூறுகள் மற்றொரு வாயுவின் வழியே நகரும் இப்பண்பானது விரவுதல் (diffusion) என்றழைக்கப்படுகிறது. ஒருகலனில் உள்ள வாயுவானது, ஒரு மிகச்சிறிய துளையின் வழியே வெளியேறும் மற்றொரு நிகழ்வானது பாய்தல் (effusion) என அழைக்கப்படுகிறது.



Unit 6 - Sridhar.indd 185 07-01-2021 15:01:24




படம் 6.7 வாயுக்களின் விரவுதல் மற்றும் பாய்தல்

ஒரு வாயுவின் விரவுதல் அல்லது பாய்தலின் வீதமானது, அதன் மோலார் நிறையின் வர்க்கமூலத்திற்கு எதிர்விகிதத்தில் அமையும். இக்கூற்று கிரஹாமின் வாயுவிரவுதல் /பாய்தல் விதி என அழைக்கப்படுகிறது.

கணிதவியல்படி, விரவுதல் வீதம் $\alpha \frac{1}{\sqrt{M}}$

மாறாக

$$\frac{r_A}{r_B} = \sqrt{\frac{M_B}{M_A}} \text{ -------- } (6.15)$$

விரவும் வாயுக்கள் வெவ்வேறு அழுத்தநிலைகளில் $(P_A, P_B)$, இருக்குமாயின்

$$\frac{r_A}{r_B} = \frac{P_A}{P_B}\sqrt{\frac{M_B}{M_A}} \text{ ------- } (6.16)$$

இங்கு $r_A$ மற்றும் $r_B$ என்பன முறையே $M_A$ மற்றும் $M_B$ ஆகியவற்றை மூலக்கூறு நிறைகளாகக் கொண்ட A மற்றும் B ஆகிய வாயுக்களின் விரவுதல் வீதங்களாகும்.

உங்களுக்குத் தெரியுமா ?

$U^{235}$ வை பிற ஐசோடோப்புகளிலிருந்து, செறிவூட்டும் செயல்முறைக்கு கிரஹாமின் வாயுவிரவல் விதி அடிப்படையாக அமைகிறது.

1. சமவெப்ப அழுத்த நிலையில், ஒரு குறிப்பிட்ட வாயுவின் விரவுதல் வீதம், நைட்ரஜனைக் காட்டிலும் 0.5 மடங்கு அதிகம். அக்குறிப்பிட்ட வாயுவின் மோலார் நிறையினைக் கணக்கிடுக.

தீர்வு:

$$\frac{r_{\text{குறிப்பிட்ட வாயு}}}{r_{N_2}} = \sqrt{\frac{M_{N_2}}{M_{\text{குறிப்பிட்ட வாயு}}}}$$

$$0.5 = \sqrt{\frac{28 \text{ g mol}^{-1}}{M_{\text{குறிப்பிட்ட வாயு}}}}$$

இருபுறமும் வர்க்கப்படுத்த

$$(0.5)^2 = \frac{28 \text{ g mol}^{-1}}{M_{\text{குறிப்பிட்ட வாயு}}}$$

$$\Rightarrow M_{\text{குறிப்பிட்ட வாயு}} = \frac{28}{0.25} = 112 \text{ g mol}^{-1}$$

**தன்மதிப்பீடு**

எளிதில் தீப்பற்றும், ஒரு குறிப்பிட்ட கனஅளவுடைய வாயு நிலையில் உள்ள ஹைட்ரோகார்பன், ஒரு சிறு துளையின் வழியே 1.5 நிமிடங்களில் (minutes) விரவுகின்றது. இதே வெப்ப அழுத்த நிலைகளில், சம கனஅளவு உடைய புரோமின் ஆவியானது அதே துளையின் வழியே விரவுவதற்கு 4.73 நிமிடங்கள் (minutes) எடுத்துக் கொள்கிறது. அந்த வாயுவின் மோலார் நிறையினை கண்டறிக. மேலும் அந்த ஹைட்ரோ கார்பன் என்னவாக இருக்கலாம் எனக் கூறு. (புரோமினின் மோலார் நிறை $159.8 gmol^{-1}$ என கொடுக்கப்பட்டுள்ளது)

## 6.5 நல்லியல்புத் தன்மையிலிருந்து விலகலடைதல்

PV = nRT என்ற வாயுச் சமன்பாடு உருவாவதற்கு அடிப்படையாக அமைந்துள்ள வாயுக்களின் இயக்கவியற் கொள்கையின்படி (வாயுக்களின் இயக்கவியற் கொள்கையின் கோட்பாடுகள் இயற்பியல் பாடப் பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது) வாயுவின்



Unit 6 - Sridhar.indd 186 07-01-2021 15:01:25


ஒட்டு மொத்த கனஅளவோடு ஒப்பிடும் போது, தனிப்பட்ட ஒரு வாயு மூலக்கூறு அடைத்துக் கொள்ளும் கனஅளவு என்பது புறக்கணிக்கத்தக்கது. மேலும் வாயு மூலக்கூறுகளுக்கிடையே கவர்ச்சிவிசை ஏதுமில்லை. அனைத்து வெப்ப அழுத்த நிலைகளிலும் மேற்கண்டுள்ள இவ்விரு ஊகத்தின் அடிப்படையிலான கோட்பாடுகளுக்கு உட்பட்டு செயல்படும் வாயுக்கள் நல்லியல்பு வாயுக்கள் எனப்படும். ஆனால் நடைமுறையில் அனைத்து வெப்ப அழுத்த நிலைகளிலும் ஊகத்தின் அடிப்படையிலான இவ்விரு கருதுகோள்களும் சரியானவை அல்ல. எடுத்துக்காட்டாக வாயுக்களை திரவமாக்குதல் நிகழ்வானது, வாயு மூலக்கூறுகளுக்கிடையே கவர்ச்சி விசை உள்ளது என்பதைக் காட்டுவதாக உள்ளது. எனவே அனைத்து வெப்ப அழுத்த நிலைகளிலும் எந்த ஒரு வாயுவும் நல்லியல்பு வாயுவின் தன்மையினை பெற்றிருக்க இயலாது. அவ்வாறான நல்லியல்பு தன்மையற்ற வாயுக்கள் இயல்பு வாயுக்கள் என அழைக்கப்படுகின்றன. இயல்பு வாயுக்கள் சில நிபந்தனைகளில் (வெப்ப அழுத்த நிலைகளில்) நல்லியல்புத் தன்மையை நெருங்குகின்றன.

### 6.5.1 அமுக்கத்திறன் காரணி (Z)

இயல்பு வாயுக்கள், நல்லியல்புத் தன்மையிலிருந்து விலகலடைதலை PV மற்றும் nRTக்கு இடையேயான விகிதத்தின் அடிப்படையில், அளவிட இயலும். இக்காரணி அமுக்கத்திறன் காரணி எனப்படுகிறது. கணிதவியலின் அடிப்படையில்,

$$Z = \frac{PV}{nRT}$$


நல்லியில்பு வாயுக்களுக்கு PV=nRT எனவே, அனைத்து வெப்ப அழுத்த நிலைகளிலும் அமுக்கத்திறன் காரணி, Z= 1, இவ்வாயுக்களுக்கான Z Vs P வரைபடமானது அழுத்த அச்சிற்கு இணையான நேர்கோடாக அமையும். வாயுக்கள் நல்லியல்புத் தன்மையிலிருந்து விலகலடையும் போது, Zன் மதிப்பானது ஒன்றிலிருந்து விலகலடைகிறது. அனைத்து வாயுக்களுக்கும், மிகக்குறைந்த அழுத்தம் மற்றும் மிக அதிக வெப்பநிலைகளில் அமுக்கத்திறன் காரணியின் மதிப்பு 1க்கு அருகில் அமைந்துள்ளது. மேலும் வாயுக்கள் நல்லியல்புத் தன்மையுடையதாக செயல்படுகின்றன. குறிப்பிட்ட சில வாயுக்களுக்கான அமுக்கத்திறன் காரணி Vs அழுத்த வரைபடமானது வரைபடம் 6.8ல் காட்டப்பட்டுள்ளது.




படம் 6.8 சிலவாயுக்களுக்கானஅமுக்கத்திறன்காரணி (Z) Vs அழுத்தம் – வரைபடம்



Unit 6 - Sridhar.indd 187 07-01-2021 15:01:25




படம் 6.9 நைட்ரஜன்வாயுவிற்கு, வெவ்வேறுவெப்பநிலைகளில், அமுக்கத்திறன்காரணி Vsஅழுத்தம் – வரைபடம்

அழுத்தம் குறைவாக உள்ள போது, வாயுமூலக்கூறுகளின் கனஅளவோடு ஒப்பிடும் போது, கொள்கலனின் கனஅளவு மிக அதிகமாகும். எனவே தனித்த வாயு மூலக்கூறின் கனஅளவானது புறக்கணிக்கத்தக்கது. மேலும், வாயு மூலக்கூறுகள் ஒன்றுக்கொன்று தொலைவில் அமைவதால், அவற்றிற்கிடையேயான கவர்ச்சி விசையும் புறக்கணிக்கத்தக்கது. அழுத்தம் அதிகரிக்கப்படும் போது, வாயுக்களின் அடர்த்தி அதிகரிப்பதுடன், வாயுமூலக்கூறுகள் ஒன்றுக்கொன்று நெருக்கமாகவும் அமைகின்றன. எனவே வாயுமூலக்கூறுகளின் இயக்கத்தினை பாதிக்கும் வகையில் அவைகளுக்கிடையேயான கவர்ச்சி விசை குறிப்பிடத்தக்க அளவு போதுமானதாக உள்ளது. மேலும் வாயுக்கள் நல்லியல்புத் தன்மை உடையதாக இருப்பதில்லை.

அதிக வெப்ப நிலையில், வாயு மூலக்கூறுகளின் சராசரி இயக்க ஆற்றல் மிகஅதிகம். எனவே அவைகளுக்கிடையேயான கவர்ச்சி விசை புறக்கணிக்கத்தக்கது. வெப்பநிலையை குறைக்கும் போது வாயு மூலக்கூறுகளின் சராசரி இயக்க ஆற்றலும் குறையும். எனவே மூலக்கூறுகளுக்கிடையேயான கவர்ச்சி விசை அதிகரிக்கின்றது. எந்த ஒரு வெப்ப நிலையில் இயல்பு வாயுக்கள், நல்லியல்புச் சமன்பாட்டிற்கு, உட்பட்டு செயல்படுகிறதோ அவ்வெப்பநிலை பாயில் வெப்பநிலை அல்லது பாயில் புள்ளி எனப்படும். பாயில்வெப்பநிலைக்கு மேலே, இயல்பு வாயுக்களுக்கு $Z > 1$ அதாவது இயல்பு வாயுக்கள் நேர்மறை விலகலை காட்டுகின்றன. பாயில் வெப்பநிலைக்கு கீழே, அழுத்தம் அதிகரிக்கப்படும் போது, இயல்பு வாயுக்களுக்கான Zமதிப்பு முதலில் குறைந்து, சிறும மதிப்பினை அடைந்து பின்னர் அதிகரிக்கத் துவங்குகிறது. எனவே, குறைவான அழுத்தம் மற்றும் அதிக வெப்பநிலையில், இயல்பு வாயுக்கள், நல்லியல்புத் தன்மையினை பெறுகின்றன என தெளிவாகிறது.

### 6.5.2 இயல்பு வாயுக்களுக்கான அமுக்கத்திறன் காரணி

இயல்புவாயுக்களுக்கானஅமுக்கத்திறன் காரணியினை பின்வருமாறு எழுதலாம்.



Unit 6 - Sridhar.indd 188 07-01-2021 15:01:25

$$Z = \frac{PV_{இயல்பு}}{nRT} \text{ ---------------- } (6.17)$$

$$V_{நல்லியல்பு} = \frac{nRT}{P} \text{ ---------------- } (6.18)$$

(6.18) ஐ (6.17)ல்பிரதியிட

$$Z = \frac{V_{இயல்பு}}{V_{நல்லியல்பு}} \text{ ----------- } (6.19)$$


இங்கு, $V_{இயல்பு}$ என்பது இயல்பு வாயுக்களின் மோலார் கனஅளவு மற்றும் $V_{நல்லியல்பு}$ என்பது அவ்வாயு நல்லியல்பு வாயுவாக செயல்படும் போது அதன் மோலார் கனஅளவு மதிப்பாகும்.

### 6.5.3 வாண்டர் வால்ஸ் சமன்பாடு

இயல்பு வாயுக்களைப் பற்றிய கணிதவியல் ரீதியான ஆய்வுகள் முதன்முதலில் J.D வாண்டர் வால்ஸ் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது. இவரது சமன்பாட்டின் மூலம் நம்மால் மூலக்கூறு அளவில், இயல்பு வாயுக்களின் தன்மையினை விளக்க இயலும். இவர் அழுத்தத்திற்கான திருத்தம் மற்றும் கனஅளவிற்கான திருத்தம் என இரு திருத்தங்களை PV=nRT என்ற நல்லியல்பு வாயுச்சமன்பாட்டில், அறிமுகப்படுத்தி அச்சமன்பாட்டினை மாற்றியமைத்தார்.

#### அழுத்தத்திற்கான திருத்தம்

வாயுவின் அழுத்தமானது, அவ்வாயு மூலக்கூறுகள் கொள்கலனின் சுவற்றின் மீது மோதுவதால் ஏற்படும் விசைக்கு நேர்விகிதத் தொடர்புடையது. கொள்கலனின் சுவற்றினை நோக்கிச் செல்லும் ஒருவாயு மூலக்கூறின் வேகமானது, அம்மூலக்கூறினை சூழ்ந்துள்ள பிறவாயு மூலக்கூறுகளின் கவர்ச்சி விசையினால் குறைக்கப்படுகிறது. எனவே அளந்தறியப்பட்ட அழுத்தமானது, வாயுவின் நல்லியல்பு அழுத்தத்தை விட குறைவானதாகும். எனவே இவ்விளைவிற்கான ஒரு திருத்தத்தினை வாண்டர் வால்ஸ் அறிமுகப்படுத்தினார்.




**படம் 6.10 மூலக்கூறுகளுக்கிடையேயான கவர்ச்சி விசை**

கொள்கலனின் சுவற்றிற்கு அருகே உள்ளே ஒரு மூலக்கூறு உணரும் கவர்ச்சி விசையானது வாயுவின் அடர்த்தியின் வர்க்கத்திற்கு நேர்விகிதத்தில் இருக்கும் என வாண்டர் வால்ஸ் கண்டறிந்தார்.

$$P' \alpha \rho^2$$

$$\rho = \frac{n}{V}$$

இங்கு n என்பது வாயுக்களின் மோல்களின் எண்ணிக்கை 'V' என்பது கொள்கலனின் கனஅளவு

$$\Rightarrow P' \alpha \frac{n^2}{V^2}$$

$$\Rightarrow P' = a\frac{n^2}{V^2}$$

இங்கு a என்பது விகிதமாறிலி. இது வாயுவின் இயல்பினைப் பொருத்து அமையும்.

எனவே,

$$P_{நல்லியல்பு} = P + \frac{an^2}{V^2} \text{ ------ } (6.20)$$


#### கனஅளவிற்கான திருத்தம்

ஒவ்வொரு தனித்த வாயு மூலக்கூறும் ஒரு குறிப்பிடத்தக்க கனஅளவை அடைத்துக் கொள்வதால், வாயு அடங்கிய கொள்கலனின் கன அளவினை (V)க்காட்டிலும், வாயுவின் உண்மையான கனஅளவு குறைவானதாகும். இவ்விளைவிற்கான வாண்டர் வால்ஸ்



Unit 6 - Sridhar.indd 189 07-01-2021 15:01:26

திருத்தக்காரணி $V'$ ஐ அறிமுகப்படுத்தினார். வாயு மூலக்கூறுகளை கோளவடிவில் இருப்பதாக கருத்திற் கொண்டு, திருத்தக் காரணியை நாம் கணக்கிடலாம்.




படம் 6.11 புறக்கணிக்கப்பட்ட கனஅளவு

$V'$ = புறக்கணிக்கப்பட்ட கனஅளவு

இரு மூலக்கூறுகளுக்கான புறக்கணிக்கப்பட்ட கனஅளவு

$$= \frac{4}{3}\pi(2r)^3$$

$$= 8\left(\frac{4}{3}\pi r^3\right) = 8\,V_m$$

இங்கு $V_m$ ஒரு தனித்த வாயு மூலக்கூறின் கனஅளவு

ஒரு தனித்த மூலக்கூறுக்கான புறக்கணிக்கப்பட்ட கனஅளவு

$$= \frac{8\,V_m}{2} = 4\,V_m$$

n மூலக்கூறுகளுக்கான புறக்கணிக்கப்பட்ட கனஅளவு

$$= n\,(4\,V_m) = nb$$

இங்கு b என்பது வாண்டர் வால்ஸ் மாறிலி

இது $4V_m$ ற்குச் சமம்

$$\Rightarrow V' = nb$$

$$V_{\text{நல்லியல்பு}} = V - nb \text{ -----------(6.21)}$$

PV = nRT என்ற நல்லியல்பு வாயுச் சமன்பாட்டினை, திருத்தம் செய்யப்பட்ட அழுத்தம் மற்றும் கனஅளவு மதிப்புகளைக் கொண்டு மாற்றியமைக்க, இயல்பு வாயுக்களுக்கான வாண்டர் வால்ஸ் சமன்பாடு பின்வருமாறு பெறப்படுகிறது.

$$\left(P + \frac{an^2}{V^2}\right)(V - nb) = nRT \text{ . ----(6.22)}$$

a மற்றும் b ஆகியன வாண்டர் வால்ஸ் மாறிலிகள். வாயுக்களின் தன்மையினைப் பொறுத்து இம்மாறிலிகளின் மதிப்பு அமையும். இச்சமன்பாடு நல்லியல்புத் தன்மையற்ற வாயுக்களுக்கான, தோராயமான ஒரு சமன்பாடாகும்.

## 6.6 கார்பன்டை ஆக்ஸைடின், அழுத்தம் – கனஅளவு, சமவெப்ப நிலைக்கோடுகள்


### ஆண்ட்ரூஸின் சமவெப்பநிலைக் கோடுகள் (Andrew's isotherm)

தாமஸ் ஆண்ட்ரூஸ் என்பவரால் வாயு மற்றும் திரவநிலைகளில் உள்ள ஒரு பொருளின் அழுத்தம், கனஅளவு மற்றும் வெப்பநிலை ஆகியவற்றிற்கு இடையேயான முழுமையான தரவுகள் முதன்முதலில் தரப்பட்டது. வெவ்வேறு வெப்பநிலைகளில், கார்பன்டை ஆக்ஸைடின் சமவெப்பநிலைக் கோடுகளை அவர் வரைந்தார். வரைபடம் 6.12ல் தரப்பட்டுள்ளது. இவ்வரை படத்திலிருந்து நாம் பின்வரும் விவரங்களைப் பெறமுடிகிறது.

குறைவான வெப்பநிலையில் வரையப்பட்ட வெப்ப சமநிலைக் கோடுகளில், உதாரணமாக $13^0$Cல், அழுத்தம் அதிகரிக்கப்படும் போது, ABன் வழியே 'B'யை அடையும் வரை கனஅளவு குறைகிறது. 'B'ல்அழுத்தம் மாறாதிருக்கும் போது, BCன் வழியே திரவமாதல் நிகழ்கிறது. மேலும் வாயு மற்றும் திரவ நிலைமைகள் இரண்டும் ஒருசேர காணப்படுகின்றன. 'C'ல் வாயுவானது முழுவதும் திரவமாக மாறுகிறது. C ல் உள்ள அழுத்தத்தை விட, அதிக அழுத்தம் தரப்படும் போது திரவம் மட்டுமே அமுக்கத்திற்கு உட்படுகிறது. எனவே அதன் கனஅளவில் குறிப்பிடத் தகுந்த மாற்றம் ஏற்படுவதில்லை.

அடுத்தடுத்த வெப்பநிலைகளில் வரையப்பட்ட சமநிலைக் கோடுகளும் இதே தன்மையினைப் பெற்றுள்ளதுடன் தட்டையான பகுதியின் அளவு குறைந்து கொண்டே வருகிறது. அதாவது, திரவமும் வாயுவும் ஒருசேர காணப்படும் கனஅளவு வீச்சு குறைகிறது. **$31.1^0$C**ல் வெப்பநிலையில்,

குறைந்து கொண்டே வரும் தட்டையானபகுதி ' P' என்ற புள்ளியில் பூஜ்யமாகிறது. அதாவது இப்புள்ளியில் $CO_2$ வாயுவானது முற்றிலும் திரவமாகிறது. இந்த வெப்ப நிலையானது, $CO_2$ன் திரவமாகும் வெப்பநிலை அல்லது நிலைமாறும் வெப்பநிலை என அழைக்கப்படுகிறது. இப்புள்ளியில், அழுத்தம் 73 atm ஆகும். இந்த வெப்ப நிலைக்கு மேல் உள்ள அனைத்து அழுத்த நிலைகளிலும் $CO_2$ வாயு நிலையிலேயே உள்ளது. கார்பன்டை ஆக்ஸைடைப் போன்றே பல இயல்பு வாயுக்களும் செயல்படுகின்றன என பின்னர் கண்டறியப்பட்டது.




**படம் 6.12 வெவ்வேறுவெப்பநிலைகளில் $CO_2$ன்சமவெப்பநிலைக்கோடுகள்**

சமவெப்பநிலைக் கோடுகளின் இயல்பானது ஒரே மாதிரியாக இருந்த போதிலும், நிலைமாறு வெப்பநிலை மற்றும் அவ்வெப்ப நிலையில் நிலைமாறு அழுத்தம் மற்றும் நிலை மாறு கனஅளவு ஆகியவை ஒரு குறிப்பிட்ட வாயுவிற்கு அதன் தன்மையைப் பொறுத்து அமையும் பண்பாகும்.

நிலை மாறு மாறிலிகளை நாம் பின்வருமாறு வரையறுக்கலாம். எந்த ஒரு வெப்பநிலைக்கு மேலே அதிக அழுத்தம் அளிக்கப்படினும் ஒரு வாயுவினை, திரவமாக்க இயலாதோ அவ்வெப்பநிலை நிலைமாறு வெப்பநிலை ($T_c$) என வரையறுக்கப்படுகிறது. 1 மோல் வாயுவினை, அதன் நிலைமாறு வெப்ப நிலையில், திரவமாக்கத் தேவைப்படும் குறைந்த பட்ச அழுத்தம், நிலைமாறு அழுத்தம் ($P_c$) என வரையறுக்கப்படுகிறது.

1மோல் வாயுவானது, அதன் நிலை மாறு அழுத்தம் ($P_c$) மற்றும் நிலை மாறு வெப்பநிலையில் ($T_c$), அடைத்துக் கொள்ளும் கனஅளவு, நிலைமாறு கனஅளவு ($V_c$) என வரையறுக்கப்படுகிறது. சில பொதுவான வாயுக்களின் நிலைமாறு மாறிலிகளின் மதிப்பு அட்டவணை 6.2ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.2 சில வாயுக்களுக்கான நிலைமாறு மாறிலிகள்**

| வாயுவின் பெயர் | நிலைமாறு வெப்பநிலை ($T_C$) Kல் | நிலைமாறு அழுத்தம் ($P_C$) atmல் | நிலைமாறு கனஅளவு ($V_C$) $cm^3$ $mol^{-1}$ ல் |
|---|---|---|---|
| ஹீலியம் (He) | 5.2 | 2.26 | 57.8 |
| கார்பன்டை ஆக்ஸைடு ($CO_2$) | 304.2 | 72.9 | 94.0 |
| ஆக்சிஜன் ($O_2$) | 154.8 | 50.14 | 78.0 |
| நைட்ரஜன் ($N_2$) | 126.3 | 33.54 | 90.1 |
| ஹைட்ரஜன் ($H_2$) | 33.2 | 12.80 | 65 |
| நீர் ($H_2O$) | 647.4 | 218.3 | 55.3 |
| அம்மோனியா ($NH_3$) | 405.5 | 111.3 | 72.5 |
| ஹைட்ரஜன் குளோரைடு (HCl) | 324.7 | 81.5 | 81.0 |
| மீத்தேன் ($CH_4$) | 190.6 | 45.6 | 98.7 |
| எத்திலீன் ($C_2H_4$) | 283.1 | 50.50 | 124 |



Unit 6 - Sridhar.indd 191 07-01-2021 15:01:27

**தன்மதிப்பீடு**

8. $H_2O$, $NH_3$ மற்றும் $CO_2$ன் நிலைமாறு வெப்பநிலைகள் முறையே 647.4K, 405.5K மற்றும் 304.2K ஆகும். நாம், 700K வெப்ப நிலையிலிருந்து குளிர்வித்தலை நிகழ்த்தும் போது, முதலில் திரவமாக மாறுவது மற்றும் இறுதியாக திரவமாக மாறுவது எது என கண்டறிக.

### 6.6.1 வாண்டர் வால்ஸ் மாறிலிகளிலிருந்து நிலைமாறு மாறிலிகளை தருவித்தல்

'n' மோல் வாயுவிற்கான வாண்டர் வால்ஸ் சமன்பாடு,

$$\left(P+\frac{a\,n^2}{V^2}\right)(V-nb)=nRT \text{ ---------- } (6.22)$$

1 மோல் வாயுவிற்கு,

$$\left(P+\frac{a}{V^2}\right)(V-b)=RT \text{ ---------- } (6.23)$$

மேற்கண்டுள்ள சமன்பாட்டிலிருந்து, நிலைமாறு மாறிலிகள் $P_c$, $V_c$ மற்றும் $T_c$ன் மதிப்புகளை வாண்டர் வால்ஸ் மாறிலிகள் a மற்றும் b ன் வாயிலாக தருவிக்கலாம். மேற்கண்டுள்ள சமன்பாட்டினை விரிவாக்க,

$$PV+\frac{a}{V}-Pb-\frac{ab}{V^2}-RT=0 \text{ ------- } (6.24)$$

சமன்பாடு (6.24) ஐ $V^2/P$ஆல்பெருக்குக

$$\frac{V^2}{P}(PV+\frac{a}{V}-Pb-\frac{ab}{V^2}-RT)=0$$

$$V^3+\frac{aV}{P}-bV^2-\frac{ab}{P}-\frac{RTV^2}{P}=0 \quad (3) \quad \text{--- } (6.25)$$

'V' ன் அடுக்காக மேற்கண்டுள்ள சமன்பாட்டினை விரிவாக்கும் போது

$$V^3-\left[\frac{RT}{P}+b\right]V^2+\left[\frac{a}{P}\right]V-\left[\frac{ab}{P}\right]=0 \text{ --- } (6.26)$$

இச்சமன்பாடானது (6.26) Vல் அமைந்த முப்படிச் சமன்பாடாகும். இச்சமன்பாட்டினைத் தீர்க்கும் போது நாம் மூன்று தீர்வுகளைப் பெறலாம். நிலைமாறு நிலையில் Vன் இம்மூன்று மதிப்புகளும் நிலைமாறு கனஅளவு $V_c$க்குச் சமம். மேலும் அழுத்தம் மற்றும் வெப்பநிலைகள் $P_c$ மற்றும் $T_c$க்குச் சமம்.

i.e., $V = V_C$

$$V - V_C = 0$$

$$(V - V_C)^3 = 0$$

$$V^3 - 3V_CV^2 + 3V_C^2V - V_C^3 = 0 \text{ ---- } (6.27)$$

(6.26) ஆனது (6.27) ஆகிய இருசமன்பாடுகளும் ஒன்றே என்பதால், (6.26) மற்றும் (6.27)ல் உள்ள $V^2$, V ஆகியவற்றின் குணகங்கள் மற்றும் மாறிலி மதிப்புகளை நாம் சமப்படுத்தலாம்.

$$-3V_CV^2=-\left[\frac{RT_C}{P_C}+b\right]V^2$$

$$3V_C=\frac{RT_C}{P_C}+b \text{ ---- } (6.28)$$

$$3V_C^2=\frac{a}{P_C} \text{ ---- } (6.29)$$

$$V_C^3=\frac{ab}{P_C} \text{ ---- } (6.30)$$

சமன்பாடு (6.30) ஐ சமன்பாடு (6.29) ஆல் வகுக்க

$$\frac{V_C^3}{3V_C^2}=\frac{ab/P_C}{a/P_C}$$

$$\frac{V_C}{3}=b$$

i.e. $V_C = 3b$ ------- (6.31)

$V_c$ ன் மதிப்பினை (6.2ல் பிரதியிட)

$$3V_C^2 = \frac{a}{P_C}$$

$$P_C = \frac{a}{3V_C^2} = \frac{a}{3(3b^2)} = \frac{a}{3 \times 9b^2} = \frac{a}{27\,b^2}$$

$$P_C = \frac{a}{27b^2} \quad \text{------ (6.32)}$$

$V_c$ மற்றும் $P_c$ ன் மதிப்புகளைச் சமன்பாடு (6.28)ல் பிரதியிட

$$3V_C = b + \frac{R\,T_C}{P_C}$$

$$3\,(3\,b) = b + \frac{R\,T_C}{\left(a/27\,b^2\right)}$$

$$9\,b - b = \left(\frac{R\,T_C}{a}\right) 27\,b^2$$

$$8\,b = \frac{T_C\,R\,27b^2}{a}$$

$$\therefore\ T_C = \frac{8\,a\,b}{27\,R\,b^2} = \frac{8\,a}{27\,R\,b}$$

$$T_C = \frac{8\,a}{27\,R\,b} \quad \text{------ (6.33)}$$

நிலைமாறு மாறிலிகளின் மதிப்பினைப் பயன்படுத்தி வாண்டர் வால்ஸ் மாறிலிகளையும், வாண்டர் வால்ஸ் மாறிலிகளைப் பயன்படுத்தி நிலைமாறு மாறிலிகளின் மதிப்புகளையும் கண்டறியலாம்.

$$a = 3\,V_C^2\,P_C \text{ மற்றும் } b = \frac{V_C}{3}$$

## 6.7 வாயுக்களைத் திரவமாக்குதல்

LPG (திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு) மற்றும் ராக்கெட் எரிபொருட்கள் போன்ற வணிக செயல்பாடுகளுக்கு திரவ நிலையில் வாயுக்கள் தேவைப்படுகிறது. வாயுக்களை திரவமாக்கும் முறைகள் ஜூல்–தாம்சன் விளைவினை அடிப்படையாகக் கொண்டவை. அழுத்தப்பட்ட வாயுவானது, ஒரு மிகச் சிறிய துளையின் வழியே, குறைந்த அழுத்தப் பகுதிக்கு செலுத்தப்படும் போது குறிப்பிடத்தக்க அளவில் வாயு குளிர்ச்சியடைகிறது என்பதை ஜூல்–தாம்சன் கண்டறிந்தார். வெப்ப மாறாச் செயல்முறையில் ஒரு வாயுவானது அதிக அழுத்தப் பகுதியிலிருந்து, குறைந்த அழுத்தப் பகுதிக்கு விரிவடையச் செய்யும் போது, வெப்ப நிலையானது குறையும் இந்நிகழ்வு ஜூல்–தாம்சன் விளைவு எனப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட வெப்பநிலைக்கு கீழேமட்டும் இவ்விளைவு நிகழ்கிறது. இக்குறிப்பிட்ட வெப்பநிலை ஒவ்வொரு வாயுவிற்கும் அதன் தன்மையினைப் பொருத்து அமைகிறது. **எந்த ஒரு குறிப்பிட்ட வெப்பநிலைக்கு கீழ், ஒரு வாயு ஜூல்–தாம்சன் விளைவிற்கு உட்படுகிறதோ அவ்வெப்பநிலை, எதிர்மாறுவெப்பநிலை ($T_i$) என்று அழைக்கப்படுகிறது.**

$$T_i = \frac{2a}{Rb} \quad \text{--------- (6.34)}$$

வாண்டர் வால்ஸ் மாறிலிகள் a மற்றும் 'b' யைப் பயன்படுத்தி எதிர்மாறு வெப்பநிலையினைப் பெறலாம்.

$O_2$, He, $N_2$ மற்றும் $H_2$ போன்ற வாயுக்கள் குறைவான $T_C$ மதிப்பினைப் பெற்றுள்ளன. எனவே திறம்படக் குளிர்விக்க ஜூல் தாம்சன் விளைவினைப் பயன்படுத்த முடியும். எதிர்மாறு வெப்பநிலையில், ஒரு வாயு விரிவடையும் போது, வெப்பநிலையில் உயர்வோ அல்லது குறைவோ ஏற்படுவதில்லை. ஆனால் எதிர்மாறு வெப்பநிலைக்கு மேல், ஒரு துளை வழியே வாயுவினை விரிவடையச் செய்யும் போது வெப்பமாகிறது.

வாயுக்களைத் திரவமாக்க பல்வேறு முறைகள் பயன் படுகின்றன

1) **லின்டேமுறையில்,** காற்று அல்லது பிறவாயுக்கள் ஜூல்–தாம்சன் விளைவினைப் பயன்படுத்தி திரவமாக்கப்படுகின்றன.



Unit 6 - Sridhar.indd 193 07-01-2021 15:01:29

2) **கிளாட்முறையில்,** ஜூல்–தாம்சன் விளைவுடன், வாயுவானது எந்திரவியல் வேலைக்கும் உட்படுத்தப்படுகிறதன் மூலம் அதிக குளிர்ச்சியடைந்த நிலை உருவாக்கப்படுகிறது.

3) **வெப்ப மாறாச் செயல்முறையில்,** கடோலினியம் சல்பேட் போன்ற காந்தத் தன்மையுடைய பொருளின் காந்தத் தன்மையை இழக்கச் செய்வதன் மூலம், குளிர்ச்சியடையச் செய்தல் நிகழ்த்தப்படுகிறது. இம்முறையில் 0K வை விடகுறைவான வெப்பநிலையான $10^{-4}$ K அளவில் வெப்பநிலையினை அடைய இயலும்.

## பாடச்சுருக்கம்

அழுத்தம் (P), கனஅளவு (V), வெப்பநிலை (T) மோல்களின்எண்ணிக்கை (n) ஆகிய நான்கு தனித்த மாறிகளுக்கு இடையேயான தொடர்பினைக் கொண்டு ஒருவாயுவின் நிலையினை நன்கு வரையறுக்கலாம். இந்த அளவீடுகளுக்கு இடையேயான தொடர்பானது பல்வேறு வாயுவிதிகளின் படி பின்வருமாறு சுருக்கமாக தரப்படுகிறது.

| விதி | சமன்பாடு | தேவையான நிலை | இருவேறு நிலைகளில் சமன்பாடு |
|---|---|---|---|
| பாயில்விதி | PV = மாறிலி | n மற்றும் T மாறிலிகள் | $P_1V_1 = P_2V_2$ |
| சார்லஸ் விதி | $\frac{V}{T}$ = மாறிலி | P மற்றும் n மாறிலியாகும் | $\frac{V_1}{T_1} = \frac{V_2}{T_2}$ |
| கேலூசாக்கின் விதி | $\frac{P}{T}$ = மாறிலி | V மற்றும் n மாறிலி | $\frac{P_1}{T_1} = \frac{P_2}{T_2}$ |
| தொகுக்கப்பட்ட வாயு விதி | $\frac{PV}{T}$ = மாறிலி | n =மாறிலி | $\frac{P_1V_1}{T_1} = \frac{P_2V_2}{T_2}$ |
| அவகேட்ரோ கருதுகோள் | $\frac{V}{n}$ = மாறிலி | T மற்றும் P மாறிலி | $\frac{V_1}{n_1} = \frac{V_2}{n_2}$ |
| டால்டனின் பகுதியழுத்த விதி | $P_{\text{மொத்தம்}} = p_1+p_2+p_3+....$ | T மற்றும் V மாறிலி | |
| கிரஹாமின் விரவுதல் விதி | $r \propto \frac{1}{\sqrt{M}}$ | T மற்றும் P மாறிலி | $\frac{r_1}{r_2} = \sqrt{\frac{M_2}{M_1}}$ |



Unit 6 - Sridhar.indd 194 07-01-2021 15:01:29

அனைத்து வெப்ப அழுத்த நிலைகளிலும் PV = nRT என்னும் சமன்பாட்டிற்கு உட்பட்டு செயல்படும் வாயுக்கள் நல்லியல்பு வாயுக்கள் எனப்படும். நடைமுறையில் எந்த ஒரு வாயுவும் நல்லியல்பு வாயு அல்ல.

வாயுக்கள் அதிகவெப்பநிலை மற்றும் குறைந்த அழுத்தத்தில் நல்லியல்பு தன்மையை பெற்று விளங்கும். இயல்பு வாயுக்களுக்கு பொருந்தும் வகையில் வாண்டர் வால்ஸ் நல்லியல்பு வாயுச்சமன்பாட்டினை பின்வருமாறு மாற்றி அமைத்தார்.

$$\left(P + \frac{a\,n^2}{V^2}\right)(V - nb) = nRT$$

எந்த ஒரு வெப்பநிலைக்கு மேலே அதிக அழுத்தத்திலும் கூட ஒரு வாயுவினை, திரவமாக்க இயலாதோ அவ்வெப்பநிலை நிலைமாறு வெப்பநிலை ($T_C$) என வரையறுக்கப்படுகிறது. 1 மோல் வாயுவினை, அதன் நிலைமாறு வெப்பநிலையில், திரவமாக்கத் தேவைப்படும் குறைந்தபட்ச அழுத்தம், நிலைமாறு அழுத்தம் ($P_C$) என வரையறுக்கப்படுகிறது. 1 மோல் வாயுவானது, அதன் நிலை மாறு அழுத்தம் ($P_c$) மற்றும் நிலை மாறு வெப்பநிலையில் ($T_c$), அடைத்துக் கொள்ளும் கனஅளவு, நிலைமாறு கனஅளவு ($V_c$) என வரையறுக்கப்படுகிறது. நிலைமாறு மாறிலிகள் வாண்டர் வால்ஸ் மாறிலிகளோடு கொண்டுள்ள தொடர்பு கீழ்கண்டவாறு தரப்படுகின்றது.

$$\therefore\ T_C = \frac{8\,a\,b}{27\,R\,b^2},\quad P_C = \frac{a}{27b^2}\ \text{மற்றும்}\ V_C = 3b$$

அழுத்தப்பட்ட வாயுவானது, ஒரு மிகச் சிறிய துளையின் வழியே, குறைந்த அழுத்தப்பகுதிக்கு செலுத்தப்படும் போது குறிப்பிடத்தக்க அளவில் வாயு குளிர்ச்சியடைகிறது. இவ்விளைவு ஜீல் தாம்சன் விளைவு எனப்படும். இவ்விளைவு வாயுக்களைத் திரவமாக்கலில் பயன்படுகிறது.



Unit 6 - Sridhar.indd 195 07-01-2021 15:01:29

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தெரிவு செய்க.

1) வாயுக்கள் அதிக அழுத்தத்தில் நல்லியல்பு பண்பிலிருந்து விலகலடைகின்றன. கீழ்கண்ட கூற்றுகளில் நல்லியல்பு அல்லா தன்மைக்கு பொருந்தும் சரியான கூற்று எது? எவை

அ) அதிக அழுத்தத்தில் மூலக்கூறுகளுக்கிடையே மோதல் அதிகரிக்கின்றன.

ஆ) அதிக அழுத்தத்தில் வாயு மூலக்கூறுகள் ஒரே திசையில் நகர்கின்றன.

இ) அதிக அழுத்தத்தில் வாயுவின் கனஅளவு புறக்கணிக்கத்தக்கதாகும்.

ஈ) அதிக அழுத்தத்தில் மூலக்கூறுகளுக்கிடையேயான கவர்ச்சி விசை புறக்கணிக்கத்தக்கதன்று.

2. ஒரு வாயுவின் விரவுதலின் வீதம்

அ) அதன் அடர்த்திக்கு நேர்விகித தொடர்புடையது.

ஆ) அதன் மூலக்கூறு எடைக்கு நேர்விகித தொடர்புடையது

இ) மூலக்கூறு எடையின் வர்க்கமூலத்திற்கு நேர்விகித தொடர்புடையது.

ஈ) மூலக்கூறுஎடையின்வர்க்கமூலத்திற்குஎதிர்விகிததொடர்புடையது.

3) கீழ்கண்டவற்றுள் எது வாயுநிலைக்கான சரியான வாண்டர் வால்ஸ் சமன்பாடாகும்.

அ) $\left(P+\frac{a}{n^2V^2}\right)(V-nb)=nRT$ ஆ) $\left(P+\frac{na}{n^2V^2}\right)(V-nb)=nRT$

இ) $\left(P+\frac{an^2}{V^2}\right)(V-nb)=nRT$ ஈ) $\left(P+\frac{n^2a^2}{V^2}\right)(V-nb)=nRT$

4) கட்டுப்பாடற்ற விரிவடைதலின் போது ஒரு நல்லியல்பு வாயுவின் வெப்பநிலை குறைவதில்லை ஏனெனில் மூலக்கூறுகள்

அ) எதிர்மாறு வெப்பநிலையை விட அதிக வெப்பநிலையில் உள்ளது.

ஆ) ஒன்றுக்கொன்று கவர்ச்சி விசையை செலுத்துவதில்லை

இ) இயக்க ஆற்றல் இழப்பிற்கு சமமான வேலையை செய்யும்

ஈ) ஆற்றல் இழப்பின்றி மோதுகின்றன.

5) ஒரு காலியாகவுள்ள கலனில் 298K யில் சம எடையுள்ள மீத்தேன் மற்றும் ஆக்ஸிஜன் நிரப்பப்படுகின்றன. மொத்த அழுத்தத்தில் ஆக்ஸிஜன் மூலக்கூறு கொடுக்கும் அழுத்த பின்னம்.

அ) $\frac{1}{3}$ ஆ) $\frac{1}{2}$ இ) $\frac{2}{3}$ ஈ) $\frac{1}{3} \times 273 \times 298$

6) இயல்பு வாயுக்கள் குறிப்பிட்ட அழுத்த வரம்பில் நல்லியல்பு வாயுக்களாக நடக்கும் வெப்பநிலை

அ) நிலைமாறு வெப்பநிலை ஆ) பாயில் வெப்பநிலை

இ) எதிர்மாறு வெப்பநிலை ஈ) குறைக்கப்பட்ட வெப்பநிலை

7) 1000 மீ$^3$ கனஅளவுள்ள மூடிய அறையில் ஒரு வாசனை திரவியபுட்டி திறக்கப்பட்டது. அறையில் நறுமணம் உண்டாகிறது. இதற்கு வாயுக்களின் எந்த பண்பு காரணமாக அமைகிறது?

அ) பாகுத்தன்மை ஆ) அடர்த்தி

இ) விரவுதல் ஈ) எதுவுமில்லை

8) அம்மோனியா குடுவை மற்றும் HCl குடுவை இரண்டும் ஒரு நீண்டகுழாய் வழியே இணைக்கப்பட்டு இரண்டும் ஒரே நேரத்தில் திறக்கப்படுகின்றன. வெண்ணிற அம்மோனியம் குளோரைடு வளையம் முதன்முதலில் எங்குஉருவாகின்றது?

அ) குழாயின் நடுப்பகுதியில்

ஆ) ஹைட்ரஜன் குளோரைடு குடுவையருகில்

இ) அம்மோனியா குடுவையருகில்

ஈ) குழாயின் முழுநீளத்திலும் முழுமையாக

9) எதனைப் பொறுத்து வாயுமாறிலியின் மதிப்பு அமையும்?

அ) வாயுவின்வெப்பநிலை

ஆ) வாயுவின் கனஅளவு

இ) வாயுவின் மூலக்கூறுகளின் எண்ணிக்கை

ஈ) அழுத்தம் மற்றும் கனஅளவின் அலகுகள்

10) வாயுமாறிலியின் மதிப்பு

அ) 0.082$dm^3$*atm*. ஆ) 0.987 cal $mol^{-1}$ $K^{-1}$

இ) 8.3 J $mol^{-1}K^{-1}$ ஈ) 8 erg $mol^{-1}K^{-1}$

11) வானியல் ஆய்வுமையங்களில் உபயோகப்படும் அதிக வெப்பபலூன்களின் பயன்பாடு இவ்விதியின் அடிப்படையில் அமைகிறது.

அ) பாயிலின் விதி ஆ) நியூட்டனின் விதி

இ) கெல்வினின் விதி ஈ) பிரௌனின் விதி

12) வாயுக்களின் வாண்டர் வால்ஸ் மாறிலி aயின் மதிப்பு $(dm^3)^2$*atm*. $mol^{-2}$ – ல் கீழ்க்கண்டுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது

| வாயு | $O_2$ | $N_2$ | $NH_3$ | $CH_4$ |
|---|---|---|---|---|
| a | 1.360 | 1.390 | 4.170 | 2.253 |

மிக எளிதாக திரவமாக்கப்படும் வாயு

அ) $O_2$ ஆ) $N_2$ இ) $NH_3$ ஈ) $CH_4$

13) கீழ்காணும் கூற்றுகளை கருதுக

i) காற்றழுத்தம் கடல் மட்டத்தினை விட மலை உச்சியில் குறைவு

ii) வாயுக்கள் திட மற்றும் திரவங்களை விட அதிக அளவில் அழுத்தத்திற்கு உட்படுகின்றன

iii) காற்றின் வளிமண்டல அழுத்தம் அதிகரிக்கும் போது பாதரசமட்டம் அதிகரிக்கின்றது

சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்

அ) I மற்றும் II ஆ) II மற்றும் III இ) I மற்றும் III ஈ) I, II மற்றும் III

14) 400K ல் 71.0 barல் $CO_2$ ன் அமுக்கதிறன் காரணி 0.8697 இந்த நிலையில் $CO_2$ன் மோலார் கனஅளவு

அ) 22.04 $dm^3$ ஆ) 2.24 $dm^3$ இ) 0.41 $dm^3$ ஈ) 19.5$dm^3$

15) ஒரு நல்லியல்பு வாயுவின் வெப்பநிலை மற்றும் கனஅளவு இருமடங்காக அதிகரிக்கும் போது அதன் ஆரம்ப அழுத்தத்தின் மாற்றம்

அ) 4P ஆ) 2P இ) P ஈ) 3P



Unit 6 - Sridhar.indd 198 07-01-2021 15:01:31

16) ஒரு சமவெப்ப அழுத்த நிலையில் $C_nH_{2n-2}$ என்ற மூலக்கூறு வாய்ப்பாடு கொண்ட ஹைட்ரோகார்பன் போன்று ஹைட்ரஜன் வாயு $3\sqrt{3}$ மடங்கு விரவுதல் வீதம் கொண்டதெனில் 'n' ன் மதிப்பு என்ன?

அ) 8 ஆ) 4 இ) 3 ஈ) 1

17) ஒரு கலனில் சம எண்ணிக்கையுள்ள ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் மோல்கள் ஒரு துளை வழியே வெளியேறுகின்றன. பாதியளவு ஹைட்ரஜன் வெளியேற தேவைப்படும் அதே நேரத்தில் விரவும் ஆக்ஸிஜனின் பின்ன அளவு (NEET Phase I)

அ) $3/8$ ஆ) $1/2$ இ) $1/8$ ஈ) $1/4$

18) மாறாத அழுத்தத்தில் வெப்பநிலை மாற்றத்தால் ஏற்படும் கனஅளவு மாற்றம் கனஅளவின் ஒப்பீட்டு அதிகரிப்பு ஆகும். அதாவது $\alpha = \frac{1}{V}\left(\frac{\partial V}{\partial T}\right)_P$. நல்லியல்பு வாயுக்களுக்கான $\alpha$ மதிப்பு

அ) T ஆ) $1/T$ இ) P ஈ) ஏதும் இல்லை

19) P, Q, R மற்றும் S என்ற நான்கு வாயுக்களின் b யின் மதிப்பு சமம் ஆனால் a யின் மதிப்பு Q<R<S<P a மற்றும் b வாண்டர் வால்ஸ் மாறிலிகள் குறிப்பிட்ட வெப்பநிலையில் நான்கு வாயுக்களுள் எளிதில் ஆவியாகும் வாயு

அ) P ஆ) Q இ) R ஈ) S

20. நல்லியல்பு பண்பிலிருந்து அதிக விலக்கம் அடையும் வாயு (NEET)

அ) $CH_4(g)$ ஆ) $NH_3(g)$ இ) $H_2(g)$ ஈ) $N_2(g)$

21) வாண்டர் வால்ஸ் மாறிலிகள் b மற்றும் a யின் அலகுகள் முறையே

அ) $mol\ L^{-1}$ மற்றும் $L\ atm^2\ mol^{-1}$ ஆ) mol L மற்றும் $L\ atm\ mol^2$

இ) $mol^{-1}L$ மற்றும் $L^2\ atm\ mol^{-2}$ ஈ) இவை எதுவுமில்லை

22) கூற்று: $CO_2$ வின் நிலைமாறு வெப்பநிலை 304 K. இதனை அதிக அழுத்ததிற்கு உட்படுத்தி 304 Kக்கு மேல் திரவமாக்க முடியும்.

காரணம்:– மாறாத வெப்பநிலையில் கொடுக்கப்பட்டுள்ள நிறையுள்ள வாயுவின் கனஅளவு அதன் அழுத்தத்திற்கு நேர்விகிதத்தில் அமையும்

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணமானது கூற்றிற்கு சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.


ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

23) $227^{o}$Cயில் 5.00 atm அழுத்தத்திலுள்ள $N_2$ வாயுவின் அடர்த்தி என்ன?


அ) 1.40 g/L ஆ) 2.81g/L இ) 3.41 g/L ஈ) 0. 29 g/L

24) கீழ்கண்டவற்றுள் குறிப்பிட்ட எடையுள்ள நல்லியல்பு வாயுவின் பண்புகளைக் சரியாகக் குறிக்கும் படம் எது


அ)




ஆ)




இ)




ஈ) அனைத்தும்

25) 25 கிராம் நிறையுள்ள கீழ்கண்ட வாயுக்கள் $27^{o}$யில் 600 mm Hg அழுத்தத்தில் எடுக்கப்பட்டு உள்ளன. இவற்றில் குறைந்த கனஅளவு கொண்ட வாயு எது?

அ) HBr ஆ) HCl இ) HF ஈ) HI

## II. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி

26) பாயிலின் விதியினை தருக

27) கேலூசாக் விதிக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இரு மாதிரிகளின் பெயர்களைத் தந்து விளக்குக

28) ஒரு வாயுவின் கனஅளவு மற்றும் மோல்களை தொடர்புபடுத்தும் கணிதமுறை வாய்பாட்டினை தருக

29) நல்லியல்பு வாயுக்கள் என்பன யாவை? இயல்புவாயுக்கள் நல்லியல்பு வாயுக்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன.?

30) a = 0 என்ற வாண்டர் வால்ஸ் மாறிலியைக் கொண்ட வாயுவினை திரவமாக்க முடியுமா? விவரி



Unit 6 - Sridhar.indd 200 07-01-2021 15:01:32

31) ஒரு வாயு உள்ள கலனின் சுவரில் மிகச்சிறிய பசைத் தன்மை கொண்ட ஒரு பரப்பு உள்ளதெனக் கருதவும். இப்பரப்பில் மோதும் மூலக்கூறுகள் அங்கு நிரந்தரமாக ஒட்டிக் கொள்கின்றன. இப்பரப்பில் அழுத்தம் மற்றும் மற்ற இடங்களை விட அதிகமாக இருக்குமா அன்றி குறைவாக இருக்குமா?

32) கீழ்கண்டவற்றிற்கு உரிய விளக்கங்கள் தருக

அ) கோடைக்காலத்தில் காற்றேற்றப்பட்ட குளிர்பானப் புட்டிகள் நீரினுள் வைக்கப்பட்டிருக்கும்

ஆ) திரவ அம்மோனியா அடைக்கப்பட்டுள்ள புட்டிகள் திறக்கப்படும் முன் குளிர்விக்கப்படும்

இ) மோட்டார் வாகன எந்திரங்களின் உருளைகளில் (tyres) கோடையில் குளிர்காலத்தை விடகாற்று குறைவாக நிரப்பப்பட்டிருக்கும்.

ஈ) வானியல் ஆய்வு பலூனின் அளவு உயரமாக மேலே செல்லச் செல்ல பெரியதாக மாறும்.

33) வாயுக்கள் பற்றிய கீழ்கண்ட உண்மைகளுக்கு சரியான விளக்கம் தருக

அ) வாயுக்கள் கலனின் அடிப்பரப்பில் தங்குவதில்லை.

ஆ) வாயுக்கள் தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வெளியில் பரவுகின்றன.

34) நமது வளிமண்டலத்தில் ஹைட்ரஜன் ($H_2$) இல்லை. ஏன்? நிலவில் வளிமண்டலம் ஏன் இல்லை?

35) பின்வரும் நிபந்தனைகளில் ஒரு வாயு நல்லியல்பு பண்பினை பெறுகிறதா அல்லது நல்லியல்பு பண்பிலிருந்து விலகிச் செல்கிறதா என விவரி?

அ) மாறா வெப்ப நிலையில் அது மிகச்சிறிய கனஅளவிற்கு அழுத்தப்படும் போது

ஆ) மாறா கனஅளவில் அதன் வெப்பநிலையை உயர்த்தும் போது

இ) சமவெப்ப மற்றும் சமகனஅளவு நிலையில் அதிக அளவு வாயு சேர்க்கப்படும் போது

36) கொடுக்கப்பட்டுள்ள குறைந்த வெப்பநிலையில் கீழ்கண்டவற்றுள் எந்த வாயு நல்லியல்பு வாயுவிலிருந்து விலகும் $F_2$, $Cl_2$ அல்லது $Br_2$? விளக்குக

37) விரவுதல் மற்றும் பாய்தல் வேறுபாடு தருக.

38) காற்று கரைசல்கள் கொண்ட கலன்கள் வெப்பப்படுத்துவதைப் பற்றிய தெளிவான எச்சரிக்கை கொண்டிருக்கும் ஏன்?

39) எவரெஸ்ட் மலையின் உச்சியின் மீதுள்ள ஒருவர் உறிஞ்சி (Straw) கொண்டு நீரினை உறிஞ்சுவது எளிதா?



Unit 6 - Sridhar.indd 201 07-01-2021 15:01:32

40) இயல்பு வாயுக்களின் வாண்டர் வால்ஸ் சமன்பாடுகளைத் தருக. அழுத்தம் மற்றும் கனஅளவின் திருத்தங்களையும் தருக.

41) வாண்டர் வால்ஸ் மாறிலிகளைக் கொண்டு நிலைமாறு மாறிலிகளைத் தருவி.

42) நிலவின் பரப்பின் மீதுள்ள ஒரு விண்வெளி ஆராய்ச்சியாளர் பாதுகாப்பு கவச ஆடை அணிய வேண்டியது அவசியம் ஏன்?

43) அம்மோனியா HCl உடன் வினைபுரிந்து அடர்ந்த வெண்ணிற புகையான $NH_4Cl$ஐ தருகிறது. புகை HClக்கு அருகில் தோன்றுவது ஏன்?

44) ஒரு வாயு $15^oC$யில் 1atm அழுத்தத்தில் பெற்றுள்ள கனஅளவு 2.58 $dm^3$வெப்பநிலை $38^oC$யாக 1atm அழுத்தத்தில் உயர்ந்தால் அதன் கனஅளவு அதிகரிக்குமா? எனில் அதன் இறுதி கனஅளவைக் கணக்கிடு

45) ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் வாயு ஒன்றின் கனஅளவு 3.8 $dm^3$ ஆகும். அதனை $0^oC$யில் உள்ள பனிக்கட்டி நீரில் மூழ்க வைக்கும் போது அதன் கனஅளவு 2.27 $dm^3$ எனில் அதன் ஆரம்ப வெப்பநிலை என்ன.

46) நைட்ரஜன் வாயுவின் இரு வேறுமாதிரிகளுள் ஒன்று A 1.5 மோல்கள், 37.6 $dm^3$ கனஅளவுள்ள கலனில் 298Kல் வைக்கப்பட்டுள்ளது. மற்றொன்று B 16.5$dm^3$ கனஅளவுள்ள கலனில் 298Kல் வைக்கப்பட்டுள்ளது. மாதிரி Bயில் உள்ள மோல்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுக.

47) சல்பர் ஹெக்சாகுளோரைடு ஒரு நிறமற்ற மணமற்ற வாயு. அது நல்லியல்பு தன்மை உடையதாக கருதி 5.43 $dm^3$ கனஅளவுள்ள ஒரு எஃகு கலனில் $69.5^o$ Cல் 1.82 மோல் கொண்ட வாயுவின் அழுத்தத்தினைக்கணக்கிடுக.

48) ஆர்கான் ஒரு மந்தவாயு. இது மின்விளக்குகளில் டங்ஸ்டன் இழை ஆவியாவதைத் தடுக்க பயன்படுகிறது. மாறா கனஅளவில் உள்ள ஒரு மின் விளக்கில் $18^oC$யில் 1.2 atmல் உள்ள ஆர்கான் வாயு $85^oC$க்கு வெப்பப்படுத்தப் படுகிறது. அதன் இறுதி அழுத்தத்தினை (atmல்) கணக்கிடுக.

49) ஏரி ஒன்றில் ஒரு சிறிய குமிழி $6^oC$ மற்றும் 4 atm உள்ள அடிப்புறத்தில் இருந்து $25^o$ C மற்றும் 1 atm உள்ள மேற்பரப்பிற்கு வருகின்றது. அதன் ஆரம்ப கனஅளவு 1.5 ml எனில் இறுதி கனஅளவினை கண்டறிக.

50) ஒரு உலோகத்தினை ஹைட்ரோகுளோரிக் அமிலத்துடன் வினைபுரியச் செய்யும் போது ஹைட்ரஜன் உருவாகிறது. ஒரு மாணவன் இந்த வினையின் மூலம் $154.4 \times 10^{-3}$ கனஅளவுள்ள வாயுவினை 742 mm Hg அழுத்தத்தில் மற்றும் 298 K வெப்பநிலையில் சேகரிக்கிறான் எனக் கருதவும். மாணவன் சேகரித்த ஹைட்ரஜன் வாயுவின் நிறை என்ன?

51) ஒரு வாயு 192 நொடியில் சுவரிலுள்ள ஒரு துளையின் வழியே விரவுகின்றது. $N_2$ வாயு அதே வெப்ப அழுத்த நிலையில் விரவ எடுக்கும் நேரம் 84 நொடி எனில் வாயுவின் மோலார் நிறை என்ன?

52) 300K ல் 52.5 g ஆக்ஸிஜன் மற்றும் 65.1g $CO_2$ அடங்கியுள்ள தொட்டியில் கலவையின் மொத்த அழுத்தம் 9.21 atm. கலவையிலுள்ள ஒவ்வொரு வாயுவின் பகுதி அழுத்தங்களை கண்டறிக.

53) 2.98 atmல் $25^{o}$Cல் உள்ள எரிவாயு உலோகத்தொட்டி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அத்தொட்டி 12 atm அழுத்தம் வரை மட்டுமே தாங்கி பின் அதிக அழுத்தத்தினால் வெடிக்கக் கூடியது. அத்தொட்டி உள்ள கட்டிடத்தில் தீப்பிடிக்கும் போது அத்தொட்டி முதலில் வெடிக்குமா அல்லது உருகத் தொடங்குமா எனக்கண்டறிக. (உலோகத்தின் உருகுநிலை 1100K)



Unit 6 - Sridhar.indd 203 07-01-2021 15:01:32

## கருத்து வரைபடம்

3FMBAK

### வாயு நிலைமை

#### நல்லியல்பு வாயுக்கள்

கீழ்காணும் விதிகளின்படி நடக்கும்

1. பாயிலின் விதி $P \alpha \frac{1}{V}$

   T, n மாறிலி

2 சார்லஸ் விதி $V \alpha T$

   P, n மாறிலி

3. கேலூசாக் விதி $P \alpha T$

   V, n மாறிலி

4. அவகட்ரோ கருதுகோள் $V \alpha N$

   T, P மாறிலி

5. நல்லியல்பு வாயு சமன்பாடு

   PV=nRT

#### இயல்பு வாயுக்கள்

இது வாண்டர் வால்ஸ் சமன்பாட்டின் படி நடக்கும்

$$\left(P + \frac{a\,n^2}{V^2}\right)(V - nb) = nRT$$

↓

நிலைமாறு மாறிலிகள்

$$, \quad P_C = \frac{a}{27b^2}$$

மற்றும் $V_C = 3b$

### வாயுக்கள்

#### விரவுதல்

கிரஹாமின் விரவுதல் விதி

#### நிலைமாறு நிகழ்வு

நிலைமாறு வெப்பநிலை

நிலைமாறுகனஅளவு

நிலைமாறு அழுத்தம்

#### வாயுக்களை திரவமாக்கல்

ஜூல்தாம்சன் விளைவு

# இணையச்செயல்பாடு

## வாயுக்களின் பண்புகள்

இச்செயல்முறையைப் பயன்படுத்தி V வாயுக்களின் T, Pக்களுக்கு இடையிலான தொடர்புகளை அறியலாம் மற்றும் வாயு விதிகளை மெய்ப்பிக்கலாம்.

https://phet.colorado.edu/en/simulation/gas–properties உரலிக்குச்செல்க (அல்லது) வலது பக்கமுள்ள விரைவுத் துலக்கக் குறியீட்டினை (QR Code) ஸ்கேன் செய்க.

B127_11_CHE_TM


**நிலை 1:** இணையப்பக்கத்தினைத் திறந்து கொடுக்கப்பட்ட உரலியைத் (URL) தட்டச்சு செய்க அல்லது விரைவுத் துலக்கக் குறியீட்டினை ஸ்கேன் செய்க. இணையப் பக்கத்தில் வாயுப் பண்புகள் என்னும் குறும்புலனத்தைச் சொடுக்குக., அதில் கீழ்க்காணும் படத்தில் உள்ளது போன்ற 'வாயுப் பண்புகள்' என்னும் ஜாவா குறும்புலனத்தைக் காணலாம்..

**செயல்முறைகள்:**

1. பம்பின் கைப்பிடியைப் (5) பயன்படுத்தி சிறிது வாயு மூலக்கூறுகளை அறைக்குள் (2) செலுத்தவும்.
2. அறைக்குள்ளிருக்கும் வாயு மூலக்கூறுகளின் வெப்பநிலை (1) மற்றும் அழுத்தம் (6) ஆகியவற்றை உரிய அளவிகளைப் பயன்படுத்திக் கண்காணிக்கலாம்.
3. அறையின் கொள்ளளவை அதன் இடதுபக்கச் சுவரை (3) நகர்த்தி மாற்றியமைக்கலாம்.
4. நழுவியைப் (7) பயன்படுத்தி வெப்பமாக்கியோ அல்லது குளிரூட்டியோ அறையின் வெப்பநிலையை மாற்றியமைக்கலாம்.
5. கட்டத்திற்குள் (4) தகுந்த தெரிவுகளை மேற்கொண்டு மூன்று பண்புகளுள் ஏதேனும் ஒன்றை மாறிலியாக வைத்துக்கொள்ளலாம்.

**வாயுக் கோட்பாடுகளை மெய்ப்பித்தல்:**

மேற்காண் செயல்முறைகளைப் பயன்படுத்தி வாயுக் கோட்பாடுகளை அறிந்துகொள்ளலாம். பாயில் விதியை அறிந்துகொள்ள, வெப்பநிலையை மாறிலியாக (4) வைத்துக்கொண்டு சிறிது வாயு மூலக்கூறுகளை (5) உட்செலுத்தி, அதை மாறிலியாக வைத்துக்கொள்ளவும். இப்பொழுது அறையின் இடது பக்கச் சுவற்றை (3) நகர்த்தி கொள்ளளவைக் குறைத்து வாயுவின் அழுத்தம் அதிகரிப்பதைக் காணலாம். அவ்வாறே பிற இரண்டு வாயுக் கோட்பாடுகளையும் மெய்ப்பிக்கலாம்.






Unit 6 - Sridhar.indd 205
07-01-2021 15:01:33

## அலகு 7

# வெப்ப இயக்கவியல்

> Classical thermodynamics... is the only physical theory of universal physical theory of universal content which I am convinced... will never be overthrown.
>
> Albert Einstein



ருடால்ப் கிளாசியஸ்
(1822-1888)

### கற்றல் நோக்கங்கள்:

இந்தப் பாடப்பகுதியைக் கற்றறிந்தப் பின்னர்,

- மூடிய, திறந்த, மற்றும் தனித்த அமைப்புகளை வரையறுத்தல்.
- நிலைச்சார்புகள் மற்றும் வழிச்சார்புகளை வேறுபடுத்தி அறிதல்.
- வெப்பம், வேலை மற்றும் அகஆற்றல் ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பை விவரித்தல்.
- வெப்ப இயக்கவியலின் நான்கு விதிகளை எடுத்துரைத்தல்.
- அகஆற்றல் மாற்றம்($\Delta U$) மற்றும் என்தால்பி மாற்றம் ($\Delta H$) ஆகியவற்றை தொடர்புபடுத்துதல் மற்றும் அவைகளை அளவிடுதல்.
- பல்வேறு வகையான வினைகளில் ஏற்படும் என்தால்பி மாற்றங்களை கணக்கிடுதல்.
- படிகங்களின் படிக கூடு ஆற்றலை ஹெஸ் விதியினைப் பயன்படுத்தி கணக்கிடுதல்.
- தன்னிச்சை மற்றும், தன்னிச்சையற்ற செயல்முறைகளை வரையறுத்தல்.
- வெப்ப இயக்கவியல் நிலைச்சார்புகளான என்தால்பி (H), என்ட்ரோபி (S) மற்றும் கட்டிலா ஆற்றல் (G) ஆகியவற்றைத் தொடர்புபடுத்துடுதல்.
- ஒரு செயல்முறையின் தன்னிச்சைத் தன்மையை தீர்மானிக்கும் காரணிகளை பட்டியலிடுதல்.
- $\Delta G$ மற்றும் தன்னிச்சை தன்மையினை தொடர்புபடுத்தி, $\Delta G^0$ மற்றும் சமநிலை மாறிலிக்கு இடையேயான தொடர்பினை நிறுவுதல்.

ஆகிய திறன்களை மாணவர்கள் பெற இயலும்.



Unit 7 - Sridhar.indd 206 07-01-2021 15:08:36

## 7.1 பாட அறிமுகம்:

Thermodynamics என்னும் சொல் லிற்கு வெப்பப்பாய்தல் (flow of heat) என பொருள். மேலும் இவ்வார்த்தை கிரேக்க மொழியில் Thermos(வெப்பம்) மற்றும், dynamics(பாய்தல்) ஆகியவற்றிலிருந்து வருவிக்கப்பட்டதாகும். வெப்ப ஆற்றலை உருவாக்க எரிபொருளை எரித்தல், மின்சுற்றுகளின் வழியே எலக்ட்ரான்கள் பாய்வதால், மின்னாற்றல் உருவாதல் உயிரியல் செயல்பாடுகளுக்கு தேவையான ஆற்றலை உருவாக்கும் வளர்சிதை மாற்றவினைகள் போன்ற பல பயனுள்ள வினைகளை நம் அன்றாட வாழ்வில் நாம் காண்கிறோம். ஆற்றல் பரிமாற்றங்களை பற்றி கற்கும் வெப்ப இயக்கவியலானது, இத்தகைய அனைத்து செயல் முறைகளையும் அளவீட்டு அடிப்படையில் விளக்குவதுடன், பயனுள்ள கணிப்புகளை நாம் நிர்ணயித்திட பயன்படுகிறது.

19ஆம் நூற்றாண்டில், ஏற்கனவே பயன்பாட்டிலிருந்த நீராவி இயந்திரத்தின் செயல்திறனை அதிகரிக்க, அதன் அடிப்படைக் கொள்கைகளை புரிந்துகொள்ள அறிவியலாளர்கள் முயன்றனர். இந்த ஆய்வுகளில், வெப்பமானது இயந்திர வேலையாக மாற்றப்படும் நிகழ்வு அடிப்படை சிக்கல் நிறைந்ததாக இருந்தது. எனினும், காலப்போக்கில் வெப்ப இயக்கவியல் விதிகள் உருவாக்கப்பட்டன. மேலும் அவற்றின் மூலம் நீராவி இயந்திரத்தின் செயல்முறைகளை புரிந்துகொள்ள முடிந்தது. பல்வேறு செயல்முறைகளுக்கு பயன்படுத்தத்தக்க, முக்கியமான கணிதவியல் தொடர்புகளை வருவித்திட, இவ்விதிகள் பயன்படுத்தப்பட்டன.

வெப்ப இயக்கவியலானது, பேரளவு (macroscopic) பண்புகள் (வெப்பம், வேலை) மற்றும் அவற்றிற்கிடை யேயானதொடர்பினை மதிப்பிடுகிறது. இது, சமநிலையிலுள்ள அமைப்புகளின் பண்புகளைக் கருத்தில் கொள்கிறது. வெப்ப இயக்கவியலானது அமைப்பில் அடங்கியுள்ள தனித்த மூலக்கூறுகளின் பண்புகளையோ அல்லது வேறெந்த கொள்கைகளையோ சார்ந்து அமைவதில்லை.

வெப்ப இயக்கவியலின் தத்துவங்கள் மூன்று வெப்ப இயக்கவியல் விதிகளின் அடிப்படையில் அமைகின்றன. ஆற்றலின் பல்வேறு வடிவங்களுக்கு இடையேயான பரிமாற்றத்தின் அனுபவங்களை முதல் மற்றும் இரண்டாம் விதிகள் தொகுத்து கூறுகின்றன. படிகத்தின் என்ட்ரோபியை கணக்கிடுதல் மற்றும் தனிச்சுழி கெல்வின் வெப்ப நிலையை அடைய இயலாத்தன்மை ஆகியவற்றை வெப்ப இயக்கவியல் மூன்றாம் விதி விளக்குகிறது.


வெப்ப இயக்கவியல் பல்வேறு நடைமுறை பயன்களை கொண்டுள்ளபோதிலும், சிலவரம்புகளையும் கொண்டுள்ளது. இது அணு, மூலக்கூறு வடிவங்கள் மற்றும் வினைவழி முறைகளை சார்ந்து அமைவதில்லை. கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஒரு குறிப்பிட்ட வினையானது நிகழவாய்ப்புள்ளதா? இல்லையா? என்பதை நிர்ணயித்திட இவ்விதிகளை பயன்படுத்த முடியும். ஆனால் அவ்வினை நிகழும் வினை வேகத்தினை தர இயலாது. மாறாக, வெப்ப இயக்கவியலானது, சமநிலை நிபந்தனைகளை அளவியலாக கருத்தில் கொள்கிறது, ஆனால் சமநிலை நிலைக்கான வேகவியல் அணுகுமுறையை கருத்தில் கொள்வதில்லை.

## 7.2 அமைப்பு மற்றும் சூழல்

வெப்ப இயக்கவியல் விதிகள் மற்றும் அவற்றின் பயன்பாடுகளை கற்கும் முன்னர், வெப்ப இயக்கவியலில் அதிகம் பயன்படுத்தப்படும் முக்கியமான கலைச்சொற்களை புரிந்து கொள்ளுதல் மிக அவசியமானதாகும்.

அமைப்பு

அண்டமானது, அமைப்பு மற்றும் சூழல் என இரண்டு பகுதிகளாக பிரிக்கப்படுகிறது. வெப்ப இயக்கவியல் நோக்கில் கருத்தில் கொள்ளப்படும் அண்டத்தின் ஒரு பகுதி அமைப்பு எனப்படும். இது அண்டத்தின் பிற பகுதிகளிலிருந்து உண்மையான அல்லது கற்பனை எல்லைகளால் பிரிக்கப்பட்டுள்ளது.




படம் 7.1 அமைப்பு , சூழல் மற்றும் எல்லை.

எடுத்துக்காட்டு

அமைப்பு என்பது ஒரு முகவையில் உள்ள நீர், காற்று நிரப்பப்பட்ட பலூன், குளுக்கோசின் நீர்க்கரைசல் போன்றவையாக இருக்கலாம்.

**ஒருபடித்தான, மற்றும் பலபடித்தான அமைப்புகள்:**

இயற் மற்றும் வேதிப்பண்புகளை அடிப்படையாக கொண்டு அமைப்பினை இரு வகைகளாக பிரிக்க முடியும்.

அமைப்பிலுள்ள அனைத்து உட்கூறுகளும் ஒரே இயற்நிலைமையில் இருந்தால், அந்த அமைப்பு ஒரு படித்தான அமைப்பு என்றழைக்கப்படுகிறது. எடுத்துக்காட்டு: ஒரு வாயுக்கலவை, ஒன்றோடொன்று முற்றிலும் கலக்கும் நீர்மங்களின் கலவை போன்றவை.

அமைப்பிலுள்ள அனைத்து உட்கூறுகளும் ஒரே இயற்நிலைமையில் இல்லாதிருந்தால் அந்த அமைப்பு பல படித்தான அமைப்பு என்றழைக்கப்படுகிறது. எடுத்துக்காட்டு: எண்ணெய் மற்றும் நீர் அடங்கிய கலவை.

சூழல்


அண்டத்திலுள்ள, அமைப்பின் பகுதியாக இல்லாத அனைத்தும் சூழல் என்றழைக்கப்படுகிறது.

எல்லை

அமைப்பை, சூழலிருந்து பிரிக்கும் எதுவும் எல்லை என்றழைக்கப்படுகிறது.

7.2.1 அமைப்பின் வகைகள்:

எல்லையின் இயல்பினை பொறுத்து வெப்ப இயக்கவியல் அமைப்புகளில் மூன்று வகைகள் உள்ளன.




படம் : 7.2 அமைப்பின் வகைகள்

தனித்த அமைப்பு :

ஒரு அமைப்பானது அதன் சூழலுடன் பொருண்மை மற்றும் ஆற்றலை பரிமாற்றம் செய்ய முடியாத நிலையில் இருந்தால் அவ்வமைப்பு ஒரு தனித்த அமைப்பு என்றழைக்கப்படுகிறது. இங்கு எல்லையானது மூடப்பட்டுள்ளதுடன், காப்பிடப்பட்டும் உள்ளது. வெந்நீரை கொண்டுள்ள வெப்பம் கடத்தா குடுவை (thermos flask)ஒரு தனித்த அமைப்பிற்கான எடுத்துக்காட்டாகும். இந்த தனித்த அமைப்பில், ஆற்றல் (வெப்பம்),



Unit 7 - Sridhar.indd 208 07-01-2021 15:08:36

மற்றும் பொருண்மை (நீராவி) ஆகிய இரண்டும் அமைப்பிற்குள்ளும் வருவதில்லை, அமைப்பை விட்டும் வெளியேறுவதில்லை.

### மூடிய அமைப்பு:

ஒரு அமைப்பானது அதன் சூழலுடன் பொருண்மையை பரிமாற்றம் செய்ய முடியாமல், ஆற்றலை மட்டும் பரிமாற்றம் செய்ய முடியும் எனில் அவ்வமைப்பு ஒரு மூடிய அமைப்பு என்றழைக்கப்படுகிறது.

இங்கு எல்லையானது மூடப்பட்டுள்ளது ஆனால், காப்பிடப்படவில்லை. வெந்நீரை கொண்டுள்ள மூடப்பட்ட முகவை ஒரு மூடிய அமைப்பிற்கு எடுத்துக்காட்டாகும். இந்த மூடிய அமைப்பில் ஆற்றலானது (வெப்பம்) சூழலுக்கு கடத்தப்படுகிறது, ஆனால் பொருண்மை (நீராவி) அமைப்பை விட்டு வெளியேறுவதில்லை.

ஒருவாயுவை கொண்டுள்ள, அழுத்தியுடன் கூடிய உருளை (a cylinder fitted with a piston) ஒரு மூடிய அமைப்பாகும்.

### திறந்த அமைப்பு:

ஒரு அமைப்பானது அதன் சூழலுடன் பொருண்மை, மற்றும் ஆற்றல் இரண்டையும் பரிமாற்றம் செய்ய முடியுமெனில் அவ்வமைப்பு ஒரு திறந்த அமைப்பு என்றழைக்கப்படுகிறது.

வெந்நீரைக் கொண்டுள்ள ஒரு திறந்த முகவை திறந்த அமைப்பிற்கான ஒரு எடுத்துக்காட்டாகும். இவ்வமைப்பில் ஆற்றல் (வெப்பம்) மற்றும் பொருண்மை (நீராவி) இரண்டும் சூழலுக்கு கடத்தப்படுகிறது.

அனைத்து உயிரினங்கள் மற்றும் வேதிவினைகள் திறந்த அமைப்பாகும், ஏனெனில் அவைகள் சூழலுடன் பொருண்மை மற்றும் ஆற்றலை பரிமாறிக் கொள்கின்றன.

## 7.2.2 அமைப்பின் பண்புகள்:

**பொருண்மை சாரா மற்றும் பொருண்மை சார்பண்புகள் :**

அமைப்பினுடைய சில பண்புகள் அதன் நிறை அல்லது அளவினைப் பொறுத்து அமைகின்றன. ஆனால் சில பண்புகள் அதன் நிறை அல்லது அளவினை பொறுத்து அமைவதில்லை. இதன் அடிப்படையில் அமைப்பின் பண்புகள் பொருண்மை சார்பண்புகள், மற்றும் பொருண்மை சாராபண்புகள்என வகைப்படுத்தப்படுகின்றன.

### பொருண்மை சார்பண்புகள்:

ஒரு பண்பானது அமைப்பின் நிறை அல்லது அளவினை பொறுத்து அமைந்தால் அப்பண்பு பொருண்மைசார் பண்பு என்று அழைக்கப்படுகிறது. எ.கா: கன அளவு, மோல்களின் எண்ணிக்கை, நிறை, அக ஆற்றல் போன்றவை.

### பொருண்மை சாராபண்புகள்:

ஒரு பண்பானது அமைப்பின் நிறை அல்லது அளவினை பொறுத்து அமையாதிருந்தால் அப்பண்பு பொருண்மைசாரா பண்பு என்று அழைக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டு: ஒளிவிலகல் எண், பரப்பு இழுவிசை, அடர்த்தி, வெப்பநிலை, கொதிநிலை, உறைநிலை, மோலார் கனஅளவு போன்றவை.

**அட்டவணை : 7.1 பொருண்மை சார் மற்றும் பொருண்மை சாரா பண்புகளின் பட்டியல்**

| பொருண்மைசார் பண்புகள் | பொருண்மைசாரா பண்புகள் |
|---|---|
| கனஅளவு, நிறை, பொருளின் அளவு (மோல்), ஆற்றல், என்தால்பி, என்ட்ரோபி, கட்டிலா ஆற்றல், வெப்ப ஏற்புத்திறன் | மோலார் கன அளவு, அடர்த்தி, மோலார்நிறை, மோலாரிட்டி, மோல்பின்னம், மோலாலிட்டி, தன்வெப்ப ஏற்புத்திறன். |



Unit 7 - Sridhar.indd 209 07-01-2021 15:08:36

### 7.2.3 வெப்ப இயக்கவியல் செயல் முறைகள்:

அமைப்பில் ஒரு மாற்றத்தை உருவாக்கக் கூடிய செயலின் வழிமுறை வெப்ப இயக்கவியல் செயல்முறை எனப்படுகிறது. வெப்பப்படுத்துதல், குளிர்வித்தல், வாயுக்களை விரிவடையசெய்தல், சுருங்கச்செய்தல், உருக்குதல், ஆவியாக்குதல் போன்ற செயல்முறைகள் வெப்ப இயக்கவியல் செயல்முறைகளுக்கான எடுத்துக்காட்டுகளாகும்.

### செயல்முறைகளின் வகைகள்:

ஒரு வெப்ப இயக்கவியல் செயல்முறையை, வெவ்வேறு வழிகள் மற்றும் பல்வேறு நிபந்தனைகளின் கீழ் நிகழ்த்த முடியும். இச்செயல் முறைகளை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

### மீள் செயல்முறை:

அண்டத்தின் வெப்ப இயக்கவியல் பண்புகளில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாமல், அமைப்பு மற்றும் சூழல் அவற்றின் இறுதிநிலையிலிருந்து ஆரம்பநிலைக்கு மீளும் ஒரு செயல் முறை ,மீள்செயல் முறை என்றழைக்கப்படுகிறது. மீள் செயல்முறை நிகழ இரு நிபந்தனைகள் அவசியமானதாகும். முதலாவதாக, செயல்முறையானது நுண்ணிய அளவில் மிக மெதுவாக நிகழ வேண்டும். மற்றும் இரண்டாவதாக செயல்முறை முழுவதும் அமைப்பும், சூழலும் கண்டிப்பாக சமநிலையில் இருக்க வேண்டும்.

### மீளாச் செயல்முறை:

அமைப்பு மற்றும் சூழல் அவற்றின் இறுதி நிலையிலிருந்து,ஆரம்ப நிலைக்கு மீளமுடியாத ஒரு செயல்முறை, மீளா செயல்முறை என்றழைக்கப்படுகிறது. இயற்கையில் நிகழும் அனைத்து செயல்முறைகளும் மீளாசெயல் முறைகளாகும்.

மீளாச்செயல் முறையின்போது அமைப்பு மற்றும் சூழலானது ஒன்றொடொன்று சமநிலையில் இருப்பதில்லை.

### வெப்பம்மாறாச் செயல்முறை (Adiabatic process)

ஒரு செயல்முறையின் போது அமைப்பு மற்றும் சூழலுக்கு இடையே எவ்வித வெப்ப (q) பரிமாற்றமும் நிகழாதிருப்பின் அச்செயல் முறை வெப்பம் மாறாச் செயல்முறை என வரையறுக்கப்படுகிறது. எச்செயல்முறையில் அமைப்பினுள்ளோ அல்லது அமைப்பிலிருந்தோ எவ்வித வெப்ப பரிமாற்றமும் இல்லையோ அச்செயல்முறை வெப்பம் மாறாச் செயல்முறை என்றழைக்கப்படுகிறது. அமைப்பினை வெப்பக் காப்பிடுவதன் மூலம் இந்த நிபந்தனை உருவாக்கப்படுகிறது. ஒரு வெப்பம் மாறா செயல்முறையில் அமைப்பானது சூழலுடன் வெப்பத்தை பரிமாற்றம் செய்ய முடியாது (ஒரு வெப்பம் மாறாச் செயல் முறைக்கு $q = 0$) என்பதால், அமைப்பினால் வேலை செய்யப்பட்டால் அதன் வெப்பநிலை குறைகிறது, அமைப்பின் மீது வேலை செய்யப்பட்டால் அதன் வெப்பநிலை அதிகரிக்கிறது.

### வெப்பநிலை மாறா செயல்முறை (Isothermal process)

ஒரு செயல்முறையில் அமைப்பானது ஆரம்ப நிலையிலிருந்து, இறுதிநிலைக்கு மாற்றமடையும் போது அதன் வெப்பநிலை மாறாமல் மாறிலியாக இருந்தால் அச்செயல்முறை வெப்பநிலை மாறா செயல்முறை என வரையறுக்கப்படுகிறது. இதில் அமைப்பானது அதன் சூழலுடன் வெப்பத்தை பரிமாற்றம் செய்கிறது, மேலும் அமைப்பின் வெப்பநிலை மாறாமல் இருக்கிறது. இவ்வாறு வெப்பநிலை மாறாதிருக்கும் பொருட்டு சோதனையானது பெரும்பாலும் வெப்பசீர்நிலை உபகரணத்தில் (Thermostat) நிகழ்த்தப்படுகிறது.

ஒரு வெப்பநிலை மாறா செயல்முறைக்கு $dT = 0$

## அழுத்தம் மாறா செயல்முறை (Isobaric process)

ஒரு செயல் முறையில் அமைப்பானது ஆரம்ப நிலையிலிருந்து, இறுதி நிலைக்கு மாற்றமடையும் போது அதன் அழுத்தம் மாறாமல் மாறிலியாக இருந்தால் அச்செயல்முறை அழுத்தம் மாறாச் செயல்முறை என வரையறுக்கப்படுகிறது.

ஒரு அழுத்தம் மாறா செயல்முறையில் $dP= 0$ .

## கனஅளவு மாறா செயல்முறை: (Isochoric process)

ஒரு செயல்முறையில் அமைப்பானது ஆரம்ப நிலையிலிருந்து, இறுதிநிலைக்கு மாற்றமடையும்போது அதன் கனஅளவு மாறாமல் மாறிலியாக இருந்தால் அச்செயல்முறை கனஅளவு மாறா செயல்முறை என வரையறுக்கப்படுகிறது. பாம் கலோரிமீட்டரில் ஒரு எரிபொருள் எரிக்கப்படுதல் கனஅளவு மாறா செயல்முறைக்கு ஒரு எடுத்துகாட்டாகும்.

ஒரு கனஅளவு மாறா செயல்முறைக்கு $d V = 0$.

## சுற்று செயல்முறை (Cyclic process):

ஒரு அமைப்பானது, தொடர்ச்சியான பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்ட பின்னர் அதன் உண்மையான ஆரம்ப நிலைக்கு மீளத் திரும்பும் போது ஒரு சுற்று நிறைவடைந்ததாக கருதப்படும். இச்செயல் முறையானது சுற்று செயல்முறை என அறியப்படுகிறது.

ஒரு சுற்று செயல்முறைக்கு $dU = 0, dH = 0, dP=0, dV=0, dT=0$

அட்டவணை : 7.2 செயல்முறைகள் மற்றும் அவற்றிற்கான நிபந்தனைகள்– ஒரு பார்வை

| செயல்முறை | நிபந்தனை |
|---|---|
| வெப்பம்மாறா செயல்முறை | $q = 0$ |
| வெப்பநிலை மாறா செயல்முறை | $dT= 0$ |
| அழுத்தம்மாறா செயல்முறை | $dP= 0$ |
| கனஅளவுமாறா செயல்முறை | $dV= 0$ |
| சுற்று செயல்முறை | $dE= 0, dH = 0, dP=0, dV=0 , dT=0$ |

## நிலைச் சார்புகள் மற்றும் வழிச்சார்புகள்.

### நிலைச்சார்புகள்

ஒரு வெப்ப இயக்கவியல் அமைப்பினை P,V,T, மற்றும் `n' ஆகிய மாறிகளை பயன்படுத்தி வரையறுக்க முடியும். ஒரு நிலைச்சார்பு என்பது அமைப்பின் ஒரு வெப்ப இயக்கவியல் பண்பாகும். இது அமைப்பின் கொடுக்கப்பட்ட ஒரு நிலைக்கு ஒரு குறிப்பிட்ட மதிப்பினை கொண்டிருக்கும், மேலும் இக்குறிப்பிட்ட நிலையை அடைய பின்பற்றப்பட்ட வழியினை (**path or manner**) பொறுத்து அமைவதில்லை.

எடுத்துக்காட்டு:

அழுத்தம் (**P**) , கனஅளவு (**V**), வெப்பநிலை (**T**), அகஆற்றல் (**U**), என்தால்பி (**H**), கட்டிலா ஆற்றல் (**G**) போன்றவை.



Unit 7 - Sridhar.indd 211 07-01-2021 15:08:38

### வழிச்சார்புகள்

வழிச்சார்பு என்பது ஒரு வெப்ப இயக்கவியல் பண்பாகும். அமைப்பானது ஆரம்ப நிலையிலிருந்து இறுதி நிலைக்கு மாற்றமடையும் வழியினைப் பொறுத்து இதன் மதிப்பு அமையும்.

எடுத்துக்காட்டு:

வேலை (w), வெப்பம் (q).

ஒரு செயல்முறையானது மீள் முறையிலேயோ அல்லது மீளாமுறையிலேயோ நிகழ்த்தப்படும் போது வேலையானது வெவ்வேறு மதிப்புகளை பெறுகிறது.

### அகஆற்றல் (U)

அகஆற்றல் என்பது ஒரு அமைப்பின் குறிப்பிடத்தக்க பண்பாகும். இது U என்ற குறியீட்டால் குறிக்கப்படுகிறது. அமைப்பின் அக ஆற்றல் என்பது அமைப்பிலுள்ள அனைத்து உட்கூறுகளான அணுக்கள், அயனிகள், மற்றும் மூலக்கூறுகள் ஆகியவை பெற்றிருக்கக் கூடிய ஆற்றல்களின் மதிப்புகளுக்குச் சமம். ஒரு அமைப்பிலுள்ள மூலக்கூறுகளின் மொத்த ஆற்றல் என்பது அவைகளினுடைய இடப்பெயர்வு ஆற்றல் $(U_t)$, அதிர்வுஆற்றல் $(U_V)$, சுழற்சிஆற்றல் $(U_r)$, பிணைப்புஆற்றல் $(U_b)$, மின்னணு ஆற்றல் $(U_e)$, மற்றும் மூலக்கூறு இடையீடுகளால் உண்டாகும் ஆற்றல் $(U_i)$ ஆகியவற்றின் கூடுதலாகும்,

அதாவது

$$U = U_t + U_v + U_r + U_b + U_e + U_i$$

ஒரு அமைப்பிலுள்ள அனைத்து மூலக்கூறுகளின் மொத்த ஆற்றலானது அக ஆற்றல் என்றழைக்கப்படுகிறது. வெப்ப இயக்கவியலில் அமைப்பின் தனித்த ஆற்றல் மதிப்பினைவிட அதன் அக ஆற்றலில் ஏற்படும் மாற்றம் $(\Delta U)$ மட்டுமே முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

### அக ஆற்றலின் முக்கியத்துவம்:

ஒரு பொருள் பெற்றிருக்கக் கூடிய அக ஆற்றலானது அதன் இயற் வடிவமைப்புகளை வேறுபடுத்தி அறிய உதவுகிறது. எடுத்துக்காட்டாக கார்பனின் புறவேற்றுமை வடிவங்களான கிராஃபைட் $(C_{\text{கிராஃபைட்}})$ மற்றும் வைரம் $(C_{\text{வைரம்}})$ ஆகியன ஒன்றுடன் ஒன்று வேறுபடுகின்றன, இவைகள் வெவ்வேறு அக ஆற்றல்களையும் மற்றும் வெவ்வேறு படிக அமைப்புகளையும் கொண்டுள்ளன.

### அக ஆற்றலின் சிறப்பியல்புகள்:

- ஒரு அமைப்பின் அக ஆற்றலானது ஒரு பொருண்மை சார்பண்பாகும். ஒரு அமைப்பிலுள்ள பொருளின் அளவை பொறுத்து இது அமைகிறது. அமைப்பிலுள்ள பொருளின் அளவை இரு மடங்காக்கும் போது, அக ஆற்றலும் இரு மடங்காகிறது.
- ஒரு அமைப்பின் அக ஆற்றல் ஒரு நிலைச்சார்பு. இது அமைப்பின் நிலை மாறிகளை (T, P, V, மற்றும் n) மட்டுமே சார்ந்து அமைகிறது. அக ஆற்றல் மாற்றமானது, இறுதி நிலையை அடைய எந்த வழிமுறை பின்பற்றப்பட்டது என்பதை பொறுத்து அமையாது.
- அமைப்பின் அக ஆற்றல் மாற்றமானது $\Delta U = U_f - U_i$ எனகுறிப்பிடப்படுகிறது.
- சுற்று செயல்முறைகளில், அக ஆற்றலில் எவ்வித மாற்றமும் நிகழ்வதில்லை.

$$\Delta U_{\text{(சுற்று)}} = 0$$

- ஒரு அமைப்பின் இறுதிநிலை அக ஆற்றலானது ,அதன் ஆரம்பநிலைஅக ஆற்றலைவிட குறைவாக இருக்கும் நிலையில் $\Delta U$ ஆனது எதிர்குறி மதிப்பை பெறும்.

$$\Delta U = U_f - U_i = -ve \quad (U_f < U_i)$$



Unit 7 - Sridhar.indd 212 07-01-2021 15:08:38

- ஒரு அமைப்பின் இறுதிநிலை அக ஆற்றலானது ($U_f$), அதன் ஆரம்பநிலை($U_i$) அக ஆற்றலை விட அதிகமாக இருக்கும் நிலையில் $\Delta U$ ஆனது நேர்குறி மதிப்பை பெறும்.

$$\Delta U = U_f - U_i = +ve \quad (U_f > U_i)$$

### வெப்பம் (q)

வெப்பம் (q) ஆனது, ஒரு அமைப்பினை சூழலிலிருந்து பிரிக்கும் எல்லை வழியே கடத்தப்படும் ஆற்றல் என கருதப்படுகிறது. வெப்ப மாற்றமானது அமைப்பு மற்றும் சூழலுக்கிடையேயான வெப்பநிலை மாற்றத்திற்கு வழிவகுக்கிறது. வெப்பம் என்பது ஒரு வழிச்சார்பு ஆகும்.

### வெப்பத்தின் அலகுகள்:

வெப்பத்தின் SI அலகு ஜூல் (J). வெப்ப அளவீடுகள் பொதுவாக கலோரிகளில் (cal) அளவிடப்படுகிறது. வெப்பநிலையானது $15^0$Cக்கு அருகாமையில் உள்ளபோது, ஒரு கிராம் நீரின் வெப்ப நிலையை $1^0$C உயர்த்துவதற்கு தேவைப்படும் வெப்பத்தின் அளவு ஒரு கலோரி என வரையறுக்கப்படுகிறது.

### வெப்பத்தின் குறியீட்டு நடைமுறை:

வெப்பம் (q) எனும் குறியீட்டால் குறிக்கப்படுகிறது. சூழலிருந்து, அமைப்பினுள்ளே வெப்பம் பாய்ந்தால் அமைப்பின் ஆற்றல் அதிகரிக்கிறது, எனவே வெப்பம் நேர்குறியீடாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. (+q ).

அமைப்பிலிருந்து வெளியே சூழலுக்கு வெப்பம் பாய்ந்தால் அமைப்பின் ஆற்றல் குறைகிறது, எனவே வெப்பம் எதிர்குறியீடாக எடுத்துக்கொள்ளப்படுகிறது(−q ).

### வேலை(w)

விசை (F) , மற்றும் இடப் பெயர்ச்சியின் ($x$). பெருக்குத்தொகை வேலை என வரையறுக்கப்படுகிறது. $-w = F.\ x$ --- (7.1)

அமைப்பினால் தனது அக ஆற்றலின் ஒரு பகுதி பயன்படுத்தப்பட்டு, வேலை செய்யப்படுகிறது என்பதைக் குறிப்பிடுவதற்காக இங்கு எதிர்குறி (-) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### வேலையானது

(i) ஒரு வழிச்சார்பு ஆகும்.

(ii) அமைப்பின் எல்லையில் மட்டுமே வெளிப்படுகிறது.

(iii) அமைப்பின் நிலையில் மாற்றம் ஏற்படும்போது வெளிப்படுகிறது.

வெப்ப இயக்கவியலில் சூழலானது மிகப் பெரியது என்பதால், பேரளவு மாற்றங்கள் சூழலில் நிகழ்வதில்லை.

### வேலையின் அலகுகள்:

வேலையின் SI அலகு ஜூல் (J), ஒரு நியுட்டன் விசையினால், ஒரு மீட்டர் இடப்பெயர்ச்சி நிகழ்த்தப்படும் போது, அவ்விசையினால் செய்யப்படும் வேலையின் அளவு ஒரு ஜூல் என வரையறுக்கப்படுகிறது. ( J= Nm). வேலையின் அளவு அதிகமாக இருப்பின் கிலோ ஜூல் (kJ) அலகு பயன்படுத்தப்படுகிறது. (1 kJ = 1000 J)

### வேலையின் குறியீட்டு நடைமுறை:

வேலை (w) எனும் குறியீட்டால் குறிக்கப்படுகிறது. அமைப்பினால் ஒரு

வேலை செய்யப்படும் போது, அமைப்பின் ஆற்றல் குறைகிறது, எனவே நடைமுறையில் வேலையானது எதிர்க்குறியீடாக எடுத்துக் கொள்ளப்படுகிறது(-w).

அமைப்பின் மீது ஒரு வேலை செய்யப்படும்போது, அமைப்பின் ஆற்றல் அதிகரிக்கிறது, எனவே நடைமுறையில் வேலை நேர்க்குறியீடாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.(+w).

### அழுத்தம் – கன அளவு வேலை ( P–V வேலை)

அடிப்படை வெப்ப இயக்கவியலில், ஒரு வாயு விரிவடைதலில் (சுருக்கப்படுதலில்) செய்யப்படும் ஒரு வகையான வேலை மட்டுமே பொதுவாக கருத்திற் கொள்ளப்படுகிறது. இவ்வகை வேலையானது அழுத்தம் – கன அளவு வேலை (அ) P–V வேலை(அ) விரிவடைதல் வேலை என அழைக்கப்படுகிறது.

### விரிவடைதல் மற்றும் சுருங்குதல் செயல்முறைகளோடு தொடர்புடைய வேலைகள்:

பெரும்பாலான வெப்ப இயக்கவியல் கணக்கீடுகளில் வாயுக்களின் விரிவடைதல், சுருங்குதலோடு தொடர்புடைய வேலையினை நாம் மதிப்பிடுகிறோம். ஒரு அமைப்பில் விரிவடைதல் அல்லது சுருங்குதல் நிகழ, உள் அழுத்தம் ($P_{int}$) மற்றும் வெளி அழுத்தம் ($P_{ext}$) ஆகியவற்றிற்கிடையே கண்டிப்பாக வேறுபாடு இருக்க வேண்டும் என்பது தேவையான முக்கிய நிபந்தனை ஆகும்.


அழுத்தம் – கனஅளவு வேலையை (P-V வேலை) புரிந்துகொள்வதற்காக, ஒரு மோல் நல்லியல்பு வாயுவைக் கொண்டுள்ள A என்ற குறுக்கு வெட்டுப் பரப்புடைய உராய்வற்ற அழுத்தியுடன் (piston) கூடிய கொள்கலனை நாம் கருதுவோம். அமைப்பினுள் உள்ள வாயுவின் தொடக்க கனஅளவு ($V_i$) மற்றும் அமைப்பினுள் உள்ள வாயுவின் அழுத்தம்($P_{int}$)

வெளி அழுத்தம் ($P_{ext}$) ஆனது உள் அழுத்தத்தை ($P_{int}$), விட அதிகமாக இருக்கும்போது, அழுத்தியானது உள்நோக்கி நகர்கிறது. ($P_{int}$) உள்ளழுத்தமானது $P_{ext}$ க்கு சமமாகும் வரையில் நடைபெறும் இந்நிகழ்வு ஒரேபடியில் நிகழ்வதாக கொள்க, மேலும் இறுதி கனஅளவு $V_f$ என்க.

இந்நேர்வில் அமைப்பின் மீது வேலை செய்யப்படுகிறது (+w) , இதனை பின்வருமாறு கணக்கிடலாம்.

$$w = -F\,.\Delta x \quad \text{------------} \ (7.2)$$

$\Delta x$ என்பது சுருங்குதலின் போது அழுத்தியானது நகர்ந்த தூரம், மற்றும், F என்பது வாயுவின் மீது செயல்படும் விசை.




படம் 7.3 சுருங்குதல் செயல்முறையோடு தொடர்புடைய வேலை

$$F = P_{ext} A \text{----} (7.3)$$

சமன்பாடு 7.3ஐ 7.2ல் பிரதியிட

$$w = -P_{ext} . A. \Delta x$$

$A.\Delta x$ என்பது கனஅளவில் ஏற்படும் மாற்றம்

$$= V_f - V_i$$

$$w = - Pext . (V_f - V_i) \text{------} (7.4)$$

$$w = - P_{ext} . (-\Delta V) \text{------} (7.5)$$

$$w = P_{ext} . \Delta V$$

அமைப்பின் மீது வேலை செய்யப்படுவதால், w நேர்க்குறி மதிப்பினைப் பெறுகிறது. அழுத்தமானது ($P_{ext}$) மாறிலியாக இருப்பதில்லை. ஆனால், செயல்முறையின் போது, எப்பொழுதும் வாயுவின் அழுத்தத்தை காட்டிலும் மிகநுண்ணிய அளவில் அதிகமாக இருக்கும் வகையில் மாற்றமடைகிறது. இந்த சுருங்குதலின் ஒவ்வொரு நிலையிலும், கன அளவானது dV என்ற மிகநுண்ணிய அளவில் குறைகிறது. இத்தகைய நேர்வுகளில் வாயுவின் மீது செய்யப்பட்ட வேலையை பின்வரும் தொடர்பின் மூலம் நாம் கணக்கிட முடியும்.


$$w_{rev} = -\int_{V_i}^{V_f} P_{ext}\, dV$$

ஒரு சுருங்குதல் செயல்முறையில் வெளி அழுத்தம் $P_{ext}$ ஆனது அமைப்பின் அழுத்தத்தை காட்டிலும் எப்பொழுதும் அதிகமாக இருக்கும்.

அதாவது $P_{ext} = (P_{int} + dP)$.

ஒரு விரிவடைதல் செயல்முறையில் வெளிஅழுத்தம் $P_{ext}$ ஆனது அமைப்பின் அழுத்தத்தை விட எப்பொழுதும் குறைவு.

அதாவது $P_{ext} = (P_{int} - dP)$.




படம் 7.4 P-V வரைபடம்

கனஅளவு $V_i$ லிருந்து $V_f$க்கு சுருங்கும் போது, அழுத்தம் மாறிலியாக இல்லாமல் இருப்பதுடன், மாற்றங்கள் மிக நுண்ணியபடிகளில் (மீள்நிபந்தனைகளில்), இருக்குமாயின் P-V வரைபடமானது படம் 7.4 ல் காட்டப்பட்டுள்ள வரைபடத்திற்கு ஒத்துள்ளது. இந்நிகழ்வில் வாயுவின் மீது செய்யப்பட்ட வேலையானது நிழலிடப்பட்ட பரப்பினால் குறிக்கப்படுகிறது.

ஒரு பொதுவான நேர்வில், மீள் செயல்முறைகளுக்கு நாம் பின்வருமாறு எழுத முடியும்.

$$P_{ext} = (P_{int} \pm dP).$$

மீள்நிபந்தனைகளில், ஒரு விரிவடைதல் செயல்முறை வேலையானது அமைப்பின் உள் அழுத்தத்துடன் பின்வரும் சமன்பாட்டின் மூலம் தொடர்பு படுத்த முடியும்.

$$w_{rev} = -\int_{V_i}^{V_f} P_{int}\, dV$$

ஒரு நல்லியல்பு வாயுவைக் கொண்டுள்ள, கொடுக்கப்பட்டுள்ள அமைப்பிற்கு



Unit 7 - Sridhar.indd 215 07-01-2021 15:08:39

$$P_{int} V = nRT$$

$$P_{int} = \frac{nRT}{V}$$

$$w_{rev} = -\int_{V_i}^{V_f} \frac{nRT}{V} dV$$

$$w_{rev} = -nRT \int_{V_i}^{V_f} \left(\frac{dV}{V}\right)$$

$$w_{rev} = -nRT \ln\left(\frac{V_f}{V_i}\right)$$

$$w_{rev} = -2.303\, nRT \log\left(\frac{V_f}{V_i}\right) \quad ------ 7.6$$

$V_f > V_i$ (விரிவடைதல்) எனில் செயல்முறையால் செய்யப்பட்ட வேலையானது எதிர்குறி மதிப்புடையது


$V_f < V_i$ (சுருங்குதல்) எனில் செயல்முறையால் செய்யப்பட்ட வேலையானது நேர்குறி மதிப்புடையது.

அட்டவணை: 7.3 நடைமுறைக் குறியீடுகளின் சுருக்கமான அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| 1. | அமைப்பினால் வெப்பமானது உறிஞ்சப்படும்போது | : | $+q$ |
| 2. | அமைப்பிலிருந்து வெப்பமானது வெளியேறும்போது | : | $-q$ |
| 3. | அமைப்பினால் வேலை செய்யப்படும்போது | : | $-w$ |
| 4. | அமைப்பின் மீது வேலை செய்யப்படும்போது | : | $+w$ |

## 7.3 வெப்ப இயக்கவியலின் பூஜ்ஜியவிதி:

வெப்ப இயக்கவியலின் பூஜ்ஜிய விதியானது "வெப்பச் சமநிலைவிதி" எனவும் அழைக்கப்படுகிறது. வெப்ப இயக்கவியலின் முதல் மற்றும் இரண்டாம் விதிகள் நிறுவப்பட்டு பல ஆண்டுகளுக்கு பின்னரே பூஜ்ஜியவிதி முன்மொழியப்பட்டது. இவ்விதி அமைப்பின் வெப்பநிலை பற்றிய கருத்துக்கு தர்க்க ரீதியிலான அடிப்படையை தருவதால் முதல் மற்றும் இரண்டாம் விதிகளுக்கு முன்னர் வைக்கப்பட்டுள்ளது.




படம் 7.5 வெப்ப இயக்கவியலின் பூஜ்ஜிய விதி

வெப்ப இயக்கவியலின் பூஜ்ஜியவிதிப்படி" இரண்டு வெவ்வேறு வெப்ப நிலைகளிலுள்ள அமைப்புகள் தனித்தனியாக மூன்றாம் அமைப்புடன் வெப்ப சமநிலையில் இருந்தால் ,அந்த இரு அமைப்புகளும் தங்களுக்குள் வெப்ப சமநிலையில் இருக்கும்,

பூஜ்ஜிய விதிப்படி, B மற்றும் C என்ற இரண்டு அமைப்புகள் தனித்தனியாக மற்றொரு அமைப்பான A உடன் வெப்ப சமநிலையில் இருந்தால், B மற்றும் C ஆகிய இரு அமைப்புகளும் தங்களுக்குள் வெப்ப சமநிலையில் இருக்கும். இத்தத்துவமே வெப்பநிலை மானிகளில் பயன்படுகிறது.

## 7.4 வெப்ப இயக்கவியலின் முதல்விதி:

வெப்ப இயக்கவியலின் முதல் விதியானது "ஆற்றல் அழிவின்மை விதி" என அறியப்படுகிறது. இவ்விதிப்படி ,ஒரு வகையான

ஆற்றல் மற்றொருவகை ஆற்றலாக மாறினாலும், ஒரு தனித்த அமைப்பின் மொத்த ஆற்றல் ஒரு மாறிலி ஆகும்.

ஒரு அமைப்பானது நிலை 1 லிருந்து நிலை 2க்கு மாற்றமடையும் போது அதன் அகஆற்றலானது $U_1$ லிருந்து $U_2$ க்கு மாற்றமடைகிறது. எனவே அகஆற்றல் மாற்றம்

$$\Delta U = U_2 - U_1.$$

அமைப்பு ஆற்றலை உறிஞ்சுவதாலோ அல்லது உமிழ்வதாலோ அல்லது அமைப்பானது வேலை செய்வதாலோ அல்லது அமைப்பின் மீது வேலை செய்யப்படுவதாலோ இந்த அக ஆற்றல் மாற்றம் நிகழ்கிறது.

அமைப்பின் மொத்த ஆற்றல் மாறிலியாக இருக்க வேண்டும். எனவே, முதல் விதியினை பின்வருமாறு கணிதவியல் கூற்றாக எழுத முடியும்.

$$\Delta U = q + w \quad \text{------------------}(7.7)$$

இங்கு q – அமைப்பிற்கு கொடுக்கப்பட்ட வெப்பத்தின் அளவு ; w – அமைப்பின் மீது செய்யப்பட்ட வேலை.

வெப்ப இயக்கவியலின் முதல் விதியின் பல்வேறு கூற்றுகள் :

(1) எப்பொழுதெல்லாம், ஒரு ஆற்றலின் ஒரு குறிப்பிட்ட வகை மறைகிறதோ, அதற்கு சமமான அளவுள்ள மற்றொரு வகையான ஆற்றல் கண்டிப்பாக உருவாகும்.

(2) ஒரு அமைப்பு மற்றும் சூழல் ஆகியவற்றின் மொத்த ஆற்றல் ஒரு மாறிலி ( அல்லது அழிவற்று இருக்கும்).

(3) "ஆற்றலை ஆக்கவோ ,அழிக்கவோ முடியாது. ஆனால் ஒரு வகையான ஆற்றலை மற்றொரு வகையான ஆற்றலாக மாற்றலாம்."

(4) "ஒரு மூடிய அமைப்பின் அக ஆற்றல் மாற்றம் என்பது அதன் எல்லையின் வழியே பரிமாறப்படும் வெப்பம் அல்லது வேலைக்குச் சமம்.

(5) "வெப்பம் மற்றும் வேலை ஆகியவை ஒரு அமைப்பின் அகஆற்றலை மாற்றும் இரு வழிகளாகும்"

### 7.4.1 முதல் விதியின் கணிதவியல் கூற்று :

வெப்ப இயக்கவியல் முதல் விதியின் கணிதவியல் கூற்றானது,

$$\Delta U = q + w \quad \text{---------} \ (7.7)$$

நிகழ்வு 1 : ஒரு நல்லியல்பு வாயுவின் வெப்பநிலை மாறா விரிவடைதலோடு தொடர்புடைய ஒரு சுற்று செயல்முறைக்கு,

$$\Delta U = 0.$$

சமன்பாடு $(7.7) \Rightarrow \therefore\ q = -w$

அதாவது, சுற்று செயல்முறையின் போது, ஒரு அமைப்பினால் உறிஞ்சப்பட்ட வெப்பத்தின் அளவானது, அந்த அமைப்பினால் செய்யப்பட்ட வேலைக்குச் சமம்.

நிகழ்வு 2 : ஒரு கனஅளவு மாறா செயல்முறைக்கு விரிவடைதல் வேலை ஏதும் இல்லை (கனஅளவில் மாற்றமில்லை).

எனவே

$$\Delta V = 0$$

$$\Delta U = q + w$$

$$= q - P\Delta V$$

$$\Delta V = 0$$



Unit 7 - Sridhar.indd 217 07-01-2021 15:08:40

$$\Delta U = q_v$$

அதாவது, கனஅளவு மாறா செயல்முறையில் ,அமைப்பிற்கு கொடுக்கப்பட்ட வெப்பம் அதன் அகஆற்றலாக மாற்றப்படுகிறது.

நிகழ்வு **3 :** ஒரு வெப்பம் மாறா செயல்முறையில் எவ்வித வெப்ப மாற்றமும் நிகழ்வதில்லை. $(q = 0)$

எனவே

$$q = 0$$

சமன்பாடு (7.7) $\Rightarrow \Delta U = w$

அதாவது, வெப்பம் மாறாச்செயல் முறையில், அக ஆற்றலில் ஏற்படும் குறைவானது, அவ்வமைப்பினால் சூழலின் மீது செய்யப்பட்ட வேலைக்குச் சமம்.

நிகழ்வு 4: ஒரு அழுத்தம் மாறாசெயல் முறையில், அழுத்தத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை. P ஒரு மாறிலி. எனவே

$$\Delta U = q + w$$

$$\Delta U = q - P\,\Delta V$$

அதாவது, அழுத்தம் மாறாச் செயல்முறையில், ஒரு அமைப்பினால் உறிஞ்சப்பட்ட வெப்பத்தில் ஒரு பகுதியானது P-V விரிவடைதல் வேலைக்கு பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ள பகுதி அமைப்பின் அகஆற்றலுடன் சேர்க்கப்படுகிறது.

### கணக்கு 7.1

உராய்வற்ற அழுத்தி பொருத்தப்பட்ட கலனில் உள்ள ஒரு வாயுவானது 1 atm வெளி அழுத்தத்திற்கு எதிராக 5 லிட்டர் கன அளவிலிருந்து 10 லிட்டருக்கு விரிவடைகிறது. இவ்வாறு நிகழும்போது அது 400J வெப்ப ஆற்றலை அதன்சூழலில் இருந்து உட்கவர்கிறது. அமைப்பின் அகஆற்றல் மாற்றத்தை கணக்கிடுக.

**தீர்வு:**

கொடுக்கப்பட்ட தரவுகள் $q = 400\ J$ $V_1 = 5L$ $V_2 = 10L$

$\Delta U = q - w$ ( வெப்பமானது அமைப்பிற்கு கொடுக்கப்படுகிறது (+q) : வேலையானது அமைப்பினால் செய்யப்படுகிறது (-w)

$$\begin{aligned}
\Delta U &= q - PdV \\
&= 400\ J - 1\ atm\ (10-5)L \\
&= 400\ J - 5\ atm\ L \\
&= 400\ J - (5 \times 101.33\ J) \\
\therefore &\quad [1L\ atm = 101.33\ J] \\
&= 400\ J - 506.5\ J \\
&= -106.5\ J
\end{aligned}$$

## 7.5 என்தால்பி (H)

என்தால்பி என்பது அமைப்பின் ஒரு வெப்ப இயக்கவியல் பண்பு. ஒரு அமைப்பின் அகஆற்றல் (U), மற்றும் அவ்வமைப்பின் அழுத்தம் மற்றும் கனஅளவின் பெருக்கற்பலன் (PV) ஆகியவற்றின் கூடுதல் என்தால்பி எனவரையறுக்கப்படுகிறது. அதாவது,

$$H = U + PV \text{ ------------------ } (7.8)$$

இது அமைப்பின் வேலை செய்யும் திறன் மற்றும் அமைப்பின் வெப்பத்தை வெளிவிடும் திறன் ஆகியவற்றை குறிப்பிடுகிறது. மாறாத அழுத்தத்தில் ஒரு செயல்முறை நிகழும்போது, வெளிப்படும் அல்லது உறிஞ்சப்படும் வெப்பத்தின் அளவு என்தால்பி மாற்றத்திற்கு சமம்.

என்தால்பி ஒருநிலைச் சார்பாகும், இது அமைப்பின் நிலை மாறிகளான T,P மற்றும் U



Unit 7 - Sridhar.indd 218 07-01-2021 15:08:40

ஆகியவற்றை மட்டுமே பொறுத்து அமைகிறது. மாறாத அழுத்தத்தில் ஒரு அமைப்பின் ஆரம்ப மற்றும் இறுதி நிலைகளுக்கிடையேயான என்தால்பியில் ஏற்படும் மாற்றமாகவே (ΔH) என்தால்பி (H) குறிக்கப்படுகிறது.

$$\Delta H = \Delta U + P\Delta V \text{ ----------------(7.9)}$$

மாறாத அழுத்தத்தில் ஒரு அமைப்பிற்கு கொடுக்கப்படும் வெப்பம் (q ) அதன் என்தால்பி மாற்றத்திற்குச் சமம் (அமைப்பானது வேறெந்த கூடுதல் வேலையும் செய்யாத வரையில்)

$$\Delta H = q_p$$

ஒரு வெப்பம்கொள் வினையில் அமைப்பினால் சூழலில் இருந்து வெப்பம் உறிஞ்சப்படுகிறது. அதாவது $q>0$ (நேர்குறி மதிப்பு). எனவே ΔH மதிப்பும் நேர்குறியை பெறுகிறது. .ஒரு வெப்பம் உமிழ்வினையில் அமைப்பிலிருந்து சூழலுக்கு வெப்பம் வெளியேற்றப்படுகிறது. அதாவது $q<0$ (எதிர்குறி மதிப்பு). எனவே ΔH மதிப்பும் எதிர்குறியை பெறுகிறது.

### 7.5.1 என்தால்பி (H) மற்றும் அகஆற்றல் (U) ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பு

ஒரு அமைப்பானது மாறாத அழுத்தத்தில், ஆரம்ப நிலையிலிருந்து ($H_1, U_1, V_1$ மற்றும் P) இறுதிநிலைக்கு ($H_2, U_2, V_2$ மற்றும் P) மாற்றத்திற்குட்படும் போது ஏற்படும் என்தால்பி மாற்றத்தை ΔH, பின்வருமாறு கணக்கிட முடியும்.

$$H = U + PV$$

ஆரம்ப நிலையில்

$$H_1 = U_1 + PV_1 \text{ -----(7.10)}$$

இறுதி நிலையில்

$$H_2 = U_2 + PV_2 \text{ ----(7.11)}$$

என்தால்பியில் ஏற்படும் மாற்றம்(7.11) - (7.10)

$$(H_2 - H_1) = (U_2 - U_1) + P(V_2 - V_1)$$

$$\Delta H = \Delta U + P\Delta V \text{ --------- (7.12)}$$

வெப்ப இயக்கவியல் முதல் விதிப்படி

$$\Delta U = q + w$$

சமன்பாடு 7.12 ல் பிரதியிட

$$\Delta H = q + w + P\Delta V$$

$$w = -P\Delta V$$

$$\Delta H = q_p - P\Delta V + P\Delta V$$

$$\Delta H = q_p \text{ ---------- (7.13)}$$

$q_p$ – என்பது மாறாத அழுத்த நிலையில் உறிஞ்சப்பட்ட வெப்பம், இது உள்ளுறை வெப்பம் அல்லது வெப்ப அடக்கம் எனப்படுகிறது.

மாறாத வெப்ப அழுத்த நிலைகளில் ஒன்றுடன் ஒன்று வேதிவினை புரிந்து வாயு நிலையுள்ள விளைபொருட்களை தரும் வாயுக்கள் அடங்கிய மூடிய அமைப்பு ஒன்றைக் கருதுக. வினைபடு வாயுக்களின் ஆரம்ப கனஅளவு $V_i$ எனவும் வினைவிளை வாயுக்களின் கனஅளவு$V_f$ எனவும் அவற்றின் மோல் எண்ணிக்கை முறையே $n_i$ மற்றும் $n_f$ எனக் கொண்டால்

வினைபடு பொருட்களுக்கு (ஆரம்ப நிலை)

$$PV_i = n_i RT \text{ --------- (7.14)}$$

விளை பொருட்களுக்கு (இறுதி நிலை):

$$PV_f = n_f RT \text{ --------- (7.15)}$$



Unit 7 - Sridhar.indd 219 07-01-2021 15:08:40

(7.15) - (7.14)

$$P(V_f - V_i) = (n_f - n_i)RT$$

$$P\Delta V = \Delta n_{(g)} RT \text{ --------(7.16)}$$

சமன்பாடு 7.16 ஐ சமன்பாடு 7.12 ல் பிரதியிட

$$\Delta H = \Delta U + \Delta n_{(g)} RT \text{--------(7.17)}$$

### 7.5.2 பல்வேறு வகை வினைகள் மற்றும் நிலைமை மாற்றங்களுக்கான என்தால்பி மாற்றங்கள்:

ஒரு வேதிவினையோடு தொடர்புடைய வெப்பம் அல்லது என்தால்பி மாற்றமானது வினையின் இயல்பினை பொருத்து வெவ்வேறு வகைகளில் குறிப்பிடப்படுகிறது. அவைகளை பின்வருமாறு விளக்கலாம்.

#### திட்ட உருவாதல் வெப்பம்:

ஒரு மோல் சேர்மமானது, திட்ட வெப்ப, அழுத்த நிலைகளில் (298 K மற்றும்1 bar அழுத்தம்) உள்ள அதன் தனிமங்களிலிருந்து உருவாகும் போது ஏற்படும் என்தால்பி மாற்றம் அச்சேர்மத்தின் திட்ட உருவாதல் வெப்பம் என வரையறுக்கப்படுகிறது.

நடைமுறையில் அனைத்து தனிமங்களின் திட்ட உருவாதல் வெப்பம் பூஜ்ஜியம் என எடுத்துக் கொள்ளப்படுகிறது.

$Fe(s) + S(s) \rightarrow FeS(s)$

$$\Delta H_f^0 = -100.42 \text{ kJ mol}^{-1}$$

$2C(s) + H_2(g) \rightarrow C_2H_2(g)$

$$\Delta H_f^0 = +222.33 \text{ kJ mol}^{-1}$$

$$\frac{1}{2}Cl_2(g) + \frac{1}{2}H_2(g) \rightarrow HCl(g)$$

$$\Delta H_f^0 = -92.4 \text{ kJ mol}^{-1}$$

சில சேர்மங்களின் திட்ட உருவாதல் வெப்ப மதிப்புகள் அட்டவணை 7.4 ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை: 7.4 சிலசேர்மங்களின் திட்ட உருவாதல் வெப்ப மதிப்புகள்**

| சேர்மம் | $\Delta H_f^0$ (kJ mol$^{-1}$) | சேர்மம் | $\Delta H_f^0$ (kJ mol$^{-1}$) |
|---|---|---|---|
| $H_2O(l)$ | −242 | $CH_4(g)$ | -74.85 |
| $HCl(g)$ | −92.4 | $C_2H_6(g)$ | −84.6 |
| $HBr(g)$ | −36.4 | $C_6H_6(g)$ | +49.6 |
| $NH_3(g)$ | −46.1 | $C_2H_2(g)$ | +222.33 |
| $CO_2(g)$ | -393.5 | $CH_3OH(l)$ | −239.2 |

## 7.6 வெப்ப வேதிச்சமன்பாடுகள் (Thermo chemical equations)

வெப்ப வேதிச்சமன்பாடுகள் என்பவை என்தால்பி மாற்ற (ΔH) மதிப்புகளுடன் கூடிய சமன் செய்யப்பட்ட வேதிவினைக் கூறு விகித சமன்பாடு (Stoichiometric Equation) ஆகும். வெப்ப வேதிச் சமன்பாடுகளில் பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

(i) சமன்படுத்தப்பட்ட வெப்ப வேதிச் சமன்பாடுகளில் உள்ள வினை குணகங்கள், வினையில் ஈடுபடும் வினைபடு மற்றும் வினைவிளை பொருட்களின் மோல்களின் எண்ணிக்கையினைக் குறிப்பிடுகின்றன.

ii) ஒரு வேதிவினையின் என்தால்பி மாற்றம் $\Delta H_r$ ஆனது தகுந்த குறியீட்டு மற்றும் அலகுடன் குறிப்பிடப்பட வேண்டும்.

(iii) ஒரு வேதிவினையின் மறுதலை வினையை (reverse reaction) கருதும்போது, அவ்வினையின் ΔHன்



Unit 7 - Sridhar.indd 220 07-01-2021 15:08:40

எண் மதிப்பை மாற்றாமல், குறியீட்டை மட்டும் மாற்றி குறிப்பிடப்படுகிறது.

(iv) ஒரு வினையின் $\Delta H$ மதிப்பானது அவ்வினையில் ஈடுபடும் வினைப் பொருள்களின் இயற் நிலைமைகளை பொறுத்து அமைவதால், அவ்வேதி வினையில் ஈடுபடும் அனைத்து பொருட்களின் இயற் நிலைமைகளும் முக்கியமானவை மற்றும் அவற்றை [வாயு(g), நீர்மம்(l), நீர்மகரைசல் (aq), திண்மம் (s) முதலியன அடைப்புக் குறிக்குள்] வெப்ப வேதிச் சமன்பாடுகளில் கண்டிப்பாக குறிப்பிட வேண்டும்.

(v) ஒரு வெப்ப வேதிச் சமன்பாடு முழுவதுமாக ஒரு குறிப்பிட்ட எண்ணால் பெருக்கப்படும் போது, அதன் என்தால்பி மதிப்பும் அதே எண்ணால் பெருக்கப்படுகிறது.

(vi) ஒரு வினையின் $\Delta H_r^0$ மதிப்பு எதிர்குறியை பெற்றிருந்தால் அவ்வினை வெப்பம் உமிழ் வினைஎனவும், $\Delta H_r^0$ மதிப்பு நேர்குறியை பெற்றிருந்தால் வெப்பம் கொள்வினை எனவும் அறியலாம்.

எடுத்துக்காட்டாக பின்வரும் வினைகளைக் கருதுவோம்

$$2H_2(g) + O_2(g) \rightarrow 2\,H_2O(g) \qquad \Delta H_r^0 = -\,967.4\ kJ$$

$$2H_2O(g) \rightarrow 2H_2(g) + O_2(g) \qquad \Delta H_r^0 = +\,967.4\ kJ$$

**ஒரு வினையின் திட்டவினை என்தால்பி ($\Delta H_r^0$) மதிப்பினை, திட்ட உருவாதல் என்தால்பி ($\Delta H_f^0$) மதிப்புகளிலிருந்து பெறுதல்.**

அனைத்து வினைபடு பொருட்கள் மற்றும் வினைவிளை பொருட்களும் அவற்றின், திட்ட நிலைகளில் உள்ளபோது, அவ்வினையின் என்தால்பி மாற்றம், திட்டவினை என்தால்பி எனப்படுகிறது. இவை $\Delta H$ குறியீட்டிற்கு 0-வை மேல் ஒட்டாக சேர்த்து $\Delta H^0$ என்ற குறியீட்டால் குறிக்கப்படுகிறது.

வினையில் ஈடுபடும் பல்வேறு வினைபடு பொருட்கள், மற்றும் வினைவிளை பொருட்கள் ஆகியனவற்றின் திட்ட உருவாதல் என்தால்பி மதிப்புகளிலிருந்து, திட்ட நிலையில் அவ்வினையின் என்தால்பி மதிப்பினை நாம் கணக்கிடமுடியும்.

வினை விளைப் பொருட்களின் திட்ட உருவாதல் என்தால்பி மதிப்புகளிலிருந்து வினைபடு பொருட்களின் திட்ட உருவாதல் என்தால்பி மதிப்புகளைக் கழித்துக் கிடைப்பது அவ்வினையின் திட்டவினை என்தால்பி மதிப்பிற்குச் சமம்.

$$\Delta H_r^0 = \Sigma\, \Delta H_f^0{}_{(\text{விளைப் பொருள்})} - \Sigma\, \Delta H_f^0{}_{(\text{வினைப்படுபொருள்})}$$

ஒரு பொதுவான வினைக்கு

$$aA + bB \rightarrow cC + dD$$

$$\Delta H_f^0 = \Sigma\, \Delta H_f^0{}_{(\text{விளைப் பொருள்})} - \Sigma\, \Delta H_f^0{}_{(\text{வினைப்படுபொருள்})}$$

$$\Delta H_f^0 = \{c\Delta H_f^0(C) + d\Delta H_f^0(D)\} - \{a\Delta H_f^0(A) + b\,\Delta H_f^0(B)\}$$

**கணக்கு 7.2**

$$C_2H_5OH(l) + 3O_2(g) \rightarrow 2CO_2(g) + 3\,H_2O(l)$$

என்ற வினைக்கு திட்ட என்தால்பி மாற்ற மதிப்பை கணக்கிடுக. $C_2H_5OH(l)$, $CO_2(g)$ மற்றும் $H_2O(l)$ ஆகியவற்றின் திட்ட உருவாதல் என்தால்பி மதிப்புகள் முறையே 277, -393.5 மற்றும் -285.5 kJ $mol^{-1}$ வரையறையின் படி $O_2(g)$ ன் திட்ட உருவாதல் என்தால்பி மதிப்பு பூஜ்ஜியமாகும்.



Unit 7 - Sridhar.indd 221 07-01-2021 15:08:40

தீர்வு:

$$\Delta H_r^0 = \left\{ \left(\Delta H_f^0\right)_{products} - \left(\Delta H_f^0\right)_{reactants} \right\}$$

$$\Delta H_r^0 = \left[ 2\left(\Delta H_f^0\right)_{CO_2} + 3\left(\Delta H_f^0\right)_{H_2O} \right]$$

$$- \left[ 1\left(\Delta H_f^0\right)_{C_2H_5OH} + 3\left(\Delta H_f^0\right)_{O_2} \right]$$

$$\Delta H_r^0 = \begin{bmatrix} 2mol\,(-393.5)\,kJ\,mol^{-1} \\ +\,3mol\,(-285.5)\,kJ\,mol^{-1} \end{bmatrix}$$

$$- \begin{bmatrix} 1mol\,(-277)\,kJ\,mol^{-1} \\ +\,3mol\,(0)\,kJ\,mol^{-1} \end{bmatrix}$$

$$= [-787 - 856.5] - [-277]$$

$$= -1643.5 + 277$$

$$\Delta H_r^0 = -1366.5\,kJ$$

## தன்மதிப்பீடு

1) $CO_2(g) + H_2(g) \rightarrow CO(g) + H_2O(g)$

என்ற வினைக்கு திட்ட வினை என்தால்பி மதிப்பினைக் கணக்கிடுக. கொடுக்கப்பட்டுள்ளவை: $CO_2$ (g), CO (g) மற்றும் $H_2O(g)$ ஆகியவற்றின் $\Delta H_f^0$ மதிப்புகள் முறையே– 393.5, – 111.31 மற்றும் – 242 kJ $mol^{-1}$.

## எரிதல் வெப்பம்

"ஒரு மோல் சேர்மமானது அதிகளவு காற்று அல்லது ஆக்ஸிஜனில் முழுமையாக எரிக்கப்படும் போது ஏற்படும் என்தால்பி மாற்றம், அச்சேர்மத்தின் எரிதல் வெப்பம் என வரையறுக்கப்படுகிறது. இது $\Delta H_c$ என குறிப்பிடப்படுகிறது. எடுத்துக்காட்டாக மீத்தேனின் எரிதல் வெப்பம்–87.78 kJ $mol^{-1}$

$CH_4(g) + 2O_2(g) \rightarrow CO_2(g) + 2H_2O(l)$

$\Delta H_C = -\ 87.78\ kJ\ mol^{-1}$

கார்பனின்எரிதல்வினைக்கு.

$C\,(s) + O_2(g) \rightarrow CO_2(g)$

$\Delta H_C = -\ 394.55\ kJ\ mol^{-1}$

எரிதல் வினைகள் எப்பொழுதும் வெப்பம் உமிழ் வினைகளாகும். எனவே எரிதல் என்தால்பி மாற்றம் எப்பொழுதும் எதிர்குறியினைப் பெற்றிருக்கும்.

## மோலார் வெப்ப ஏற்புத் திறன்கள்:

ஒரு அமைப்பிற்கு வெப்பம் கொடுக்கப்படும் போது, அவ்வமைப்பிலுள்ள மூலக்கூறுகள் வெப்ப ஆற்றலை (q) உறிஞ்சுகின்றன, எனவே அவைகளின் இயக்க ஆற்றல் அதிகரிக்கின்றது. இதன் விளைவாக அமைப்பின் வெப்பநிலை $T_1$ லிருந்து $T_2$ க்கு உயருகிறது.

இந்த வெப்பநிலை உயர்வு $(T_2\text{-}T_1)$ ஆனது, உறிஞ்சப்பட்ட வெப்பத்தின் (q) அளவிற்கு நேர்விகிதத்திலும், பொருளின் நிறைக்கு (m) எதிர்விகிதத்திலும் இருக்கும்.

$q\ \alpha\ m\Delta T$

$q = c\ m\ \Delta T$

$c = q/m\ \Delta T$

இங்கு c என்பது வெப்ப ஏற்புத்திறன்

$$c = \left( \frac{q}{m\,(T_2 - T_1)} \right) \qquad --------(7.18)$$

m = 1 kg மற்றும் $(T_2 - T_1) = 1$ K எனும் போது வெப்ப ஏற்புத்திறனானது, தன் வெப்ப ஏற்புத்திறன் எனப்படுகிறது. மேலும் சமன்பாடு 7.18 ஆனது பின்வருமாறு மாற்றமடைகிறது.

$c = q$

அதாவது, ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில், 1 கிலோ கிராம் நிறையுள்ள பொருள் ஒன்றின் வெப்பநிலையை, ஒரு கெல்வின் உயர்த்த அப்பொருளால் உறிஞ்சிப்படும் வெப்ப ஆற்றலின் அளவானது, அவ்வமைப்பின் தன்வெப்ப ஏற்புத்திறன் என வரையறுக்கப்படுகிறது.

ஒரு மோல் சேர்மத்திற்கான வெப்ப ஏற்புத்திறன் மோலார் வெப்ப ஏற்புத்திறன் $(c_m)$ என்றழைக்கப்படுகிறது. "ஒரு மோல் சேர்மத்தின் வெப்பநிலையை ஒரு கெல்வின் உயர்த்த அச்சேர்மத்தால் உறிஞ்சிப்படும் வெப்ப ஆற்றலின் அளவு அதன் மோலார் வெப்ப ஏற்புத்திறன் என வரையறுக்கப்படுகிறது.

### வெப்ப ஏற்புத்திறனின் அலகுகள்:

மோலார் வெப்ப ஏற்புத்திறனின் SI அலகு $JK^{-1}\ mol^{-1}$.

மோலார் வெப்ப ஏற்புத்திறன்கள் மாறாத கனஅளவு $(C_V)$ மற்றும் மாறாத அழுத்தம் $(C_P)$ என இருவகைகளில் குறிப்பிடப்படுகின்றன.

வெப்ப இயக்கவியலின் முதல் விதிப்படி

$U = q + w$ அல்லது $U = q - PdV$

$q = U + PdV$ ---------------------(7.19)

சமன்பாடு (7.19)ஐ மாறாத கன அளவில், வெப்ப நிலையை பொறுத்து வகையீடு செய்ய

$$\left(\frac{\partial q}{\partial T}\right)_V = \left(\frac{\partial U}{\partial T}\right)_V$$

$$C_V = \left(\frac{\partial U}{\partial T}\right)_V \quad -------- (7.20)$$

எனவே மாறா கன அளவில் மோலார் வெப்ப ஏற்புத்திறன் $(C_V)$ என்பது மாறாத கனஅளவில், வெப்பநிலையைப் பொறுத்து அக ஆற்றலின் மாறுபாட்டு வீதம் என வரையறுக்கப்படுகிறது.

இதைப் போலவே, மாறா அழுத்தத்தில் மோலார் வெப்ப ஏற்புத்திறன் $(c_P)$ என்பது மாறாத அழுத்தத்தில் வெப்பநிலையை பொறுத்து என்தால்பியின் மாறுபாட்டு வீதம் என வரையறுக்கப்படுகிறது.

$$c_P = \left(\frac{\partial H}{\partial T}\right)_P \quad -------- (7.21)$$

### ஒரு நல்லியல்பு வாயுவிற்கான $c_P$ மற்றும் $c_V$ ஆகியவற்றிற்கிடையேயான தொடர்பு:

என்தால்பிக்கான வரையறைப்படி

$H=U+PV$ ------(7.8)

நல்லியல்பு வாயுச் சமன்பாட்டின் படி

$PV = nRT$ -----(7.22)

சமன்பாடு 7.22 ஐ 7.8 ல் பிரதியிட

$H = U + nRT$ ---- (7.23)

இச்சமன்பாட்டை வெப்பநிலையை பொறுத்து வகையீடு செய்ய

$$\frac{\partial H}{\partial T} = \frac{\partial U}{\partial T} + nR\frac{\partial T}{\partial T}$$

$$C_p = C_v + nR \ (1) \qquad \left[\because \left(\frac{\partial H}{\partial T}\right)_P = C_P \text{ மற்றும் } \left(\frac{\partial U}{\partial T}\right)_V = C_V\right]$$

$$C_p - C_v = nR \ .....(7.24)$$

அழுத்தம் மாறா செயல்முறைகளில் அமைப்பானது சூழலுக்கு எதிராக வேலை செய்கிறது. எனவே கனஅளவு மாறாத செயல்முறையைக் காட்டிலும், ஒரு குறிப்பிட்ட வெப்பநிலை உயர்வை அடைய அமைப்பிற்கு அதிகளவு வெப்பம் தேவைப்படுகிறது. எனவே $C_P$ மதிப்பு எப்பொழுதும் $C_V$ஐ விட அதிகம்.



Unit 7 - Sridhar.indd 223 07-01-2021 15:08:41

### $\Delta U$ மற்றும் $\Delta H$ கணக்கிடல்

1 மோல் நல்லியல்பு வாயுவிற்கு

$$C_V = \frac{dU}{dT}$$

$$dU = C_V\, dT$$

வரையறுக்கப்பட்ட மாற்றம் நிகழும் போது

$$\Delta U = C_V\, \Delta T$$

$$\Delta U = C_V\, (T_2 - T_1)$$

n மோல்கள் நல்லியல்பு வாயுக்களுக்கு

$$\Delta U = n\, C_v (T_2 - T_1) \text{ ----------- } (7.25)$$

இதேபோல n மோல்கள் நல்லியல்பு வாயுக்களுக்கு, $\Delta H$ மற்றும் $C_P$ தொடர்பு பின்வருமாறு

$$\Delta H = n\, C_P\, (T_2 - T_1) \text{------ } (7.26)$$

### கணக்கு 7.3

128.0 கிராம் ஆக்ஸிஜனை $0^0C$ லிருந்து $100^0C$க்கு வெப்பப்படுத்தும் போது $\Delta U$ மற்றும் $\Delta H$ மதிப்புகளை கணக்கிடுக. தோராயமாக $C_V$ மற்றும் $C_P$ மதிப்புகள் முறையே 21 J $mol^{-1}$ $K^{-1}$ மற்றும் 29 J $mol^{-1}$ $K^{-1}$ (வேறுபாடானது $8 Jmol^{-1}K^{-1}$ இது தோராயமாக R மதிப்பிற்குச் சமம்.)

### தீர்வு

இங்கு

$\Delta U = n\, C_v\, (T_2 - T_1)$

$\Delta H = n\, C_P\, (T_2 - T_1)$

மேலும்

$$n = \frac{128}{32} = 4 \text{ மோல்கள்}$$

$T_2 = 100^0$ C = 373K; $T_1 = 0^0$ C = 273K

$\Delta U = n\, C_v\, (T_2 - T_1)$

$\Delta U = 4 \text{ x } 21 \text{ x } (373 - 273)$

$\Delta U = 8400$ J

$\Delta U = 8.4$ kJ

$\Delta H = n\, Cp\, (T_2 - T_1)$

$\Delta H = 4 \times 29 \times (373 - 273)$

$\Delta H = 11600$ J

$\Delta H = 11.6$ kJ

**தன்மதிப்பீடு**

2) 180 கிராம் நீரின் வெப்பநிலையை $25^0C$ லிருந்து $100^0C$ க்கு மாற்றத் தேவைப்படும் வெப்பத்தை கணக்கிடுக. நீரின் மோலார் வெப்ப ஏற்புத்திறன் மதிப்பு 75.3 $Jmol^{-1}$ $K^{-1}$.

### 7.7 கலோரி மீட்டர் முறையினை பயன்படுத்தி $\Delta U$ மற்றும் $\Delta H$ மதிப்புகளை அளவிடல்

இயற் அல்லது வேதி மாற்றங்களில், ஏற்படும் வெப்பமாற்ற அளவினை அளந்தறிய கலோரிமீட்டர் பயன்படுகிறது. கலோரி மீட்டர் முறையில், ஒரு செயல்முறையில் ஏற்படும் வெப்பநிலை மாற்றமானது அளந்தறியப்படுகிறது. இது வெப்ப மாற்றத்திற்கு எதிர்விகித்திலிருக்கும். $C = q/m\Delta T$ என்ற சமன்பாட்டை பயன்படுத்தி ஒரு செயல்முறையின் வெப்பமாற்ற அளவை நாம் கணக்கிட முடியும். கலோரி மீட்டர் அளவீடுகளை இருவேறு நிபந்தனைகளில் கீழ் அளந்தறியலாம்.


i) மாறாத கன அளவில் $(q_V)$

ii) மாறாத அழுத்தத்தில் $(q_p)$

### (அ) ΔU அளவிடுதல்

மாறாத கனஅளவில், வேதி வினைகளில், வெளிப்படும் வெப்பம் பாம் கலோரிமீட்டர் கொண்டு அளவிடப்படுகிறது.

பாம் கலோரிமீட்டரின் உள்கலன் (பாம்) மற்றும் மூடி ஆகியன வலிமையான எஃகினால் செய்யப்பட்டுள்ளது. உலோக மூடியானது, திருகாணிகள் மூலம் இறுக்கமாக பொருத்தப்பட்டுள்ளது.




படம் 7.6 பாம் கலோமீட்டர்

எடையிடப்பட்ட (wகி) கரிம சேர்மமானது ஒரு பிளாட்டின தட்டில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இத்தட்டானது மின்பாய்தல் மூலம் உடனடியாக எரிதலை தூண்டுவதற்காக மின்கம்பிகளுடன் பொருத்தப்பட்டுள்ளது .உள் கலனில் அதிகளவு ஆக்ஸிஜன் செலுத்தி அழுத்தப்பட்டு இறுக்கமாக மூடப்படுகிறது. உள் கலன் (பாம்) ஆனது கலோரிமீட்டரினுள் உள்ள நீரில் அமிழ்த்தி வைக்கப்பட்டுள்ளது. வினையில் உருவாகும் வெப்பம் நீர் முழுவதும் சீராக பரவச் செய்ய கலோரிமீட்டரின் சுவர்களுக்கும், உள்கலனிற்கும் (பாம்) இடையே ஒரு கலக்கி உள்ளது. மின்வில்லை உருவாக்கி சேர்மம் எரிக்கப்படுகிறது.

கலோரி மீட்டரின் உள்கலனில் (பாம்), எடையிடப்பட்ட, எரியக்கூடிய கரிம சேர்மம், ஆக்ஸிஜன் சேர்த்து எரிக்கப்படுகிறது. சேர்மம் எரிக்கப்படும் போது உருவாகும் வெப்பம், கலோரி மீட்டர் மற்றும் அதைச் சூழ்ந்துள்ள நீரினால் உறிஞ்சப்படுகிறது. வெப்பநிலை மாற்றத்தை அளவிட பெக்மென் வெப்பநிலைமானி பொருத்தப்பட்டுள்ளது. பாம் கலோரி மீட்டர் மூடப்பட்டுள்ளதால், அதன் கனஅளவில் மாற்றம் ஏற்படுவதில்லை. எனவே வெப்ப அளவீடுகளானது மாறாத கனஅளவில் எரிதல் வெப்பத்திற்குச்($\Delta U_c^0$ ) சமம்.

இவ்வினையில் உருவான வெப்பத்தின் அளவானது($\Delta U_c^0$), கலோரி மீட்டர் மற்றும் நீரால் உறிஞ்சப்பட்ட வெப்ப மதிப்புகளின் கூடுதலுக்குச்சமம்.

கலோரி மீட்டரால் உறிஞ்சப்பட்ட வெப்பம்

$$q_1 = k.\Delta T$$

இங்கு k என்பது கலோரி மீட்டர் மாறிலி எனப்படுகிறது. மேலும் $k=m_c\ C_c$

$m_c$= கலோரி மீட்டரின் நிறை

$C_c$= கலோரி மீட்டரின் வெப்ப ஏற்புதிறன்



Unit 7 - Sridhar.indd 225 07-01-2021 15:08:43

நீரால் உறிஞ்சப்பட்ட வெப்பம் $q_2 = m_w C_w \Delta T$

இங்கு $m_w$ என்பது நீரின் மோலார் நிறை,

$C_w$ நீரின் மோலார் வெப்ப ஏற்புத்திறன் ($75.29\ J\ K^{-1}\ mol^{-1}$)

எனவே $\Delta U_c = q_1 + q_2$

$$= k.\Delta T + m_w C_w \Delta T$$

$$= (k+m_w C_w)\Delta T$$

ஒரு தெரிந்த அளவுடைய திட்ட பொருளை (பென்சாயிக் அமிலம்) எரிப்பதன் மூலம், கலோரி மீட்டர் மாறிலியின் (k) மதிப்பினை தீர்மானிக்க முடியும். பென்சாயிக் அமிலத்தின் எரிதல் வினை வெப்பம் $-3227\ kJ\ mol^{-1}$ என்ற தெரிந்த ஒரு மதிப்பாகும்.

மாறா அழுத்தத்தில் என்தால்பி மாற்றத்தை சமன்பாடு (7.17)ஐ பயன்படுத்தி கணக்கிடலாம்.

$$\Delta H_{C\ (அழுத்தம்)}^{0} = \Delta U_{C\ (கனஅளவு)}^{0} + \Delta n_g RT$$

### பாம் கலோரி மீட்டரின் பயன்கள் :

1. எரிதல் வினைகளில் வெளிப்படும் வெப்பத்தை அளவிட பாம்கலோரி மீட்டர் பயன்படுகிறது.
2. உணவுப் பொருட்களின் கலோரி மதிப்பினை நிர்ணயித்திட இது பயன்படுகிறது.
3. வளர்சிதை மாற்ற ஆய்வுகள், உணவு பதப்படுத்துதல், வெடி பொருட்களை சோதித்தறிதல் போன்ற பல்வேறு தொழிற்துறைகளில் பாம்கலோரி மீட்டர் பயன்படுகிறது.


### (ஆ) ΔH அளவிடுதல்

மாறாத அழுத்தத்தில் நடைபெறும் (பொதுவாக வளிமண்டல அழுத்தத்தில்) வினைகளில் நிகழும் வெப்ப மாற்றங்களை காஃபி கப் கலோரி மீட்டர் கொண்டு அளவிடலாம். காஃபி கப் கலோரி மீட்டரின் அமைப்பை குறித்துக் காட்டும் படமானது, படம் (7.7) ல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த கலோரி மீட்டரில் உலோக கலனிற்கு (பாம்) பதிலாக ஸ்டைரோபோஃம் கப் பயன்படுத்தப்படுகிறது. இது சிறந்த வெப்பம் கடத்தாப் பொருள், வினையில் உருவாகும் வெப்பத்தை, சூழலுக்கு கடத்த இப்பொருள் அனுமதிப்பதில்லை. எனவே இங்கு உருவான மொத்த வெப்பமும், கப்பில் உள்ள நீரால் மட்டுமே உறிஞ்சப்படுகிறது. நீரின் வெப்பநிலையில் ஏற்படும் மாற்றமானது அளந்தறியப்படுகிறது, மேலும் இதனைப் பயன்படுத்தி உறிஞ்சப்பட்ட (அ) வெளியிடப்பட்ட வெப்பத்தின் அளவை, பின்வரும் சமன்பாட்டினை பயன்படுத்தி கணக்கிடலாம்.

$$q = m_w C_w \Delta T$$

இங்கு $m_w$ என்பது நீரின் மோலார் நிறை,

$C_w$ நீரின் மோலார் வெப்ப ஏற்புத்திறனின் மதிப்பு $75.29\ J\ K^{-1}\ mol^{-1}$.




படம்: 7.7 காபி கப் கலோரிமீட்டர்



Unit 7 - Sridhar.indd 226 07-01-2021 15:08:44

வினையின் போது குறிப்பிடத்தக்க அளவு கனஅளவில் மாற்றம் ஏற்படாத வினைகளுக்கு இம்முறையினைப் பயன்படுத்த முடியும்.

### கணக்கு 7.4

300 K வெப்ப நிலை மற்றும் மாறாத அழுத்தத்தில் எத்திலீன் வாயுவின் எரிதல் என்தால்பி மதிப்பை கணக்கிடுக. மாறாத கனஅளவில் எத்திலீன் வாயுவின் எரிதல் என்தால்பி ($\Delta U$) மதிப்பு–1406 kJ .

தீர்வு:

எத்திலீன் எரிதல் வினையை பின்வருமாறு எழுதலாம்

$$C_2H_4(g) + 3O_2(g) \rightarrow 2CO_2(g) + 2H_2O(l)$$

$$\Delta U = -1406 \text{ kJ}$$

$$\Delta n = n_{p(g)} - n_{r(g)}$$

$$\Delta n = 2 - 4 = -2$$

$$\Delta H = \Delta U + RT\Delta n_g$$

$$\Delta H = -1406 + (8.314 \times 10^{-3} \times 300 \times (-2)$$

$$\Delta H = -1410.9 \text{ kJ}$$

### தன்மதிப்பீடு

3) மாறாத கனஅளவில் பென்சீனின் எரிதல் வினைக்கான தரவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. மாறாத அழுத்தத்தில் வினையின் எரிதல் வெப்பத்தை கணக்கிடுக. $C_6H_6(l) + 7\frac{1}{2}O_2(g) \rightarrow$

$6CO_2(g) + 3H_2O(l)$

$25^0$ C ல் $\Delta U = -3268.12$ kJ

### எரிதல் வெப்பத்தின் பயன்பாடுகள் :

#### (1)உருவாதல் வெப்பத்தை கணக்கிடுதல். :

கரிம சேர்மங்களின் எரிதல் வெப்பத்தை எளிதில் அளவிட முடியும் என்பதால் , இதைப் பயன்படுத்தி மற்ற சேர்மங்களின் உருவாதல் வெப்பத்தை கணக்கிடமுடியும்.

எடுத்துக்காட்டாக மீத்தேனின் திட்ட உருவாதல் என்தால்பி ($\Delta H_f^0$)மதிப்பை கணக்கிடுவோம்.$H_2$,C(கிராஃபைட்) மற்றும் $CH_4$ ஆகியவற்றின் எரிதல் என்தால்பி மதிப்புகள் முறையே-285.8, -393.5 மற்றும் -890.4 kJmol$^{-1}$.

பின்வருமாறு சமன்பாடுகளை எழுதுவதன் மூலம் உருவாதல் என்தால்பியை விளக்க முடியும். திட்ட வெப்ப அழுத்த நிலைகளில், தூயநிலையிலுள்ள, தனித்த வாயுக்கள் மற்றும் தனிமங்களின் திட்ட உருவாதல் என்தால்பி மதிப்புகள் பூஜ்ஜியம் என எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மீத்தேன் அதன் தனிமங்களிலிருந்து உருவாவதற்கான வெப்ப வேதிச் சமன்பாடுகள்

$$C_{(\text{கிராஃபைட்})} + 2H_2(g) \rightarrow CH_4(g)$$

$$\Delta H_f^0 = X \text{ kJ mol}^{-1} \text{--- (i)}$$

கொடுக்கப்பட்ட சேர்மங்களின் எரிதல் வினைக்கான வெப்ப வேதிச் சமன்பாடுகள்

$$H_2(g) + \frac{1}{2}O_2(g) \rightarrow H_2O(l)$$

$$\Delta H^0 = -285.8 \text{ kJ mol}^{-1} \text{---(ii)}$$

$$C_{(\text{கிராஃபைட்})}(s) + O_2(g) \rightarrow CO_2(g)$$

$$\Delta H^0 = -393.5 \text{ kJ mol}^{-1} \text{--- (iii)}$$

$$CH_4(g) + 2O_2(g) \rightarrow CO_2(g) + 2H_2O(l)$$

$$\Delta H^0 = -890.4 \text{ kJ mol}^{-1} \text{--- (iv)}$$

தேவைப்படும் சமன்பாடு (i)ல் மீத்தேன்,



Unit 7 - Sridhar.indd 227 07-01-2021 15:08:44

விளைபொருள் பக்கத்தில் இருப்பதால், சமன்பாடு (iv) ன் மறுதலையை (reverse) எழுத வேண்டும்.

$$CO_2\,(g) + 2\,H_2O\,(l) \rightarrow CH_4\,(g) + 2\,O_2$$

$$\Delta H^0 = +\,890.4\ kJ\ mol^{-1} \text{---}\ (v)$$

சமன்பாடு (i) ஐ பெற

$$(i) = [(ii) \times 2] + (iii) + (v)$$

$$X = [(-285.8) \times 2] + [-393.5] + [+\,890.4]$$

$$= -74.7\ kJ$$

1 மோல் மீத்தேன் உருவாதலின்போது வெளிப்படும் வெப்பம்= –74.7 kJ

மீத்தேனின்
உருவாதல் வெப்பம் = $-74.7\ kJmol^{-1}$

### (2) உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருட்களின் கலோரி மதிப்புகளை கணக்கிடுதல்:

ஒரு கிராம் பொருளை முழுமையாக எரிக்கும்போது வெளிப்படும் வெப்பத்தின் அளவு (கலோரிகளில் அல்லது ஜூல்களில்) அச்சேர்மத்தின் கலோரி மதிப்பு என வரையறுக்கப்படுகிறது. இதன் SI அலகு $JKg^{-1}$. எனினும் இது வழக்கமாக cal $g^{-1}$ எனும் அலகில் குறிப்பிடப்படுகிறது.

### கரைசல் வெப்பம் :

ஒரு பொருள் ஒரு கரைப்பானில் கரைக்கப்படும் போது பொதுவாக வெப்பமாற்றம் உணரப்படுகிறது. குறிப்பிட்ட வெப்பநிலையில், ஒருமோல் சேர்மத்தை, குறிப்பிட்ட அளவுள்ள கரைப்பானில் கரைக்கும் போது ஏற்படும் வெப்பமாற்றம் அச்சேர்மத்தின் கரைசல் வெப்பம் என வரையறுக்கப்படுகிறது.

### நடுநிலையாக்கல் வெப்பம்:

நீர்த்தகரைசலில், ஒரு கிராம் சமான நிறை கொண்ட ஒருஅமிலமானது, ஒரு கிராம் சமான நிறை கொண்ட ஒருகாரத்தால் முற்றிலும் நடுநிலையாக்கப்படும் போது, ஏற்படும் என்தால்பி மாற்றம் நடுநிலையாக்கல் வெப்பம் என வரையறுக்கப்படுகிறது.

$$HCl(aq) + NaOH(aq) \rightarrow NaCl\,(aq) + H_2O(l)$$

$$\Delta H = -\,57.32\ kJ$$

$$H^+(aq) + OH^-(aq) \rightarrow H_2O(l)$$

$$\Delta H = -\,57.32\ kJ$$

எந்த ஒரு வலிமை மிகு அமிலம் மற்றும் வலிமை மிகு காரம் ஆகியவற்றின் நடுநிலையாக்கல் வெப்ப மதிப்பு ஏறக்குறைய –57.32 kJ. அமிலம் அல்லது காரத்தின் தன்மையை பொறுத்து இம்மதிப்பு மாறுவதில்லை, பின்வரும் எடுத்துக்காட்டுகள் இதற்குச் சான்றாக அமைகின்றன.

$$HCl\,(aq) + KOH(aq) \rightarrow KCl\,(aq) + H_2O(l)$$

$$\Delta H = -\,57.32\ kJ$$

$$HNO_3(aq) + KOH(aq) \rightarrow KNO_3(aq) + H_2O(l)$$

$$\Delta H = -\,57.32\ kJ$$

$$H_2SO_4(aq) + 2KOH(aq) \rightarrow$$

$$K_2SO_4(aq) + 2\,H_2O(l)$$

$$\Delta H = -\,57.32\ kJ \times 2$$

அமில காரங்கள் பற்றிய அர்ஹீனியஸ் கொள்கை மூலம் இதற்கான காரணத்தினை விளக்கமுடியும். இக்கொள்கைப்படி "வலிமை மிகு அமிலங்கள், மற்றும் வலிமை மிகுகாரங்கள் அவற்றின் நீர்க்கரைசல்களில் முற்றிலும் அயனிகளாக பிரிகையுற்று முறையே $H^+$ மற்றும் $OH^-$ அயனிகளைத் தருகின்றன. எனவே மேற்கூறிய அனைத்து வினைகளிலும் நிகழும்

நடுநிலையாக்கல் வினையினை பின்வருமாறு குறிப்பிடலாம் .

$$H^+(aq) + OH^-(aq) \rightarrow H_2O(l)$$

$$\Delta H = -57.32 \text{ kJ}$$

### மோலார் உருகுதல் வெப்பம்:

ஒரு மோல் திண்மப்பொருள், அதன் உருகுநிலையில் திரவநிலைக்கு மாற்றப் படும்போது, ஏற்படும் என்தால்பி மாற்றம், அதன் மோலார் உருகுதல் வெப்பம் என வரையறுக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டாக பனிக்கட்டியின் உருகுதல் வெப்பத்தை பின்வருமாறு குறிப்பிட முடியும்.

$$H_2O(s) \xrightarrow{273K} H_2O(l) \ \Delta H_{fusion} = +5.98 \text{kJ}$$

### மோலார் ஆவியாதல் வெப்பம்:

ஒரு மோல் நீர்மம், அதன் கொதி நிலையில் ஆவிநிலைக்கு மாற்றப்படும்போது ஏற்படும் என்தால்பி மாற்றம், அதன் மோலார் ஆவியாதல் வெப்பம் என வரையறுக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டாக நீரின் ஆவியாதல் வெப்பத்தை பின்வருமாறு குறிப்பிட முடியும்

$$H_2O(l) \xrightarrow{373K} H_2O(v) \quad \Delta H_{vap} = +40.626 \text{ kJ}$$

### மோலார் பதங்கமாதல் வெப்பம்:

ஒரு திண்மம் அதன் திரவ நிலைக்கு மாறாமல், நேரடியாக வாயு நிலைக்கு மாறும் ஒரு செயல்முறை பதங்கமாதல் எனப்படுகிறது. ஒரு மோல் திண்மப்பொருளை, அதன் பதங்கமாதல் வெப்பநிலையில் நேரடியாக ஆவிநிலைக்கு மாற்றப்படும் போது ஏற்படும் என்தால்பி மாற்றம், அப்பொருளின் மோலார் பதங்கமாதல் வெப்பம் என வரையறுக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக அயோடினின் பதங்கமாதல் வெப்பத்தை பின்வருமாறு குறிப்பிடமுடியும்.

$$I_2(s) \longrightarrow I_2(v) \quad \Delta H_{sub} = +62.42 \text{ kJ}$$

மிகக் குறைந்த வெப்பநிலையில் வளிமண்டல அழுத்தத்தில் திண்ம கார்பன்–டை–ஆக்சைடானது வாயுநிலைக்கு மாறுவது, பதங்கமாதல் செயல்முறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாகும்.

### நிலைமாற்ற வெப்பம்:

ஒரு மோல் தனிமம், அதன் ஒரு புறவேற்றுமை வடிவத்திலிருந்து, மற்றொரு புறவேற்றுமை வடிவத்திற்கு மாற்றமடையும்போது ஏற்படும் என்தால்பி மாற்றம்,நிலைமாற்ற வெப்பம் என வரையறுக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டாக வைரம் அதன் புறவேற்றுமை வடிவமான கிராஃபைட்டாக மாற்றமடையும்வினையை குறிப்பிடலாம்.

$$C_{(\text{வைரம்})} \longrightarrow C_{(\text{கிராஃபைட்})}$$

$$\Delta H_{trans} = +13.81 \text{ kJ}$$

இதைப் போலவே சல்பர் மற்றும் பாஸ்பரஸின் புற வேற்றுமை வடிவங்களுக்குக்கிடையே மாற்றத்தினை பின்வருமாறு குறிப்பிடலாம்..

$$S_{(\text{மோனோக்ளினிக்})} \longrightarrow S_{(\text{ரோம்பிக்})}$$

$$\Delta H_{trans} = -0.067 \text{ kJ}$$

$$P_{(\text{வெண்மை})} \longrightarrow P_{(\text{சிவப்பு})}$$

$$\Delta H_{trans} = -4.301 \text{ kJ}$$

## 7.8 ஹெஸ்ஸின் வெப்பம் மாறா கூட்டல் விதி:

வினையானது மாறாத கன அளவில் அல்லது மாறாத அழுத்தத்தில் நிகழ்த்தப்படுவதைப் பொறுத்து அவ்வினைகளால் ஏற்படும் வெப்ப மாற்றமானது




Unit 7 - Sridhar.indd 229 07-01-2021 15:08:44

வினைவிளை பொருட்கள், மற்றும் வினைபடு பொருட்களின் அகஆற்றல் வேறுபாடு ($\Delta U$) அல்லது வெப்பப்பொதிவு ($\Delta H$) க்கு சமமாக இருக்கும் என நாம் முன்னரே கற்றறிந்தோம். $\Delta U$ மற்றும் $\Delta H$ ஆகியன அமைப்பின் நிலையை பொறுத்து அமையும் நிலைச் சார்புகளாகும். எனவே ஒரு கொடுக்கப்பட்ட வினையில் வெப்பம் உறிஞ்சப்படுதல் அல்லது உமிழப்படுதலானது, அவ்வமைப்பின் ஆரம்ப மற்றும் இறுதி நிலைகளை மட்டுமே பொறுத்தமையுமேயன்றி, அம்மாற்றமானது எவ்வழிமுறையில் அல்லது எத்தனை படிகளில் நிகழ்கிறது என்பதை பொறுத்து அமைவதில்லை.

இந்த பொதுமைப்படுத்துதலானது ஹெஸ்விதி என அறியப்படுகிறது. ஹெஸ்விதிப்படி,

மாறாத கனஅளவு அல்லது மாறாத அழுத்தத்தில் ஒரு வினை ஒருபடியில் நிகழ்ந்தாலோ அல்லது பலபடிகளில் நிகழ்ந்தாலோ, அதன் ஆரம்ப மற்றும் இறுதி நிலைகள் மாறா திருப்பின், அவ்வினையின் மொத்த என்தால்பி மதிப்பு மாறாமல் இருக்கும்.





$$\Delta H_r = \Delta H_1 + \Delta H_2 + \Delta H_3$$

### ஹெஸ் விதியின்பயன்பாடுகள்:

என்தால்பி மதிப்புகளை எளிதில் அளவிட முடியாத வினைகளுக்கு ஹெஸ்விதியை பயன்படுத்தி வினை என்தால்பி மதிப்புகளைக் கணக்கிடலாம். எடுத்துக்காட்டாக கிரா∴பைட்டை, தூய CO ஆக ஆக்ஸிஜனேற்றம் அடைய செய்யும் வினையின் வினை என்தால்பி மதிப்பை அளவிடுதல் மிக கடினமாகும். எனினும் கிரா∴பைட்டை, $CO_2$ ஆகவும், மற்றும் CO ஐ $CO_2$ ஆகவும், ஆக்ஸிஜனேற்றம் செய்யும் வினைகளின் என்தால்பி மதிப்புகளை எளிதாக அளவிட முடியும்.

இவ்வினைகளுக்கு எரிதல் வினை வெப்ப மதிப்புகள்முறையே-393.5kJ,மற்றும்-283.5 kJ. இந்ததரவுகளிலிருந்து கிரா∴பைட்டிலிருந்து CO வின் உருவாதல் என்தால்பியை ஹெஸ் விதியை பயன்படுத்தி கணக்கிடலாம்.

இதில் நிகழும் வினைகளை பின்வருமாறு எழுதலாம்.




ஹெஸ் விதிப்படி

$$\Delta H_1 = \Delta H_2 + \Delta H_3$$

$$-393.5 \text{ kJ} = X - 283.5 \text{ kJ}$$

$$X = -110.5 \text{ kJ}$$

## 7.9 படிகக்கூடு ஆற்றல்($\Delta H_{(\text{படிகக்கூடு})}$)

ஒரு மோல் படிகத்தில் உள்ள அயனிகளை அதன் படிக அணிக் கோவை புள்ளிகளிலிருந்து முடிவிலா தொலைவிற்கு நீக்குவதற்கு தேவைப்படும் ஆற்றலின் அளவு அப்படிகத்தின் படிகக்கூடு ஆற்றல் என வரையறுக்கப்படுகிறது. இது படிகக்கூடு என்தால்பி எனவும்அழைக்கப்படுகிறது.

$$NaCl(s) \rightarrow Na^{+}(g) + Cl^{-}(g)$$

$$\Delta H_{\text{படிகக்கூடு}} = +788 \text{kJ mol}^{-1}$$

மேற்காண் சமன்பாட்டிலிருந்து ஒரு மோல் NaCl படிகத்திலுள்ள $Na^{+}$ மற்றும்




Unit 7 - Sridhar.indd 230 07-01-2021 15:08:45

$Cl^-$ அயனிகளை பிரிப்பதற்கு 788 kJ ஆற்றல் தேவைப்படுகிறது என்பதை அறியமுடிகிறது.

## பார்ன் – ஹேபர்சுற்று

ஒரு வினையின் ஆற்றல்களை ஆய்ந்தறிவதற்கான ஒரு அணுகுமுறையே பார்ன் – ஹேபர் சுற்று ஆகும். இச்சுற்றை உருவாக்கிய ஜெர்மன் அறிவியலாளர்கள் மேக்ஸ்பார்ன்மற்றும்ஃபிரிட்ச்ஹேபர்ஆகியோர் பெயரால் இச்சுற்று அழைக்கப்படுகிறது. ஒரு உலோகம் ஹேலஜனுடனோ அல்லது ஆக்ஸிஜன் போன்ற அலோகத்துடனோ சேர்ந்து அயனிச் சேர்மங்கள் உருவாகும் வினைகளை இச்சுற்று கருத்தில் கொள்கிறது. வேறு எந்த முறையிலும் நேரடியாக கணக்கிடமுடியாத படிககூடு ஆற்றலை கணக்கிட பார்ன் – ஹேபர் சுற்று பயன்படுகிறது. இச்சுற்றில் படிக்கூடு என்தால்பியை கணக்கிட ஹெஸ் விதி பயன்படுகிறது. எடுத்துக்காட்டாக எளிய கார உலோக ஹாலைடு MX போன்ற அயனிப்படிகங்கள் உருவாதலுக்கு பின்வரும் படிகளைக் கருத்திற் கொள்வோம்.




$\Delta H_1$ - M(s) லிருந்து M(g) ஆக பதங்கமாதலின் வெப்பம்

$\Delta H_2$- $\frac{1}{2}X_2$ (g) லிருந்து X(g) ஆக பிரிகையுறும் ஆற்றல்

$\Delta H_3$- M(g) லிருந்து $M^+$(g)ஆகமாற தேவைப்படும் அயனியாக்க ஆற்றல்

$\Delta H_4$ - X(g) ஆனது $X^-$(g) ஆக மாற்றமடையும் செயல்முறையின் எலக்ட்ரான் நாட்ட மதிப்பு.

U - திண்ம MX உருவாதலின் படிக்கூடு ஆற்றல்.

$\Delta H_f$ -தனிமங்களிலிருந்து நேரடியாக MX உருவாகும் வினையின் என்தால்பி மாற்றம் (உருவாதல் என்தால்பி).


ஹெஸ்ஸின் வெப்பம் மாறா கூட்டல் விதிப்படி

$$\Delta H_f = \Delta H_1 + \Delta H_2 + \Delta H_3 + \Delta H_4 + U$$

NaCl படிகத்தின் படிகக்கூடு ஆற்றலை கணக்கிடுவதற்கு பார்ன் – ஹேபர் சுற்றை பின்வருமாறு பயன்படுத்து வோம்.

வினையில் ஈடுபடும் வினைபடு பொருட்கள் தனிமநிலையிலும், விளை பொருட்கள் தங்களின் திட்ட நிலைகளிலும் உள்ளதால் 1 bar அழுத்தத்தில் வினையில் ஏற்படும் மொத்த என்தால்பி மாற்றம் NaCl படிகத்தின் உருவாதல் என்தால்பி எனவும் அழைக்கப்படுகிறது. மேலும் NaCl உருவாகும் வினை ஐந்து படிகளில் நிகழ்வதாக கருதுவோம். ஒவ்வொரு படியிலும் நிகழும் என்தால்பி மாற்றங்களின் கூடுதல் வினையின் மொத்த என்தால்பி மாற்றத்திற்குச் சமம்.

இதிலிருந்து NaCl படிகத்தின்படிகக் கூடு ஆற்றலை கணக்கிடலாம்.




$\Delta H_f$ = சோடியம் குளோரைடின் உருவாதல் வெப்பம் = – 411.3 kJ $mol^{-1}$

$\Delta H_1$ = Na(S) ன் பதங்கமாதல் வெப்பம் = 108.7 kJ $mol^{-1}$



Unit 7 - Sridhar.indd 231 07-01-2021 15:08:45

$\Delta H_2$ = Na(g) ன்அயனியாக்கும்ஆற்றல் = 495.0 kJ $mol^{-1}$

$\Delta H_3$ = $Cl_2(g)$ ன்பிரிகைஆற்றல் = 244 kJ $mol^{-1}$

$\Delta H_4$ = Cl(g) ன் எலக்ட்ரான் நாட்டம் = – 349.0 kJ $mol^{-1}$

U = NaCl ன் படிக்கூடு ஆற்றல்

$$\Delta H_f = \Delta H_1 + \Delta H_2 + \frac{1}{2}\Delta H_3 + \Delta H_4 + U$$

$$\therefore U = \left(\Delta H_f\right) - \left(\Delta H_1 + \Delta H_2 + \frac{1}{2}\Delta H_3 + \Delta H_4\right)$$

$\Rightarrow$ U = (–411.3) – (108.7 + 495.0 + 122 – 349)

U = (–411.3) – (376.7)

$\therefore$ U = – 788 kJ $mol^{-1}$

படிகக்கூடு ஆற்றல் மதிப்பிலுள்ள இந்த எதிர்குறியானது, வாயுநிலையிலுள்ள $Na^+$மற்றும்$Cl^-$அயனிகளிலிருந்து NaCl உருவாகும்போது ஆற்றல் வெளிப்படுகிறது என்பதை குறிக்கிறது.

**தன்மதிப்பீடு**

4) 1 மோல் மெக்னீசியம், 1மோல் திரவ புரோமினிலிருந்து, 1மோல் மெக்னீசியம் புரோமைடு தயாரிக்கும் போது 524kJ அளவு ஆற்றல் வெளிப்படுகிறது.

மெக்னீசியத்தின் பதங்கமாதல் வெப்பம்148 kJ $mol^{-1}$ , திரவ புரோமினின் ஆவியாதல் வெப்பம்31 kJ $mol^{-1}$, புரோமின் வாயுவை, அணுக்களாக்க தேவைப்படும் பிரிகையடைதல் வெப்பம் 193 kJ$mol^{-1}$, மெக்னீஷியத்தின் அயனியாக்கும் ஆற்றல்கள் முறையே $IE_1$ = 737.5 kJ $mol^{-1}$ மற்றும் $IE_2$ = 1450.5 kJ $mol^{-1}$, புரோமினின் எலக்ட்ரான் நாட்டம் -324.5 kJ $mol^{-1}$ எனில், மெக்னீஷியம் புரோமைடு படிகத்தின் படிகக்கூடு ஆற்றலைக் கணக்கிடு.

## 7.10. வெப்ப இயக்கவியலின் இரண்டாம்விதி

**வெப்ப இயக்கவியலின் இரண்டாம் விதிக்கான தேவை:**

வெப்ப இயக்கவியலின் முதல்விதிப்படி அண்டத்தின் ஆற்றல் மாறாதிருக்கும் எனநாம் அறிவோம்.

பின்வரும் எடுத்துக்காட்டுகளை நாம் கருதுவோம்.

1. ஒரு முகவையிலுள்ள வெந்நீர், சிறிது நேரத்தில் சூழலுக்கு வெப்ப ஆற்றலை இழந்து குளிர்ச்சியடைகிறது.

2. ஹைட்ரோ குளோரிக் அமிலத்தை, சோடியம் ஹைட்ராக்ஸைடுடன் சேர்க்கும் போது, சோடியம் குளோரைடும், நீரும் உருவாகிறது. இவ்வினையில் வெப்பம் வெளியேறுகிறது.

இவ்விரு நிகழ்வுகளிலும், மொத்த ஆற்றல் மாறுவதில்லை, மேலும் இது முதல் விதிப்படியே அமைகிறது. எனினும், இதன் மறுதலைச் செயல்முறைகள் அதாவது குளிர்ந்த நீரானது சூழலில் இருந்துதானாகவே வெப்பத்தை உறிஞ்சி வெந்நீராக மாறும் வினையின் ஆற்றல் மாற்றமும் முதல்விதிப்படியே அமைந்தாலும், இவ்வினை தன்னிச்சையாக நிகழ்வதில்லை. எனினும் குளிர்ந்த நீருக்கு வெப்ப ஆற்றல் வழங்கப்படும் போது அது சூடாகிறது, அதாவது இம்மாற்றம் தன்னிச்சையாக நிகழ்வதில்லை, மேலும் ஆற்றலை கொடுப்பதன் மூலம் நிகழுமாறு செய்ய முடியும்.

இதை போலவே, சோடியம் குளோரைடு கரைசல் தானாக வெப்பத்தை உறிஞ்சி ஹைட்ரோ குளோரிக் அமிலமாகவும், சோடியம் ஹைட்ராக்ஸைடாகவும் மாறுவது இல்லை. ஆனால் ஆற்றலை வழங்கியும் இந்தசெயல் முறையை நிகழச் செய்யமுடியாது.

இவ்வாறான இயற்கை அனுபவங்களிலிருந்து, சில செயல் முறைகள் தன்னிச்சையாகவும், சில செயல் முறைகள் தன்னிச்சையற்றும் மேலும் சில செயல்முறைகள் ஒருகுறிப்பிட்ட திசையில் மட்டும் நிகழ்வதாக அமைகின்றன என அறிய முடிகிறது. ஒரு குறிப்பிட்ட வினையின் நிகழும் தன்மையை விளக்க நமக்கு வெப்ப இயக்கவியல் இரண்டாம் விதி தேவைப்படுகிறது.

### 7.10.1 வெப்ப இயக்கவியலின் இரண்டாம் விதியின் பல்வேறு கூற்றுகள்:

#### என்ட்ரோபி

வெப்ப இயக்கவியலின் இரண்டாம்விதி "என்ட்ரோபி" என்றழைக்கப்படும் மற்றுமொரு நிலைச்சார்பை அறிமுகப்படுத்துகிறது. என்ட்ரோபி என்பது ஒரு அமைப்பின் மூலக்கூறுகளின் ஒழுங்கற்ற தன்மையை அளவிடும் வெப்ப இயக்கவியல் நிலைச்சார்பு. ஆனால் என்ட்ரோபியின் வெப்ப இயக்கவியல் வரையறையானது ஒரு செயல்முறையின் விளைவால் ஏற்படும் என்ட்ரோபி மாற்றத்தை கருத்தில் கொள்கிறது. இதன் வரையறை பின்வருமாறு

$$dS = dq_{\text{மீள்}} / T$$

#### என்ட்ரோபிகூற்று:

வெப்ப இயக்கவியலின் இரண்டாம் விதியை என்ட்ரோபி வாயிலாக குறிப்பிடலாம், அதாவது "ஒருதன்னிச்சை செயல்முறை நிகழும்போது, ஒரு தனித்த அமைப்பின் என்ட்ரோபி அதிகரிக்கிறது.

வாயுக்கள் விரிவடைதல் போன்ற மீளா செயல் முறைகளுக்கு

$$\Delta S_{\text{மொத்தம்}} > 0$$

$$\Delta S_{\text{மொத்தம்}} > \Delta S_{\text{அமைப்பு}} + \Delta S_{\text{சூழல்}}$$

i.e. $\Delta S_{\text{மொத்தம்}} > \Delta S_{\text{அமைப்பு}} + \Delta S_{\text{சூழல்}}$

பனிக்கட்டி உருகுதல் போன்ற மீள் செயல்முறைகளுக்கு,

$$\Delta S_{\text{அமைப்பு}} = - \Delta S_{\text{சூழல்}}$$

$$\Delta S_{\text{மொத்தம்}} = 0$$

#### கெல்வின் – பிளாங்க் கூற்று:

ஒரு சுற்றுச் செயல் முறையில், சூடான வெப்ப மூலத்திலிருந்து வெப்பத்தை உறிஞ்சி அவ்வெப்பத்தின் ஒரு பகுதியை குளிர்ந்த நிலையிலுள்ள மூலத்திற்கு மாற்றாமல், முழுவதும் வேலையாக மாற்றக்கூடிய இயந்திரத்தினை வடிவமைக்க இயலாது. ஒரு சிறந்த, உராய்வற்ற இயந்திரத்தினால் கூட அதற்கு கொடுக்கப்பட்ட வெப்ப உள்ளீட்டினை 100% வேலையாக மாற்ற முடியாது. என்பதை வெப்ப இயக்கவியல் இரண்டாம் விதி விளக்குகிறது.

மீள்முறையில் செயல்படும் ஒரு வெப்ப இயந்திரத்தின் திறனானது , அந்த இயந்திரம் எந்த இரு வெப்பநிலைகளுக்கிடையே செயல்படுகிறதோ அவற்றை மட்டுமே பொறுத்து அமைகிறது என்பதை கார்னோ (Carnot) வெப்ப இயந்திரங்களை பற்றிய தனது ஆய்வின் மூலம் கண்டறிந்தார்.

$$\text{திறன்} = \frac{\text{செய்யப்பட்டவேலை}}{\text{உறிஞ்சப்பட்டவெப்பம்}}$$

$$\eta = \frac{|q_h| - |q_c|}{|q_h|}$$

$q_h$ – சூடான வெப்ப மூலத்திலிருந்து உறிஞ்சப்பட்ட வெப்பம்

$q_c$ – குளிர்ந்த நிலையிலுள்ள மூலத்திற்கு மாற்றப்பட்ட வெப்பம்

$$\eta = 1 - \frac{|q_c|}{|q_h|} \quad ---(7.27)$$

ஒரு மீள்சுற்றுச் செயல்முறைக்கு

$$\Delta S_{(\text{அண்டம்})} = \Delta S_{\text{அமைப்பு}} + \Delta S_{\text{சூழல்}} = 0$$

$$\Delta S_{\text{அமைப்பு}} = - \Delta S_{\text{சூழல்}}$$

$$\frac{q_h}{T_h} = \frac{-q_c}{T_c}$$

$$\frac{T_c}{T_h} = \frac{-q_c}{q_h}$$

$$\frac{T_c}{T_h} = \frac{|q_c|}{|q_h|} \quad ----(7.28)$$

சமன்பாடு 7.27 ல் 7.28 ஐ பிரதியிட

$$\Rightarrow \eta = 1 - \frac{T_c}{T_h} \quad -------(7.29)$$

$T_h >> T_c$

எனவே, $\eta < 1$

இயந்திரத்தின் திறனை சதவிகிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

$$\text{இயக்குதிறன் சதவீதம்} = \left[1 - \frac{T_c}{T_h}\right] \times 100$$

### கிளாசியஸ் கூற்று:

எந்த ஒரு வேலையும் செய்யாமல், குளிர்ந்த வெப்ப மூலத்திலிருந்து, சூடான வெப்ப மூலத்திற்கு, வெப்பத்தை மாற்ற முடியாது.

### கணக்கு 7.10

ஒரு தானியங்கி மோட்டார் வாகன இயந்திரத்தில், பெட்ரோல் $816^0$ C வெப்பநிலையில் எரிக்கப்படுகிறது. சூழலின் வெப்பநிலை $21^0$C ஆக இருக்கும்போது இயந்திரத்தின் அதிகபட்ச திறனை கணக்கிடுக.

#### தீர்வு

$$\text{இயக்குதிறன் சதவீதம்} \quad \left[\frac{T_h - T_c}{T_h}\right] \times 100$$

இங்கு

$T_h$ = 816+273= 1089 K;

$T_c$= 21+273= 294K

$$\text{இயக்குதிறன் சதவீதம்} = \left(\frac{1089 - 294}{1089}\right) \times 100$$

இயக்குதிறன் சதவீதம் = 73%

#### தன்மதிப்பீடு

5) $127^0$C மற்றும் $47^0$C ஆகிய வெப்பநிலைகளுக்கிடையே செயல்படும் ஒரு இயந்திரம் உயர்வெப்ப மூலத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு ஆற்றலை உறிஞ்சுகிறது. உராய்வின் மூலம் எந்த ஆற்றல் இழப்பும் இல்லாத நிலையில் இயந்திரத்தின் அதிகபட்ச சதவீத இயக்கத்திறனைக் கணக்கிடுக.


### என்ட்ரோபியின் அலகுகள்:

என்ட்ரோபி (S) என்பது பரிமாறப்பட்ட வெப்ப ஆற்றலை (q), வெப்பநிலையால் (T) வகுக்க கிடைப்பது ஆகும்.எனவே என்ட்ரோபியின் SI அலகு J $K^{-1}$.

### ஒழுங்கற்ற தன்மை மற்றும் தன்னிச்சைத் தன்மை

பனிக்கட்டி உருகுதல், நீர் ஆவியாதல் போன்ற செயல்முறைகளை கவனமாக ஆய்ந்தறியும் போது, அவ்வமைப்பின் ஒழுங்கற்ற தன்மை அதிகரிப்பதை அறிய முடிகிறது. பனிக்கட்டியில் நீர் மூலக்கூறுகள் அதிக ஒழுங்குடன் கூடிய படிக அமைப்பில் உள்ளதால், அவ்வமைப்பு மூலக்கூறுகளின் சிறு நகர்வுகளுக்கு மட்டுமே அனுமதிக்கிறது. பனிக்கட்டி உருகும் போது, நீர் மூலக்கூறுகள் ஒழுங்கற்ற நிலைக்கு செல்கின்றன மேலும்

அதிக கட்டற்ற தன்மையுடன் நகர்கின்றன. நீர்மநிலையில் கட்டற்ற நகரும் தன்மை அதிகரிக்கிறது, ஆவிநிலையில் இது மேலும் அதிகரிக்கிறது. அதாவது பனிக்கட்டி நீராக உருகும் போதும், அல்லது நீர் ஆவியாகும் போதும், நீர் மூலக்கூறுகளின் ஒழுங்கற்ற தன்மை அதிகரிக்கிறது என நாம் இதனை கூற முடியும். இவ்விரு நிகழ்வுகளும் தன்னிச்சை செயல்முறைகளாகும். இச்செயல்முறைகளில் ஒழுங்கற்ற தன்மை (என்ட்ரோபி) அதிகரிக்கிறது.




படம்7.8 ஒழுங்கற்ற தன்மை அதிகரித்தல் – விளக்கப்படம்

### திட்ட என்ட்ரோபி மாற்றம் ($\Delta S^0$):

தனிச்சுழி வெப்பநிலை (0K)க்கு மேல் எந்த ஒரு வெப்பநிலையிலும் ஒரு அமைப்பின் உண்மையான என்ட்ரோபி மதிப்பினைக் கண்டறிய இயலும். 298K மற்றும் 1 bar அழுத்த நிலையில் ஒரு பொருளின் தனி என்ட்ரோபி ஆனது அச்சேர்மத்தின் திட்ட என்ட்ரோபி ($S^0$) என்றழைக்கப்படுகிறது. நெர்ன்ஸ்டின் வெப்ப இயக்கவியல் மூன்றாம் விதிக்கான கூற்றின்படி ஒரு குறைபாடற்ற படிக தனிமத்தின் தனி என்ட்ரோபி மதிப்பு தனிச்சுழி வெப்பநிலையில் (0K) மட்டும் பூஜ்ஜியமாகும். தனிச்சுழி வெப்பநிலைக்கு மேல் எந்த ஒருவெப்பநிலையிலும் அனைத்து சேர்மங்களின் திட்ட என்ட்ரோபி மதிப்புகளும் எப்போதும் நேர்குறி மதிப்பைக் கொண்டிருக்கும். வினையில் ஈடுபடும் பல்வேறு சேர்மங்களின் என்ட்ரோபி மதிப்புகளிலிருந்து, வினையின் என்ட்ரோபி மாற்றத்தை ($\Delta S_r^0$) கணக்கிட முடியும்.

$$\Delta S_r^0 = \Sigma S^0_{\text{வினைவிளைப்பொருட்கள்}} - \Sigma S^0_{\text{வினைபடுப்பொருட்கள்}} \qquad \text{------ (7.30)}$$

### திட்ட உருவாதல் என்ட்ரோபி :

"திட்ட நிலைமைகளில், ஒரு மோல் சேர்மம், அதன் தனிமங்களிலிருந்து உருவாகும்போது ஏற்படும் என்ட்ரோபி மாற்றம், திட்ட உருவாதல் என்ட்ரோபி என வரையறுக்கப்படுகிறது. இது $\Delta S_f^0$ என குறிக்கப்படுகிறது. தனிமங்களின் திட்ட என்ட்ரோபி ($S^0$) மதிப்புகளிலிருந்து கொடுக்கப்பட்டுள்ள ஒரு சேர்மத்தின் என்ட்ரோபியைக் கணக்கிட முடியும்.

### கணக்கு 7.6

$C(s)+O_2(g)\rightarrow CO_2(g)$ இவ்வினையின் திட்ட என்ட்ரோபி மாற்றத்தை கணக்கிடுக. $CO_2(g), C(s), O_2(g)$ ஆகியவற்றின் திட்ட என்ட்ரோபி மதிப்புகள் முறையே 213.6 ,5.740, மற்றும் 205 $JK^{-1}$.

$$C(g) + O_2(g) \longrightarrow CO_2(g)$$

$$\Delta S_r^0 = \Sigma S^0_{\text{வினைவிளைப்பொருட்கள்}} - \Sigma S^0_{\text{வினைபடுப்பொருட்கள்}}$$

$$\Delta S_r^0 = \{S^0_{CO_2}\} - \{S^0_C + S^0_{O_2}\}$$

$$\Delta S_r^0 = 213.6 - [5.74 + 205]$$

$$\Delta S_r^0 = 213.6 - [210.74]$$

$$\Delta S_r^0 = 2.86\ JK^{-1}$$

#### தன்மதிப்பீடு

6). யூரியா நீராற் பகுப்படைந்து அம்மோனியா மற்றும் கார்பன்–டை–ஆக்ஸைடை தருகிறது. இவ்வினையின் திட்ட என்ட்ரோபி மாற்றத்தை கணக்கிடுக. யூரியா, $H_2O$, $CO_2$, $NH_3$ ஆகியவற்றின் திட்ட என்ட்ரோபி மதிப்புகள் முறையே 173.8, 70, 213.5 மற்றும் 192.5 $J\ mol^{-1}\ K^{-1}$.



Unit 7 - Sridhar.indd 235 07-01-2021 15:08:47

## நிலைமை மாற்றங்களின் என்ட்ரோபி மாற்றங்கள் :

ஒரு திண்மம் நீர்மமாதல் (உருகுதல்), ஒரு நீர்மம் ஆவியாதல் (ஆவியாதல்), ஒரு திண்மம் ஆவியாதல் (பதங்கமாதல்) ஆகிய செயல்முறைகளின் போது என்ட்ரோபி மாற்றம் நிகழ்கிறது. இம்மாற்றங்களின் போது இரண்டு நிலைமைகளும் சமநிலையில் இருப்பதால் இம்மாற்றத்தினை மீள் முறையில், மாறா வெப்பநிலையில் நிகழ்த்தலாம்.

$$\Delta S = \frac{q_{\text{மீள்}}}{T} = \frac{\Delta H_{\text{மீள்}}}{T} \quad -------- (7.31)$$

### உருகுதல் என்ட்ரோபி:

ஒரு மோல் திண்மம், அதன் உருகுநிலையில், மீள் முறையில் உருகும்போது உறிஞ்சப்படும் வெப்பம் மோலார் உருகுதல் வெப்பம் எனப்படுகிறது. இச் செயல்முறைக்கான என்ட்ரோபி மாற்றம் உருகுதல் என்ட்ரோபி எனப்படும்.

$$\Delta S_{\text{மீள்}} = \frac{dq_{\text{மீள்}}}{T}$$

$$\Delta S_{\text{உருகுதல்}} = \frac{\Delta H_{\text{உருகுதல்}}}{T_f} \quad -------- (7.32)$$

இங்கு $H_f$ என்பது மோலார் உருகுதல் வெப்பம். $T_f$ என்பது உருகுநிலை.

### ஆவியாதல் என்ட்ரோபி:

ஒரு மோல் திரவம், அதன் கொதிநிலையில், மீள் முறையில் ஆவியாகும் போது உறிஞ்சப்படும் வெப்பம் மோலார் ஆவியாதல் வெப்பம் எனப்படுகிறது. இச்செயல்முறைக்கான என்ட்ரோபி மாற்றம் ஆவியாதல் என்ட்ரோபி எனப்படும்.

$$\Delta S_v = \frac{\Delta H_v}{T_b} \quad ------- (7.33)$$

இங்கு $\Delta H_v$ என்பது மோலார் ஆவியாதல் வெப்பம், $T_b$ என்பது கொதிநிலை

### புறவேற்றுமை வடிவமாறுதல் என்ட்ரோபி:

ஒரு மோல் திண்மம்,அதன் புறவேற்றுமை வடிவமாறு வெப்பநிலையில், மீள் முறையில் ஒரு புறவேற்றுமை வடிவத்திலிருந்து மற்றொன்றிற்கு மாற்றமடையும் போது ஏற்படும் வெப்பமாற்றம் மோலார் புறவேற்றுமை வடிவமாறு வெப்பம் எனப்படுகிறது. இச்செயல்முறைக்கான என்ட்ரோபி மாற்றம் புறவேற்றுமை வடிவமாறுதல் என்ட்ரோபி எனப்படுகிறது.

$$\Delta S_t = \frac{\Delta H_t}{T_t} \quad ------- (7.34)$$

இங்கு $\Delta H_t$ என்பது மோலார் புறவேற்றுமை வடிவமாறு வெப்பம், $T_t$ என்பது புறவேற்றுமை வடிவமாறு வெப்பநிலை.

### கணக்கு 7.7

$0^0C$ வெப்பநிலையில் 1 மோல் பனிக்கட்டி, நீராக உருகும்போது நிகழும் என்ட்ரோபி மாற்றத்தை கணக்கிடுக. பனிக்கட்டியின் மோலார் உருகுதல் வெப்பமதிப்பு 6008 J $mol^{-1}$

தீர்வு:

$$\Delta H_{\text{உருகுதல்}} = 6008\ Jmol^{-1}$$

$$T_f = 0^0\ C = 273\ K$$

$$H_2O(S) \xrightarrow{273\ K} H_2O\ (l)$$

$$\Delta S_{\text{உருகுதல்}} = \frac{\Delta H_{\text{உருகுதல்}}}{T_f}$$

$$\Delta S_{\text{உருகுதல்}} = \frac{6008}{273}$$

$$\Delta S_{\text{உருகுதல்}} = 22.007\ J\ K^{-1}\ mole^{-1}$$



Unit 7 - Sridhar.indd 236 07-01-2021 15:08:48

தன்மதிப்பீடு

7) 351K வெப்பநிலையில் 1 மோல் எத்தனாலை ஆவியாக்கும் போது நிகழும் என்ட்ரோபி மாற்றத்தைக்கணக்கிடுக. எத்தனாலின் மோலார் ஆவியாதல் வெப்பமதிப்பு 39.84 kJ $mol^{-1}$.

## 7.11கிப்ஸ் கட்டிலா ஆற்றல் (G)


வெப்ப இயக்கவியல் இரண்டாம் விதியின் ஒரு முக்கியப் பயனானது, குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் ஒரு வினையின் தன்னிச்சைத் தன்மையினைக் கண்டறிதல் ஆகும். குறிப்பிட்ட நிபந்தனையில், எந்தவித புறத்தூண்டு விசையின் உதவியும் இல்லாமல் ஒரு செயல்முறை நிகழுமாயின் அச்செயல்முறை தன்னிச்சை செயல்முறை எனவும், அவ்வாறு இல்லையெனில் தன்னிச்சையற்றது எனவும் அழைக்கப்படுகிறது. நம் அன்றாட வாழ்வில் பின்வரும் எடுத்துக்காட்டுகள் உள்ளிட்ட பல தன்னிச்சையான இயற் மற்றும் வேதிச் செயல்முறைகளை நாம் காண்கிறோம்.

1. அருவி கீழாக கொட்டுகிறது. ஆனால் எப்போதும் தன்னிச்சையாக மேலெழும்புவதில்லை.

2. ஒரு கப் குளம்பியில் (coffee) இடப்பட்ட சர்க்கரை தன்னிச்சையாக கரைகிறது. ஆனால், கரைந்த சர்க்கரை தன்னிச்சையாக மீண்டும் படிகங்களாக உருவாவதில்லை.

3. வெப்பம் சூடான பொருளிலிருந்து குளிர்ந்த பொருளுக்கு பாய்கிறது. ஆனால், குளிர்ந்த பொருளிலிருந்து சூடான பொருளுக்கு வெப்பம் தன்னிச்சையாக பாய்வதில்லை.

4. கீழ்க்கண்டுள்ள படத்தில் காட்டியுள்ளவாறு, இரு குமிழிகளுக்கு இடைப்பட்ட அடைப்பு நீக்கப்படும்போது, வாயு நிரம்பிய ஒரு குமிழிலிருந்து, வெற்றிடமாக்கப்பட்ட மற்றொரு குமிழிக்கு தன்னிச்சையாக வாயு விரிவடைகிறது. ஆனால், அதன் மறுதலை செயல்முறையான அனைத்து வாயு மூலக்கூறுகளும் ஒரே குமிழில் மீளவும் ஒன்றாக திரள்வது தன்னிச்சையாக நிகழ்வதில்லை.




படம் 7.9 தன்னிச்சை செயல்முறைக்கான விளக்கப்படம்

இந்த எடுத்துக்காட்டுகளிலிருந்து ஒரு திசையில் தன்னிச்சையாக நிகழும் செயல்முறைகள் அதற்கெதிரான திசையில் தன்னிச்சையாக நிகழ முடியாது என்பதை அறிகிறோம்.

இதைப்போலவே பெரும்பாலான வெப்பம் உமிழ்வினைகள் தன்னிச்சையாக நிகழ்கின்றன, எடுத்துக்காட்டாக மீத்தேனின் எரிதல் வினை.

$$CH_4+2O_2 \longrightarrow CO_2 + 2\,H_2O$$

$$\Delta H^o = -890.4 \text{ kJ mol}^{-1}$$

மற்றொரு எடுத்துக்காட்டு அமில–கார நடுநிலையாக்கல் வினை

$$H^+ + OH^- \longrightarrow H_2O$$

$$\Delta H^o = -57.32 \text{ kJ mol}^{-1}$$

இருந்தபோதிலும், சில வெப்பம் கொள் வினைகளும் தன்னிச்சையாக நிகழ்கின்றன. எடுத்துக்காட்டாக, அம்மோனியம் நைட்ரேட் நீரில் கரைதல் வெப்பக் கொள்வினையாக



Unit 7 - Sridhar.indd 237 07-01-2021 15:08:49

இருந்த போதிலும் தன்னிச்சையானது.

$$NH_4NO_3 \xrightarrow{H_2O} NH_4^+ + NO_3^-$$

$$\Delta H^o = +25 \text{ kJ mol}^{-1}$$

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளிலிருந்து நாம் பின்வரும் முடிவிற்கு வர முடியும். வெப்பம் உமிழ்தல் என்பது தன்னிச்சை நிகழ்விற்கான சாதகமான காரணி மட்டுமே அன்றி, உத்திரவாதமான காரணி அல்ல. ஒரு அமைப்பில் ஏற்படும் ஆற்றல் மாற்றங்களை மட்டுமே அடிப்படையாக கொண்டு ஒரு வேதிவினை நிகழுமா? அல்லது நிகழாதா? என்பதை நாம் தீர்மானிக்க முடியாது. ஆனால் வெப்ப இயக்கவியல் இரண்டாம் விதிப்படி தன்னிச்சையான ஒரு செயல் முறையில் என்ட்ரோபி அதிகரிக்கிறது. ஆனால் என்ட்ரோபி அதிகரிக்கும் அனைத்து செயல்முறைகளும் தன்னிச்சையாக நிகழ்வதில்லை. ஒரு வினையின் தன்னிச்சைத் தன்மையை தீர்மானிக்க நமக்கு மற்றொரு வெப்ப இயக்கவியல் சார்பு தேவைப்படுகிறது.

வெப்ப இயக்கவியலின் இரண்டாம் விதியானது, வினையின் தன்னிச்சைத் தன்மையை கண்டறிய பயன்படும் வகையில் "கிப்ஸ் கட்டிலா ஆற்றல்" என்ற வெப்ப இயக்கவியல் சார்பை, அறிமுகப்படுத்துகிறது. 1870களில் "ஜோஸைய் வில்லார்டுகிப்ஸ்" என்பவர் கிப்ஸ் கட்டிலா ஆற்றலை (G) வரையறுத்தார். அவர் இந்த ஆற்றலை ஒரு அமைப்பில் வேலை செய்வதற்கு "கிடைக்கக்கூடிய ஆற்றல்" என அழைத்தார். இவ்வாற்றல் ஒரு வேதிவினையோடு தொடர்புடைய வேலை செய்வதற்கு பயன்படுத்ததக்க ஆற்றல் ஆகும்.

கிப்ஸ் கட்டிலா ஆற்றலை பின்வருமாறு வரையறுக்கலாம்.

$$G = H - TS \text{ ------------ } (7.35)$$

கிப்ஸ் கட்டிலா ஆற்றல்(G) ஒரு பொருண்மை சார் பண்பாகும். மேலும் G என்பது ஒற்றை மதிப்புடைய நிலைச்சார்பாகும்.

மாறாத வெப்பநிலையில்ஒரு அமைப்பானது நிலை 1 லிருந்து நிலை 2க்கு மாற்றமடையும் செயல்முறையைக் கருதுவோம்.

$$G_2 - G_1 = (H_2 - H_1) - T(S_2 - S_1)$$

$$\Delta G = \Delta H - T\,\Delta S \text{------} (7.36)$$

$\Delta G$–ன் மதிப்பு எவ்வாறு வினையின் தன்னிச்சை தன்மையுடன் தொடர்புபடுத்தப்படுகிறது என்பதை நாம் காண்போம்.

நாம் அறிந்தபடி,

$$\Delta S_{\text{மொத்தம்}} = \Delta S_{\text{அமைப்பு}} + \Delta S_{\text{சூழல்}}$$

ஒரு மீள்செயல்முறையில் (சமநிலை), அண்டத்தின் என்ட்ரோபி மாற்றம் பூஜ்ஜியம்.

$$\Delta S = 0 \; [\because \Delta S_{\text{அமைப்பு}} = -\Delta S_{\text{சூழல்}}]$$

மேலும் ஒரு சமநிலை செயல்முறைக்கு $\Delta G = 0$

ஒரு தன்னிச்சை செயல்முறைக்கு $\Delta S_{\text{மொத்தம்}} > 0$, எனவே

$$\Delta S_{\text{அமைப்பு}} + \Delta S_{\text{சூழல்}} > 0$$

$$\Delta S_{\text{அமைப்பு}} + \frac{dq_{\text{சூழல்}}}{T} > 0$$

$$\Delta S_{\text{அமைப்பு}} - \frac{\Delta H_{\text{அமைப்பு}}}{T} > 0$$

$$T\Delta S_{\text{அமைப்பு}} - \Delta H_{\text{அமைப்பு}} > 0$$

$$-(\Delta H_{\text{அமைப்பு}} - T\Delta S_{\text{அமைப்பு}}) > 0$$



Unit 7 - Sridhar.indd 238 07-01-2021 15:08:49

$-(\Delta G) > 0$

எனவே ஒரு தன்னிச்சை செயல்முறைக்கு

$\Delta G < 0$

i.e. $\Delta H - T\Delta S < 0$ ------(7.37)

$\Delta H$ (அமைப்பு)என்பது வினையின் என்தால்பி மாற்றம், ($T\Delta S$ (அமைப்பு)) என்பது பயனுள்ள வேலையை செய்வதற்கு கிடைக்காத ஆற்றல் எனப்படுகிறது. எனவே, $\Delta G$ என்பது பயனுள்ள வேலை செய்வதற்கு கிடைக்கக் கூடிய நிகரஆற்றல் ஆகும். இக்காரணத்தினால் இது ஒரு வினையின் கட்டிலா ஆற்றல் எனவும் அறியப்படுகிறது.

ஒரு தன்னிச்சையற்ற செயல்முறைக்கு$\Delta G>0$.

## கிப்ஸ் கட்டிலா ஆற்றல் மற்றும் அமைப்பினால் செய்யப்பட்ட நிகரவேலை

மாறாத வெப்ப அழுத்தநிலையில், எந்த ஒரு அமைப்பிற்கும்

$\Delta G = \Delta H - T\Delta S$ ---- (7.36)

நாமறிந்தபடி,

$$\Delta H = \Delta U + P\Delta V$$

$$\therefore \Delta G = \Delta U + P\Delta V - T\Delta S$$

வெப்ப இயக்கவியல் முதல் விதிப்படி, அமைப்பு வேலை செய்யும் பொழுது

$$\Delta U = q - w$$

வெப்ப இயக்கவியல் இரண்டாம் விதிப்படி

$$\Delta S = \frac{q}{T}$$

$$\Delta G = q - w + P\Delta V - T\left(\frac{q}{T}\right)$$

$\Delta G = -w + P\Delta V$

$-\Delta G = -w - P\Delta V$ ............(7.38)

$P\Delta V$ என்பது மாறாத புற அழுத்தத்திற்கு எதிராக விரிவடைதலால் செய்யப்படும் வேலையை குறிக்கிறது. எனவே, மாறாத வெப்ப அழுத்த நிலைகளில், ஒரு செயல்முறை நிகழும்போது ஏற்படும் கட்டிலா ஆற்றல் குறைவு ($-\Delta G$) என்பது அமைப்பு செய்யும் விரிவடைதல் வேலையை தவிர்த்து அமைப்பிலிருந்து பெறக்கூடிய அதிகபட்ச வேலைக்குச் சமம்.

### 7.11.1 தன்னிச்சை செயல்முறைகளுக்கான அடிப்படை விதிமுறைகள்:

எந்த ஒரு செயல் முறையின் தன்னிச்சை தன்மையும் மூன்று வெவ்வேறு காரணிகளை பொறுத்து அமைகிறது.

- ஒரு செயல்முறையின் என்தால்பி மாற்றம் எதிர்குறி மதிப்பை பெற்றிருந்தால், அச்செயல் முறையானது வெப்பம் உமிழ் செயல்முறையாகும்,மேலும் தன்னிச்சையாக நிகழலாம். ($\Delta H$ எதிர்குறிஉடையது)

- ஒரு செயல்முறையின் என்ட்ரோபி மாற்றம் நேர்குறி மதிப்பை பெற்றிருந்தால், அச்செயல் முறையானது தன்னிச்சையாக நிகழலாம்.($\Delta S$ நேர்குறிஉடையது)

- ஒரு வினை தன்னிச்சையாக நிகழ, மேற்கூறிய இரண்டின் தொகுப்பான



Unit 7 - Sridhar.indd 239 07-01-2021 15:08:49

கட்டிலா ஆற்றல் மதிப்பு கண்டிப்பாக எதிர்குறியை பெற்றிருக்க வேண்டும். அதாவது ஒரு வினை தன்னிச்சையாக நிகழ்வதற்கு தேவையான நிபந்தனை $\Delta H\text{-}T\Delta S < 0$ என்பதாகும்.

அட்டவணை 7.5 வினைகளின் தன்னிச்சை தன்மைமீது வெப்ப நிலையின் விளைவு

| $\Delta H_r$ | $\Delta S_r$ | $\Delta G_r = \Delta H_r - T\Delta S_r$ | விளக்கம் | விளக்கம் |
|---|---|---|---|---|
| − | + | − (at all T) அனைத்து வெப்பநிலைகளிலும் | அனைத்து வெப்ப நிலைகளிலும் தன்னிச்சையானது | $2O_3(g) \rightarrow 3O_2(g)$ |
| − | − | − (at low T) குறைந்த வெப்பநிலையில் | குறைந்த வெப்ப நிலைகளில் தன்னிச்சையானது. | வாயுக்கள் பரப்பு கவரப்படுதல் |
| | | + (at high T) உயர் வெப்பநிலையில் | உயர் வெப்ப நிலைகளில் தன்னிச்சையற்றது. | |
| + | + | + (at low T) குறைந்த வெப்பநிலையில் | குறைந்த வெப்ப நிலைகளில் தன்னிச்சையற்றது. | ஒரு திண்மம் உருகுதல் |
| | | − (at high T) உயர் வெப்பநிலையில் | உயர் வெப்ப நிலைகளில் தன்னிச்சையானது. | |
| + | − | + (at all T) அனைத்து வெப்பநிலைகளிலும் | அனைத்து வெப்ப நிலைகளிலும் தன்னிச்சையற்றது. | $2H_2O(g) + O_2(g) \rightarrow 2H_2O_2(l)$ |

இந்த அட்டவணையானது $\Delta H$ மற்றும் $\Delta S$ ஆகியவை அனைத்து வெப்ப நிலைகளிலும், மேற் குறிப்பிட்டுள்ளவாறு இருப்பதாக கருத்திற் கொண்டுள்ளது. அவ்வாறாகவே இருக்க வேண்டும் என அவசியமில்லை. ஒரு வேதி வினையின் தன்னிச்சைதன்மையானது, மேலே குறிப்பிட்டுள்ளவாறு வினை நிகழ்வதற்கான வாய்ப்பினை மட்டும் தருகிறது. இத்தகைய செயல்முறைகளின் வேகமானது வெப்ப இயக்கவியல் கணிப்புகளுக்கு அப்பாற்பட்ட, வினை வேகவியல் காரணிகளால் (kinetic factors) தீர்மானிக்கப்படுகிறது.

## கணக்கு 7.8

300K வெப்ப நிலையில், $CO + \left(\frac{1}{2}\right)O_2 \rightarrow CO_2$ என்ற வினை தன்னிச்சையானது எனக்காட்டுக. $CO_2$ மற்றும் CO ஆகியன உருவாவதற்கான திட்ட கட்டிலா ஆற்றல் மாற்றங்கள் முறையே −394.4 மற்றும் -137.2 $kJmole^{-1}$.



Unit 7 - Sridhar.indd 240 07-01-2021 15:08:49

$$CO + \left(\frac{1}{2}\right) O_2 \rightarrow CO_2$$

$$\Delta G^0_{\text{வினை}} = \sum G_f^0{}_{\text{வினைவிளை பொருட்கள்}} - \sum G_f^0{}_{\text{வினைபடு பொருட்கள்}}$$

$$\Delta G^0_{\text{வினை}} = \left[G^0_{CO_2}\right] - \left[G^0_{CO} + \frac{1}{2} G^0_{O_2}\right]$$

$$\Delta G^0_{\text{வினை}} = -394.4 + [137.2 + 0]$$

$$\Delta G^0_{\text{வினை}} = -257.2 \text{ kJ mol}^{-1}$$

கொடுக்கப்பட்ட வெப்பநிலையில் $\Delta G^0_{\text{வினை}}$ மதிப்பு எதிர்குறியை பெறுகிறது, எனவே வினை தன்னிச்சையாக நிகழும்.

**தன்மதிப்பீடு**

8) 300K வெப்ப நிலையில் ஒரு வேதி வினையின் $\Delta H$ மற்றும் $\Delta S$ மதிப்புகள் முறையே -10 $\text{kJmole}^{-1}$ மற்றும் -20$\text{Jdeg}^{-1}$ $\text{mole}^{-1}$ எனில், வினையின் $\Delta G$ மதிப்புயாது? $\Delta H$ மற்றும்$\Delta S$ மதிப்புகள் மாறிலிகள் என கருதி 600 K வெப்ப நிலையில் வினையின்$\Delta G$ மதிப்பை கணக்கிடுக. வினையின் தன்மையை கண்டறிக.

### 7.11.2திட்ட கட்டிலா ஆற்றல் மாற்றத்திற்கும் $\Delta G^0$, சமநிலை மாறிலிக்கும் $K_{(eq)}$இடையே உள்ள தொடர்பு:

மீள் செயல் முறைகளில், அமைப்பானது எப்பொழுதும் சுற்றுப் புறத்துடன் தொடர்ந்து சமநிலையில் இருக்கும். ஒரு மீள் வேதி வினையானது ஒரே நேரத்தில், இரு திசைகளில் நிகழ முடியும். இதனால் இயங்கு சமநிலை ஏற்படுகிறது. அதாவது, வினையானது இரு திசைகளிலும் கண்டிப்பாக கட்டிலா ஆற்றல் குறையும் வகையில் நிகழ வேண்டும் என்ற பொருளை இது தருகிறது. இந்நிலை சாத்தியமற்ற ஒன்றாகும். சமநிலையில், ஒரு அமைப்பின் கட்டிலா ஆற்றல் குறைந்தபட்ச மதிப்பினை பெற்றிருந்தால் மட்டுமே சாத்தியமான ஒன்றாகும். ஒரு பொதுவான சமநிலை வினையைக் கருதுவோம்.

$$A + B \rightleftharpoons C + D$$

எந்த நிலையிலும், மேற்காண் வினையின் கட்டிலா ஆற்றல் மாற்றமானது $(\Delta G)$ அவ்வினையின் திட்ட கட்டிலா ஆற்றல் மாற்றத்துடன் $(\Delta G^0)$ பின்வரும் சமன்பாட்டின்படி தொடர்புபடுத்தப்படுகிறது.

$$\Delta G = \Delta G^0 + RT \ln Q \text{ ------(7.39)}$$

இங்கு Q என்பது வினை குணகம். வினை குணகம் என்பது "சமநிலையற்ற நிலையில், வினைவிளை பொருட்களின் செறிவுகளின் பெருக்கற்பலனிற்கும், வினைபடு பொருட்களின் செறிவுகளின் பெருக்கற்பலனிற்கும் இடையே உள்ள விகிதம் " என வரையறுக்கப்படுகிறது.

சமநிலையை அடையும்போது, கட்டிலா ஆற்றலில் மேற்கொண்டு மாற்றம் ஏதும் நிகழாது. அதாவது $\Delta G=0$, மேலும் வினை குணகம் Q என்பது சமநிலை மாறிலிக்கு சமமாகிறது. எனவே மேற்கண்ட சமன்பாடு பின்வருமாறு மாறுகிறது.

$$\Delta G^0 = -RT \ln K_{eq}$$

இச்சமன்பாடு வாண்ட் – ஹாஃப் சமன்பாடு எனப்படுகிறது.

$$\Delta G^0 = -2.303 \, RT \log K_{eq} \text{ ----------(7.40)}$$

மேலும் நாம் அறிந்தபடி,

$$\Delta G^0 = \Delta H^0 - T \, \Delta S^0 = -RT \ln K_{eq}$$

**கணக்கு 7.9**

298 K வெப்பநிலையில் ஆக்ஸிஜனை ஓசோனாக மாறும் $3/2 \; O_2 \longrightarrow O_{3(g)}$ வினைக்கு $\Delta G^0$ காண்க, திட்டஅழுத்த அலகுகளில் இவ்வினையின் $K_p$ மதிப்பு $2.47 \times 10^{-29}$

**தீர்வு:**

$$\Delta G^0 = -2.303 \, RT \log K_p$$

இங்கு

$R = 8.314 \text{ JK}^{-1}\text{mol}^{-1}$

$K_p = 2.47 \times 10^{-29}$

$T = 298\text{K}$

$\Delta G^0 = -2.303(8.314)(298)\log(2.47\times10^{-29})$

$\Delta G^0 = 163229\ Jmol^{-1}$

$\Delta G^0 = 163.229\ KJ\ mol^{-1}$

## 7.12 வெப்ப இயக்கவியல் மூன்றாம் விதி வரையறை:

ஒரு பொருளின் என்ட்ரோபி மதிப்பு வெப்பநிலையுடன் நேர்விகிதத்தில் மாறுகிறது. வெப்பநிலை குறைவாக உள்ளபோது என்ட்ரோபியும் குறைவாக இருக்கும்.எடுத்துக்காட்டாக, 1 வளி மண்டல அழுத்தத்தில், நீரின் வெப்பநிலை $100^{0}C$ ஆக உள்ளபோது, அமைப்பானது அதிகபட்ச என்ட்ரோபியை (அதிக ஒழுங்கற்றதன்மை) கொண்டிருக்கும். இந்நிலையில் நீர் மூலக்கூறுகள் கொள்கலனின் அனைத்து பகுதிகளுக்கும் அலைந்து கொண்டிருக்கும். அமைப்பானது குளிர்விக்கப்படும் போது, நீராவியானது குளிர்ந்து திரவமாக மாறுகிறது. திரவநிலையிலும் கூட, நீர்மூலக்கூறுகள் சற்று நகருகின்றன. அதாவது அமைப்பின் என்ட்ரோபி குறைகிறது. இதனை மேலும் குளிர்விக்கும் போது, நீரானது உறைந்து பனிக்கட்டி படிகங்களை உருவாக்குகிறது. பனிக்கட்டி படிகத்திலுள்ள நீர் மூலக்கூறுகள் அதிக ஒழுங்குடன் அமைக்கப்படுகின்றன. இதனால் அமைப்பின் என்ட்ரோபி மிக குறைவாக இருக்கும்.


நாம் இந்த திண்ம படிகங்களை மென்மேலும் குளிர்விக்கும் போது, படிக அணிக்கோவை தளங்களில் அமர்ந்துள்ள மூலக்கூறுகளின் அதிர்வு குறைந்து கொண்டே செல்லும். மேலும் அவைகள் மிகக் குறைவாக நகரும் உரிமையை கொண்டிருக்கும். (மிக குறைவான ஒழுங்கற்றதன்மை) எனவே என்ட்ரோபி மிக குறைவான மதிப்பை பெற்றிருக்கும்.

தனி பூஜ்ஜிய வெப்பநிலையில் (0 K அல்லது -273°C), கருத்தியலாக அனைத்து வகை இயக்கங்களும் நிறுத்தப்படுகின்றன. ஒரு பொருள் தனிப் பூஜ்ஜிய வெப்பநிலையை கருத்தியலாக நெருங்க முடியுமே தவிர, அவ்வெப்பநிலையை அடைய முடியாது.

வெப்ப இயக்கவியலின் மூன்றாம் விதிப்படி, தனி பூஜ்ஜிய வெப்பநிலையில் ஒரு குறைபாடற்ற படிகத்தின் என்ட்ரோபி மதிப்பு பூஜ்ஜியம். மாறாக குறிப்பிட்ட எண்ணிக்கையிலான படிகளில் ஒரு பொருளின் வெப்பநிலையை தனி பூஜ்ஜிய வெப்பநிலைக்கு குறைக்க முடியாது, எனவும் இதனைக் கூறலாம்.

ஒரு மிகச் சரியாக அமைந்துள்ள படிகநிலைமைக்கு,

$$\lim_{T \to 0} S = 0$$



படம் 7.10 வெப்ப இயக்கவியலின் மூன்றாம் விதி

தனிச்சுழி வெப்ப நிலையில், குறைபாடுள்ள படிகங்கள் பூஜ்ஜியத்தை விட அதிகமான என்ட்ரோபியை கொண்டுள்ளன. தனி என்ட்ரோபியானது எப்போதும் எதிர்குறி மதிப்பை பெற்றிருக்க முடியாது.



Unit 7 - Sridhar.indd 242 07-01-2021 15:08:51

## பாடச்சுருக்கம்

ஆற்றல், வெப்பம் மற்றும் வேலை ஆகியவற்றிற்கிடையே உள்ள தொடர்பை விளக்கும் அறிவியலின் பகுதி வெப்ப இயக்கவியல் எனப்படுகிறது. வெப்ப இயக்கவியலை கற்பதன் முக்கியநோக்கம் (1) ஒருவகையான ஆற்றலை மற்றொருவகை ஆற்றலாக மாற்றுதல் (2) பல்வேறு வகையான ஆற்றல்களை பயன்படுத்துதல் ஆகியவற்றை பற்றி கற்றலே ஆகும்

### அமைப்பு:

அமைப்பு என்பது வெப்ப இயக்கவியல் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும் அண்டத்தின் ஏதெனும் ஒரு பகுதி அமைப்பு என வரையறுக்கப்படுகிறது. வெப்ப இயக்கவியல் அமைப்புகள் மூன்று வகைப்படும். அவையாவன (i) தனித்த அமைப்பு (ii) மூடியஅமைப்பு (iii) திறந்த அமைப்பு.

### சூழல்:

அண்டத்திலுள்ள, அமைப்பின் பகுதியாக இல்லாத அனைத்தும் சூழல் என்றழைக்கப்படுகிறது.

### எல்லை:

அமைப்பை, சூழலிருந்து பிரிக்கும் எதுவும் எல்லை என்றழைக்கப்படுகிறது.

### வெப்ப இயக்கவியல் பண்புகள்:

அமைப்பின் நிலையை மட்டுமே பொறுத்து அமையும் எந்தப் பண்பும் வெப்ப இயக்கவியல் பண்பு என்றழைக்கப்படுகிறது. இந்தப் பண்புகள் இரண்டு வகைப்படும் (1) பொருண்மை சாராபண்பு – இவை பொருளின் அளவை பொறுத்து மாறுவதில்லை (2) பொருண்மை சார்பண்பு – இவை பொருளின் அளவை பொறுத்து மாறுகின்றன. நான்கு அடிப்படை வெப்ப இயக்கவியல் ( U, H, S மற்றும் G)பண்புகள் உள்ளன.

### வெப்ப இயக்கவியல் செயல்முறைகள் :

வெப்பம் மாறா செயல்முறையில் வெப்பமாற்றம் நிகழ்வதில்லை ($q = 0$ )

வெப்பநிலை மாறா செயல்முறையில் வெப்பநிலை மாறாமல் உள்ளது. ($dT = 0$ )

அழுத்தம் மாறா செயல்முறையில் அழுத்தம்மாறாமல் உள்ளது ($dP= 0$))

கனஅளவு மாறா செயல்முறையில் கனஅளவு மாறாமல் ($dV = 0$) உள்ளது.

சுற்றுச்செயல் முறையில் ஒரு அமைப்பானது, தொடர்ச்சியான பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்ட பின்னர் அதன் உண்மையான ஆரம்பநிலைக்கு மீளத் திரும்புகிறது.



Unit 7 - Sridhar.indd 243 07-01-2021 15:08:51

### அகஆற்றல் (U):

அமைப்பின் அக ஆற்றல் என்பது அமைப்பிலுள்ள அனைத்து உட்கூறுகளான அணுக்கள், அயனிகள், மற்றும் மூலக்கூறுகள் ஆகியவை பெற்றிருக்கக்கூடிய ஆற்றல்களின் மதிப்புகளுக்கு சமம். ஒரு அமைப்பிலுள்ள அனைத்து மூலக்கூறுகளின் மொத்த ஆற்றல் என்பது அவைகளினுடைய இடப்பெயர்வு ஆற்றல் ,அதிர்வு ஆற்றல், சுழற்சி ஆற்றல், பிணைப்பு ஆற்றல், மின்னணு ஆற்றல், மற்றும் மூலக்கூறு இடையீடுகளால் உண்டாகும் ஆற்றல் ஆகியவற்றின் கூடுதலாகும்.

### வெப்பம்:

வெப்பம் ஆனது, ஒரு அமைப்பினை சூழலிலிருந்து பிரிக்கும் எல்லை வழியே கடத்தப்படும் ஆற்றலாக கருதப்படுகிறது. வெப்பம் என்பது ஒரு வழிச்சார்பு ஆகும். வெப்பத்தின் SI அலகு ஜூல் (J).

வேலை (w) விசை (F), மற்றும் இடப் பெயர்ச்சியின்(x). பெருக்குத் தொகை வேலை $-w = F.dx$ என வரையறுக்கப்படுகிறது. வேலையானது ஜூல்களில் அளக்கப்படுகிறது. அதாவது வேலையின் SI அலகு ஜூல் (J), ஒரு வாயுவின் விரிவடைதல் அல்லது சுருங்குதல் நிகழும் போது செய்யப்படும் வேலையானது $w=-P\Delta V$ எனும் தொடர்பினைக் கொண்டு கணக்கிடப்படுகிறது.

### வெப்பம் மற்றும் வேலையின் குறியீட்டு நடைமுறை:

1. அமைப்பினால் வெப்பம் உறிஞ்சப்படும் போது : $+q$
2. அமைப்பிலிருந்து வெப்பம் வெளியேறும் போது : $-q$
3. அமைப்பினால் வேலை செய்யப்படும் போது : $-w$
4. அமைப்பின் மீது வேலை செய்யப்படும் போது : $+w$

### வெப்ப இயக்கவியல் விதிகள்:

### பூஜ்ஜியவிதி:

இரண்டு வெவ்வேறு வெப்ப நிலைகளிலுள்ள அமைப்புகள் தனித்தனியாக மூன்றாம் அமைப்புடன் வெப்ப சம நிலையில் இருந்தால் ,அந்த இரு அமைப்புகளும் தங்களுக்குள் வெப்ப சமநிலையில் இருக்கும்.

### முதல்விதி:

ஆற்றலை ஆக்கவோ அல்லது அழிக்கவோ முடியாது, ஆனால் ஒரு வகையான ஆற்றலை மற்றொரு வகை ஆற்றலாக மாற்ற முடியும். $U=q+w$

என்தால்பி என்பது ஒரு வெப்ப இயக்கவியல் பண்பு ஆகும். என்தால்பி H என்பது அக ஆற்றல் மற்றும் அழுத்தம் கனஅளவு வேலை என வரையறுக்கப்படுகிறது. $H=U+PV$. என்தால்பி மாற்றம் $\Delta H=\Delta U+\Delta n_g RT$

### ஹெஸ்விதி:

மாறாத கனஅளவு அல்லது மாறாத அழுத்தத்தில் ஒரு வினை ஒரு படியில் நிகழ்ந்தாலோ அல்லது பல படிகளில் நிகழ்ந்தாலோ, அதன் ஆரம்ப மற்றும் இறுதிநிலைகள் மாறாதிருப்பின், அவ்வினையின் மொத்த என்தால்பி மதிப்பு மாறாமல் இருக்கும். என்தால்பி மதிப்பை அளவிட கடினமாக உள்ள வினைகளுக்கு ஹெஸ் விதியைப் பயன்படுத்தி கணக்கிடலாம்.

### வெப்ப ஏற்புத் திறன்கள்( $C_P$ மற்றும் $C_V$):

ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில், ஓரலகு நிறையுள்ள பொருளின் வெப்ப நிலையை, ஒரு டிகிரி உயர்த்த தேவைப்படும் வெப்பத்தின் அளவானது அதன் வெப்ப ஏற்புத்திறன் எனப்படுகிறது. இதை இரண்டு வெவ்வேறு நிபந்தனைகளில் அளக்கமுடியும்.

(அ) மாறாதஅழுத்தத்தில் $C_P=(dH/dT)_P$

(ஆ) மாறாதகனஅளவில் $C_V=(dU/dT)_V$

### வெப்ப இயக்கவியலின் இரண்டாம்விதி

ஒரு வினை நிகழுமா, அல்லது நிகழாதா என்பதை வெப்ப இயக்கவியலின் இரண்டாம் விதிகணிக்கிறது, மேலும் வெப்பம் பாயும் திசைகளையும் கூறுகிறது. வினையின் தன்னிச்சை தன்மையை விளக்க என்ட்ரோபி (S) எனும் மற்றொரு நிலைச்சார்பை அறிமுகப்படுத்துகிறது. என்ட்ரோபி என்பது ஒரு அமைப்பின் ஒழுங்கற்ற தன்மை அல்ல்து சீரற்ற தன்மையை அளவிடும் பண்பாகும்.

### என்ட்ரோபி கூற்று:

ஒரு தன்னிச்சை செயல் முறை நிகழும்போது, ஒரு அண்டத்தின் மொத்த என்ட்ரோபி அதிகரிக்கிறது.

### கெல்வின் – பிளாங்க் கூற்று:

ஒரு சுற்றுச் செயல் முறையில், சூடான வெப்ப மூலத்திலிருந்து வெப்பத்தை உறிஞ்சி அவ்வெப்பத்தின் ஒரு பகுதியை குளிர்ந்த நிலையிலுள்ள மூலத்திற்கு மாற்றாமல், முழுவதும் வேலையாக மாற்றக்கூடிய இயந்திரத்தினை வடிவமைக்க இயலாது.

### கிளாசியஸ் கூற்று:

எந்த வேலையும் செய்யாமல், குளிர்ந்த வெப்ப மூலத்திலிருந்து, சூடான வெப்ப மூலத்திற்கு, வெப்பத்தை கடத்த முடியாது.

### கிப்ஸ் கட்டிலா ஆற்றல் (G):

கிப்ஸ் கட்டிலா ஆற்றல் $G = H - TS$ என குறிப்பிடப்படுகிறது. ஒரு செயல் முறையின் கிப்ஸ் கட்டிலா ஆற்றல் மாற்றம் $\Delta G = \Delta H - T\Delta S$ .

திட்ட கட்டிலா ஆற்றல் மாற்றம் மற்றும் சமநிலை மாறிலிகள் பின்வருமாறு தொடர்புபடுத்தப்படுகிறது.

$$\Delta G^0 = -RT \ln K_{eq}$$

### மூன்றாம் விதி:

தனிப்பூஜ்ஜிய வெப்பநிலையில் ஒரு குறைபாடற்ற தூய படிகத்தின் என்ட்ரோபி மதிப்பு பூஜ்ஜியம்.

## மதிப்பீடு

### I சரியான விடையைத் தெரிவு செய்க.

1. மாறாத வெப்பநிலை மற்றும் அழுத்தத்தில் சூழலுடன் பரிமாறிக் கொள்ளப்படும் வெப்பத்தின் அளவு

அ) $\Delta E$ ஆ) $\Delta H$ இ) $\Delta S$ ஈ) $\Delta G$

2. இயற்கையில் நிகழும் அனைத்து செயல்முறைகளும் _______ திசையில் நடக்கின்றன.

அ. என்ட்ரோபி குறையும் ஆ. என்தால்பி அதிகரிக்கும்

இ. கட்டிலா ஆற்றல் அதிகரிக்கும் ஈ. கட்டிலா ஆற்றல் குறையும்

3. வெப்பம் மாறா செயல்முறையில் பின்வருவனவற்றுள் எது உண்மை?

அ) $q = w$ ஆ) $q = 0$ இ) $\Delta E = q$ ஈ) $P \Delta V = 0$

4. ஒரு மீள் செயல்முறையில் ,அண்டத்தின் என்ட்ரோபி மாற்றம்

அ $> 0$ ஆ. $\geq 0$ இ. $< 0$ ஈ. $= 0$

5. ஒரு நல்லியல்பு வாயு வெப்பம் மாறா முறையில் விரிவடைதலில்

அ $w = -\Delta u$ ஆ. $w = \Delta u + \Delta H$ இ. $\Delta u = 0$ ஈ. $w = 0$

6. பின்வரும் அளவீடுகளில் பொருண்மைசாரா பண்பு

அ. நிறை ஆ. கனஅளவு இ. என்தால்பி ஈ. $\frac{\text{நிறை}}{\text{கனஅளவு}}$

7. 300 K வெப்பநிலையில் $1 \times 10^{-3}$ $m^3$கனஅளவிலிருந்து $1 \times 10^{-2}$ $m^3$ கனஅளவிற்கு $1\times10^5 Nm^2$ அளவுள்ள மாறா அழுத்தத்தில் ஒரு நல்லியல்பு வாயு விரிவடையும் போது செய்யப்பட்ட வேலையின் அளவு

அ – 900 J ஆ. 900 kJ இ. 270 kJ ஈ. – 900 kJ

8. எரிதல் வெப்பம் எப்பொழுதும்

அ. நேர்குறி மதிப்பு உடையது ஆ. எதிர்குறி மதிப்பு உடையது
இ. பூஜ்ஜியம் ஈ. நேர்குறி அல்லது எதிர்குறி மதிப்பு உடையது

9. CO மற்றும் $CO_2$ ஆகியவற்றின் உருவாதல் வெப்ப மதிப்புகள் முறையே –26.4 kCal மற்றும் –94kCal, கார்பன் மோனாக்ஸைடின் எரிதல் வெப்ப மதிப்பு

அ.+ 26.4 kcal ஆ– 67.6 kcal இ.– 120.6 kcal ஈ. + 52.8 kcal



Unit 7 - Sridhar.indd 246 07-01-2021 15:08:51

10. C(வைரம்) $\rightarrow$ C(கிரா:ஃபைட்), $\Delta H$ எதிர்குறியுடையது இது குறிப்பிடுவது

அ. வைரத்தை விட கிரா:ஃபைட் அதிக நிலைப்புதன்மைகொண்டது

ஆ. வைரத்தைவிட கிரா:ஃபைட் அதிக ஆற்றலை கொண்டுள்ளது.

இ. இரண்டும் சமநிலைப்புத் தன்மை கொண்டவை

ஈ. நிலைப்புத்தன்மையை நிர்ணயிக்க இயலாது

11. $Al_2O_3$ மற்றும் $Cr_2O_3$ ஆகியவற்றின் உருவாதல் என்தால்பி மதிப்புகள் முறையே – 1596 kJ மற்றும் – 1134 kJ, எனில் $2Al + Cr_2O_3 \rightarrow 2Cr + Al_2O_3$ என்ற வினைக்கு $\Delta H$ மதிப்பு

அ. – 1365 kJ ஆ. 2730 kJ இ. – 2730 kJ ஈ – 462 kJ

12. பின்வருவனவற்றுள் எது வெப்ப இயக்கவியல் சார்பு அல்ல?

அ. அகஆற்றல் ஆ. என்தால்பி

இ. என்ட்ரோபி ஈ. உராய்வு ஆற்றல்

13. ஒரு மூடிய கலனில்,ஒரு மோல் அமோனியா மற்றும் ஒரு மோல் ஹைட்ரஜன் குளோரைடு கலக்கப்பட்டு அமோனியம் குளோரைடு உருவாக்கப்பட்டால் இவ்வினையில்

அ. $\Delta H > \Delta U$ ஆ. $\Delta H - \Delta U = 0$ இ. $\Delta H + \Delta U = 0$ ஈ. $\Delta H < \Delta U$

14. ஒரு அமைப்பின் மீது 4kJஅளவு வேலை செய்யப்படுகிறது, மேலும் 1 kJஅளவு வெப்பமானது அமைப்பினால் வெளியேற்றப்படுகிறது எனில், அக ஆற்றலில் ஏற்படும் மாற்றம்

அ. +1 kJ ஆ. – 5 kJ இ. +3 kJ ஈ. – 3 kJ

15. $25^0$ C Cவெப்பநிலையில், திறந்த முகவையில் உள்ள ஹைட்ரோ குளோரிக் அமிலத்துடன், 55.85 கிராம் இரும்பு ( மோலார் நிறை 55.85 கிராம் மோல்–1) வினைப்பட்டு வெளியேறும் ஹைட்ரஜன் வாயுவினால் செய்யப்பட்ட வேலை

அ. – 2.48 kJ ஆ. – 2.22 kJ இ. + 2.22 kJ ஈ. + 2.48 kJ

16. 2 மோல்கள் நல்லியல்பு ஓரணு வாயுவை மாறா அழுத்தத்தில் $125^0$ C லிருந்து $25^0$ C க்கு குளிர்விக்கும்போது $\Delta H$ன் மதிப்பு $\left[\text{கொடுக்கப்பட்டது } C_P = \frac{5}{2}R\right]$

அ. – 250 R ஆ. – 500 R இ. 500 R ஈ. + 250 R



Unit 7 - Sridhar.indd 247 07-01-2021 15:08:51

17 . $C(g) + O_2(g) \rightarrow CO_2(g)$ $\Delta H^0 = -a$ kJ; $2CO(g) + O_2(g) \rightarrow 2CO_2(g)$ $\Delta H^0 = -b$ kJ; எனில் $C(g) + \frac{1}{2}O_2(g) \rightarrow CO(g)$ என்ற வினைக்கு $\Delta H^0$ மதிப்பு

அ. $\frac{b+2a}{2}$ ஆ. $2a-b$ இ. $\frac{2a-b}{2}$ ஈ. $\frac{b-2a}{2}$

18. $0^0C$ வெப்பநிலை மற்றும் 1atm அழுத்தத்தில் 15.68L மீத்தேன் மற்றும் புரப்பேன் கலந்த வாயுக்கலவையை முற்றிலுமாக எரிக்க, அதேவெப்ப அழுத்தநிலையில் 32L ஆக்ஸிஜன் தேவைப்படுகிறது, எனில் இந்த எரிதல் வினையில் வெளிப்படும் வெப்பத்தின் அளவு kJ அலகில்.

அ. – 889 kJ ஆ. – 1390 kJ இ. – 3180 kJ ஈ. – 632.68 kJ

19. மீத்தேன் மற்றும் ஈத்தேன் ஆகியவற்றின் பிணைப்பு பிளத்தல் ஆற்றல்கள் முறையே, 360 kJ $mol^{-1}$ மற்றும் 620 kJ $mol^{-1}$ எனில் C-C ஒற்றை பிணைப்பின் பிளத்தல் ஆற்றல்.

அ. 170 kJ $mol^{-1}$ ஆ. 50 kJ $mol^{-1}$ இ. 80 kJ $mol^{-1}$ ஈ 220 kJ $mol^{-1}$

20.அனைத்து வெப்பநிலைகளிலும், ஒரு தன்னிச்சையான வினைக்கு சரியான வெப்ப இயக்கவியல் நிபந்தனைகள்

அ $\Delta H < 0$ மற்றும் $\Delta S > 0$

ஆ. $\Delta H < 0$ மற்றும் $\Delta S < 0$

இ. $\Delta H > 0$ மற்றும் $\Delta S = 0$

ஈ $\Delta H > 0$ மற்றும் $\Delta S > 0$

21. ஒரு அமைப்பின் வெப்பநிலை பின்வரும் _______ ல் குறைகிறது.

அ. வெப்பநிலை மாறா விரிவடைதல்

ஆ. வெப்பநிலை மாறா சுருங்குதல்

இ. வெப்பம் மாறா விரிவடைதல்

ஈ. வெப்பம் மாறா சுருங்குதல்

22. ஒரு நல்லியல்பு வாயுவின் வெப்பநிலை மாறா மீள்சுருங்குதல் செயல்முறையில், q, $\Delta S$ மற்றும் w ஆகியவற்றின் குறிகள் முறையே

அ. +, –, – ஆ. –, +, – இ. +, –, + ஈ. –, –, +

23. ஒரு திரவத்தின் மோலார் ஆவியாதல் வெப்பம் 4.8 kJ $mol^{-1}$. அதன் என்ட்ரோபி மாற்ற மதிப்பு 16 J $K^{-1}$ $mol^{-1}$எனில் அந்த திரவத்தின் கொதிநிலை

அ. 323 K ஆ. $27^0$ C இ. 164 K ஈ. 0.3 K



Unit 7 - Sridhar.indd 248 07-01-2021 15:08:52

24. பின்வரும் வினைகளில் எது அதிகபட்ச என்ட்ரோபி மாற்றத்தை கொண்டிருக்கும்?

அ. $Ca(S) + ½ O_2(g) \rightarrow CaO(S)$

ஆ. $C(S) + O_2(g) \rightarrow CO_2(g)$

இ. $N_2(g) + O_2(g) \rightarrow 2NO(g)$

ஈ. $CaCO_3(S) \rightarrow CaO(S) + CO_2(g)$

25. ஒரு குறிப்பிட்ட வினையின் $\Delta H$ மற்றும் $\Delta S$ மதிப்புகள் முறையே 30 $kJ\ mol^{-1}$ மற்றும் 100 $JK^{-1}mol^{-1}$ எனில் , எந்த வெப்பநிலைக்கு மேல் வினையானது தன்னிச்சையாக நிகழும்.

அ. 300 K ஆ 30 K இ. 100 K ஈ. $20^0$ C

## II. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாகவிடையளி

26. வெப்ப இயக்கவியலின் முதல் விதியை கூறு.

27. ஹெஸ்ஸின் வெப்பம் மாறா கூட்டல் விதியை வரையறு.

28. பொருண்மைசாரா பண்பை இரண்டு எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.

29. பின்வரும் சொற்களை வரையறுக்க:

அ. வெப்பநிலை மாறா செயல்முறை ஆ. வெப்பம் மாறா செயல்முறை

இ. அழுத்தம் மாறா செயல்முறை ஈ. கன அளவு மாறா செயல்முறை

30. என்ட்ரோபியின் வழக்கமான வரையறை என்ன? என்ட்ரோபியின் அலகு என்ன?

31. பின்வரும் நிலைகளில் வினை நிகழ் தன்மையை நிர்ணயிக்கவும்.

i) $\Delta H$ மற்றும் $\Delta S$ இரண்டும் நேர்குறி மதிப்பை பெற்றிருக்கும்போது

ii) $\Delta H$ மற்றும் $\Delta S$ இரண்டும் எதிர்குறி மதிப்பை பெற்றிருக்கும்போது

iii) $\Delta H$ குறைகிறது ஆனால் $\Delta S$ அதிகரிக்கிறது

32. கிப்ஸ் கட்டிலா ஆற்றலை வரையறு.

33. எரிதல் என்தால்பியை வரையறு.

34. மோலார் வெப்ப ஏற்புத்திறன் வரையறு. அதன் அலகு யாது?

35. உணவின் கலோரி மதிப்பு வரையறு. கலோரி மதிப்பீட்டின் அலகு யாது?

36. நடுநிலையாக்கல் என்தால்பியை வரையறு.

37. படிகக்கூடு ஆற்றல் என்றால் என்ன?

38. நிலைச்சார்புகள் மற்றும் வழிச்சார்புகள் என்றால் என்ன? இரு எடுத்துக்காட்டுகள் தருக.

39. வெப்ப இயக்கவியலின் இரண்டாம் விதியின் கெல்வின் – பிளாங்க் கூற்றை கூறுக.



Unit 7 - Sridhar.indd 249 07-01-2021 15:08:52

40. ஒரு வினையின் சமநிலை மாறிலி மதிப்பு 10 எனில் $\Delta G$ மதிப்பின் குறியீடு என்ன? அவ்வினை தன்னிச்சையாக நிகழுமா?

41. ஒரு வலிமைமிகு அமிலம் வலிமைமிகு காரத்தால் நடுநிலையாக்கப்படும்போது நடுநிலையாக்கல் வெப்பம் ஒரு மாறிலி: கூற்றுக்கு காரணம் தருக.

42. வெப்ப இயக்கவியலின் மூன்றாம் விதியை கூறு.

43. $CaCl_2$ உருவாதல்செயல்முறைக்கு பார்ன் – ஹேபர் சுற்றை எழுதுக.

44. பின்வருவனவற்றுள் நிலை மற்றும் வழிச்சார்புகளை கண்டறிக.

அ. என்தால்பி, ஆ. என்ட்ரோபி, இ. வெப்பம், ஈ. வெப்பநிலை,

உ. வேலை, ஊ. கட்டிலா ஆற்றல்.

45. வெப்ப இயக்கவியலின் இரண்டாம் விதியின் பல்வேறு கூற்றுகளை கூறு.

46. தன்னிச்சை செயல்முறைகள் என்றால் என்ன? தன்னிச்சை செயல்முறைகளுக்கான நிபந்தனைகளை தருக.

47. அகஆற்றலின் சிறப்பியல்புகளை விளக்குக.

48. பாம் கலோரிமீட்டரில், மாறா கனஅளவில் வெப்பம் உட்கவரப்படுதலை தெளிவான படத்துடன் விளக்குக.

49. விரிவடைதல், மற்றும் சுருங்குதல் செயல்முறையின் போது செய்யப்படும் வேலையை கணக்கிடுக.

50. ஒரு நல்லியல்பு வாயுவிற்கு $\Delta H$ க்கும் $\Delta U$க்கும் இடையே உள்ள தொடர்பை வருவி. சமன்பாட்டிலுள்ள ஒவ்வொரு உறுப்பையும் விளக்குக.

51. சோடியம் குளோரைடு படிகத்தின் படிக்கூடு ஆற்றலை கணக்கிடும் மறைமுக முறையை விளக்குக.

52. கிப்ஸ் கட்டிலா ஆற்றலின் சிறப்பியல்புகளை விளக்குக.

53. $25^0C$ வெப்பநிலை மற்றும் சாதாரண அழுத்தத்தில், 2 மோல்கள் நல்லியல்பு வாயு, மீள்முறையில், மாறா வெப்பநிலையில் விரிவடையும்போது அதன் கனஅளவு 500 ml லிருந்து 2L ஆக மாறுகிறது எனில், செய்யப்பட்ட வேலையை கணக்கிடுக.

54. கனஅளவு மாறா கலோரிமீட்டரில், மூலக்கூறுநிறை 28 கொண்ட, 3.5 gவாயு அதிகளவு ஆக்ஸிஜன் செலுத்தி, 298K வெப்பநிலையில் முற்றிலுமாக எரிக்கப்பட்டது. எரிதல் வினையின்காரணமாக கலோரி மீட்டரின் வெப்பநிலை 298K லிருந்து 298.45K க்கு உயர்ந்துள்ளது. கலோரி மீட்டர் மாறிலி மதிப்பு $2.5\ kJ\ K^{-1}$ எனில், வாயுவின் எரிதல் என்தால்பி மதிப்பை $kJ\ mol^{-1}$அலகில் காண்க .

55. $77^0C$ வெப்பநிலையில் உள்ள ஒரு அமைப்பிலிருந்து $33^0C$. வெப்பநிலையில் உள்ள சுற்றுப்புறத்திற்கு, 245 J ஆற்றல் பாயும்போது, அமைப்பு, சுற்றுப்புறம் மற்றும் அண்டத்தில் ஏற்படும் என்ட்ரோபி மாற்றங்களை கணக்கிடு.



Unit 7 - Sridhar.indd 250 07-01-2021 15:08:52

56. 4.1வளிமண்டல அழுத்தம், மற்றும் குறிப்பிட்ட வெப்பநிலையில் உள்ள 1 மோல் நல்லியல்பு வாயு, 3710J ஆற்றலை உறிஞ்சி, 2L விரிவடைகிறது. இந்த விரிவடைதலின்போது நிகழும் என்ட்ரோபி மாற்றத்தைகணக்கிடு.

57 ஒரு மோல் சோடியம் குளோரைடை உருக்க 30.4 kJ அளவு ஆற்றல் தேவைப்படுகிறது. உருகுதலின் போது நிகழும் என்ட்ரோபி மாற்றம் 28.4 $JK^{-1}$ $mol^{-1}$ னில் சோடியம் குளோரைடின் உருகுநிலையை காண்க.

58 புரப்பேனின் திட்ட எரிதல் என்தால்பி மதிப்பு –2220.2 kJ $mol^{-1}$ .$CO_2(g)$ மற்றும் $H_2O(l)$ ஆகியவற்றின் திட்ட உருவாதல் என்தால்பி மதிப்புகள் முறையே–393.5 மற்றும் –285.8kJ $mol^{-1}$ எனில், புரப்பேனின் திட்ட உருவாதல் என்தால்பி மதிப்பை காண்க.

59. சாதாரண கொதிநிலை மற்றும் திட்ட ஆவியாதல் என்தால்பி மதிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. கீழ்காண் திரவங்களுக்கு ஆவியாதல் என்ட்ரோபி மதிப்புகளை காண்க.

| S. No | திரவம் | கொதிநிலை ($^0$C) | ΔH (kJ $mol^{-1}$) |
|---|---|---|---|
| 1. | எத்தனால் | 78.4 | + 42.4 |
| 2. | டொலுவீன் | 110.6 | + 35.2 |

60. 1 atm அழுத்தத்தில் கீழ்காணும் வினைக்கு $Ag_2O(s) \rightarrow 2Ag(s)+\frac{1}{2}\ O_2(g)$Ï $\Delta H = 30.56$ kJ $mol^{-1}$ மற்றும் $\Delta S$=6.66$JK^{-1}mol^{-1}$ எனில் எந்த வெப்பநிலையில் ΔG மதிப்பு பூஜ்ஜியமாக இருக்கும் என்பதை கணக்கிடுக. (i) அந்த வெப்பநிலையில் மற்றும் (ii) அந்த வெப்பநிலைக்கு கீழ்வினை நிகழும் திசையை காண்க.

61. 400K. வெப்பநிலையில் பின்வரும் வினையின் சமநிலை மாறிலி Keq மதிப்பை காண்க.

$2NOCl\ (g) \rightleftharpoons 2NO(g) + Cl_2(g)$,

$\Delta H^0 = 77.2kJ\ mol^{-1}$ ;

மற்றும் $\Delta S^0$=122$JK^{-1}mol^{-1}$.

62. சயனமைடை ($NH_2$ CN) பாம் கலோரி மீட்டரில், அதிகளவு ஆக்ஸிஜன் செலுத்தி எரிக்கும்போது ஏற்படும் ΔU மதிப்பு-742.4 kJ $mol^{-1}$, என கண்டறியபட்டது. 298 K வெப்பநிலையில் பின்வரும் வினையின் என்தால்பி மாற்றத்தை கணக்கிடுக.

$NH_2CN(s) + \frac{3}{2}\ O_2(g) \rightarrow N_2(g) + CO_2\ (g) + H_2O(l)\ \Delta H= ?$

63. பின்வரும் தரவுகளிலிருந்து எத்திலீனை ஹைட்ரஜனேற்றம் செய்யும் வினையின் என்தால்பி மதிப்பை காண்க. C–H, C–C, C=C மற்றும் H–H ஆகிய பிணைப்புகளின் பிணைப்பு ஆற்றல்கள் முறையே 414,347,618 மற்றும் 435 kJ $mol^{-1}$



Unit 7 - Sridhar.indd 251 07-01-2021 15:08:52

64. பின்வரும் தரவுகளிலிருந்து $CaCl_2$ படிகத்தின் படிக கூடு ஆற்றலை கணக்கிடு.

$Ca(s)+Cl_2(g) \rightarrow CaCl_2(s)\ \Delta H_f^0 = -795\ kJ\ mol^{-1}$

| | | |
|---|---|---|
| பதங்கமாதல் | : $Ca(s) \rightarrow Ca(g)$ | $\Delta H_1^0 = +121\ kJ\ mol^{-1}$ |
| அயனியாதல் | : $Ca(g) \rightarrow Ca^{2+}(g) + 2e^-$ | $\Delta H_2^0 = +2422\ kJ\ mol^{-1}$ |
| பிளத்தல் | : $Cl_2(g) \rightarrow 2Cl(g)$ | $\Delta H_3^0 = +242.8\ kJ\ mol^{-1}$ |
| எலக்ட்ரான்நாட்டம் | : $Cl(g) + e^- \rightarrow Cl^-(g)$ | $\Delta H_4^0 = -355\ kJ\ mol^{-1}$ |

65. கொடுக்கப்பட்டுள்ள தரவுகளிலிருந்து $Fe_2O_3 + 3CO \rightarrow 2Fe + 3CO_2$ வினையின் என்தால்பி மாற்ற மதிப்பை கணக்கிடுக.

$2Fe + \frac{3}{2}O_2 \rightarrow Fe_2O_3\ \Delta H = -741\ kJ$

$C + \frac{1}{2}O_2 \rightarrow CO\ \Delta H = -137\ kJ$

$C + O_2 \rightarrow CO_2\ \Delta H = -394.5\ kJ$

66. 1750 C, வெப்பநிலையில் 1-பென்டைனை (A), ஆல்கஹால் கலந்த 4N KOH கரைசலுடன் வினைப்படுத்தும் போது, 1.3% 1-பென்டைன் (A), 95.2% 2- பென்டைன் (B) மற்றும் 3.5% 1,2 பென்டாடையீன் (C) கலந்த சமநிலைக் கலவையை உண்டாக்குகிறது $175^0$ C, வெப்பநிலையில் பின்வரும் சமநிலைகளின் $\Delta G^0$ மதிப்பை கணக்கிடுக.

$B \rightleftharpoons A \qquad \Delta G_1^0 = ?$

$B \rightleftharpoons C \qquad \Delta G_2^0 = ?$

67. 33K வெப்பநிலையில், ஐம்பது சதவீதம் $N_2O_4$ சிதைகிறது எனில், அந்த வெப்பநிலையில், 1 atm அழுத்தத்தில் ஏற்படும் திட்டகட்டிலா ஆற்றல் மாற்றத்தை கணக்கிடு.


68. $SO_2$ மற்றும் $SO_3$ ஆகியவற்றின் திட்ட உருவாதல் என்தால்பி மதிப்புகள் முறையே -297 $kJ\ mol^{-1}$ மற்றும் -396 $kJ\ mol^{-1}$. எனில் $SO_2 + \frac{1}{2}O_2 \rightarrow SO_3$ வினையின் திட்ட என்தால்பி மதிப்பை காண்க.

69. 298 K வெப்பநிலையில் :$2A + B \rightarrow C$ வினையின் $\Delta H=400\ KJ\ mol^{-1}$, $\Delta S=0.2\ KJK^{-1}\ mol^{-1}$ எனில் வினை தன்னிச்சையாக நிகழ தேவையான வெப்பநிலையை கணக்கிடுக.

70. 298K வெப்பநிலையில் பின்வரும் வினைக்கு சமநிலை மாறிலி மதிப்பை கணக்கிடுக. $2NH_3(g) + CO_2(g) \rightleftharpoons NH_2CONH_2(aq)+H_2O(l)$ கொடுக்கப்பட்ட வெப்ப நிலையில் வினையின் திட்ட கட்டிலா ஆற்றல் மாற்ற $\Delta G_r^0$ மதிப்பு, $-13.6\ kJ\ mol^{-1}$.

71. 3.67 லிட்டர் கொள்ளவு கொண்ட எத்திலீன் மற்றும் மீத்தேன் வாயுக்கலவையை, $25^0$ C மற்றும் 1 வளிமண்டல அழுத்தத்தில் முழுமையாக எரிக்கும் போது 6.11 L கார்பன்டையாக்சைடு வாயுவை உருவாக்குகிறது. எரிதலின்போது வெளிப்படும் வெப்பத்தின் அளவை kJ, அலகில் கணக்கிடுக. $\Delta H_C(CH_4) = -890\ kJ\ mol-1$ மற்றும் $\Delta H_C(C_2H_4) = -1423\ kJ\ mol^{-1}$

## கருத்துவிளக்கப்படம்




3G63DV



Unit 7 - Sridhar.indd 253
07-01-2021 15:08:54

# பிற்சேர்க்கை


| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1. | அடிப்படை மாறிலிகள் | 255 |
